# வானமழை நீ எனக்கு

## 1

கற்பூர ஜோதியைக் கண்களில் ஒற்றிக் கொண்ட ரவிபாரதியைப் பார்க்க வெகு பாந்தமாக இருந்தது.

எல்லாக் கிண்டல் பேச்சுக்களையும் பார்வையையும் ஒதுக்கி வைத்து விட்டு ராமையா ஆரத்தித் தட்டை நீட்டும் போது மட்டும் மரியாதைப் பார்வையுடன் பவ்யமாகக் கண்ணில் ஒற்றிக் கொள்வான்.

ராமையா வெகு நாட்களாகத் தங்கள் குடும்பத்துக்குக் காட்டியுள்ள விசுவாசத்திற்கு இது மாதிரிச் செய்கைகளின் மூலமாக அவன் பதில் மரியாதை செய்கிறான் என்பது அவருக்குத் தெரியும். வாஞ்சையும், பாசமுமாக அவரும் புன்னகைத்துக் கொள்வார்.

டைனிங் டேபிளில் அமர்ந்தவுடன் இட்லியைப் பரிமாறிச் சட்னியை அவர் ஊற்ற ரவிபாரதி சாப்பிட ஆரம்பித்தான். ராமையாவைப் பார்த்து ஒரு விசித்திரமான புன்னகையுடன்

'அப்புறம்.. அம்மாவைக் காலையிலேயே போய்ப் பார்த்துட்டு வந்தாச்சாக்கும்?' என்றான்.

ராமையா ஆமென்பது போல் தலையாட்டினார்.

'என்ன சொல்றாங்க..?' என்றான்.

ராமையா மென்மையாகச் சிரித்தார்.

'என்ன சொல்வாங்க தம்பி? நடப்பையெல்லாம் விசாரிச்சாங்க...' என்றான்.

'நீங்க நடப்பையெல்லாம் சொன்னீங்களாக்கும்? எல்லா நடப்பையுமா?' என்றான் ஒரு விதமான ஆழமான பார்வையுடன்.

'ம்...'

'கோபம் வர்லையோ?'

'கோபம் வர்ற மாதிரி இங்க எதுவும் நடக்கலையே தம்பீ...' என்றார்.

எப்போதும் ராமையாவைப் பேச்சில் தன்னால் வெல்ல முடிவதில்லை என்பது புரிந்தது. இப்படி ஒரு விசுவாசமான வேலையாள் கிடைக்க அம்மா ஒருவிதத்தில் புண்ணியம் செய்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

'சில நேரங்கள்ல நீங்க யாரோட ஆள்ன்னே எனக்குப் புரியறதில்லை' என்றான் குரலில் ஆற்றாமையுடன்.

'நான் இந்தக் குடும்பத்தோட ஆள் தம்பீ.. இந்த குடும்பத்துக்கு நல்லது நினைக்கிறவன்'

'யு ஆர் இம்பாசிபிள்.. மிஸ்டர் ராமையா?' என்று முணுமுணுத்துக் கொண்டான் ரவிபாரதி.

'புரியலை தம்பி..' என்றார் ராமையா வெகுளியாக.

'அதுவே நல்லது..' என்று கைகழுவி விட்டுக் கிளம்பினான். கூடவே அவர் செய்கிற பணிவிடைகளைப் பார்த்து அவனுக்குள்ளே எழுந்த கோபம் அடங்கியது.

காரில் ஏறி அவன் காரை எடுக்கிற வரை கூடவே இருந்தார்.

'சரி.. வேலை..வேலைன்னு உட்கார்ந்திருக்காம



நேரத்துக்குச் சாப்பிடுங்க ராமையா' என்றான்.

'அம்மா கூட இதையே சொன்னாங்க' என்றார்.

அவன் சற்றுக் கடுப்பானான்.

'எதையே?' என்றான் ஒரு மாதிரிக் குரலில்.

'இதைத்தான்.. பாரதியை நேரத்துக்குச் சாப்பிடச் சொல்லுங்க..ராமையான்னு'

'ப்ளீஸ்.. ராமையா...' ரொம்பக் கவலைப்பட வேண்டாம்னு அம்மாகிட்டே சொல்லுங்க...' என்றான்.

அவரை ஆழ்ந்து பார்த்தான். அந்த பார்வையில் நிறைய அர்த்தங்கள் இருந்தன. அவரும் சளைக்காமல் பதில் பார்வை பார்க்க அவன் காரை எடுத்தான்.

கார் போகிற வரை நின்று பார்த்த ராமையா மீண்டும் பூஜையறைக்குப் போய் முருகன் விக்கிரகத்துக்கு முன் கண்கலங்கி நின்றார்.

எல்லாக் குழப்பங்களுக்கும் எப்போது விடிவு வரும்? நான் யாருக்கென்று பேசுவது முருகா...' என்று எண்ணியபடி வெகுநேரம் நின்று விட்டார்.

* * *

கோவை நகரின் மிகப்பெரிய தொழிலதிபர்களில் அவனும் ஒருவன். நான்கைந்து தொழில்களை ஒரே நேரத்தில் நிர்வாகம் செய்தான். அவனது கம்பெனி நிறையப் பொருட்களின் விற்பனைக்கு ஏஜென்சி எடுத்திருந்தார்கள். அனைத்து நிர்வாகங்களுக்கும் அவன் தான் எம்.டி முப்பதை நெருங்கிக் கொண்டிருந்தான்.

கம்பீரமும், இலட்சணமுமாகக் கோவையின் மிக் முக்கிய நபர்களில் அவன் ஒருவனாக இருந்தான். அன்றைக்குப் பத்து மணிக்கு ஒரு முக்கியக் கூட்டம். அவன் நடத்துகிற ஒரு அட்வர்டைசிங் ஏஜென்சிக்கு ஒரு பெரிய

கம்பெனியின் விளம்பர வாய்ப்பு கிடைத்திருந்தது. குழந்தைகள் விரும்பி உண்கிற அந்தத் தின்பண்டத்துக்கு 'நச்'சென்று ஒரு விளம்பரம் வேண்டும். கான்செப்ட் வேண்டும் என்று ஒரு ஆலோசனை முடித்து விட்டு வந்து இருக்கையில் அமர்ந்திருந்தான்.

அவர்கள் முடிவு செய்திருந்த விளம்பரம் அவனுக்கு முழுத் திருப்தியாக இருக்கவில்லை. 'இப்போதைக்கு ஓ.கே. ஆனா .. இன்னும் கொஞ்சம் இம்ப்ருவ் செய்ங்க' என்று கண்டிப்பான தோரணையில் சொல்லி விட்டு வந்திருந்தான்.

போன் மணி ஒலித்தது.

ஸ்வப்னா. அவன் முகம் மலர்ந்தது.

'ஹலோ...' என்றான்.

'ஹலோ நான் எங்கே இருக்கேன்னு சொல்லுங்க' என்றாள் ஸ்வப்னா கொஞ்சலாக.

அவன் கிண்டலாகச் சிரித்தான்.

'இது பெரிய விஷயமாக்கும். லோக்கல் கால். உள்ளூர்ல இருக்கே..!' என்றான்.

அவள் அந்தப்புறம் சிணுங்கினாள்.

'சே.. நான் தப்புப் பண்ணீட்டேன். செல்லிலே கூப்பிட்டிருக்கணும்...' என்றாள்.

'அதுதான் நிறையப் பண்ணுவியே..?' என்றான்.

'எது..?' என்றாள் புரியாமல்.

'தப்பு...!தப்புதான் நிறையப் பண்ணுவியே.. அதைச் சொன்னேன்' என்று வெடிச்சிரிப்புச் சிரித்தான். சேரில் சரிந்து அமர்ந்தான்.

'மிஸ்டர்.. ரவி ரொம்பத்தான் மட்டம் தட்டாதீங்க. உங்களுக்குத் தப்புப் பண்ற தைரியம் இல்லேன்னு சொல்லுங்க.. ஒத்துக்கலாம்' என்றாள் போடி வைத்து.



ஒரு கணம் அவன் முகம் கருங்கியது. மீட்டுக் கொண்டான்.

'ஓ.கே..ஓ..கே.. எப்ப வந்தே? அம்மா... அப்பா நல்லா இருக்காங்களா?'

'ம்.. அவங்களுக்கென்ன..நல்லாத்தான் இருக்காங்க. அப்புறம்...?' என்று இழுத்தாள்.

'நீதான் சொல்லணும்'

'இன்னைக்கு ஈவினிங் 'ஃப்ரீயா?'

'ம்..' அவன் யோசித்தான். இன்றைக்குக் கொஞ்ச நேரம் படிக்க வேண்டும் என்று அட்லாண்டிஸ் பற்றி ஒரு அருமையான புத்தகம் தேர்ந்தெடுத்து வைத்திருந்தான். பிறகு மனம் தேறிக் கொண்டான்.

'ம்...ஃப்ரீ பண்ணிக்கறேன்.. என்ன ப்ரொகிராம்.. சொல்லு' என்றான்.

'கொஞ்ச நேரம் பேசலாமே' என்றாள்.

'எங்கே?'

'உங்க கெஸ்ட் ஹவுசில்...'

'ம்...சரி..' என்றான். புன்னகையுடன் ரிசீவரை வைத்தான். சற்று நேரம் சாய்ந்த வண்ணம் அமர்ந்திருந்தான்.

அவனது அறை கண்ணாடித் தடுப்புகளால் அமைந்திருந்தது. உள்ளிருந்த வண்ணம் அவன் அந்தப் பெரிய அலுவலகத்தைப் பார்வையிட முடியும். இலக்கில்லாமல் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான்.

அப்போதுதான் அது நிகழ்ந்தது.

அந்தக் காட்சி அவன் கண்களை இழுத்தது. சுவாரசியமாய்க் கவனிக்க ஆரம்பித்தான். பல்ராம் சற்று முற்றும் பார்த்தபடி எழுந்து போய்க் கொண்டிருந்தான்.

அந்தப் பெண் வந்தாள்.

சாதாரணக் கைத்தறிப் புடவையில் கஞ்சி மடமடக்க.. வந்து கொண்டிருந்தாள்.

நிதானமாகக் காலடிகளை எடுத்து வைத்து தேர்ந்தியான நடையுடன் வந்து கொண்டிருந்தாள். எளிமையாக இருந்தாள். அழகாக இருந்தாள். ஆனால்.. முகத்தில் அறிவுக்களையும் தெரிந்தது.

ரவிபாரதி முகத்தில் ஒரு கேலிப் புன்னகை உறைந்தது.

'இவளை மாதிரிப் பொண்ணை வேண்டுமானால் அம்மாவுக்குப் பிடிக்கும்...' என்ற எண்ணம் ஒரு கணம் மனதில் ஓட ஒரு நிமிடம் திடுக்கிட்டான். பிறகு சுதாரித்துக் கொண்டான். மேலும் கவனித்தான்.

'என்ன... எதுக்கு வந்தே?' என்று பலராம் சைகை செய்து கொண்டு அவளை நெருங்கினான். ஆனால் அவள் பதட்டமில்லாமல் சொல்ல வந்த ஏதோ விஷயத்தைச் சொல்லி விட்டு நகர்ந்தாள். வலது கை தோளில் தொங்கிய கண்டக்டர் பேக் போன்ற பையை அழுத்திப் பிடித்துக் கொள்ள அவள் நடந்து போகிற விதத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் ரவிபாரதி. சென்ற முறை அம்மாவுக்கும், தனக்கு நடந்த வாக்குவாதம் நினைவுக்கு வந்தது.

நீண்ட சிந்தனையிலாழ்ந்தான். இடையில் ஸ்வப்னாவின் முகமும் தோற்றமும் நினைவுக்கு வந்தது. குழப்பம் மேலிட்டது. அப்போதுதான் அந்த எண்ணம் அவன் மனத்தில் பளிச்சிட்டது.

அந்தப் பெண் போகும் வரை பார்த்து விட்டு பலராமை இண்டர்காமில் அழைத்தான்.

'வா..பலராம்...' என்று அமரச் சொன்னான்.

பலராம் உண்மையில் அவனது பள்ளித் தோழன். நடுத்தரக் குடும்பத்துக்காரன். அவனுக்கு நல்ல ஒரு வேலை



கொடுத்திருந்தான். அந்த நன்றி அவனுக்கும் இருந்தது.

'பலராம்.. இப்ப ஒரு பொண்ணு வந்துட்டுப் போச்சே.. அது யாரு...' என்றான்.

'அது...அது... பாகீரதி.. நான் சொல்லியிருக்கேனே...' என்றான் பலராம்.

'ஓ..அந்த பாகிரதியா..?' என்றான். சற்றுத் தயங்கினான். ஆனால் கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை.

'பல்ராம் உட்கார்! நான் உன்கிட்ட பேசணும்...' என்றான்.

கிட்டத்தட்ட ஐந்து நிமிடம் அவன் பேசியதைக் கேட்ட பல்ராம் திகைத்துப் போனான்.

'சார்.. நடக்கற காரியமா?' என்றான் அதிர்ச்சி நிறைந்த குரலில்.

பல்ராம் கனவில் நடப்பவனைப் போல் எழுந்து போவதைப் பார்த்தான். பாவமாக இருந்தது. முடிவு தோன்றி விட்டது. இனி மாற்றுவதற்கில்லை என்று எண்ணிக் கொண்டான்.

மீண்டும் இண்டர்காமில் அழைத்தான். 'பல்ராம்.. நான் பேசறேன்.. பாகீரதிகிட்டே...' யு டோண்ட் வொரி..' என்றான்.

பல்ராம் ஒன்றும் பேசவில்லை. தன் வாழ்க்கை நிம்மதியாய் ஓடிக் கொண்டிருந்தது. ஆண்டவனுக்குப் பொறுக்கவில்லை போலும் என்று பெருமூச்சு விட்டான். ஆனால் இந்தப் புயலில் பாகீரதி எதற்காகச் சிக்க வேண்டும்?

கூடவே ஒரு எண்ணம் தோன்றியது. இந்த ரவிபாரதி லேசுப்பட்டவன் அல்ல. ஒருமுறை பேசினால் யாரையும் கரைத்து விடுவான். பாகீரதியைக் கூடவா? முடியுமா?

யாருக்குத் தெரியும்? என்று தோள்களைக் குலுக்கிக் கொண்டான்.

குழப்பத்தில் தலையே வெடித்து விடும் போல் தோன்றியது. தலையை இரு கைகளாலும் தாங்கி பிடித்துக் கொண்டு அமர்ந்தான்.

## 2

கெஸ்ட் ஹவுசில் காத்துக் கொண்டிருந்தான் ரவிபாரதி. ஸ்வப்னாவின் சைக்காலஜி அவனுக்குத் தெரியும். சற்றே காக்க வைத்து விட்டுத்தான் வருவாள். அப்போதுதான் ஒரு எதிர்பார்ப்பு இருக்குமாம்.

'யப்பா.. இந்தப் பெண்கள்..' என்று சிரித்துக் கொண்டான். தினமும் வீட்டில் நடக்கிற காட்சிகள் அவனுக்குள் வந்து போயின. ஸ்வப்னா அதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொள்ளாதது அவனுக்கு ஆச்சரியம்தான். மேல்மட்டக் கலாச்சாரம் என்பாள்.

'நல்ல கலாச்சாரம்' என்று கேலியாக எண்ணிக் கொண்டான்.

ஒரு வழியாக ஸ்வப்னா வந்து சேர்ந்தாள். அவள் உடை அலங்காரம் பார்த்து சற்றே முகம் இறுகிப் போனது ரவிபாரதிக்கு.

'ஹேய் ..இது என்ன டிரஸ்?' என்றான்.

'ஏன் பிடிக்கலயா..?' என்றாள் கொஞ்சலாக. அவன் உச்சுக் கொட்டினான்.

'மிஸ்டர்.. ரவிபாரதி..என்னுடைய சுதந்திரத்தில் தலையிடக் கூடாது..' என்றாள். ஒற்றை விரலை நீட்டி மிரட்டுவது போல் நடித்தாள்.



அவள் இறுக்கமாகப் புன்னகைத்தாள். பிறகு உணவு உண்டபடி சற்று நேரம் பொதுவான வியாபார உலகம் பற்றிப் பேசிக் கொண்டார்கள். எது எப்படியோ,ஸ்வப்னா வியாபார விஷயங்களைச் சரியாகவே தெரிந்து வைத்திருப்பாள். உலக அறிவும் அதிகம். அதனால்தானே அவளால் அவனை நெருங்க முடிந்தது.

ரவிபாரதியைப் பொறுத்தவரை பெண்கள் நகை, அலங்காரம், சமையல் என்ற எல்லையைத் தாண்டி வராதவர்கள். உடைகள் மாறலாம். நடைகள் மாறலாம். ஆனால், அடிப்படையில் நட்புக்குரியவர்கள் அல்ல. ஆனால், தவிர்க்க முடியாத அவசியங்கள். அவ்வளவுதான். அதிலும் செல்வந்தர் வீட்டுப் பெண்கள் அவனைக் குறி வைத்து சாகசம் செய்கிறவர்கள் என்று உள்ளூர வெறுத்துப் போயிருந்தான்.

அம்மாவின் கெடுபிடிகள் வேறு இன்னும் அவனைக் கடுப்பாயிருக்கியிருந்தது. அதையெல்லாம் மீறி நட்பு வரை வந்தவள் இந்த ஸ்வப்னா. அதிலும் தன் வீட்டில் திலகத்துக்கு ஒரு பெண் தன்னைத் தேடி வருகிறாள் என்று தெரிந்தும் அதை ஸ்வப்னா அலட்சியப் படுத்திய விதம் அவனை ஆச்சரியத்துக்குள்ளாக்கியது.

'ஸோ வாட்..?ஆஃப்டர் மேரேஜ்.. எல்லாத்தையும் சரிப்படுத்திக்க என்னால் முடியும்...' என்கிற மாதிரிப் பேசுவாள். அந்த சவால் மனப்பாங்கும் அவனைக் கவர்ந்தது. இனிஇந்தச் சதுரங்கத்தில் தான் வைக்கப் போகிற அடுத்த காய்க்கு அவள் ரியாக்ஷன் என்னவாக இருக்கும் என்று பார்க்க ஆவலுடன் காத்திருந்தான் ரவிபாரதி.

அவனிடம் நெருங்கி சோஃபாவில் அமர்ந்திருந்தாள். அவன் மெல்லிய குரலில் தனது திட்டத்தைச் சொன்ன போது அவள் ஆழ்ந்து கேட்டுக் கொண்டாள். சற்று நேரம் மவுனத்தில்

ஆழ்ந்தாள்.

அவன் மேலும் சொன்னான்.

'வாழ்க்கைக்குப் பணமும் முக்கியம். ஸ்வப்னா.. எல்லாச் சொத்தும் அம்மா பேர்ல இருக்கு. அம்மாவை உதறி விட்டு நான் வெளியே வரமுடியாது. இந்தப் பெரிய பிஸினஸ் சாம்ராஜ்யம். அந்தஸ்து...கௌரவம் இதெல்லாம் தக்க வைக்க எனக்கு வேற வழி தெரியவில்லை..' என்றான்.

'ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட்' என்றாள். அவளும் உயர் நடுத்தர வர்க்கம் என்று சொல்லலாம். அவள் பக்கமும் பெரிய வசதிகள் இல்லை என்பதை அவளும் உணர்ந்திருந்தாள்.

'ஏன்...ரவி.. எதற்கும் ஒருமுறை நம்ம விஷயம்...உங்கம்மாகிட்டே பேசுங்களேன். என்னைக் கூட்டிட்டுப் போங்களேன்' என்றாள்.

'வேண்டாம்..'என்றான் ரவிபாரதி அழுத்தமாக. 'அம்மா இன்னும் அடிப்படையில கட்டுப்பெட்டிதான். ஒரு தடவை முடியாதுன்னுட்டா எல்லாம் முடிந்தது' என்றான்.

ஸ்வப்னா சற்று யோசித்தாள். பிறகு 'ஒரே வருஷத்துல எல்லாம் முடிஞ்சதுன்னா.. ஓ.கே. தான்...' என்றாள்.

'அப்பாடா.. என்றிருந்தது ரவிபாரதிக்கு. வழக்கம்போல் லேசாக அவள் புறங்கையில் முத்தமிட்டு விட்டுக் கிளம்பினான். ஆனால், திரும்ப வரும் போது ஸ்வப்னா இவ்வளவு சீக்கிரம் ஏற்றுக் கொண்டது என்னவோ லேசான ஏமாற்றத்தைத் தோற்றுவித்த மாதிரியிருந்தது.

பல்ராம் என்ன செய்தானோ தெரியவில்லை. இன்றைக்குத் தன்னுடைய அறைக்கு பாகீரதியை வரவழைத்துப் பேசுவதாகச் சொன்னானே.. பேசியிருப்பானோ...'

மணியைப் பார்த்தான். ஏழுதான் ஆகியிருந்தது.



திடீரென்று அந்த எண்ணம் தோன்றியது. காரை பல்ராம் தங்கியிருந்த அறை நோக்கித் திருப்பினான்.

நினைத்த வண்ணமே அறை வாசலில் அவனது வண்டி இருந்தது. ஒரு ஸ்கூட்டியும் நின்றிருந்தது. அறை வாசலில் அவன் நிற்கையில்தான் பாகீரதி அந்தக் காரியத்தைச் செய்தாள்.

பல்ராமின் இடக்கன்னத்தில் பாகீரதி ஓங்கி ஒரு அறை விட, அவன் திகைத்து நின்று கொண்டிருந்தான். இருவரும் அறை வாசலைப் பார்க்க அங்கே ரவிபாரதி நிற்கக் கண்டு இன்னும் திகைத்தார்கள்.

* * *

'பெண்கள்ன்னா.. என்ன சார் நினைச்சீங்க.. நீங்கதான் அப்படியொரு ஐடியா குடுத்ததா?' என்று கோபமாகக் கேட்ட பாகீரதியை ரவிபாரதி நிதானமாகப் பார்த்தான்.

'ப்ளீஸ்.. உட்காருங்க..பேசலாம்' என்று சேரைக் காட்டினான். அவள் திகைத்துப் போய் அமர்ந்தாள். பலராமின் முகத்தைப் பார்த்தாள். அவன் நடக்கிற எல்லாவற்றையும் ஒரு கையாலாகாத்தனத்துடன் பார்த்துக் கொண்டிருப்பதைப் பார்த்து பாகீரதிக்குப் பாவமாகிப் போனது.

'உட்காரு பல்ராம்...' என்றான் ரவிபாரதி. அவனும் உட்கார்ந்தான்.

'மிஸ் பாகீரதி..எதுக்குக் கோபப்படறீங்க?' நான் ஒரு யோசனை சொன்னேன். அதனோட முடிவினாலே எல்லாருக்கும் பலன் கிடைக்கும்...விருப்பமிருந்தா.. ஏத்துக்குங்க..' என்றான்.

அறையில் கனத்த மௌனம் நிலவியது. பாகீரதியே கேட்டாள்.

'நீங்க.. சொன்ன யோசனையோட அர்த்தம் உங்களுக்குப் புரியுதா?' என்றாள்.

'நல்லாப் புரியுதாள்.. சொல்றேன்' என்றான் அலட்டிக் கொள்ளாமல்.

'நீங்க ஏன் உங்க அம்மாகிட்டே பேசக்கூடாது?' என்றா் பாகீரதி.

ரவிபாரதி பொறுமையிழந்தான்.

'மிஸ். பாகீரதி.. எல்லா விவரமும் பல்ராம்கிட்டே சொல்லியிருக்கேன். ஆனா ஒண்ணு மட்டும் சொல்லேன். என்னைப் பத்திப் பலவிதமான பேச்சு இருக்கு. ஆனா.. நீங்களும், பல்ராமும் கல்யாணம் பண்ணிக்கப் போற ஐடியா இருக்குன்னு எனக்குத் தெரியும். பல்ராம் என் 'ஃப்ரெண்ட்' அவனோட 'ஃப்ரெண்ட்' நீங்க. உங்க மேலே என் சுண்டு விரல் நகம் கூடப் படாம பத்திரமாக அவன்கிட்டே ஒப்படைப்பேன். ஒரே வருஷம் ஓடிப் போயிடும். அது மட்டுமில்லே. நான் நினைக்கிற மாதிரி முடிஞ்சதுன்னா ஒகே..முடியலேன்னாலும் சரி. இருபது லட்ச ரூபாய் பணம் ஒரு பங்களா ரெண்டும் குடுக்கறேன்' என்றான்.

பல்ராம் திகைத்துப் போனான். அந்தக் கணத்தில் பாகீரதிக்குத் தெரிந்து போனது அவன் இதற்கு ஒத்துக் கொள்வான் என்று. ஆனாலும் ரவிபாரதியிடம் கேட்டாள்.

'இப்படியாவது அந்தச் சொத்து வேணுமா?' என்றாள்.

'ஐயோ.. பெண்ணே!' என்பது போல் அவளைப்பார்த்தான் ரவிபாரதி.

'மிஸ் பாகீரதி..இன்னும் உலகம்ன்னா என்ன. அதில பணம் எவ்வளவு முக்கியமனு எல்லாம் உங்களுக்கு புரியலே.' என்று புன்னகைத்தான்.

'ஓ.கே. ஐ ஹேவ் புட் மை கார்ட்ஸ் ஆன் த டேபிள்.



யோசிங்க. முடிவுக்கு வாங்க' என்று கிளம்பி விட்டான்.

புயல்போல வந்தான். அப்படியே போய்விட்டான். பெரிய ஒரு புயலைக் கிளப்பி விட்டு விட்டு! என்று எண்ணிக் கொண்டாள் பாகீரதி.

திரும்பி பல்ராமைப் பார்த்தாள்.

அவன் பேச வாயின்றி அமர்ந்திருந்தான். அவள் மனம் இளகி விட்டது.

'சாரி.. பல்ராம் நான் கையை நீட்டியிருக்கக் கூடாது... மன்னிச்சுக்குங்க' என்றாள்.

'பரவால்லே.. பரவால்லே..' என்றான். அதற்கு மேல் என்ன பேசுவது என்று தெரியாமல் சற்று நேரம் அமர்ந்திருந்தார்கள்.

'சரி.. பல்ராம்.. நான் கிளம்பறேன். கொஞ்சம்.. யோசிக்க டைம் குடுங்க...' என்றாள்.

வாசல் வரை போனவளை பல்ராம் அழைத்தான். 'பாகி...நீ என்ன முடிவெடுத்தாலும் சரி நான் உன் 'பிரண்ட்தான்..' என்றான்.

பாகீரதியின் மனம் நெகிழ்ந்து விட்டது. வாஞ்சையாய்ப் புன்னகைத்து விட்டு நகர்ந்தாள்.

* * *

பாகீரதி புரண்டு புரண்டு படுத்தாள். தூக்கம் ஒரு பொட்டுக் கூட வரவில்லை. திடீரென்று தன் வாழ்க்கையில் இப்படி ஒரு திருப்பம் வருமென்று அவள் சற்றும் எதிர்பார்க்கவில்லை.

இது என்ன சினிமாவா? வாழ்க்கை? இந்த நடிப்பு நாடகமெல்லாம் மூன்று மணிநேர சினிமாவுக்கு ஒத்து வரும். வாழ்க்கைக்கு ஒத்து வரக் கூடுமா என்ன?

அன்று மாலை பலராம் சொன்ன செய்தி அப்படி

ஒரு செய்தி. அவனும், ரவிபாரதியும் பள்ளித் தோழர்களாம். ரவிபாரதி அந்தத் தோழமையின் அடிப்படையில்தான் பல்ராமுக்கு வேலை போட்டுக் கொடுத்தானாம்.

அந்த வேலைதான் அவனுக்கு வாழ்க்கைக்கே உதவிகரமாக இருந்தது. இரண்டு சகோதரிகளுக்கு கௌரவமாகத் திருமணம் செய்து வைக்க வழி காட்டியது. அவ்வளவு ஏன்? அவன் குடும்பம் திருப்பூரில் இருக்கிற வீட்டில் இருக்க பல்ராமுக்குத் தன் கெஸ்ட் ஹவுஸில் ஒரு அறை ஒதுக்கிக் கொடுத்திருக்கிறான் ரவிபாரதி. அப்படிப்பட்டவன் உதவி கேட்கிறான். செய்யாமல் இருக்க முடியுமா? என்கிறான் பல்ராம். அதற்காக என்ன வேண்டுமானாலும் கேட்டு விடுவதா என்ற கோபமும் எழுந்தது.

பலராம் பாகீரதிக்கு ஒருவிதத்தில் அத்தை மகனாக வேண்டும். அந்த ஆக்ஸிடென்டில் ஒரே சமயத்தில் அப்பாவையும், அம்மாவையும் இழந்து தனிமை இருளில் தவித்து நின்ற போது பல்ராம்தான் அவளுக்குத் துணையாக நின்றான்.

பெற்றோரை இழந்த கொடுமைக்கு நடுவே வழக்கு, இன்சூரன்ஸ் என்ற எல்லாவற்றிற்கும் உடன் அலைந்தான். பாகீரதிக்கு சோற்றுக்கு வழி இல்லாமல் போய்விடவில்லை. பாதுகாப்புக்கும் குறைவிருக்கவில்லை.

பக்கத்துக் காம்பவுண்டிலே அவளது தாய் வழி உறவினராகன மாமாவின் குடும்பம் இருந்தார்கள். ஆர்.எஸ்.புரத்தில் நல்ல வளமான ஒரு ஏரியாவிலே முன்னாலே சிறிய மலர்த் தோட்டத்துடன் கூடிய ஐந்து செண்ட் இடமும், பின்னாலே ஒரு பெரிய கட்டிடமும் இருந்தது. பெற்றோரின் மறைவிற்குப் பிறகு அந்த பெரிய கட்டிடத்தையே



மூன்று பிரிவாகப் பிரித்து ஒரு பகுதியில் தான் குடியிருந்து கொண்டாள். மற்ற இரு பகுதிகளையும் வாடகைக்கு விட்டாள். இரண்டு நல்ல குடித்தனங்களாக அவன்தான் ஏற்பாடு செய்தான்.

ஒரு சின்ன ஹால், அதிலிருந்து செல்கிற மாதிரி ஒரு படுக்கையறை. அட்டாச்டு பாத்ரூம். ஹாலுக்குப் பின்னால் ஒரு சமையலறை. தொட்டாற்போல் ஒரு சின்ன ஸ்டோர் ரூம் என்று காம்பாக்டான அவளது போர்ஷன். தனி அபார்ட்மெண்ட் போல அழகாக இருந்தது. பணத்திற்காக இந்த ஏற்பாட்டுக்கு அவள் ஒத்துக் கொள்ளத் தேவையில்லைதான்.

ஒரு வருடம் கணவன், மனைவியாக நடிப்பதாம். ஓராண்டுக்குப் பிறகு அவன் அம்மாவின் உயில் வாசிக்கப் பெறுமாம். அதற்குப் பிறகு டைவர்ஸ் வாங்கிக் கொள்ளலாமாம். அப்புறம் அவனே பல்ராமுக்கும், அவளுக்கும் கல்யாணம் செய்து வைப்பானாம். பாகீரதிக்கு சிரிப்பதா, அழுவதா என்று தெரியவில்லை.

பல்ராம் அவனுக்கு நன்றிக் கடன் பட்டிருக்கிறான். பாகீரதி அவனை நெருங்கிய நண்பனாகத் தான் நினைக்கிறான். இந்த விஷயம் அவர்கள் மூன்று பேருக்குள் மட்டும்தான் இருக்க வேண்டுமாம். இதே பல்ராம் ஒருமுறை தன் முதலாளி ஒரு புதிரான ஆள் என்று சொல்லியிருக்கிறான். பெண்கள் தொடர்பு அதிகம் என்கிறார்கள். ஆனால், அப்படிப்பட்ட ஆளாக என் மனதுக்குப் படவில்லை என்று சொல்லியிருக்கிறான். நட்புக்கு மதிப்பும் கொடுப்பவன் என்றும் சொல்கிறான்.

பாகீரதியைப் பொறுத்தவரை பல்ராமின் மேல் அன்பு உண்டு. அவன் தன்னைத் திருமணம் செய்து கொள்ள விரும்புகிறான் என்றும் தெரியும். வாய்விட்டு அவள் சம்மதம்

என்று சொல்லிவிட வில்லை. எனற போதும் அவன் தனது எதிர்காலத் திட்டங்களில் அவளை இணைத்துப் பேசும்போது அவள் தடுத்ததுமில்லை. நோன் டெவில் இஸ் பெட்டர்தேன் அன் நோன் டெவில் என்பார்களே! அப்படி ஆனால், ஒன்று நிச்சயம். இருபது லட்ச ரூபாயும் ஒரு பங்களாவும் பல்ராம் தன் வாழ்க்கையில் தலைகீழாக நின்றாலும் சம்பாதிக்க முடியாத விஷயங்கள்.

நிறைய யோசித்தாள். பிறகு அதிகாலை ஐந்து மணிக்கு ஃபோனில் பல்ராமை அழைத்தாள்.

'பல்ராம். நான் சம்மதிக்கிறேன்' என்றாள்.

* * *

## 3

வழக்கம் போல காட்டன் புடவையில் வந்த பாகீரதியை ரவிபாரதி புன்னகையுடன் பார்த்தான். அம்மாவைப் பார்ப்பதற்கு அழைத்துப் போய்க் கொண்டிருந்தான்.

'சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கா.. நெர்வஸாக வேண்டாம்' என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டு வந்தான் ரவிபாரதி. உண்மையில் அவன் தனக்குத் தானே சொல்லிக் கொள்கிற மாதிரி அவளுக்குத் தோன்றியது.புன்னகைத்துக் கொண்டாள்.

வழக்கமான அறிமுகங்கள் முடிந்தபின் விஜயலட்சுமி அவளைப் பார்த்து அன்பாகப் புன்னகைத்தார். ராமையாதான் சற்றே ஆச்சரியத்தில் இருந்தார்.

'எனக்கென்னவோ ரவிக்கு உன்னை மாதிரிப் பெண்ணைப் பிடித்துப் போனது ஆச்சரியந்தான்' என்றார்.



'அது ரவிக்கே ஆச்சரியம்தான்' என்று பாகீரதி சொல்லவும் சிரித்து விட்டார்.

'உண்மைதான் ஆன்ட்டி. பெண்கள்னா அம்மா ஒரு வரையறை வச்சிருக்காங்க. ஆனா யாரையும் ஒரு வரையறைக்குள்ள அடக்க முடியாது. அப்படி அடக்கினா ஒன்னு வரையறையில பொய்யிருக்கும். இல்லே அடங்கி விட்டதா நடிக்கிற பொண்ணுகிட்டே பொய்யிருக்கும். ஆனா உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு. அம்மாவுக்கும் பிடிக்கும்னு சொன்னாரு' என்று சொல்லிவிட்டு ரவிபாரதியைத் திரும்பி லேசாகப் பார்த்தாள் பாகீரதி.

ரவிபாரதி அசந்து போனான். தான் சொன்னதை அப்படியே ஆனால் அம்மாவுக்குப் பிடிக்கிற விதத்தில் சொல்வதைப் பாராட்டிக் கொண்டான். ஆனால், ஏதோ காதல் என்று காட்டிக் கொள்வதற்காக அவளிடம் இழைவும் இல்லை. விலகவும் இல்லை.

இந்த இரண்டு மூன்று சந்திப்புகளிலேயே ரவிபாரதி ஒன்றைப் புரிந்துகொண்டான். வழக்கமான அலங்கார பொம்மையல்ல இந்த பாகீரதி. அவள் பார்வை நேர்பார்வை. கம்பீரமான நடை. அறிவான பேச்சு பொய்யில்லாத நடத்தை. துக்கங்களை அனுபவித்த அனுபவங்களினால் கிடைத்திருந்த பக்குவம் எல்லாம் சேர்ந்த கலவை அவளென்று. அவனுக்கு அவள் மேல் மரியாதை கூடியிருந்தது.

எல்லாரும் உணவருந்த அமர்ந்த போது சற்றும் தயங்காமல் அவள் எழுந்து பரிமாறியது அம்மாவிடம் இயல்பாக ஒட்டிக் கொண்டது. ஏன் தன்னிடத்திலே கூட ஒரு தோழமையை வளர்த்துக் கொண்டது எல்லாம் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

உணவிற்குப் பிறகு அம்மாவின் எதிரில் இயல்பாக

சற்றே அடக்கமாக அமர்ந்து பேசிக் கொண்டிருந்தாள்.

அம்மா தான் படிக்கிற ஆன்மீகப் புத்தகங்களைப் பற்றிக் கூட அவளிடம் பேசினார். அவைகளைப் பற்றியெல்லாம் அறிந்தவளாக அவள் கருத்துக்கள் சொன்னது இன்னும் பிடித்திருந்தது அம்மாவுக்கு. பூஜையறைக்கு அழைத்துப் போனார். ஆசிர்வாதம் செய்தார்.

ரவிபாரதி சற்றே அந்தப்புறம் போயிருந்தபோது அவளிடம் சொன்னார்.

'பாரதி.. ரவி ஒரு தனி டைப். அவனுக்குள்ளே நிறைய முரண்பாடுகள் இருக்கு. தாக்குப் பிடிக்க முடியுமான்னு யோசிச்சுக்க..' என்றார் விஜயலட்சுமி.

சரியாக அந்த நேரம் அறை வாசலுக்கு வந்த ரவிபாரதி அதைக் கேட்டு அப்படியே மறைவில், பாரதியின் பதிலை எதிர்பார்த்துக் கொண்டு நின்றான்.

'ஆன்ட்டி.. எனக்கு ரவியைப் பற்றி என்ன தோணுக்க தெரியுமா? வெளியே தெளிவா ஓடற ஆறு. ஆனா ஆழம் அதிகம். அந்த ஆழத்திலே புதையலும் இருக்கு. சுழலும் இருக்கு. அவரை மட்டும் சரியாப் புரிஞ்சுகிட்டா.. ஹி வில் பி எ கிரேட் பர்ஸன்னு தோணுது' என்றாள்.

அந்தக்கணம் விஜயலட்சுமியின் கண்களில் கண்ணீர் மல்கியது.

'பாரதி நிறைய விஷயங்களுக்கு...... ஏன் மனசுக்கே பூட்டுப் போட்டு வச்சிருக்கான்' என்றார் குரல் தழுதழுக்க.

பாரதி சிரித்தாள். 'ஆன்ட்டி.. எல்லாப் பூட்டுக்கும் ஒரு சாவி இருக்கு. அதுக்கு பேரு அன்புங்க. ஆன்ட்டி ரவியோட வாழற வரைக்கும் நான் அதை எந்த எதிர்பார்ப்புமில்லாமல் ...குடுக்கத் தயாராயிருக்கேன்..'



என்றாள்.

'பரவாயில்லேம்மா.. கடவுள் இந்தக் குடும்பத்து மேலே தன்னோட கருணைப் பார்வையை வச்சுட்டான்னு எனக்குத் தோணிப் போச்சு..' என்றார். அவள் நெற்றியில் திருநீறு இட்டார்.

காரில் திரும்ப வரும்போது பாரதி ரவியிடம் 'ஏங்க ரவி.. இப்படியொரு அம்மாவுக்கா.. அப்படி பயப்படறீங்க.. ஷி இஸ் வெரி ஸ்வீட்..' என்றாள். அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். மறுக்கவும் இல்லை. ஆமோதிக்கவும் இல்லை.

அந்தப் பார்வையில் ஒரு கணம் மின்னி மறைந்த வெறுப்பு அவளைத் திடுக்கிடச் செய்தது. ஆனால் சட்டென்று மறைத்துக் கொண்டான்.

'உன் எல்லை தாண்டுகிறாய். நில் அங்கேயே' என்பது போல் மௌனத்தாலேயே ஒரு கோடு போட்டு விட்டான். புரிந்து கொண்டவளாய் அவளும் மௌனமாகி விட்டாள்.

மகனிடம் மட்டுமல்ல..அம்மாவிடமும் கூட நெஞ்சக்கூட்டில் திறக்கப்படாத கதவு ஒன்று இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது. சற்றே பயமும் தோன்றியது.

அவள் இறங்கிக் கொண்ட போது மட்டும் ரவிபாரதி சொன்னான்.

'தாங்க்ஸ்.. பாரதி.. ரொம்ப அருமையா ஆக்ட் பண்ணினே...' என்று.

பாரதியின் முகம் சுருங்கியது. சட்டென்று விறைப்பானாள்.

'மிஸ்டர் ரவிபாரதி. ஐ வில் மேக் ஒன் திங் வெரி க்ளியர். நான் ஆக்ட் பண்ணலே. நா எந்த விஷயத்தையும் பொய்யாச் சொல்லலே. நாம பண்ணிக்கற மேரேஜ் வேணா பொய்யாய் இருக்கலாம். ஆனா.. நாம பேசிக்கற எல்லா

விஷயமும் பொய்யாய் இருக்கத் தேவையில்லை' என்றாள். விறுவிறுவென்று தன் போர்ஷனுக்குப் போனாள்.

ரவிபாரதி இதை எதிர்பார்க்கவில்லை. வேகமாக சிந்தனை ஓடியது.

அவள் அம்மாவிடம் பேசியபோது எந்த இடத்திலும் அவனோடு வாழ்நாள் பூரா இருப்பேன் என்றோ அவனைக் காதலிக்கிறேன் என்றோ சொல்லவில்லை. அன்பு வைப்பேன் என்றாள்.

அன்பு...!அதை யார் மேல் வேண்டுமானாலும் வைக்கலாமே...?

அவன் தானே சற்றும் எதிர்பாராத விதமாக இஞ்சினை ஆஃப் செய்து விட்டு இறங்கி அவள் போர்ஷன் நோக்கிப் போனான்.

'வரலாமா?' என்று கேட்டு நுழைந்தான்.

'ஐம் சாரி நா உன்னை காயப்படுத்தனும்ன்னு சொல்லலை..' என்றான்.

அவள் சற்றே இளகினாள் 'பரவால்லே' என்று புன்னகைத்தாள்.

'இல்ல..ரவி நாம ஒரு வருஷம் ஒரே இடத்துல இருக்கப் போறோம் . நமக்கு ஒருத்தர் மேலே ஒருத்தர் நம்பிக்கை இருக்கனும். ஒரு நட்பு இருக்கனும். அப்பதான் தி ஸ்டே வில் பி ஈசியா' என்றாள்.

'தட்ஸ் ட்ரு' என்று ஒத்துக் கொண்டான். அவள் கொடுத்த குளிர்பானத்தைப் பருகினான்.

'ஒகே.. வி.ஆர் பிரண்ட்ஸ்' என்று சிரித்தான் ரவிபாரதி

'பரவால்லே.. இவ்வளவு சீக்கிரம் அம்மா இம்ப்ரஸ் ஆவாங்கன்னு நா நெனக்கலே' என்ற திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டான். மகிழ்ச்சியாகப் பேசிக்



கொண்டிருந்தான்.

புறப்படும் போது சற்று நின்று 'நான் உன்னை ரதின்னு கூப்பிடலாமா?' என்றான்.

அவள் அதை எதிர்பார்க்கவில்லை போலும். ஒரு கணம் திகைத்தாள். பிறகு புன்னகைத்துத் தலையாட்டினாள்.

அவன் மேலும் சொன்னான். 'ரதி எனக்கு என்னவோ இந்த ஒரு வருஷம் ரொம்ப சுவாரசியமாப் போகும்னு தோணுது' என்றான்.

கை நீட்டி அவள் கரம் பற்றிக் குலுக்கினான்.

'ஹலோ வார்த்தை மீறீங்க' என்றாள் பாரதி.

அவன் புரியாமல் பார்த்தான்.

'சுண்டு விரல் கூடப் படாம ஒப்படைப்பேன்னு பல்ராம்கிட்டே சொல்லியிருக்கீங்க' என்று சிரித்தாள். அவனும் சிரித்தான்.

'மேடம்.. இது நட்பு ரீதியிலான தொடுகை. அது வேறு விதம்..' என்று மீண்டும் புன்னகைத்தான்.

பிறகு சீரியஸானான். 'ரதி.. இந்த மேரேஜ் நாடகம்கறது நமக்கு மட்டும்தான். மத்த எல்லாமே நிஜமாவே நடக்கும். சட்டப்பூர்வமாகவும் இருக்கும். அதனால சில விஷயங்களிலே நாம நடிக்க வேண்டியிருக்கும். யு வில் ஹேவ் டு டாலரேட்..'என்றான்.

அந்தக் குழப்பம் அவளுக்குள்ளும் இருந்தது. 'வி வில் மானேஜ்' என்றாள்.

அவன் வாஞ்சையாய் அவளைப் பார்த்தான். 'யா..வி டுகெதர் வில் மானேஜ்' என்றான். புறப்பட்டான்.

ஆனால், அது அத்தனை சுலபமாக இருக்கப் போவதில்லை என்று பாரதிக்கு அப்போது புரியவில்லை.

* * *

## 4

காரில் ஊட்டி போய்க் கொண்டிருந்தார்கள். ரவிபாரதியும், பாகீரதியும்.. தேனிலவாம். இருவரும் அதைக் குறித்து நகைச்சுவை பேசிச் சிரித்துக் கொண்டார்கள்.

அம்மாவுக்கு அவளைப் பிடித்துப் போனது என்றவுடன் எல்லாம் விரைவாக நடந்தது. அனால், சில விஷயங்களில் பாகீரதி பிடிவாதமாக நின்றாள். நேரடியாக இல்லாமல் ரவிபாரதி ஊலமாகத் தன் விருப்பத்தைச் சாதித்துக் கொண்டாள்.

விஜயலட்சுமி பெரிய அளவில் ஆடம்பரமாகத் திருமணம் நடக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். ஒரு நாடகத்துக்கு எதற்காக அவ்வளவு செலவு செய்ய வேண்டும் என்று ரவிபாரதியிடம் பேசி சம்மதிக்க வைத்தாள். அதேபோல் கோவிலில் வைத்து தாலி கட்டுவது என்பதற்கும் மறுத்து விட்டாள். எனினும் விமரிசையான ஒரு ரிசப்ஷனை மட்டும் அவளால் தவிர்க்க முடியவில்லை.

அதற்குப் பிறகு முதலிரவு என்றார்கள். அதையும் வெளிச்சம் போடாத வண்ணம் சமாளித்து விட்டார்கள். பிறகு தேனிலவு என்று ஊட்டி கிளம்பியிருந்தார்கள்.

திருமணம் நிச்சயம் ஆனவுடனே பாகீரதிக்கு என்று படுக்கையறையிலிருந்து போகிற மாதிரி ஒரு கதவு வைத்துத் தனியறை அமைத்துக் கொடுத்தான். எல்லா வசதிகளும் உள்ளேயே இருந்தது. இரண்டு பேரும் தங்கள் பிரைவசியைக் காத்துக் கொள்கிற மாதிரி அமைத்திருந்தான்.

பெரிய ஒரு படுக்கையறை அதற்கு முன்னால் ஒரு



ஹால். படுக்கையறையின் இருபுறமும் அவர்கள் இருவருக்கும் தனித்தனியறை என்று ஏற்பாடு செய்திருந்தான். ஹாலின் இடப்புறத்தில் ஒரு சிறிய லைப்ரரி ஒன்று வைத்திருந்தான். பாகீரதிக்கு அது மிகவும் பிடித்திருந்தது.

உறவினர்கள் எல்லாம் கிளம்பிய பிறகு முதல் வேலையாக நகைகளையெல்லாம் அந்தப் பெரிய நகைப் பெட்டியில் நிறைத்து அவனிடம் கொடுத்தாள். "உனக்குப் பிடித்ததை என் பரிசாக எடுத்துக் கொள்" என்று அவன் சொன்ன போது "நோ தேங்ஸ்" என்று மறுத்து விட்டாள். அதே போல் அவன் அம்மா அவளுக்குப் பரிசாக கொடுத்திருந்த விலையுயர்ந்த புடவைகளையும் ஒரு பீரோ முழுக்க அடுக்கி விட்டாள்.

"நினைவு படுத்துங்க. ரவி! அப்பப்ப எடுத்து மடிப்பை பிரித்து ஆறப் போட்டு அடுக்கி வைக்கணும்.வரப்போற உங்க ஸ்வப்னாவுக்கு பத்திரமாகக் கொடுக்கணுமே" என்று இயல்பாகப் புன்னகைத்தாள். அவன் அவளை விசித்திரமாகப் பார்த்தான்.

"ஏன் ரதி.? இதையெல்லாம் உடுத்திப் பார்க்கணும்னு தோணலையா?" என்றான். அவள் மும்முரமாகப் புடவைகளைப் மடித்துக் கொண்டே.

"இவ்வளவு பணத்தை ஆடம்பரப் பொருட்கள்ல கொட்றதுல எனக்கு உடன்பாடில்லே. அதுவுமில்லாம.. நமக்குச் சொந்தமில்லாத எதுகிட்டயும் நாலடி தள்ளி நின்னுக்கறதே நல்லது..." என்றாள்.

அவன் மனதில் மரியாதை கூடியது. "தட்ஸ் ட்ரு என்று பாராட்டிக் கொண்டான். இப்போது அடுத்த நாடகமாக ஊட்டி போய்க் கொண்டு இருந்தார்கள்.

பல்ராம் தினமும் ஒருமுறை பேசினான். ஸ்வப்னா

நினைத்த போது பேசுவாள். ஆனால், ரதி எடுத்தால் மட்டும் "அவர் இருக்காரா? அவரைப் பேசச் சொல்! என்று அதிகார தோரணையில் கட்டளையிடுவாள். ரதி புன்னகைத்துக் கொள்வாள். ஊட்டியில் அவர்களுக்கென்று ஒரு கெஸ்ட் ஹவுஸ் இருந்தது.

தொடர்ந்த அலைச்சலினால் பாகீரதி களைத்திருப்பதை உணர்ந்த அவன் "நீ வேணா தூங்கு ரதி..." என்று கூற அவள் நன்றியுடன் போய் உறங்கி விட்டாள்.

ரவிபாரதிக்கு உறக்கம் வரச் சற்று நேரமானது. வெளியூர்களுக்குச் செல்லும்போதெல்லாம் ஸ்வப்னாவின் நினைப்பு வருவதுண்டு. அவளிடத்தில் ஒரு கவர்ச்சி இருப்பதை உணர்ந்திருக்கிறான். தான் பழகிய பெண்களிலே அறிவு பூர்வமானவள் என்று எண்ணியிருந்தான்.

ரிசப்ஷனுக்கு வந்திருந்தாள். வெகு விமரிசையாக நடந்த திருமண வரவேற்பு அவளுக்குள் கலக்கத்தைத் தோற்றுவித்திருக்க வேண்டும். பாகீரதியும் ரவிபாரதியும் தனியாக அறையில் இருந்த நேரம் வந்தாள். பாகீரதி நாகரிகமாக விலகிப் போய் அறை வாசலுக்கு வெளியே யாரும் வராதபடி சமாளித்து நின்றாள். அதைப் பார்த்த ரவிக்கு முகத்தில் புன்னகை தோன்றியது.

"ரதி.. ரொம்ப ஸ்வீட் இல்லே ஸ்வப்னா? "என்று சிரித்தபடி திரும்பினான். ஸ்வப்னா தன்கண்களில் தோன்றிய குரூரத்தை மறைத்துக் கொண்டாள்.

"ரிசப்ஷன் இவ்வளவு கிராண்டா இருக்கணுமா..என்ன?" என்றாள்.

அவன் சிரித்தான். "நீ வேற அம்மா கல்யாணமே கிராண்டா வேணும்னாங்க! ரதிதான் சொல்லி சமாளிச்சா..." என்றான்.



"ரதியும் நீங்களும் ரொம்ப 'ப்ரண்ட்ஸா' ஆயிட்டீங்க போல இருக்கு..?" என்றாள். ஒருமாதிரிக் குரலில்

"ஆமாடா.. ஒரு வருஷம் ஓட்டணுமே..! என்று சொல்லவும் சற்றே சமாதானமானாள். அவன் கூப்பிட்டால் கூட போனில் சால்ஜாப்பு சொல்பவள் இப்போது தினம் இரண்டு முறை ஃபோன் செய்தாள்.

"யப்பா ! இந்தப் பெண்கள்! என்று வழக்கம்போல் அவன் உள்ளூரச் சிரித்துக் கொண்டான்.

பாகீரதி முதலில் அவனை"ரவிசார்" என்றுதான் அழைத்தாள். ஆனால், அவன்தான் "ரவின்னு கூப்பிடு. தனியா இருக்கும்போதும் அப்படியே கூப்பிடு. அப்பத்தான் இயற்கையாய் இருக்கும்" என்று வற்புறுத்தி அழைக்கச் செய்தான். மெது மெதுவாக இயல்புக்கு வந்தார்கள்.

யாரிடமும் நெருங்காமல் எல்லாரையும் ஒரு எல்லைக்கு வெளியே நிறுத்தியிருந்த ரவிபாரதிக்கு ரதியின் நட்புப் பிடித்தது என்றே சொல்லவேண்டும்.

இரண்டு நாட்கள் ஊட்டியில் சுற்றினார்கள். சிரித்தார்கள். படகில் போனார்கள்.

அவன் தான் சுற்றி வந்த வெளிநாடுகளைப் பற்றியெல்லாம் சுவாரசியமாகச் சொல்ல அவள் ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டாள். பொது அறிவில் ஓரளவு தேர்ச்சியுற்றவளாகவே இருந்தாள். அதேபோல் தான் படித்த புத்தகங்களைப் பற்றி நிறையப் பேசினாள். அவன் வியப்படைந்தான்.

"நிறையப் படிப்பியோ?" என்றான்.

"வேற வழி?"என்று அவள் பார்க்கவும்

"தனிமையைக் கொல்லணுமே?" அம்மா அப்பா

போனதுக்கப்புறம் தனியாய் வாழ்க்கையைச் சந்திக்கிற பக்குவத்தை எனக்கு புத்தகங்கள்தான் குடுத்துச்சு'' என்றாள்.

ரவிபாரதியின் முகத்தில் கனிவு கூடியது. ''தெரியும் ரதி. தனிமை எவ்வளவு கொடுமையானதுன்னு எனக்கும் தெரியும்'' என்றான் மெல்லிய குரலில்.

அந்தக் கணத்தில் அவன் தன் கவசத்தை உடைத்துக் கொண்டு வெளிவந்தாற்போல் ரதிக்குத் தோன்றியது. ஆனால், சட்டென்று தன்னை மறைத்துக் கொண்டவனாய்

''அதென்ன ரதி? தனிமை, தனிமைங்கறே... பல்ராம் உனக்குத் துணையாய் இருக்கலையா..என்ன?'' என்றான் குறும்புச் சிரிப்புடன்.

ரதி அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

''டெஃப்னட்லி..பல்ராம் எப்பவுமே எனக்கு ஒரு நல்ல 'ப்ரண்ட்' அதுமட்டுமில்ல நல்ல கைடும்கூட....'' என்றாள்.

''ஓ...''

''ஏன் நீங்களும் தனிமைங்கறீங்க.. அத்தை உங்களுக்கு இருக்காங்களே? ஸ்வப்னா.. அவங்க உங்க தனிமையைப் போக்கறதுக்கு எதுவும் ஸ்டெப் எடுக்கலையா? என்று கலகலவெனச் சிரித்தாள் ரதி.

அவனும் சிரித்தான். ''ஸ்டெப் எடுக்கறதா? விட்டா அம்மணி இடுப்பிலேயே தூக்கி வச்சுட்டுப் போயிருப்பா. ஆனா.. சூழ்நிலை சரியில்லை.. அப்புறம் ரதி ......அம்மாவுக்கும், எனக்குமான உறவைப் பத்தி நாம அலசாம இருக்கறதே நல்லது'' என்றான்.

''ஓ-ஐ ம் சாரி'' என் எல்லையை மீறிட்டேனோ? என்று வெகுவாக வருத்தப்பட்ட அவளை அவனே தேற்ற வேண்டியதாகப் போனது.

''சரி...சரி.. வருத்தப்படாதே'' 'பிரண்டுன்னு



ஆனதுக்கப்புறம் அதைப் பத்தியும் ஒரு நாள் சொல்ல வேண்டியிருக்கும்னு நெனக்கறேன்..சொல்றேன்'' என்றான்.

அவர்கள் இருவரும் பேசுவதையும், சிரிப்பதையும் பார்த்தால் இயல்பான கணவன், மனைவி போலத்தான் இருந்தது.

சற்று தொலைவில் மறைவில் நின்றபடி ஸ்வப்னா அவர்களைக் கவனிப்பதை இருவருமே கவனிக்கவில்லை.

∴ ∴ ∴

இரண்டு சூட்கேஸ்களிலும் துணிமணிகளை அடுக்கிக் கொண்டிருந்தாள் பாகீரதி.

''ப்ளீஸ் ரதி.. என் வேலையை நான் செஞ்சுக்கறேனே?'' என்றான் ரவிபாரதி.

''நோ...நோ...நோ.. நான் போற வரைக்கும் இனிமே இந்த வேலையெல்லாம் என்னோடது. நீங்க இனி உங்கள் அட்வர்டைசிங் கம்பெனிக்கு கான்செப்ட்ஸ் ஹாய்யா திங்க் பண்ணலாம்! என்றாள்.

சற்று நேரம் அமைதியாய்க் கழிந்தது. அவன் அன்று பிற்பகல் ஒரு சாம்பார் பொடி விளம்பரத்துக் சரியான ஐடியா அமையவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தது அவளுக்கு நினைவு வந்தது.

''ரவி. எங்கிட்ட ஒரு ஐடியா இருக்கு. சொல்லட்டுமா?'' என்றாள் ஆர்வமாய்.

''சொல்லேன் ரதி..'' என்று அவன் சுவாரசியமாகக் கேட்க ஆரம்பித்தான்.

''ஒரு ஹைஸ்பெண்ட் அண்ட் வைஃப்'' என்று சொல்ல ஆரம்பித்தவள் நிறுத்தி விட்டாள். முகத்தில் சற்றே வெட்கம் படிந்தது.

"ரொம்ப சிம்பிள் இடியாவா..இருக்கேன்னு கேலி செய்யக்கூடாது" என்றாள்.

"ஓ..கே ஓ..கே சொல்லு" என்றான்.

"வைப் கோபிக்கட்டு அம்மா வீட்டுக்குக் கிளம்புறா, ;;போனா போய்க்கோ என்கிறான் ஹஸ்பெண்ட். அவள் இன்னும் கோபமாகிறாள். வாசல் வரை போனவள் நாலு நாள் ஓட்டல்ல சாப்பிட்டுப் பாத்தா என் அருமை தெரியும்" என்று முணுமுணுக்கிறாள்.

"அதுதான் இல்லே.. இங்க பாருன்னு" அவன் கையைக் காட்ட அங்கே உங்கள் சாம்பார் பொடி பாக்கெட். அப்புறம் வைப் திரும்பி வந்துர்றா.." என்று சொல்லி விட்டு அவன் முகம் பார்த்தாள்.

அவன் ஒரு நிமிடம் ஒன்றும் சொல்லவில்லை. பிறகு முகத்தில் பிரகாசம் தெரிய.. 'இடியா இஸ் குட்..' என்று பரபரப்பானான். உடனே தன் அதிகாரிகளுக்கு போனில் ஆணைகள் கொடுத்தான்.

அவள் ஆச்சரியமாகப் பார்த்துக் கொண்டு நின்றாள்.

'நிஜமாவா ரவி? இடியா நல்லா இருக்கா?' என்று மகிழ்ச்சியானாள்.

'அட....ஆமா.. நிஜமாவே நல்லாயிருக்கே? பரவாயில்லை.. என்று அவன் மீண்டும் பாராட்டவும் அவளுக்கு மேலும் மகிழ்ச்சி கூடியது. சற்று நேரம் அதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள்.

'ரவி இப்ப நாம உண்மையான கணவன் மனைவியாக இருந்தா என்ன பேசிக்குவோம்? 'காதலொருவனைக் கைப்பிடித்தே அவன் காரியம் யாவிலும் கைகொடுத்தே..ன்னு நீங்க பாராட்டி இருக்கணும் தெரியுமா?' என்று அவள் சிரித்தாள்.

'யாரோட கவிதை? எனக்குத் தமிழ்ல அவ்வளவு



புலமையில்லை..' என்றான்.

'பாரதியின் கவிதை' என்றாள்.

'ஹேய்! பாரதியார் கவிதைகள்ன்னா அம்மாவுக்கு ரொம்ப பிடிக்கும்..' என்றான்.

'அப்படியா?' என்றாள்.

'அதனாலதான் என் பேரில பாரதின்னு வரும்னு பேர் வச்சாங்களாம்..' என்று புன்னகைத்தான். 'ஆனா..! என்று மேலும் ஏதோ சொல்ல வந்தவன் 'அதை விடு' என்று பேச்சை மாற்றினான்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்த பின் 'சரி.. நான் தூங்கப் போகட்டுமா? குட்நைட்...! என்று அவள் அறைக்கதவை மோதச் சாத்தி விட்டு அறைக்குள் போகவும் முன் ஹாலில் கதவு தட்டும் சத்தம் கேட்டது.

ரவிபாரதி அலுப்புடன் திறந்தான். ஸ்வப்னா நின்றிருந்தாள்.

* * *

## (5)

உண்மையில் மகிழ்ச்சியானான் ரவிபாரதி.

'ஹேய்.. எங்கே இங்கே இந்த நேரத்துல...' என்றான்.

'சும்மாதான்..' என்றாள். உள்ளே நுழைந்தாள். சோபாவில் அமர்ந்தாள். அனைத்தும் செய்கைகளிலும் ஒரு செயற்கைத்தனம் தெரிய புன்னகைத்தாள்.

'என்ன விஷயம் ஸ்வப்னா?' என்றான்.

'ரவி.. இன்னைக்கெல்லாம் ரொம்ப என்ஜாய் பண்ணியிருக்க போல இருக்கே..' என்றாள்.

அவன் பார்வை கூர்மையானது. 'நீ எங்கே பார்த்தே?' என்றான்.

'கார்டன்லயே பார்த்தனே' என்றாள்.

அவன் முகம் சுகம்பியது. இவள் வேவு பார்க்கிறாளா என்ன? என்று எண்ணம் தோன்றியது.

உடனே அவள் உஷாராகிக் கொண்டாள். 'ஹலோ நான் ஒன்றும் வேவு பார்க்கலே. இன்னைக்கு எங்க கம்பெனி சார்பா ஊட்டியில ஒரு செமினார். அதுக்கு வந்தேன். லஞ்ச் டைம்ல வெளியே கார்ல போறப்ப பார்த்தேன்' என்றாள்.

அவன் சமாதானமானான். சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

காஃபி கலக்கிக் கொடுத்தாள். 'ரவி இங்க தங்கச் சொல்லமாட்டீங்களா?' என்று அவள் சிரிக்க.

'ஹலோ நான் ஹனிமூன்ல இருக்கேன். உன்னை எப்படி தங்கச் சொல்றது?' என்று அவனும் சிரித்தான்.

எழுந்து சுற்றிப்பார்ப்பவள் போல் பார்த்தாள்.

'எங்கே ரதியைக் காணோம்?' என்று அவள் படுக்கையறைக் கதவை லேசாகத் தள்ள உள்ளே பாகீரதி ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள்

'என்ன கதவை திறந்து வச்சுட்டுத் தூங்கறாங்க..?' என்றாள்.

ரவிபாரதி அவளைக் கூர்மையாகப் பார்த்தபடி ஆனால், இதழ்களில் ஒரு அசரப்புன்னகையைத் தேக்கியபடி

'ஒருவேளை உனக்கு என்மேலே இல்லாத நம்பிக்கை ரதிக்கு என்மேலே இருக்கும் போலிருக்கு' என்றான்.

ஸ்வப்னாவின் முகம் கறுத்துப் போய் விட்டது.

'ரவி.. நான் அப்படி எதுவும் நினைக்கலே' என்று சமாதானம் சொல்ல ஆரம்பித்தாள்.



'நோ ப்ராப்ளம். எல்லாம் இயற்கைதான். நீ புறப்படு!' என்று அவளை அனுப்பி விட்டு வந்தான்.

ஹால் சோபாவில் அமர்ந்தான். மனதில் பெரிய குழப்பம் நிறைவதாக உணர்ந்தான். அந்த நேரம் அவன் ஆபீஸ் மேனேஜர் போன் செய்து

'சார்.. நீங்க குடுத்த ஐடியாவுக்கு பெரிய வரவேற்பு...' என்றார்.

'ஐடியா என்னோடது இல்லே மானேஜர்.. என் வை'போடது' என்று அவனும் பெருமிதமாகப் புன்னகைத்தான்.

மனம் சற்றே அமைதியடைந்தது.

* * *

'அம்மா உங்களை யாரும்மா இதையெல்லாம் செய்ய சொன்னா. நீங்க போங்கம்மா' என்று ராமையா கெஞ்சிக் கொண்டிருந்தார்.

'சும்மாயிருங்க ராமையா. சமையல் செய்யறதென்ன எனக்கு பெரிய வேலையா?' எனக்கு ரொம்பப் பிடிச்ச விஷயம் தெரியுமா? என்று ராமையாவை புறந்தள்ளிவிட்டு அவள் சமையலில் ஆழ்ந்தாள்.

அன்றைக்கு ஏதோ மீட்டிங் என்று சஃபாரியில் வந்தான் ரவிபாரதி.

'என்ன.. இங்க வந்து கலக்கிட்டு இருக்கறே?' என்று சமையலறையில் எட்டிப் பார்த்தான்.

'சாம்பார் கலக்கறேன்' என்று கரண்டியுடன் திரும்பிப் பார்த்துச் சிரித்தாள்.

'அது சரி.. நீ கலக்கற சாம்பார் வயித்தைக் கலக்காம இருந்தாச் சரி...' என்று அவன் கலாய்த்தான்.

'ஹலோ யு ஆர் இன்சல்டிங் மி.. தட்ஸ் - பேட்'

என்று அவள் செல்லமாகக் கோபிக்க.. சிரித்தபடி அவன் சாப்பிட அமர்ந்தான்.

'என்ன மெனு..?' என்றான்.

'சேவையும், பணியாரமும்' என்றாள்.

ரசித்துச் சாப்பிட்டான். [ரியலி குட்.. ராமையா கேட்டுக்குங்க' என்றான்.

'இனிமே.. ரெசிபி எதுக்கு தம்பி? அம்மாதான் எல்லா வேலையும் சமைக்க குடுப்பாங்களே?' என்றார் ராமையா நிறைவுடன்.

'ஆமா இல்லே..' என்று அவன் அவசரமாகக் குனிந்து சாப்பிட பாகீரதி எதையோ எடுப்பவள் போல் சற்று உள்ளே போய் விட்டாள்.

வழக்கம் போல ரவிபாரதி அலுவலகம் போகு முன் அம்மாவைப் பார்க்கப் போனான். 'சின்னம்மா கொடுத்தாங்க' என்று ஒரு கேரியர் பின்னே வர விஜயலட்சுமி புன்னகைத்தார்.

அலுவலக விஷயம் பேசிவிட்டு அவன் புறப்பட 'ரவி.. ஒரு நல்ல நாள் பாரு' என்றார் அம்மா.

'எதுக்கும்மா?' என்றான்.

'மருமகதான் வந்தாச்சே.. நானும் அங்கயே வந்தர்றேன்..' என்றாள்.

ரவிபாரதி இதை எதிர்பார்க்கவில்லை. சற்றே அதிர்ந்து போனான். ஆனால் உடனே தன்னை மீட்டுக் கொண்டான்.

'தாராளமா.. எப்ப வேணா வாங்க' என்று செயற்கையான உற்சாகத்துடன் சொல்லி விட்டுப் புறப்பட்டான்.

சுற்றிலும் வலை பின்னப்படுவது போல் உணர்ந்தான். சிந்தனையில் ஆழ்ந்தான்.

* * *



அன்றிரவு எட்டுமணியிருக்கும்...

ஏதோ யோசனையிலேயே இருக்கிற ரவிபாரதியை ஓரக்கண்ணால் அவ்வப்போது பார்த்துக் கொண்டு கையில் பேருக்கு ஒரு புத்தகத்தை வைத்துக் கொண்டு லைப்ரரியில் அமர்ந்திருந்தாள் பாகீரதி.

சற்று நேரம் கையில் வைத்துக் கொண்டிருக்கிற ஃபைலைப் பார்ப்பதும் அதில் கவனம் செல்லாமல் சிந்தனையில் ஆழ்வதுமாக இருப்பதைக் கண்டாள். தானே போய்க் கேட்கலாமா என்று நினைத்துக் கொண்டிருக்கும்போதே அவனே 'ரதி. இங்கே வா!' என்று அழைத்தான்.

'என்ன ரவி?' என்று போனாள்.

அவளை எதிர் சோஃபாவில் அமருமாறு கையைக் காட்டி விட்டு அவன் யோசனையில் ஆழ்ந்தான். பிற்கு மெதுவான குரலில்

'ரவி! அம்மா இந்த வீட்டுக்கே வர்றேங்கறாங்க...!' என்றான்.

அவள் உற்சாகமானாள்.

'அதனாலென்ன வரட்டுமே?' என்றாள்.

'உனக்குப் புரியலை ரதி...'

அவள் கேள்விக்குறியுடன் பார்த்தாள.

'அம்மா இங்க வந்தா எல்லா விதத்திலும் அவங்களை நம்ப வைக்கணும். 'பார் எக்ஸாம்பிள் நான் குறைந்தது ஆறு மணிக்காவது வீட்டுக்கு வரணும். எத்தனை வேலைகள் கெட்டுப் போகும் தெரியுமா?' என்றான் யோசனையுடன்.

'ஓ...!' என்றாள். 'ஒருவேளை இந்த இடத்தில் ஸ்வப்னா இருந்திருந்தால் உங்களுக்கு வர்றதுக்கு இன்ட்ரஸ்ட்டா இருந்திருக்கும்' என்றாள்.

அவன் புன்னகைத்தான். 'விஷயம் அதில்லை ரதி. டைம் மேனேஜ்மென்ட்தான். ஆறு மணிக்குப் பிறகுதான் நான் என்ன பைல்களையும் பாக்கறது. பகல் முழுதும் ஒரு ரவுண்ட் விசிட் பாக்கறதுக்கே சரியாய் இருக்கும்' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தாள். பிறகு மகிழ்வாய்ப் புன்னகைத்தாள்.

'ப்ராப்ளம் சால்வ்ட்...' என்றாள்.

'எப்படி?' எனப் புரியாமல் பார்த்தான்.

'இங்கேயே இந்த ஹாலையே ஆ'பீசா மாத்திற வேண்டியதுதான். இங்க மேல வந்ததுக்கப்புறம் அம்மா என்ன வேலை பாக்கப் போறாங்களா? 'பைல்' எல்லாத்தையும் இங்க கொண்டு வந்துருங்க. நானும் ஹெல்ப் பண்றேன். பகல் முழுக்க வெட்டியாத்தானே தூங்கறேன்.' என்றாள்.

'என்ன படிச்சிருக்கே?' என்றான்.

'எம்.காம் முடிச்சிருக்கேன். எம்.பி.ஏ. போஸ்டல்லே பண்றேன்'

'தட்ஸ் குட்'

'கம்ப்யூட்டர் ஆபரேஷன்ஸ் தெரியும். டாலி தெரியும். உங்களுக்கும் உபயோகமா ஹெல்ப் பண்ண முடியும்'

'தட்ஸ் 'பைன். இதுக்கெல்லாம் ஏது நேரம்?' என்றான்.

தேடிச் சோறு நிதந் தின்று ! பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி ! மனம்
வாடித் துன்பமிக உழன்று ! பிறர்
வாடப் பல செயல்கள் செய்து ! நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி ! கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் ! பல
வேடிக்கை மனிதரைப் போலே ! நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ?



என்று பாரதியைக் கோட் செய்தாள் ரதி.

அவன் கலகலவென்று சிரித்தான்.

'ரதி இது ரொம்ப ரேர் காம்பினேஷனா இருக்கே' என்றான்.

'எது?'

'படிச்சது காமர்ஸ். ஆனா பேசறது இலக்கியம்...அதைச் சொல்றேன்'

'இலக்கியம் படிக்கறதுக்கு எல்லாருக்கும் ஒரே ஒரு தகுதிதான் வேணும் மிஸ்டர் ரவிபாரதி'

'என்னவாம் அது?'

'ரசனை.. மிஸ்டர்...ரசனை' என்றாள். அவன் நெற்றியில் லேசாகக் கோடுகள் விழ அவளைப் பார்த்தான்.

'கிண்டல் செய்றியோ?' என்றான். உடனே அவள் பதட்டமானாள்.

'ஐயய்யோ..இல்லே...இல்லே..' என்று உளறிக் கொட்டினாள்.

அவன் வெடிச்சிரிப்புச் சிரித்து விட்டான்.

'ரொம்ப டென்ஷனாகாதே ரதி. 'பிரண்டுன்னு சொல்லிட்டலே. தாராளமாய்க் கிண்டலும் செய்யலாம்' என்று பேசிக் கொண்டே அறைக்குப் போய் லுங்கி டீ ஷர்ட்டுக்கு மாறி வந்தான்.

அப்பாடா இப்பதான் பசியே தெரியுது. 'அப்புறம் என்ன டி'பன்?' என்று இறங்கிப் போனார்கள்.

சப்பாத்தி, குருமா, வெஜிட்டபில் சாலட் என்று அவள் செய்திருந்த டி'பனை சாப்பிட்டு விட்டு வந்த பிறகு ரவிபாரதி சொன்னான்.

'நிஜமாவே ரதி இப்பல்லாம்..வீட்டுல சாப்பிடறதுக்கு ரொம்பப் பிடிக்குது. இல்லாட்டி என்னடா காரணம் சொல்லி

அவன் புன்னகைத்தான். 'விஷயம் அதில்லை ரதி. டைம் மேனேஜ்மென்ட்தான். ஆறு மணிக்குப் பிறகுதான் நான் எல்லா பைல்களையும் பார்க்கறது. பகல் முழுதும் ஒரு ரவுண்ட் விசிட் பாக்கறதுக்கே சரியாய் இருக்கும்' என்றான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தாள். பிறகு மகிழ்வாய்ப் புன்னகைத்தாள்.

'ப்ராப்ளம் சால்வ்ட்...' என்றாள்.

'எப்படி?' எனப் புரியாமல் பார்த்தான்.

'இங்கேயே இந்த ஹாலலயே ஆ'ஃபீசா மாத்திட வேண்டியதுதான். இங்க மேல வந்ததுக்கப்புறம் அம்மா என்ன வேலை பாக்கப் போறாங்களா? 'பைல்ஸ் எல்லாத்தையும் இங்க கொண்டு வந்துருங்க. நானும் ஹெல்ப் பண்றேன். பகல் முழுக்க வெட்டியாத்தானே தூங்கறேன்.' என்றாள்.

'என்ன படிச்சிருக்கே?' என்றான்.

'எம்.காம் முடிச்சிருக்கேன். எம்.பி.ஏ. போஸ்டல்லே பண்றேன்'

'தட்ஸ் குட்'

'கம்ப்யூட்டர் ஆபரேஷன்ஸ் தெரியும். டாலி தெரியும். உங்களுக்கும் உபயோகமா ஹெல்ப் பண்ண முடியும்'

'தட்ஸ் 'பைன் இதுக்கெல்லாம் ஏது நேரம்?' என்றான்.

தேடிச் சோறு நிதந் தின்று ! பல
சின்னஞ் சிறு கதைகள் பேசி ! மனம்
வாடித் துன்பமிக உழன்று ! பிறர்
வாடப் பல செயல்கள் செய்து ! நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி ! கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின் மாயும் ! பல
வேடிக்கை மனிதரைப் போலே ! நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ?



என்று பாரதியைக் கோட் செய்தாள் ரதி.

அவன் கலகலவென்று சிரித்தான்.

'ரதி இது ரொம்ப ரேர் காம்பினேஷனா இருக்கே' என்றான்.

'எது?'

'படிச்சது காமர்ஸ். ஆனா பேசறது இலக்கியம்...அதைச் சொல்றேன்'

'இலக்கியம் படிக்கறதுக்கு எல்லாருக்கும் ஒரே ஒரு தகுதிதான் வேணும் மிஸ்டர் ரவிபாரதி'

'என்னவாம் அது?'

'ரசனை... மிஸ்டர்...ரசனை' என்றாள். அவன் நெற்றியில் லேசாகக் கோடுகள் விழ அவளைப் பார்த்தான்.

'கிண்டல் செய்றியோ?' என்றான். உடனே அவள் பதட்டமானாள்.

'ஐயய்யோ...இல்லே...இல்லே...' என்று உளறிக் கொட்டினாள்.

அவன் வெடிச்சிரிப்புச் சிரித்து விட்டான்.

'ரொம்ப டென்ஷனாகாதே ரதி. 'பிரண்டுன்னு சொல்லிட்டலே. தாராளமாய்க் கிண்டலும் செய்யலாம்' என்று பேசிக் கொண்டே அறைக்குப் போய் லுங்கி டி ஷர்ட்டுக்கு மாறி வந்தான்.

அப்பாடா இப்பதான் பசியே தெரியுது. 'அப்புறம் என்ன டிஃபன்?' என்று இறங்கிப் போனார்கள்.

சப்பாத்தி, குருமா, வெஜிடபிள் சாலட் என்று அவள் செய்திருந்த டிஃபனை சாப்பிட்டு விட்டு வந்த பிறகு ரவிபாரதி சொன்னான்.

'நிஜமாவே ரதி இப்பல்லாம் வீட்டுல சாப்பிடறதுக்கு ரொம்பப் பிடிக்குது. இல்லாட்டி என்னடா காரணம் சொல்லி

வெளியே சாப்பிடலாம்னு பாத்துகிட்டிருப்பேன். ராஜையா வருத்தப்படுவாரேன்னுதான் அப்பப்ப வீட்டுல சாப்பிடறது' என்றான்.

அவளும் 'ரவி எனக்கும் இப்பல்லாம் சமையல் செய்றது ரொம்பப் பிடிக்குது தானே சமைக்க தானே சாப்பிட்டு அது பெரிய போர் தெரியுமா?' என்றாள். அவள் முகத்தில் கனிவு கூடியது.

'நிறையத் துன்பப்பட்டிருக்கிறாள் இந்தப் பெண்' என்று அனுதாபம் கூடியது. அதே நேரத்தில் அவள் தொடர்ந்தாள்.

'ரவி.. அம்மா இங்க வர்றதைப் பத்தி ரொம்ப வொரி பண்ணிக்க வேண்டாம். ஒரு வருடம் எல்லாரும் சந்தோஷமா ஒரு குடும்பமா இருப்போமே.. அப்புறம் எப்படியும் பிரியறதுக்காக நாம ஒரு நாடகம் நடத்தித்தான் வேண்டியிருக்கும். அன்னைக்குப் பாத்துக்கலாம்..என்ன?' என்றாள்.

அவன் தலையாட்டிக் கொண்டான். 'தாங்ஸ் ரதி' என்றான்.

'எதுக்கு?' என்றாள் வியப்புடன்.

'எல்லாத்துக்குந்தான்...'

அவள் குட்நைட் சொல்லி அறைக்குப் போனவள் திரும்பி வந்து

'ரவி.. அட்வர்டைசிங் பத்தி வந்த அந்தப் புத்தகம் படிக்க நேரமில்லைன்னு சொல்லிட்டிருந்தீங்களே குடுங்களேன் நா படிச்சுட்டு உங்களுக்கு ஜிஸ்ட்ஸ் எடுத்துத் தர்றேன்...' என்றாள்.

'ஹேப்! தட் வில் பி ரியலி 'பைன்' என்று கொண்டு வந்து கொடுத்தான். அவள் ஏதோ ஒரு பாடலை முணுமுணுத்தபடி தன் அறைக்குப் போவதை அவன் ஆதரவாகப் பார்த்தபடி சோபாவில் அமர்ந்திருந்தான்.

அதற்குப் பின் நிம்மதியாக பைலில் ஆழ்ந்தான்.

ஒரு வருஷம் ஒரு பெண்ணுடன் எப்படித்தான் பொய்யாக நாட்களைக் கழிப்பது என்று உள்ளூர அவன் கொண்டிருந்த கவலைக்கு அவசியமே இல்லாமல் அவள் நடந்து கொண்டது அவனுக்குப் பெரியதொரு நிம்மதியைக் கொடுத்தது.

'சும்மாவா கால்கட்டு' என்று கல்யாணத்தைச் சொல்கிறார்கள் என்று நினைத்துச் சிரித்துக் கொண்டான்.

* * *

## 6

'ரதி! அந்த பைலை எடுத்து வைக்கச் சொன்னேனே வைக்கலியா?' என்ற குரல் மாடியில் இருந்து கேட்டது.

டைனிங் டேபிளில் தட்டுக்களை எடுத்து வைத்துக் கொண்டிருந்த ரதி

'வச்சிருக்கேன் ரவி. உங்க பிரீஃப் கேஸில் இருக்கு' என்று குரல் கொடுத்தாள்.

'அம்மா... நீ போய் எடுத்துக் குடுத்துட்டு வாம்மா' என்று அனுப்பினார் அம்மா.

அவள் மீண்டும் மாடிக்கு போனாள்.

'என்ன ரவி எடுத்து வச்சிருக்கனே? பார்க்கலயா' என்று எடுத்துக் காட்டினாள்.

'அது சரி.. பார்த்தேன். என்ன இந்த ஷர்ட்டில பட்டனைக் காணலை' என்று அடுத்துக் கடுப்பானான் ரவிபாரதி.

'ஐயோ.. அந்த ஷர்ட் இன்னும் அயர்ன் பண்ணலை. பாருங்க இங்க வேற ஷர்ட் எடுத்து வச்சிருக்கேன். மேட்சிங்கா..' என்று எடுத்து நீட்டினாள்.

'ஓ..' என்று வாங்கிக் கொண்டான்.

அவனுக்கே தான் அவளை மிகவும் தொல்லைப் படுத்துகிறோம் என்று தோன்றி விட்டது. சாப்பிடுவதற்காகப் படியிறங்கி வருகையில்

'சாரி..ரதி ரொம்பப் படுத்தறனோ?' என்றான்.

அவள் புன்னகைத்தாள். 'அதனால பரவாயில்லை. உங்களுக்கு நேரத்துக்குப் போகணும்கிற டென்ஷன் இயற்கைதான். நீங்க போனதற்குப் பிறகு எங்களுக்கு என்ன வேலை 'ப்ரீயாதானே இருக்கப் போறோம். இதுவும் நல்லாத்தான் இருக்கு...' என்று அன்பாகப் புன்னகைக்கிற அவளைப் பார்த்தான்.

'எவ்வளவு நல்ல பெண் இவள்' என்று எண்ணிக் கொண்டான்.

உணவு பரிமாறி சாப்பிடச் செய்து அவன் புறப்படும் வரை கூடவே இருந்து அனுப்பி வைத்து விட்டு அப்பாடா என்று டைனிங் டேபிள் சேரில் அமர்ந்து விஜயலட்சுமியைப் பார்த்துச் சிரித்தாள்.

காலை நேரங்களில் ரவிபாரதியும் டென்ஷனாக இருப்பான். கோபத்தை டன் கணக்கில் கொட்டுவான். பாரதி பொறுமையாக அவன் கோபத்தை வாங்கிக் கொண்டு தகுந்தபடி காரியங்கள் செய்து கொடுப்பாள்.

வீட்டிலும் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டிருந்தது. ரவிபாரதி புறப்பட்டுப் போனபின் அவளும், அத்தையும் டிபன் சாப்பிடுவார்கள்.

அலுவலகத்திற்குச் சென்று விட்டானே என்று ப்ரீயாக இருந்து விட முடியாது. போன் செய்து ஏதாவது விவரங்கள் கேட்டுக் கொண்டே இருப்பான்.

பிற்பகல் உணவுக்கு வந்து கொண்டிருந்தவன் தற்போது மாலையில் விரைவில் வரவேண்டி இருப்பதால் அலுவலகத்துக்கு அனுப்பி விடச் சொல்வான். பல நாட்கள் அவளே போய் பரிமாறி சாப்பிடச் செய்து விட்டு வருவாள்.

பகல் வேளைகளில் டென்ஷன் இல்லாமல் ஃப்ரீயாக பேசுவான்.

'என்ன ரதி? உன்னைக் காலை நேரங்கள்லே ரொம்பத் தொல்லைப் படுத்தறேன். இல்லே' என்பான்.

அவள் வழக்கமாகச் சொல்கிற அதே விளக்கங்களைச் சொல்வாள். இருவரும் சிரித்துக் கொள்வார்கள்.

'ரவி.. அப்புறம் அந்த குப்தா கன்சர்ன் பற்றிய விவரங்கள் கம்ப்யூட்டர்ல 'பீட்' பண்ணச் சொன்னீங்களே. பிரிண்ட் அவுட் எடுத்துட்டு வந்திருக்கேன். அப்புறம் இந்த சோப் விளம்பரத்துக்கு இப்படி ஒரு ஐடியா தோணுது.நல்லாருக்கா பாருங்க..' என்று கருத்துக்கள் கொடுப்பாள்.

படிப்படியாக கான்பிடென்ஷியல் விஷயங்கள் கூட அவளிடம் பரிமாறிக் கொள்ள ஆரம்பித்தான். அவள்தான் ஒருநாள்

'ரவி.. ஒரு வருத்தத்தில் போயிடப் போறேன். எங்கிட்டப் போயி இவ்வளவு முக்கியமான விஷயங்களை..' என்று இழுத்தாள்.

'அது வேற இஷ்யூ.இது வேற இஷ்யூ நீ எந்த ரகசியத்தையும் காப்பாத்துவேன்னு எனக்கு நம்பிக்கை வந்துருக்குன்னு வச்சுக்கயேன்' என்று வாயடைத்து விட்டான்.

அவளுக்கு ஒன்று புரிந்தது. அவனுக்கு

ஆத்மார்த்தமான ஒரு நட்பு இல்லாமலே இருந்திருக்கிறது. தனது நட்பும் அருகாமையும் அவனுக்கு ரொம்பவும் இதமாக இருக்கிறது என்று.

அன்பைக் கொடுப்பதில் நமக்குத்தான் என்ன நஷ்டம். இருக்கிற வரைக்கும் கொடுப்போமே என்று முடிவு கட்டிக் கொண்டாள். ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் குருஜி சொல்கிற மாதிரி நிகழ்காலத்தில் வாழ்வோமே என்று எண்ணிக் கொண்டாள்.

அன்றைக்கு ஞாயிற்றுக் கிழமை

வீட்டில் ஓய்வாக இருந்தான். பிற்பகல் உணவு எல்லாரும் ஒரே சமயத்தில் உண்பார்கள்.

ராமையா சொன்னார்.

'ரதிம்மா.. நீங்க வந்ததற்குப் பிறகு அய்யா.. அதிகமா பார்ட்டிங்களுக்கு போறதையே விட்டுட்டாரு. உங்க சமையல்லயே பாதி கட்டிப் போட்டீங்கன்னா...மீதி பாதி உங்க பொறுமையால கட்டிப் போட்டுட்டீங்க. யப்பா! காலை நேரத்துல என்ன பாடுபடுத்துவாரு தெரியுமா?' என்று சிரிக்க அவனும் சிரித்தான்.

இந்த மாதிரி நேரங்களில் ராமையாவும், அவளுமாக அவனை வெகுவாகக் கேலி செய்வார்கள். ரசித்துச் சிரிப்பான். அவர்களோடு கூடச் சேர்ந்து கொண்டு தன்னைத்தானே கேலி செய்து கொண்டு சிரிப்பான்.

சாப்பிட்டு முடித்த பின் 'ரதி.. நான் ஒரு தூக்கம் போடணும். நீ என்ன செய்யப் போறே?' என்றான்.

'ரவி..' என்று அவள் ஆரம்பிக்கவும். 'சரி..சரி..சாப்பிட்டவுடனே தூங்கக் கூடாது. அதுதானே.. ஹாப் அன் அவர் கழிச்சு...' ஓ..கே...ஓ..கே...' என்று எழுந்து மறுபடியும் அவள் முகம் பார்த்தான்.



'நீங்க ரெஸ்ட் எடுங்க. இங்கே அத்தைகிட்டே கொஞ்ச நேரம் பேசிட்டு வரேன்..' என்றாள்.

'அதுசரி.. பாரதியாரை அக்கு வேறா ஆணி வேறா அலசுவீங்க.. நம்மளை விடுங்கப்பா..சாமி' என்று சிரித்துவிட்டுப் போனான்.

பத்து நிமிடங்கள் வரை இருவரும் கலகலவென்று சிரித்துக் கொண்டது காதில் விழ புன்னகைத்துக் கொண்டான் ரவிபாரதி.

'எப்படி எல்லாருடனும் வெகு எளிதாக ஒட்டிக் கொள்கிறாள் இந்த ரதி' என்று நினைத்துக் கொண்டான்.

அப்போதுதான் அவனுக்கு அந்தச் சந்தேகம் தோன்றியது. ஸ்வப்னா இப்படியெல்லாம் குடும்பத்தில் ஒருத்தியாக ஒட்டிக் கொள்வாளா? அவளைப் பற்றி முழுமையாக என்ன தெரியும் தனக்கு? கவர்ச்சியாக இருக்கிறாள். தன் மனத்தில் சலனத்தை ஏற்படுத்துகிற அளவுக்கு வெற்றி பெற்றிருக்கிறாள். ஆனால் எப்போதும் பணம், பிஸினஸ் என்றுதானே பேசுகிறாள். தன்னுடைய தனிப்பட்ட ரசனைகளை அறிந்து கொள்ள அவளும் முயற்சிக்கவில்லை. தானும் அப்படி முயற்சிக்கவில்லை. ஆனால் இந்த ரதி வந்த ஒன்று மாதத்துக்குள்ளாகத் தனது விருப்பு, வெறுப்புகளை முழுமையாக அறிந்துகொண்டு விட்டாளே என்று ஆச்சரியமாக இருந்தது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்த போதுதான் பாடல் ஒலி காற்றில் மிதந்து வந்தது. ஆச்சரியமானான் எழுந்து கீழே போனான்.

அம்மாவின் அறைக்குள் அம்மா பாடிக் கொண்டிருந்தார். 'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா' என்ற பாடலை அம்மா கண்மூடிப் பாடிக் கொண்டிருக்க எதிரே

ரதி அவர் காலடியில் அமர்ந்து அதை ரசித்துக் கேட்டுக் கொண்டிருந்தாள். அம்மாவின் முகத்தில் தோன்றிய உணர்வுகளை ஒரு நிமிடம் திகைத்துப் பார்த்துக் கொண்டிருந்த ரவிபாரதி அறைக்கு வெளியே ஹாலில் சோபாவில் அமர்ந்து கொண்டான்.

அறையின் வெளியே நின்று கேட்டுக் கொண்டிருந்த ராமையாவிடம் மௌனமாக இருக்குமாறு ஜாடையில் கேட்டுக் கொண்டான். அம்மா பாடி முடித்த பிறகு ரதியைப் பாடச் சொல்ல அவளும் 'பாயுமொளி நீ யெனக்கு, பார்க்கும் விழி நானுனக்கு' என்ற பாடலை உருகிப் பாட அந்த பாடலின் பாவத்தில் கரைந்தே போனான் ரவிபாரதி. அவள் பாடி முடித்தவுடன் அம்மா கைதட்டி ரசித்தார். பிறகு

'ரதி. ஒருவேளை இந்தப் பாட்டைப் பாடித்தான் என் மகனைக் கவர் பண்ணிட்டியோ' என்று கேலி செய்யவும், அவள் சட்டென்று 'நான் ரூமுக்குப் போறேன்ங்கத்தை! என்று வெளியே வந்து விட்டாள்.

வந்தவள் ஹாலில் ரவிபாரதி அமர்ந்திருப்பதைப் பார்த்துத் திகைத்துப் போனாள். கனவில் இருப்பவள் போல் அமர்ந்திருந்த ரவிபாரதியும் எழுந்தான். இருவரும் மௌனமாகப் படிகளில் ஏறினார்கள்.

மேலே போனவுடன் 'ரதி ரொம்ப நல்லாப் பாடறே' என்றான்.

'எனக்காக இன்னொரு தடவை பாடுவியா?' என்றான். பாடினாள் கண்மூடி ரசித்துக் கேட்டான்.

'சப்பர்ப்..ரதி சப்பர்ப்..' என்று பாராட்டிக் கொண்டான்.

'பாட்டுக்கு அழகே பாவம்தான் ரதி.. அது சரி இப்படி உருகிப் பாடறே. ஒருவேளை பல்ராமை நினைச்சுட்டியோ' என்று கிண்டல் செய்தான்.



அவள் அவனை நிமிர்ந்து பார்த்தாள். 'இல்லை' என்றாள்.

ரவி..நா எப்பவும் பாரதியாராத்தான் என்னைக் கற்பனை பண்ணிக்கறது ரவி. பாரதி ஒரு முழுமையான மனுடன் தெரியுமா? தெய்வ பக்தி, தேச பக்தி, காதல்னு எல்லாத்தையும் முழுமையா அனுபவிச்சுப் பாடினவன். வாழ்ந்தது என்னமோ வறுமையிலன்னாலும் பத்து மகாராஜாக்கள் வாழக்கூடிய வாழ்க்கையை அவன் வாழ்ந்துட்டான் தெரியுமா? ஏன் சொல்லுங்க..? என்றாள்.

அவள் பேச்சை லயித்துக் கேட்டுக் கொண்டிருந்தவன் தன்னையும் மறந்து

'ஏன் ரதி?' என்றான்.

'ஏன்னா.. அவன் மனதாலே வாழ்ந்தவன். மனசாலே வாழ்ற வரைக்குந்தான் வாழ்க்கை உணர்வு மயமாயிருக்கும். அதுமட்டுமில்லே. ரவி நீங்க நெனக்கற மாதிரி பல்ராமை நான் ஒன்றும் அந்தக் கோணத்திலே நேசிக்கலே. நல்ல நண்பன். என்னால அவனுக்கு வாழ்க்கையில மகிழ்ச்சி கிடைச்சா கிடைக்கட்டும்னுதான் அவனுடைய எல்லாத் திட்டங்களுக்கும் நான் ஒத்துக்கிட்டேன்..' என்றாள்.

'ஓ...' என்று ஒரு நிமிடம் வாயடைத்துப் போனான் ரவி.

அவள் அதே கனவுக் குரலில் மீண்டும் தொடர்ந்தாள். 'ரவி.. அத்தை பாடியதையும் கேட்டீங்கதானே? அதிலயும் எவ்வளவு உயிர் இருந்துச்சு பாத்தீங்களா. அவங்க உங்களை ரொம்ப நேசிக்கறாங்க. ரவி அந்தத் தாய்மை உணர்வுல எங்கயும் களங்கமேயில்லை. எங்கயோ ஏதோ தப்பு நடந்திருக்கு...' என்று அவள் தனக்குத்தானே பேசிக் கொண்டாள்.

வழக்கமாகத் தாயைப் பற்றிப் பேசினாலே பேச்சு மாற்றி விடும் அவன் இன்றைக்கு அப்படி செய்யவில்லை. மாறாக சற்று நேரம் அமைதியாக அமர்ந்திருந்தான்.

அவள் தொடர்ந்தாள். 'உலகம் முழுக்க தேடினாலும் கெட்ட தாய்ன்னு யாரும் இருக்க முடியாது. தெரியுமா?' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. வெகுநேரம் மௌனமாக அமர்ந்திருந்தார்கள். பிறகு அவன் 'நீயும் அம்மாவும் ரொம்ப 'ப்ரண்ட்ஸ் ஆயிட்டீங்க போலே?' என்றான்.

'ம்..ரொம்ப...' என்று கலகலவென்று சிரித்தாள் ரதி. பிறகு தன் தலைப்பின்னலை எடுத்து முன்னே போட்டுக் கொண்டு 'பாருங்களேன். இந்தப் பின்னல் கூட அத்தை போட்டு விட்டாங்க என்றாள். 'நல்லாயிருக்கா...' என்றாள்.

அவனும் சிரித்தான்.

'அப்படியே சரோஜா தேவி மாதிரி ஒரு டான்ஸ் ஆட வேண்டியதுதானே?' என்று கிண்டல் செய்தான்.

'வேண்டாம் ரவி. அப்புறம் நிஜமாவே ஆடிடுவேன்' என்று அவள் பயமுறுத்த..

'ஐய்யோ.. வேண்டாம்டா சாமி' என்று பயந்தவன் போல் நடித்து எழுந்து 'குட்நைட்' சொன்னான்.

அப்போது அவள் கேட்டாள். 'ரவி.. என்னை மட்டும் கேட்டீங்களே. உங்களுக்கு ஸ்வப்னா ஞாபகம் வர்லையாக்கும்..' என்றாள்.

அவன் ஒன்றும் பேசவில்லை. அவளைப்பார்த்துப் புன்னகைத்து விட்டுப் போய்விட்டான். ஆனால், அறைக்குப் போனபின் ஸ்வப்னா. நினைவு வராதது குறித்து வெகுவாக ஆச்சரியப்பட்டுக் கொண்டான்.



அம்மாவின் பாட்டில் தெரிந்த ஏக்கமே அவன் மனதைப் பிசைகிறாற்போல் தோன்றியது வெகுநேரம் உறங்கவில்லை.

* * *

## 7

செல்போன் மணி பாடல் இசைத்து அழைத்தது.

ரவிபாரதி எடுத்தான்.

'ஹலோ! நான் ரதி பேசறேன்.

'சொல்லு ரதி! என்று முகம் மலர சிவால்விங் சேரில் சாய்ந்து உட்கார்ந்தான் ரவிபாரதி.

'நீங்க ஒரு முக்கியமான விஷயத்தை மறந்துட்டீங்க'

'ஓ! என்ன, கோவிலுக்கு போலாம்னு சொன்னியே அதையா...'

'இல்லை நீங்களே கண்டுபிடிங்க'

'ஹேய்...! இப்ப விளையாட நேரமில்லை. சீக்கிரம் சொல்லு'என்று கலகலவென்று சிரிக்க அந்தப்பக்க முனையில் ரதியும் சிரித்தாள்.

'அந்த லேட்டஸ்ட் அட்வர்டைஸ்மெண்ட் பத்தின 'பைல்? டிரைவர் கிட்டே குடுத்தனுப்பியிருக்கேன். ஓ.கே.வா?'

'ஹேய்! தட்ஸ் ரியலி குட்! இன்னைக்கு ஒரு செஷன் இருக்கு. நீ வர்றியா?'

'நானா! நான் எதுக்கு?'

' நீ வந்து டிஸ்கஷன்ஸை அப்சர்வ் பண்ணிக்கோ. உன்னுடைய ஐடியாஸ் எல்லாத்தையும் ஒரு 'பீட்பேக் மாதிரி குடுப்பியாம்' என்றான்.

'ஸீ வர்றேன் அப்புறம் நெக்ஸ்ட் வீக்ல உங்க டெல்லி 'பிரண்ட் மிஸ்டர் மல்ஹோத்ராவைப் பாக்கப் போறீங்களே. அதுக்கு 'பிளைட் டிக்கட் புக் பண்ணனும். மறந்துராதீங்க.'

'தாங்ஸ், தாங்ஸ் அலெக்ஸ்' என்று கண்களும் முகமும் சிரிக்க போனை வைக்கிற ரவிபாரதியை எதிரே அமர்ந்திருந்த ஸ்வப்னா ஆழ்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள்.

'ஸ்வப்னா! இந்த ரதி வந்ததிலிருந்து நிறைய பாரம் இறங்கின மாதிரி இருக்கு தெரியுமா? ரொம்ப ஹெல்ப்ஃபுல்' என்று இயல்பாக அவன் முகம் பார்க்க ஸ்வப்னா ஒரு மலர்ச்சியை வரவழைத்துக் கொண்டாள்.

'ரியலி?' என்றாள்.

'அப்புறம் சொல்லு?' என்று சிலாக்கலானான்.

'இன்னைக்கு ஈவினிங் எங்காவது போலாமா?'

'எங்கே?' என்று அவன் கண்கள் சுருங்கின.

'ஹோட்டல் ரெசிடென்சி'

'ம்.' என்று இழுத்தான். 'போலாம் ஆனா இன்னைக்கு போர்ட் மீட்டிங் இருக்கு. அதுவும் இல்லாம ரதியும், அம்மாவும் எனக்காக சாப்பிடாம காத்துகிட்டிருப்பாங்க. இங்கயே பேசலாமே.' என்றான்.

அவளுக்கு ஏமாற்றம் ஏற்பட்டது. ஆனால், மறைத்துக் கொண்டாள் விளையாட்டுப் போல ஐந்து மாதங்கள் ஓடி விட்டது.

'ஏன் ரவி.. இன்னும் ஏழு மாசத்திலே அம்மா.. உயில் படிச்சிடுவாங்கன்னு உங்களுக்கு நம்பிக்கையிருக்கா.. எதை வச்சு ஒரு வருஷம்னு கணக்கு போட்டீங்க?' என்றாள்.

அவன் புன்னகைத்தான். 'அம்மா எங்க பாமிலி லாயர் மிஸ்டர் பழனியப்பன்கிட்டே சொல்லி இருக்காங்க. பெரும்பாலும் அம்மா சீக்கிரம் முடிவுகளை எடுக்கறதில்லே.



எடுத்தா அவ்வளவு சீக்கிரம் மாத்திக்கறது இல்லே. தெரியுமில்லே'

அவள் ஒத்துக் கொண்டாள். பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். புறப்படும் போது 'ரவி இப்ப நீங்க ஆளே கொஞ்சம் மினுமினுப்பாயிட்டீங்க தெரியுமா?' என்றாள் கொஞ்சலாக.

'வீட்டுச்சாப்பாடு ஒழுங்கா சாப்பிடறேன் இல்லே. அதனாலயிருக்கும்' என்று சிரித்தான்.

'ஆனா நீங்க முந்திமாதிரி எங்கிட்ட ரொம்பப் பர்சனலாப் பேசறதும் இல்லே தெரியுமா?' என்றாள்.

அவன் சற்று நேரம் ஒன்றும் பேசவில்லை. பிறகு ஆழ்ந்த குரலில் சொன்னான்.

'ஸ்வப்னா! அம்மாவைப் பத்தி உனக்குத் தெரியாது. ஆள் வச்சு வேவு பாப்பாங்க. நான் இப்ப ரதியின் ஜுல்பெண்டா என் ரோலைக் கரெக்டாப் பண்ணனும். ரதி இஸ் வெரி ஸ்வீட். அதனால எல்லாம் சுலுவாய்ப் போகுது. உன்னை என் பிஸினஸ்ல ஹெல்ப் பண்ற லயவன் ஆபீஸர்ங்கற மாதிரி சொல்லி வச்சிருக்கேன். அதனால, பிராப்ளம் இல்லாம இருக்கு. நாமளும் ஜாக்கிரதையா இருக்கணுமில்லே?'

ஸ்வப்னாவுக்கு ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியிருக்கவில்லை. ஸ்வப்னாவின் பெற்றோர் சென்னையில் இருந்தார்கள். அவள் வேலை நிமித்தமாக கோவையில் இருந்தாள். ரவிபாரதி கோவையில் பல லட்சாதிபதிகள் வீட்டுப் பெண்கள் குறி வைத்திருந்த ஒரு இளைஞன் என்பதை வந்து ஒரிரு மாதங்களுக்குள்ளாகவே புரிந்து கொண்டிருந்தாள். ஆனால், யாரும் அவ்வளவு சீக்கிரம் நெருங்கி விட முடியாதவனாகவும் இருந்தான் என்பதும் புரிந்தது.

ஆழ்ந்த காதல் என்று

பெரிதாக நம்பிக்கை இருக்கவில்லை. இப்படியொருவனை சாக்கக் கூடும் என்பதே அவளுக்கு லாட்டரி அடித்தாற்போல இருந்தது. இப்போது முதல் முறையாக இந்தக் கல்யாண நாடகத்துக்கு ஒத்துக் கொண்டது தவறோ என்று தோன்றியது.

வார்த்தைக்கு வார்த்தை ரதி போடுகிறாள். ஸ்வீட், கால், ஸ்மார்ட், ஜோம்பி என்று விதவிதமாக பாராட்டுகிறாள். மயிரிழையில் வாய்ப்பை இழந்து விடுவோமோ என்ற அச்சம் தோன்றியது. அச்சத்தின் விளைவான பதட்டமும் மேலிட்டது.

முன்பெல்லாம் அவன் 'போன் செய்தால் இருந்தடிப்பாள். இப்போதெல்லாம் ஆபிஸில் இருக்கும் போதெல்லாம் அவளே போன் செய்தாள். அதுகுறித்து அவன் கேலி செய்த போது கூட பொருட்படுத்தவில்லை.

இதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று தோன்றியது. ரதியை மிரட்டிப் பார்க்கலாமா? என்னவென்று மிரட்டுவது? எதற்காக மிரட்டுவது? அவளுக்குப் புரியவில்லை. எதற்கும் அவளை வசியப்படுத்திக் கொண்டால் உதவியாக இருக்குமோ? என்று தோன்றியது. அதுதான் நல்லது என்று தோன்றியது.

பிற்பகல் ரவிபாரதியின் வீட்டுக்கு லைன் போட்டாள். நல்லவேளையாக ரதியே எடுத்தாள்.

'ஹலோ! ரதி, நான் யாருன்னு சொல்லுங்களேன்' என்றாள் கொஞ்சலாக.

ரதி விழித்தாள் 'யாரு? தெரியலையே?' என்றாள்.

'மேடம் நான் ஸ்வப்னா..உங்க 'பிரண்ட்' என்றாள்.

ரதி இந்த அணுகுமுறையை எதிர்பார்க்கவில்லை. உண்மையாகவே மகிழ்ந்து போனாள். மகிழ்ச்சியாகப் பேசினாள். சற்று நேரம் பேசிய பிறகு ஸ்வப்னா

''அப்புறம்.. உங்க செல்போன் நம்பர் கொடுங்க. உங்க கிட்ட தனியாப் பேசணும்'' என்று வாங்கிக் கொண்டு அவள் தனியாய் இருக்கிறாளா என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு சொன்னாள்.

''ரதி.. நீங்க எவ்வளவு பெரிய ரிஸ்க் எடுத்து எங்களுக்கு எவ்வளவு பெரிய உதவி செய்யறீங்கன்னு எனக்குப் புரியுது. ஆனா சமீப காலமா ரவிகிட்டே ஃப்ரீயாப் பேசவே முடியலே தெரியுமா? எப்பக் கேட்டாலும் செய்யற ரோலைக் கரெக்டாச் செய்யணும்னே சொல்றார். பாருங்களேன். இன்னைக்குக் கூட ஈவ்னிங் வெளியே சாப்பிடக் கூப்பிட்டேன். வரமாட்டேங்கறார்'' என்றாள் வருத்தமாக.ரதிக்குப் பாவமாகிப் போனது

''ஏனாம்? ஏன் வரமாட்டேங்கறார்?''

''உங்க சமையல் நல்லாயிருக்காம். நீங்களும் அம்மாவும் சாப்பிடாமக் காத்திருப்பீங்களாம்'' என்றாள் ஸ்வப்னா.

''ஓ!'' என்று ஒரு நிமிடம் திகைத்துப் போனாள்.

''ஐம் சாரி! ஸ்வப்னா மேடம்'' என்றாள் மெல்லிய குரலில்.

''மேடம்...லாம் இல்லப்பா உங்க 'பிரண்ட்'னு சொன்னனே. ஏதாவது பண்ணுங்களேன்'' என்று ஸ்வப்னா அடுத்த அடி எடுத்து வைத்தாள்.

''என்ன பண்ணலாம்?'' என்று யோசித்த ரதி சொன்னாள். ''சரி.. நான் ஏதோ ஒரு வழி செய்யறேன். நீங்க அஞ்சு மணிக்கு ரவிகிட்டே பேசுங்க..'' என்று ஃபோனை வைத்தாள்.

சற்று நேரம் யோசித்தாள். ''பாவம் ஸ்வப்னா.. ஏங்கிப் போயிட்டாங்க'' என்று அனுதாபப் பட்டுக் கொண்டாள். பிறகு

அரைமணிநேரம் கழித்து ரவிபாரதியைக் கூப்பிட்டாள்.

"ரவி" என்றாள் தயக்கமாய்.

"என்ன ரதி சொல்லு!" என்றான் வழக்கமான அதே குரலில்.

"இல்லே.. " என்று தயங்கினாள்.

"சொல்லும்மா" என்றான்.

"இல்லே... நான் இண்ணைக்கு வெளியே போலாம்னு பாக்றேன். நீங்க வெளியே சாப்பிட்டுக்கறீங்களா?" என்றாள்.

"இவ்வளவுதானா? நான் என்னமோன்னு நெனச்சேன். ஓ.கேம்மா. ஒன்னும் பிரச்சனையில்லை" என்று எளிதாக அவன் முடிக்கவும் ரதி மனம் மலர்ந்தாள்.

அன்று இரவு வீட்டுக்கு வந்த ரவிபாரதியிடம் ரதி "ரவிசாப்பிட்டீங்களா?" என்று கேட்டாள். மாடிக்குப் போன பின்.

"சாப்பிட்டேன்ம்மா..ஸ்வப்னா வந்திருந்தா. ஹோட்டல் போனோம்.." என்றான் இயல்பாய். அவள் சாதாரணம் போல் கேட்டுக் கொண்டாள். பிறகு "ஏன் ரவி? உங்க ஸ்வப்னா ரொம்ப அழகு இல்லே?" என்றாள்.

"ம்" என்றான் சோஃபாவில் அமர்ந்தபடி.

"ரொம்ப டேலண்ட்டட் இல்லே?" என்றாள்.மீண்டும்.

"ம்"

"அப்புறம்..?" என்று அவள் ஏதோ சொல்ல வர அவன் கைமறித்தினான். "அடடடாஎன்ன இன்னைக்கு ஒரே ஸ்வப்னா.. புராணம்?" என்றான்.

"இல்லே!அவங்களுக்கு நானும் 'ஃபிரண்டாம்...' சொன்னாங்க.." என்றாள்.

"எப்ப?"

"எப்பவோ.. ஆனா சொன்னாங்க"



"இது ஆச்சரியம்தான்" என்று அவன் சிரித்தான்.

"எது?" என்றாள் வியப்பாய்.

"ரெண்டு அழகான பெண்கள் ஒருத்தருக்கொருத்தர் 'பிரண்டாய் இருக்கறதுதான்" என்றான்.

தன்னையும் அழகுதான் என்று அவன் பாராட்டுவது குறித்து அவளுக்கு ஆச்சரியமானது. அவன் பேசிக் கொண்டே அறைக்குப் போய் லுங்கி, டீ ஷர்ட் என்று வந்தான். ஒய்வாக சோபாவில் உட்கார்ந்தான்.

அவள் மறுபடியும் "ரவி, என்ன இருந்தாலும் உங்க ஸ்வப்னா.. ரொம்ப அழகுதான்!" என்றாள்.

அவன் ஏதோ ஒரு ஃபைலைக் கையில் எடுத்துக் கொண்டு "நீயும் அழகுதான் ரதி. நீயும் ரொம்ப டேலண்டட்தான் ஆனா.. ரெண்டு பேருக்கும் ஒரு வித்தியாசம் இருக்கு" என்றான்.

அவள் கண்களை அகல விரித்துக் கொண்டு அவனைப் பார்க்க அவன் தொடர்ந்தான்.

"ஸ்வப்னா.. தன்னோட டேலண்டை மேக்ஸிமம் தனக்காகப் பயன்படுத்தறா. ஆனா நீ எப்பவும் மத்தவங்க சந்தோஷத்துக்காகப் பயன்படுத்தறே!" என்றான்.

அவள் முகம் சிவந்தது. 'தாங்ஸ் ரவி' என்றாள். அவன் ஒரு நிமிடம் அவளது சிவந்த முகத்தை குறுகுறுவென்று பார்த்து விட்டு இந்த சமயம் இந்தப் பெண்ணை இப்படிச் சிவந்த முகத்தோடு பல்ராம் பயல் பார்க்காமல் போனானே என்று எண்ணிக் கொண்டான்.

பிறகு "சரி.சரி.... இந்த அனாலிசிஸ் இருக்கட்டும். நம்ம கம்ப்யூட்டர் உலகத்துக்குப் போலாம் வா...' என்று கணக்கு வழக்குகளில் ஆழ்ந்தார்கள்.

★★★

அதே வாரத்தில் மூன்றாவது முறையாக ரதி தலைக்குத் தலைவலி என்றும் வெளியில் சாப்பிட்டுக்குங்க ரவி என்று போன் செய்த அரை மணி நேரத்தில் ஸ்வப்னா அழைத்த போது அவனுக்குப் புரிந்து போனது. சற்றே கோபம் கூட வந்தது. அதிலும் முதல் முறை பொதுப்படையாகப் பேசிக் கொண்டு இருந்த ஸ்வப்னா அவர்கள் கல்யாணத்தின் போது என்னென்ன நகை செய்தார்கள், எவ்வளவு புடவை எடுத்தார்கள் அதையெல்லாம் ரதிக்கே கொடுத்து விட்டார்களா என்றெல்லாம் துருவித் துருவி விசாரிக்க ஆரம்பித்தாள். அது மட்டுமில்லாமல் அம்மாவின் சொத்து மதிப்பு எவ்வளவு இருக்கும்? இவனுக்கு எவ்வளவு கொடுப்பார்கள் என்று எதிர்பார்க்கிறான் என்பது போன்ற கேள்விகளையே அவள் தேன் தடவிய சொற்களால் கேட்கிறாள் என்பது புரியவும் சலித்துப் போனான்.

காரில் வருகிற போது யோசித்துக் கொண்டே வந்தான். இந்த ஆறுமாதங்களில் ஒரு நாள் கூட ரதி அவளது பணம், சொத்து பற்றியே பேசியதில்லை. அதே போல் அவளது மனைவிக்கு என்று வைத்திருந்தது என்று அம்மா கொடுத்த எந்தப் பொருளையும் பயன்படுத்தியதில்லை என்பதெல்லாம் நினைவுக்கு வர பல்ராம் உண்மையில் கொடுத்து வைத்தவன் என்ற எண்ணம் மேலோங்கியது.

அன்றைக்கு வீட்டிலும் ரதியிடம் வழக்கமில்லா வழக்கமாக வேறுவிதமாக நடந்து கொண்டான்.

"ரதி.. நீ இப்படி நடந்துக்குவேன்னு நான் எதிர்பார்க்கலே" என்றான் சற்றே இறுகிய முகத்துடன்.

"ஏன் ரவி?" என்றாள் பதட்டமாக.

"நீ எதையும் நேரடியாக செய்ய கூடியவள்ன்னு ந



நெனச்சுக்கிட்டிருக்கேன். ஸ்வப்னாகிட்டே பேசி ஸ்கீமெல்லாம் போடறே?" என்றான் கோபமாக.

"இல்லே முன்னே மாதிரி உங்ககிட்டே ஃப்ரீயாப் பேச முடியலேன்னு ரொம்ப வருத்தப்பட்டாங்க..!" என்றாள் குற்றம் செய்த குழந்தையைப் போல் தயங்கியபடி.

"ஆமா.. அவ என்னத்தைப் பேசறா.. எப்ப பாரு நகை, பணம், சொத்துன்னு..சே.!. இத பாரு.. இந்தப் பரோபகாரத்தையெல்லாம் இதோட நிறுத்திக்க.!" என்றான் கடுப்பாக.

இரண்டு எட்டு எடுத்து வைத்து அறைக்கு போனவன் திரும்பி வந்து

"ஏன் ரதி ?ஒருவேளை பல்ராமைச் சந்திக்கறதுக்கு, உனக்கு டைம் கொடுக்கணும்னு எனக்கு மறைமுகமாகச் சொல்றயோ?" என்றான்.

அவள் பதில் பேசத் தெரியாமல் நின்றாள். "இதேடா, கிணறு வெட்ட பூதம் கிளம்பி விட்டதே!" என்பது போல்.

என்றைக்குமில்லாதது போல் அன்றைக்குக் கதவை அறைந்து வேறு சாத்திக் கொண்டான். ரதி முதன் முறையாக அந்த வீட்டில் தனிமையை உணர்ந்தாள். கண்களில் கண்ணீர் வழிய படுக்கையில் சாய்ந்து கொண்டாள்.

★★★

# 8

மறுநாள் காலை !

பாகீரதி அமைதியாகச் சமையல் செய்து கொண்டிருந்தாள்.

"ரதி! அது எங்கே? ரதி..இது எங்கே..?" என்று திடீர்திடீரென்றொருமுறை குரல் கொடுக்கிற ரவிபாரதியின் குரலும் ஒலிக்கவில்லை.

விஜயலட்சுமி ராமையாவை சன்னக்குரலில் விசாரிக்க, அவர் 'அம்மா! சின்னஞ் சிறுசுக. ஏதாவது செல்லமா சண்டை போட்டுக்குவாங்களாயிருக்கும்... நாம கண்டுக்க வேண்டாம்' என்று கனகாரியமாகக் கிசுகிசுத்தார்.

அவன் வழக்கம் போல் எட்டரை மணிக்கு இறங்கி வந்தான். மௌனமாகச் சாப்பிட்டான். அவளும் அவன் தேவையறிந்து பரிமாறினாள். முகத்தை இறுக்கமாகவே வைத்துக் கொண்டு " அந்த பிரீஃப் கேசை எடுத்துட்டு வா! என்றான்.

அவள் பணிந்தாள். அதற்குள் அவன் காருக்குப் போனான்.

அவன் காரை எடுக்கிற நேரத்தில் அவள் அவன் முகம் பார்த்து "சாரி! ரவி !நா நீங்க இப்படி எடுத்துக்குவீங்கன்னு நெனக்கலே..." என்றாள் மெல்லிய குரலில்.

"சரி..சரி..பரவாயில்லே. போய்ச் சாப்பிடு. அம்மா காத்துக்கிட்டிருக்காங்க" என்று போய்விட்டான்.

அவள் மௌனமாக வந்து சாப்பிட ஆரம்பித்தாள். அதற்கு மேல் விஜயலட்சுமிக்குப் பொறுக்கவில்லை.

"என்னம்மா...?" என்றார்.

அவள் நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் கண்ணீர் நிறைந்தது.

"ரவிக்கு கோபம். அவருக்குப் பிடிக்காத ஒரு அப்பாயின்மெண்ட் 'பிக்ஸ் பண்ணிக் குடுத்துட்டேன்" என்றாள்.

அம்மா ஆறுதலாக அணைத்துக் கொண்டவுடன் பொங்கி அழுது விட்டாள்.

"சரி...சரி..." என்று மடியில் சாய்த்துக் கொண்டார்.

"அவன் கிடக்கிறான். எப்பப் பாரு, எல்லாத்தையும் தப்பாப் புரிஞ்சுகிட்டு. தெரியும். கோபம் வந்தா எப்படி வறுப்பான்னு. நான் அனுபவிக்கறேனே. கெடக்கிறான் அறிவு கெட்டவன். நா அவன்கிட்டே பேசறேன்."..என்று தேற்றி சாப்பிட வைத்தார். பிறகு

"ராமையா.. அவனுக்கு லைன் போடுங்க" என்றார்.

அந்தப்பக்கம் ரவிபாரதி உடனே லைனில் வந்தான்.

"எப்பவுமே எல்லா விஷயங்களையும் தப்பாத்தானே புரிஞ்சுக்குவே. அத என்னோட நிறுத்திக்கோ.. அந்தப் பொண்ணு உன்னோட வீம்புக்கெல்லாம் தாங்கறவ இல்லே. அவளை வருத்தாதே. அப்பா...அம்மா..இல்லாம நம்மளயே நம்பி வந்திருக்கா. புரிஞ்சு நடந்துக்கோ..." என்று பொரிந்து தள்ளி விட்டார்.

பாகீரதி இதை எதிர்பார்க்கவில்லை. "ஐயோ.. அத்தை நீங்க ஏன் கோபிச்சுகிட்டீங்க. விஷயத்தைப் பெரிசு பண்ணிட்டேன்னு கோபிச்சுக்கப் போறார்..." என்று அவள் பதட்டமாக.

"என்ன நீ? இப்படி பயப்படறே? தலையையா எடுப்பான்?" என்று அவர் ஒருபக்கம் கோபித்துக் கொண்டு அறைக்குப் போய்விட்டார்.

பாகீரதி செய்வதறியாது அறைக்குள் முடங்கிக்

கொண்டாள். சற்று நேரத்தில் ரவிபாரதியின் ஃபோன் வரவும் அவளே முந்திக் கொண்டு "சாரி.ரவி...நா அம்மாகிட்ட எதுவும் சொல்லலே...உங்களுக்குப் பிடிக்காத காரியம் செய்தேன்னு உங்களுக்குக் கோபம் ...என்மேலதான் தப்புன்னுதான் சொன்னேன்...." என்று படபடத்தாள்.

அந்தப்பக்கம் அவன் நெகிழ்ந்து போனான்.

"சரி..சரி டென்ஷனாகாதே.நீ ஒண்ணும் பெரிய தப்பு பண்ணிடலே. நீ நல்லது நெனச்சுத்தான் செஞ்சே. நான் புரிஞ்சுக்கறேன்.. கோபம் உன் மேல இல்ல.. ரதி என என்மேலேயேன்னு வச்சுக்கயேன்.. சாரி சாரி...சாரி.." என்று சிரிக்கவும்தான் அவள் சமாதானமானாள்.

"சரி. எனக்குப் பிடிச்சதா ஏதாவது செஞ்சு எடுத்துட்டு வா.. இங்கயே ஆபீஸ் கெஸ்ட் ரூம்லயே ரெண்டு பேரும் சேர்ந்து சாப்பிடலாம். அப்புறம் கொஞ்ச நேரம் அந்த அட்வர்டைஸ்மெண்ட் பத்தின டிஸ்கஷன் ஓ.கே.வா? அப்புறம் எங்காவது வெளிய போலாமா?" என்றான்.

"ம்.." என்றாள். அவள் குரலில் குதூகலம் தொனிக்க

அவன் அழைத்துக்கொண்டு போன இடம்தான் அவள் எதிர்பாராததாக இருந்தது.

★★★

எல்லாரும் விழுந்து விழுந்து உபசரித்தார்கள் பல்ராமின் வீடு. அவனது திருமணமான இரண்டு தங்கைகளும் வேறு வந்திருந்தார்கள்.

ரவிபாரதியிடம் 'சார்' என்று பேச அண்ணான்னு கூப்பிடுங்க! எனவும் அவர்களுக்கு ஒரே மகிழ்ச்சி.

ஸ்வீட்ஸ், பழங்கள், கிஃப்ட் பார்சல்கள் என்று அசத்தியிருந்தான் ரவிபாரதி. திருப்பூரில் ஈஸ்வரன் கோவிலுக்கு



போய் வந்தார்கள்.

பல்ராமின் அம்மா பாகீரதியிடம் தனியாகப் பேசினார்.

"பாகீ...! இப்ப இந்த மூணாவது பொண் சஜூவுக்கு ஒரு நல்ல இடம் வந்திருக்கு. அந்த மாப்பிள்ளையோட சித்தி பொண் ஒருத்தி இருக்கா. ரொம்ப அழகா இருக்கா. ஆனா.. இவன் மாட்டேங்கறான். உன்னையே நினைச்சுகிட்டு இருக்கான் போல. கட்டிக் குடுத்த பொண்ணை நினைச்சா வேலையாகுமா? இனியென்ன நீ டைவர்ஸ் பண்ணிகிட்டு வந்தா இவனைக் கல்யாணம் பண்ண முடியும்? நம்ம குடும்பங்கள்ல இதெல்லாம் வழக்கமாகுமா?" என்று யதார்த்தமாகப் படபடவென்று பேசவும் பாகீரதி சற்றுநேரம் திகைத்துப் போனாள்.

அதே நேரம் அம்மாவுக்குப் பின்னால் நின்று கேட்டுக் கொண்டிருந்த பல்ராம் அதைவிடத் திகைத்துப் போனான். அவனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த ரவிபாரதி இன்னும் வெகுவாகத் திகைத்துப் போனான்.

அன்றைக்கு வேறு ஒன்றும் நடந்தது.

இரண்டு பேருக்கும் தங்குவதற்கு ஒரே அறை ஒதுக்கினார்கள். ஆனால், ரவிபாரதி அறைக்கு வராமல் பல்ராமிடம் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தான். தங்கள் பள்ளி நாட்களைப் பற்றியெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள். பிறகு சற்று தூரம் நடந்து போனார்கள். அப்போது ரவிபாரதி வெகுவான வருத்த பாவத்துடன் கேட்டான்.

"ஏன்..பல்ராம் நடுத்தரக் குடும்பங்கள்ள இருக்கக் கூடிய கட்டுப்பாடுகளை உணர்ந்துக்காம.. நான் உங்க வாழ்க்கையில விளையாடிட்டேனோ.." என்றான்.

பல்ராம் சற்று நேரம் அமைதியாக நடந்தான். பிறகு சொன்னான். "ரவி..நான் இந்த ஏற்பாட்டுக்கு வேற

வழியில்லாமதான் ஒத்துக்கிட்டேன். ஆனா எல்லாத்துலயுமே நமக்கு மீறிய ஒரு சக்தி வேலை செய்யுது எனக்குத் தோணுது இப்ப. எல்லாம் விதிப்படி நடக்குமுனு விட்டுட்டேன். நீங்களும் அப்படியே விட்டுடுங்க...' என்றாள்.

ரவிபாரதி நீண்ட ஒரு பெருமூச்சு விட்டான். அமைதியில்லாத ஒரு மனத்துடன் அறைக்கு வந்தான். அங்கே ரதி உறங்காமல் அமர்ந்திருந்தாள்.

"என்ன ரதி...?" என்றான்.

"தூக்கம் வர்லே" என்றாள் அவளும்.

அவன் மிகவும் சங்கடப்பட்டான்.

'சாரி ரதி-ரூம் ஷேர் பண்றதுல உனக்கொண்ணும் கஷ்டமில்லையே. உன் பிரைவசியைக் கெடுக்கிறேனோ! என்று திரும்பத் திரும்பச் சொல்ல.

"அதெல்லாம் ஒண்ணும் இல்லே. நீங்க கட்டில்லே படுங்க. நா இங்கே கீழே படுத்துக்கறேன்!" என்று அறைக்கதவைத் தாழிட்டாள்.

அந்த நேரம் பல்ராமின் மனதில் எவ்வளவு வேதனை இருக்கும் என்ற எண்ணம் ரவிபாரதியின் மனத்தை இடிபோல் தாக்கியது. அவனது தேவையைச் சாதகமாக்கிக் கொண்டு தான் செய்த காரியம் எவ்வளவு சின்னத்தனமானது என்று நொந்து கொண்டான். அவன் மனத்தை சாந்தப்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டான். ஆனால் அத்தனைக்கிடையிலும் தன் அப்பா, அம்மா இறந்ததற்குப் பிறகு ரவிபாரதியின் வீட்டில் இருக்கிற நாட்களில்தான் தான் மகிழ்ச்சியாக இருப்பதாகப் பாகீரதி சொன்னாள் என்று பல்ராம் சொன்னது அவன் மனதுக்கு இதமாக இருந்தது.

பல்ராம் இன்னொன்றும் சொன்னான். தனக்கு பாகீரதியை ரொம்பப் பிடிக்கும். முறைப்பெண் என்ற



வகையில். ஆனால், அது காதலா..நேசமா... என்றெல்லாம் தான் ஆராய்ந்ததில்லை.

ஆனால், பாகீரதிக்குத் தன் மேல் தனிப்பட்ட ஈர்ப்பு என்று சொல்ல முடியாது. யாராயிருந்தால் என்ன என்பதுபோல்தான் ஒத்துக் கொண்டாள் என்று சொன்னான்.

ரவிபாரதியின் ஆழ்மனதில் ஒரு குரல் எழுந்தது.

'இந்தப் பெண் வெறும் மேலோட்டமான அன்புக்கு ஆனவள் அல்ல. ஆழ்ந்து நேசிக்கப்படவேண்டியவள். ஆனால் யாருக்குக் குடுப்பினை இருக்கிறதோ..." என்று

சட்டென்று புரண்டு படுத்தான். தண்ணீர் குடித்தால் தேவலை போல் இருந்தது. எழுந்தான். அதே நேரம் பாகீரதி எழவும் இருவரும் மோதிக் கொண்டார்கள்.

"ஐ ம் சாரி...ஐ ம் சாரி" என்று ரவிபாரதி வெகுவாக வருத்தம் தெரிவிக்கவும் பாகீரதிக்கு ஆச்சரியமாகிப் போனது.

போன வாரம் ஒரு கல்யாண வீட்டில் இரண்டு பெண்கள் தன்னைக் காட்டிக் காட்டிப் பேசிக் கொண்டது நினைவுக்கு வந்தது.

"இவன் ரவிபாரதி தெரியுமோ. பெரிய சொத்துக்காரன். ஆனா பெண்கள் விஷயத்துல ரொம்ப வீக். பாவம் இந்தப் பொண்ணு எப்படியோ வந்து மாட்டிக்கிட்டா..." என்று.

அப்போது காதில் விழாதவள் போல் வந்து விட்டாள் பாகீரதி. அதுபோன்ற கருத்துக்களை ஏற்கனவே கேட்டவள்தானே.

தன்னைப் பொறுத்தவரை அவன் கண்ணியக் குறைவாய் நடந்து கொண்டதேயில்லை என்பதும் ஒரு நாள் கூட வெற்று மார்புடன் கூட அவன் தன் எதிரில் வந்ததில்லை என்பதும், அதேபோல் அவளது பிரைவசிக்கும் எந்த வகையிலும் இடையூறு இல்லாமல் நடந்து கொண்டான்

என்பதும் அவளுக்கு நினைவுக்கு வர அவருக்கு ஏன் இப்படி ஒரு "புகழ்" இருக்கிறது என்பது மட்டும் புரியவில்லை என்று எண்ணிக் கொண்டாள்.

அதேசமயம் ரவிபாரதி கட்டிலில் விட்டம் பார்த்தபடி படுத்துக் கொண்டு மெல்லிய குரலில் ''ரதி!'' என்று அழைத்தான்.

''ம்''.

"ரதி நா எவ்வளவு பெரிய தப்புப் பண்ணிட்டேன்னு இப்ப எனக்குப் புரியுது இந்த ஆறுமாசம் முடியட்டும், நானே பல்ராமின் அம்மாகிட்டே பேசி, விஷயங்களை விளக்கி எல்லாப் பிரச்சினையையும் முடிச்சுத் தரேன். என்ன?'' என்று சொல்லிக் கொண்டிருந்தான்.

அவள் அதைக் காதில் வாங்காமல் களுக்கென்று சிரித்தாள். அவன் திரும்பிப் படுத்து விசித்திரமாய் பார்த்தான்.

"இல்லே. என்னமோ லேசா என்மேல பட்டதுக்கே இவ்வளவு சாரி சொன்னீங்களே! ஆனா உங்களைப் பத்தி எத்தனை கதை உலவுது தெரியுமா?'' என்றாள்.

அவன் சட்டென்று மௌனமாகி விட்டான். அவள் சிந்தனையில் ஆழ்ந்தவளாகி தொடர்ந்தாள்.

''ஏன் ரவி ?நீங்க பல சமயங்கள்ல உங்களுக்காக முடிவுகளை எடுக்காம, வேற யாருக்காகவோ எடுக்கறீங்களோ..? யாரையோ தாக்கி காயப்படுத்துணுங்கற வெறி உங்க மனசுக்குள்ள இருக்கோ..? என்றாள்.

அவன் ஏதும் பேசாதவனாய் விக்கித்துப் போய்க் கிடந்தான்.

''அந்த நோக்கம் நிறைவேர்றதுக்காக யாரை வேண்ணாலும் பகடைக்காயா உபயோகிக்கலாம்னு நினைக்கறீங்களோ? உங்களையே கூட...! என்று திருத்தினாள்.



இந்த அசதி அவனை நேராகத் தாக்கியது போலும். ''ப்ளீஸ்.. ரதி பேசாமத் தூங்கு..'' என்றான்.

அவள் தூக்கத்தில் ஆழ்ந்தபடி ''ரவி.. காயப்படுத்தி ஜெயிக்கறது கொஞ்ச நாள் நிலைக்கும். ஆனா.. சந்தோஷம் குடுத்து ஜெயிக்கிறதுதான்...நிரந்தர வெற்றி ரவி'' என்றாள். பிறகு மௌனமாகி விட்டாள். அப்படியே உறங்கியும் விட்டாள்.

அவன் வெகுநேரம் உறங்கவில்லை.

''உண்மைதான் ரதி ..உண்மைதான்'' என்று அவன் உதடுகள் மட்டும் முணுமுணுத்துக் கொண்டன.

★★★

## 9

காரை மெதுவாக ஓட்டிக் கொண்டிருந்தான் ரவிபாரதி.

வெகு நீண்ட மௌனம் நிலவியது. இருவரும் அவரவர் உலகத்தில் ஆழ்ந்திருந்தார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

''பாவம், ரவிக்குத் தன் காரணமாக அம்மாவிடம் பொல்லாப்பு'' என்று அவள் யோசிக்க, தன்னுடைய சுயநலத்தை மட்டுமே கருதி இந்த ரதியை எவ்வளவு பெரிய சிக்கலில் ஆழ்த்திவிட்டோம் என்று அவனும் யோசித்துக் கொண்டு வந்தார்கள்.

கனத்த மௌனத்தைப் பொறுக்க இயலாமல் பாகீரதியே ஆரம்பித்தாள்.

''ரவி! நீங்க உங்களோட முக்கியமான வேலைகளையெல்லாம் விட்டுட்டு.. எனக்காக வந்தீங்களே!

என்றான்.

''பரவாயில்லை ரதி.. இந்த டீவியேஷனும் வேண்டித்தான் இருந்தது. டபிப் வால் நைஸ். ஆனா, உனக்கு எத்தனை பெரிய சிக்கலை ஏற்படுத்திட்டோம்னு எனக்கு இப்பத்தான் புரியுது! என்று அவன் மறுபடியும் அங்கலாய்த்தான்.

''ஆமா..ரவி..அத்தை இப்படி கன்வென்ஷனலா யோசிப்பாங்கன்னு நா நெனைக்கவே இல்லை. ஆனா கோயமுத்தூர்ல இருக்கற பார்வதி அத்தை ரொம்ப 'பார்வர்ட் டைப்.'' என்றாள்.

''சரி.. விடு.. அந்த அத்தைக்கு மகன் இருந்தா அங்க பேசிடுவோம். உனக்குத்தான் பஸ்ராம்தான் வேணும்னு குறிப்பா எதுவும் ஐடியா இல்லேங்கறியே..! என்று அவன் கிண்டல் போலப் பேச அவள் உதட்டைப் பிதுக்கிக் கொண்டு குறுக்கும் மறுக்குமாக தலையசைத்தாள்.

''நோ சான்ஸ்..அட்..ஆல் சார். அவங்களுக்கு ஒரே ஒரு பொண்தான்..'' என்றாள்.

''போச்சரா...'' என்றான். அவன் காற்றுப் போன பலூன் போல. இருவரும் ஏதோ பெரிய ஹாஸ்யம் போலச் சிரித்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு ரதி ஆழ்ந்த குரலில் தொடர்ந்தாள்.

''ஆனா... ரவி..கல்பனா..பாவம்.. அவள் கல்யாணம் முடிஞ்ச ஒரே மாசத்துல ஹஸ்பெண்ட் இறந்து போனான்'' என்றாள்.

அவன் சட்டென்று மௌனமாகி விட்டான். அவளே தொடர்ந்து பேசினாள்.

''ஆனா.. ஒரு நல்ல மனிதன். அவரும் உறவுக்காரன்தான். எனக்கு அண்ணன் முறையாகணும்.



கண்ணன் அப்படின்னு. அவன் அவளை விருப்பப்பட்டு பெண் கேட்டான். நான்தான் அத்தைகிட்டே பேசி சம்மதம் வாங்கினேன். ஆனா, அப்ப இதே திருப்பூர் அத்தை ரொம்பப் பாராட்டினாங்க. இப்ப வேறமாதிரிப் பேசறாங்க...!'' என்றாள்.

''பார்ப்போம்..ரதி..காலம் எல்லாத்துக்கும் பதில் வச்சிருக்கும்'' என்றான் ரவிபாரதி.

மறுபடியும் சற்று நேரம் மௌனம். கார் அவிநாசியைத் தாண்டியது. திடீரென்று ரதி ''ஏன்..ரவி.. என்னாலே உங்க அம்மாகிட்டே உங்களுக்கு டோஸ்'' என்றாள்.

''யப்பா! செம டோஸ்'' என்று சிரித்தான். ''ரதி ஒண்ணு தெரியுமா? அம்மா இப்படி என்னை ஃப்ரீயாத் திட்டி ரொம்ப நாளாச்சு...தெரியுமா? இதமாவும் இருந்தது. என்றான். அந்த நேரம் அவன் குரலில் தெரிந்த ஏக்கம் அவளை யோசிக்கச் செய்தது. இது என்ன விதமான உறவு. அன்பும் வெறுப்புமாய் . இதைப்பற்றி ராமையாவிடம் பேச வேண்டும். யாருக்காவது இதைப்பற்றி எதாவது தெரியுமென்றால், யாரிடமாவது இதைப் பற்றி பேச முடியுமென்றால் அது ராமையாதான் என்று எண்ணிக் கொண்டாள்.

''ஹலோ!'' என்ன யோசனை?'' என்றான் ரவிபாரதி.

''இல்லே.. எந்த வாசலுக்குள்ளே நுழையலாம்னு யோசிக்கறேன்..'' என்றாள்.

''வ்வாட்?'' என்று அவன் கிட்டத்தட்ட சடன்பிரேக் போட்டான்.

''இல்லே.. ரொம்ப ஸ்மூத்தா டிரைவ் பண்றீங்க. சுகமா சாஞ்சுட்டு கனவு கண்டா நல்லா இருக்கும். அதான் கனவுக் கோட்டைக்குள்ளே எந்த வாசல் வழியா நுழையலாம்னு யோசிக்கறேன்'' என்றாள்.

அவன் வெடிச்சிரிப்புச் சிரித்தான். ''ஹேய்! தட் வாஸ்

தீரியமான குரலில்.

"ஏன் ரதி.. உன்னுடைய எல்லாக் கஷ்டங்களையும் இப்படிப் புத்தகம் படிச்சு கனவு கண்டுதான் சகிச்சுகிட்டியோ..?" என்றான்.

அவள் ஒரு நிமிடம் அமைதியானாள். பிறகு சொன்னாள்.

"ரவி! வாழ்க்கை கனமானதுதான். சோகங்களும் நிறைய இருக்கு. ஆனா, காயங்களை மேலே மேலே கீறிக்கறதுனால ஆகப் போறதென்ன? நீங்க சொல்றது நிஜந்தான். புத்தகங்கள் படிக்கறது, சிந்திக்கறது.. கனவு காணறது, கவிதை எழுதறது இதெல்லாம் ஒரு வகைத் தப்பித்தல்கள்தான்.

"தண்ணி போடறது மாதிரி, சிகரெட் மாதிரியா?"

"இல்லே! ரவி இது ஆரோக்கியமான தப்பித்தல்.. ஏன் பாட்டு கூட ஒரு வகை தப்பித்தல்தான் .ஆனா இந்த வகை தப்பித்தல்களால யாருக்கும் கெடுதல் இல்லையே.." என்றாள்.

அவன் ஆழ்ந்த ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

"ரதி உன் வயசுக்கு உனக்கு பக்குவம் ரொம்ப அதிகம் தெரியுமா?" என்றான்.

"ரவி சார்! நீங்க எப்படி விதவிதமாகக் கேட்டாலும் நான் என் வயசைச் சொல்லமாட்டேன் சார்! என்றாள் மறுபடியும் சிரித்தாள். பிறகு நீங்க கூட உங்க வயசுக்கு மீறின பாரம் சுமக்கறீங்க. நீங்க எதையோ மனசுக்குள்ளே வச்சுகிட்டு மறுகறீங்கசொல்லாம் எனக்கும் தோணுது" என்றாள்.

"ரதி மேடம் நீங்க எப்படி விதவிதமாகக் கேட்டாலும்



தான் பேசக் கூடாதுன்னு நினைக்கிற விஷயங்களைப் பேச மாட்டேன்..." என்று அவள் மறைமுகமாக முற்றுப்புள்ளி வைத்தாள்.

"ஓ..கே.. ஓ..கே..." என்று அவன் இரு கைகளையும் விரித்து சரண்டரானான்.

"உங்களுக்குப் பிடிச்சது என்ன பேசலாம்..? உங்க ஸ்வப்னாவைப் பத்தி?" என்றாள்.

"அதுக்குப் பேசாம உன்னைப் பத்தியே பேசு. நீ சமீபத்துல படிச்ச ஏதாவது புத்தகத்தைப் பற்றிச் சொல்லு" என்று அவன் பேச்சை மாற்றினான்.

கலகலப்பும் சிரிப்புமாக வந்து சேர்ந்தார்கள். இறங்குகிற நேரத்தில் "ரதி! என் கார் பயணம் என்னைக்குமே இவ்வளவு ரசனையோட இருந்ததில்லை..." என்றான் ரவிபாரதி ஆத்மார்த்தமாக.

நேற்று காலையில் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்த இருவரும் கலகலப்பும் சிரிப்புமாக மாடிக்குச் செல்வதைத் தன்னுடைய அறையிலிருந்தபடி விஜயலட்சுமி மகிழ்ச்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

★★★

"இருங்க ராமையா? நானும் வரேன்" என்று பூவாளியைத் தூக்கியபடி வருகிற பாரதியை ராமையா செல்லக் கோபத்துடன் பார்த்தார்.

"அம்மா ஞாயிற்றுக்கிழமை தம்பிக்கு ஏதாவது தேவையிருக்கும். கூப்பிடுவார் போங்கம்மா!" என்றார் ராமையா.

"தம்பியா? இப்போதைக்கு அவரு உங்க ரவித் தம்பியில்லே. ராவணன் தம்பி.. அப்படி ஒரு கும்பகர்ணத் தூக்கம். ஒன்பது மணியில்லாம எழுந்திருக்கவே மாட்டார்"

மதல். ஐ லைக் இட்'' என்று மறுபடியும் சிரித்தான். பிறகு தீர்மானமான குரலில்.

"ஏன் ரதி.. உன்னுடைய எல்லாக் கஷ்டங்களையும் இப்படிப் புத்தகம் படிக்க கனவு கண்டுதான் சகிச்சுக்கிட்டியோ..?" என்றான்.

அவள் ஒரு நிமிடம் அமைதியானாள். பிறகு சொன்னாள்.

"ரவி வாழ்க்கை சுலபமானதுதான். சோகங்களும் நிறைய இருக்கு. ஆனா, காயங்களை மேலே மேலே கீறிக்கறதுனால ஆகப் போறதென்ன? நீங்க சொல்றது நிஜந்தான். புத்தகங்கள் படிக்கறது.. சிந்திக்கறது.. கனவு காணறது.. கவிதை எழுதறது இதெல்லாம் ஒரு வகைத் தப்பித்தல்கள்தான்.

"தண்ணி போடறது மாதிரி, சிகரெட் மாதிரியா?"

"இல்லே ரவி இது ஆரோக்கியமான தப்பித்தல். ஏன் பாட்டு கூட ஒரு வகை தப்பித்தல்தான் ஆனா இந்த வகை தப்பித்தல்களால யாருக்கும் கெடுதல் இல்லையே.." என்றாள்.

அவன் ஆழ்ந்த ஒரு பெருமூச்சு விட்டான். பிறகு சொன்னான்.

"ரதி! உன் வயசுக்கு உனக்கு பக்குவம் ரொம்ப அதிகம் தெரியுமா?" என்றான்.

"ரவி சார்! நீங்க எப்படி விதவிதமாகக் கேட்டாலும் நான் என் வயசைச் சொல்லமாட்டேன் சார்! என்றாள் மறுபடியும் சிரித்தாள். பிறகு நீங்க கூட உங்க வயசுக்கு மீறின பாரம் சுமக்கறீங்க. நீங்க எதையோ மனசுக்குள்ளே வச்சுகிட்டு மறுகறீங்கன்னெல்லாம் எனக்கும் தோணுது" என்றாள்.

"ரதி மேடம் நீங்க எப்படி விதவிதமாகக் கேட்டாலும்



நான் பேசக் கூடாதுன்னு நினைக்கிற விஷயங்களைப் பேச மாட்டேன்..'' என்று அவன் மறைமுகமாக முற்றுப்புள்ளி வைத்தான்.

"ஓ..கே.. ஓ..கே..'' என்று அவள் இரு கைகளையும் விரித்து சரண்டரானாள்.

"உங்களுக்குப் பிடிச்சது என்ன பேசலாம்..? உங்க ஃபேமிலியைப் பத்தி?" என்றாள்.

"அதுக்குப் பேசாம உன்னைப் பத்தியே பேச. நீ சமீபத்துல படிச்ச ஏதாவது புத்தகத்தைப் பத்திச் சொல்லு" என்று அவன் பேச்சை மாற்றினான்.

கலகலப்பும் சிரிப்புமாக வந்து சேர்ந்தார்கள். இறங்குகிற நேரத்தில் "ரதி என் கார் பயணம் எப்பவுமே இவ்வளவு ரசனையோட இருந்ததில்லை..'' என்றான் ரவிபாரதி ஆத்மார்த்தமாக.

நேற்று காலையில் முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டிருந்த இருவரும் கலகலப்பும் சிரிப்புமாக மாடிக்குச் செல்வதைத் தன்னுடைய அறையிலிருந்தபடி விஜயலட்சுமி மகிழ்ச்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

★★★

"இருங்க ராமையா? நானும் வரேன்'' என்று பூவாளியைத் தூக்கியபடி வருகிற பாகீரதியை ராமையா செல்லக் கோபத்துடன் பார்த்தார்.

"அம்மா ஞாயிற்றுக்கிழமை தம்பிக்கு ஏதாவது தேவையிருக்கும். கூப்பிடுவார் போங்கம்மா!'' என்றார் ராமையா.

"தம்பியா? இப்போதைக்கு அவரு உங்க ரவித் தம்பியில்லே. ராவணன் தம்பி.. அப்படி ஒரு கும்பகர்ணத் தூக்கம். ஒன்பது மணியில்லாம எழுந்திருக்கவே மாட்டார்"

என்று தோட்ட வேலையில் இறங்கினாள்.

"ஏன் ராமையா.. இந்த ரோஜா மொட்டுப் பாருங்களேன் இன்னைக்கு லேசா விரிஞ்சிடுச்சு. எவ்வளவு அழகா இருக்கு' என்றாள். ராமையா அந்த நேரம் அவள் முகத்தில் தெரிந்த மென்மையைப் பார்த்து ரசித்தார்.

"அம்மா.. நீங்க கவிதை எழுதினா.. நல்லா வரும்னு நெனக்கறேன்" என்றார்.

"வேண்டாம்..ராமையா.. அந்த விஷப் பரீட்சையெல்லாம் வேண்டாம். பாவம்...ஜனங்க.. பொழக்கப் போகட்டும்.." என்று சிரிக்க.. ராமையா கூட சிரித்து விட்டார். அதே நேரம் தனது படுக்கையறை பால்கனியிலிருந்து அவர்கள் பார்வையில் படாத வண்ணம் நின்றபடி ரவிபாரதி புன்னகையுடன் பார்த்துக் கொண்டிருப்பதை அவர்கள் அறியவில்லை.

சட்டென்று பாகீரதி "ராமையா.. இங்க வாங்க உங்ககிட்டே ஒரு விஷயம் பேசணும்" என்றாள்.

சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்தபடி

அடுத்து அவள் கேட்ட கேள்வி அவரை உலுக்கியது.

"வேண்டாம்மா.. அதை மட்டும் கேக்காதீங்க" என்று பீதியடைந்த முகத்துடன் அவர் நகர்வதை பாகீரதி பேச்சற்றவளாய் பார்த்துக் கொண்டு நின்றாள்.

★★★

அன்று பிற்பகல்...

வேறொன்றும் நடந்தது.

பாகீரதி வெகு மும்முரமாக தீபம் நா.பாவின் நாவல் ஒன்றைப் படித்துக் கொண்டிருந்தாள்.

ரவிபாரதி மாடியில் ஹாலில் அமர்ந்து டிவி பார்த்துக் கொண்டிருந்தான். வழக்கமான திரைக்கதை என்று போரடிக்க



எழுந்து உலவினான். பிறகு "ரதி! இன்னைக்கு நான் ஃப்ரீயாய் இருக்கேன்..வாயேன். கொஞ்சம் பேசிட்டு இருக்கலாம்" என்று அழைக்க பாகீரதி ஆச்சரியத்துடன் நாவலை மூடி வைத்து விட்டு வந்தாள்.

"என்ன பேசணும்..ரவி?" என்றாள்.

"இல்லே..அப்பப்ப சீட்டுக்கட்டுல இருந்து ஒரு சீட்டு எடுத்துப் போடற மாதிரி...ஒரு தத்துவம் எடுத்து வீசறயே...ஒரு ஸ்டேட் மெண்ட் விடறே..அது எப்படி?" என்றான்.

"என்ன ஸ்டேட்மெண்ட் விட்டேன்?" என்றாள் திகைப்புடன்.

"இல்லே யாரையோ காயப்படுத்தணுங்கற வெறி எனக்கு இருக்குங்கறே. என்னையே பகடைக் காயா உபயோகிக்கறேங்கறே. சந்தோஷம் குடுத்து ஜெயிக்கறதுதான் நிரந்தர வெற்றிங்கறே...இதுக்கெல்லாம் என்ன அர்த்தம் ரதி?" என்றான்.

பாகீரதி உண்மையாகவே திகைத்தாள். "இப்படியெல்லாம் எப்ப சொன்னேன்?" என்றாள்.

"நேத்து நைட்..திருப்பூர்ல ஒரு வேளை தூக்கக் கலக்கத்துல ஆழ்மனசுல இருக்கறதெல்லாம் வெளிய வந்துருச்சோ?" என்றான்.

தான் இப்படியெல்லாம் பேசியிருக்கிறோம் என்பதே அவளுக்குத் தெரியவில்லை. பயந்து போனாள். "சாரி..ரவி நான் ஏதோ உளறியிருக்கேன்.. ஐ.ம் சாரி"என்றாள்.

அவன் சட்டென்று புன்னகைத்தான். "பயப்படாதே ரதி" நான் உங்கிட்டே ஆலோசனை கேக்கணும்னு நினைக்கறேன். உன்னை ஒரு நல்ல 'ஃப்ரண்டா நம்பலாம்னு எனக்குத் தோணுது. என்னோட பெரிய ஒரு பிரச்சினையை உங்கிட்டே சொல்றேன். ஏதாவது வழியிருந்தா சொல்லு.."

என்றான்.

ஒரு நிமிடம் மௌனம் சாதித்தான். பிறகு தொண்டையைச் செருமிக் கொண்டான். பிறகு தயக்கமான குரலில் ''ரதி.. இப்ப நான் ஒரு ஆண், நீ பெண்ணுங்கறதையெல்லாம் மறந்துட்டு என் பிரச்சினையை நீ கேக்கணும். அப்பதான் உன்னால தெளிவா ஒரு பதில் சொல்ல முடியும்'' என்றான்.

அவள் தன் கலக்கத்தை மறைத்துக் கொண்டு "சொல்லுங்க ரவி" என்றாள் மிக மெல்லிய குரலில்.

அவன் மெதுவாக இடி போல் தனது பிரச்சினையை இறக்கினான். அவளுக்கு ஒரு பெரிய சுழலில் அகப்பட்டுக் கொள்வது போன்ற எண்ணம் பெரிதாகிக் கொண்டே வந்தது.

★★★

## 10

ரவிபாரதி அப்போது அமெரிக்காவில் டல்சா என்ற ஊரில் இருந்தான். அங்கே ஒரு பல்கலைக்கழகத்தில் மேனேஜ்மெண்ட் தொடர்பான ஒரு படிப்புக்காக ஒரு வருடம் போயிருந்தான்.

இருபத்து மூன்று வயதில் இருந்தான். தாய்க்கும் அவனுக்கும் இடையே ஒரு பெரிய பள்ளம் இருந்தாலும் அவனது மௌனமான விமர்சனப் பார்வையை அலட்சியப்படுத்தி விட்டு விஜயலட்சுமி அவனிடம் கண்டிப்பாகவே இருந்தார். அதனால் பெரும்பாலும் எந்த வித தீய பழக்கங்களும் இல்லாமல் தான் இருந்தான்.

சிகரெட் மீது அவனுக்கு ஆர்வம் ஏற்படவில்லை.



மது வகையறாக்கள் மீதும் அவனுக்குப் பெரிய ஆர்வம் இருக்கவில்லை. ஆனால் அத்தனைக்கும் விளையாட்டில் ஆர்வம் செலுத்தினான். செஸ் விளையாட்டில் கெட்டிக்காரனாக இருந்தான். அதனால் அவனுக்கு அறிவார்ந்த நண்பர்களே அமைந்தனர்.

அவனது நண்பர்களை அப்ரூவ் செய்வதுகூட அம்மாதான். நல்ல பையன்களின் சேர்க்கை இருக்குமாறு பார்த்துக் கொண்டார் சரியான இளமைப் பருவத்தில் அவன் பண்புகளை அம்மாதான் வடிவமைத்தார் என்று சொல்ல வேண்டும். இதனாலெல்லாம் கூட தனது உள்ளார்ந்த வெறுப்போடு கூட ஒரு கோபத்தையும் வளர்த்துக் கொண்டிருந்தான் ரவிபாரதி. எதற்குமே சுதந்திரம் இல்லை என்ற வெறுப்பு மண்டியிருந்தது.

அமெரிக்காவின் வாழ்க்கையில் இளைஞர்களுக்கு இருந்த சுதந்திரம் அவனுக்கு வியப்பாக இருந்தது. ஆண்களும், பெண்களும் பழகிக் கொள்வதும் கூட அவனுக்கு ஒரு வித ஈர்ப்பைத் தந்தது. ஒரே ஒரு பெண்ணை அவனுக்கு மிகவும் பிடித்தது. இந்தியக் குடும்பத்தைச் சேர்ந்தவள். தீபா என்று பெயர்.

அந்தப் பெண்ணும் அவனோடு நெருங்கிப் பழகினாள்.

ஒருநாள்...

எதிர்பாராத விதமாக அவர்கள் இரவு நேரத்தில் ஓரிடத்தில் தனிமையில் இருக்க வேண்டியிருந்தது. அவனுக்குள்ளும் அம்மாவின் கட்டுப்பாடுகளின் மீது எதிர்ப்பைக் காட்டவேண்டும் என்ற எண்ணம் உள்ளே ஊறியிருக்க வேண்டும்.

எல்லை மீறுகிற மனநிலையில் இருவருமே

இருந்தார்கள். அந்தப் பெண்ணும் விட்டுக் கொடுக்கிற மனோபாவத்தில் இருந்தாள். நெருக்கமாக இழைந்து அவன் முகம் நோக்கி குனிந்து முத்திரைகளை பதித்த வண்ணம் அவன் சற்றே முன்னேறியபோதுதான் அது நிகழ்ந்தது.

சட்டென்று அவன் மனத்தில் ஒரு காட்சி ஓடியது!

துப்பாக்கியும் கையுமாக நிற்கிற ஒரு பெண்! நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்கிற ஒரு ஆணின் உருவம்...

துப்பாக்கியிலிருந்து ஆவி பறக்கக் கையில் பிடித்துக் கொண்டு அந்த பெண் நின்ற நிலை...!

திகைத்துப் பார்த்துக் கொண்டிருக்கிற ஒரு சிறுவன்...!

அந்தக் காட்சி அவன் மனதில் திரும்பத் திரும்பத் தோன்ற அவன் முகம் வியர்த்தது.

முகத்தில் லேசான பீதி தோன்ற, முத்து முத்தான வியர்வைத் துளிகளுடன் அவன் நின்ற கோலம் பார்த்து தீபாவே விலகிக் கொண்டாள்.

"ஹேய்.. யு ஆர் எ டிபிகல் இண்டியன்" என்று கேலி செய்தாள்.

அவன் சட்டென்று தன்னை மீட்டுக் கொண்டான். "ஐ ம் சாரி" என்று ஏதோ விளக்கம் சொல்லி சமாளித்தான்.

அதற்குப் பிறகும் அவர்கள் நட்புத் தொடர்ந்தது. ஆனால் பெண்களிடம் நெருங்காமலேயே எல்லை வைத்துக் கொண்டான்.

திரும்ப ஊருக்கு வந்தவுடன் அவன் தங்கள் தொழில்களைப் பார்த்துக் கொள்ள வேண்டி இருந்தது.

அது அவனுக்கு பெரிய சவாலாக இருந்தது. பிஸினஸ் சாம்ராஜ்யத்தின் உருட்டல், மிரட்டல்கள், போட்டிகள் இவைபெல்லாவற்றையும் கூட சதுரங்கக் காய்களைப் போல அவன் வெகு நேர்த்தியாகக் கையாண்ட விதம் பார்த்து



அம்மாவே ஒரு கட்டத்தில் அவன் தனி மனிதன் என்பதை உணர்ந்து பொறுப்புகளை அவனிடம் கொடுத்து விட்டார்.

ஆனால்...!

அதற்குப் பிறகு அவனது இருபத்தியேழாவது வயதில் அவனிடம் பெரிய மாற்றம் ஏற்பட்டது.

அம்மா திருமண பேச்சை எடுத்தார். அவன் ஒரேயடியாக

"திருமணத்தில் எனக்கு நம்பிக்கையில்லை. எல்லாம் பொய்கள்" என்றபோது அம்மா அதிர்ந்து போனார்.

அவனை உருட்டி விழித்துப் பார்த்தாலே அடங்கி விடுகிற பையனாக இல்லாமல் 'உன் திருமணத்தைப் பற்றியும் வாழ்க்கையைப் பற்றியும் எனக்குத் தெரியாதா?' என்பது போல் நேர்ப்பார்வையாக அவனும் எதிர்ப்பார்வை செலுத்தவும் அம்மா செயலற்றுப் போனார்.

அம்மாவுக்கே அவனிடம் அச்சம் தோன்றியது.

நேரடியான பார்வை மோதல்கள் நடக்கும். ஆனால் ஒரு நாளும் வார்த்தைகள் தடித்ததேயில்லை.

அம்மாவின் கையில் இன்னமும் ஒரு பெரிய அஸ்திரம் இருந்தது. என்ன காரணத்தினாலோ ரவிபாரதியின் தாத்தா எல்லாச் சொத்துக்களையும் அம்மாவின் பேரில் எழுதி வைத்திருந்தார். பணத்தினுடைய அவசியமும் அவனுக்குப் புரிந்திருந்து. அதனால் பனிப்போர் வலுவடைந்தாலும் எந்தப் பெருவெடிப்பும் இல்லாமலே வாழ்க்கை ஓடிக் கொண்டிருந்தது.

ராமையாதான் ஒரு பாலம் போல இருந்து இரண்டு பேருடைய கோபதாபங்களைத் தாங்கிக் கொண்டு எல்லாவற்றையும் நடத்திக் கொண்டு இருந்தார்.

இதற்கிடையில்...

ரவிபாரதியைப் பார்க்க பெண்கள் இரவு நேரங்களில்

முதல் முதலாக ஒரு பெண் வந்தபோது சிரித்துக் கொண்டே அந்தப் பெண்ணுடன் அவன் மாடியேறிச் செல்கிற காட்சியைப் பார்த்த அம்மா ராமையாவை அழைத்தாள்.

'ராமையா! இனி நான் இங்கே இருந்தா மரியாதையில்லை. நான் நம்மளோட மில்லுல இருக்கிற சின்ன பங்களாவுக்குப் போயிடறேன். ஏற்பாடு செய்யுங்க!' என்றாள்.

போய் விட்டாள். அவனும் பெரிதாக ஆட்சேபிக்கவில்லை. இதில் வித்தியாசமான விஷயம் என்னவென்றால் எந்தப் பெண்ணும் நீண்ட நேரம் அவன் அறையில் தங்குவதில்லை. கீழே ராமையா ஹாலில் இருப்பார். அவருக்கு ஒரே ஒரு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்திருந்தான். தான் மேலேயிருந்து பட்டனை அழுத்தினால் கீழே ஒரு சிவப்பு விளக்கு எரிகிற மாதிரி அமைத்தான். இந்த சிவப்பு விளக்கு எரிந்தால் உடனே அவர் ஃபோனில் அவனை அழைக்க வேண்டும் என்று மட்டும்தான் இன்ஸ்ட்ரக்ஷன்.

அதற்குப் பிறகு பெண்கள் வெளியே வந்து விடுவார்கள். அவனும் உடனே வெளியேறிக் காரில் சற்று நேரம் சுற்றி விட்டு வருவான்.

பாகீரதி வருவதற்கு முன்பு வரை இதுதான் நடந்தது.

ரவிபாரதி இதையெல்லாம் சுருக்கமாகச் சொல்லிமுடிக்க பாகீரதி குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டாள். பிறகு மெல்லிய குரலில் "புரிந்தது ரவி" என்றாள்.

"என்ன புரிந்தது ரதி?" என்று கேட்டான். அவள் சொன்னாள்.

அவன் வியப்படைந்து விட்டான்.

★★★

பேச்சில் நேரம் போனதே தெரியவில்லை.

பின்னாலேயிருந்த புல்வெளிக்குப் போனார்கள்.

ரதி வாஞ்சையாகப் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"பேசாமல் இத்தனை நாடகம் நடத்தறதுக்கு ஒரு மனோதத்துவ டாக்டரைப் பார்த்திருக்கலாம்" என்றாள்.

அவன் ஒரு பெருமூச்சுடன் ஒத்துக் கொண்டான். "என்னோட க்ளோஸ் பிரண்டே ஒரு சைக்கியாட்டிரிஸ்ட்தான். ஆனா..." என்று நிறுத்தினான். பிறகு பேச்சை மாற்றியவன் போல 'கௌரவப் பிரச்சினைன்னு வச்சுக்கோயேன்..' என்றான்.

அவளும் சற்றே முகம் சிவக்கக் கீழே பார்த்துக் கொண்டு "அந்த தீபாவுக்குப் பிறகு நீங்கள்.... நீங்கள் யாரிடமும் நெருங்கவே இல்லையா?" என்றாள்.

அவனும் வேறு பக்கம் பார்த்தான். "இங்கே வந்த பெண்கள் எல்லாம் என்னைப் பயமுறுத்தி விட்டார்கள். ரதி! . யப்பா...! பத்து நிமிஷம் பேசினாலே போதும் தலையை பிச்சுக்கலாம் போல கோபம் வரும். பணம்.. நகை புடவை..சொத்து...சே! என்றான் கடுப்பாக.

"அது சரி.. அப்படிப் பெண்கள்தானே இப்படியெல்லாம் வருவார்கள்" என்று அவள் முணுமுணுக்க

"என்ன ரதி...?" என்றான்.

அவள் அவன் முகம் பார்த்து புன்னகைத்தாள். "அந்தமாதிரிப் பெண்களிடம் வேறென்ன எதிர் பார்க்க முடியும்?" என்றாள்.

"உண்மைதான்" என்று ஒத்துக் கொண்டான். அவனே தொடர்ந்தான்.

"ரதி! என்னைத் தப்பா நினைக்காதே. நீ ஒரு நம்பிக்கைக்குரிய 'பிரண்டா' நெனைச்சுத்தான் இதையெல்லாம்

வீட்டுக்கு வர ஆரம்பித்தார்கள்.

முதல் முதலாக ஒரு பெண் வந்தபோது சிரித்துக் கொண்டே அந்தப் பெண்ணுடன் அவன் மாடியேறிச் செல்கிற காட்சியைப் பார்த்த அம்மா ராமையாவை அழைத்தாள்.

'ராமையா! இனி நான் இங்கே இருந்தா மரியாதையில்லை. நான் நம்மளோட மில்லுல இருக்கிற சின்ன பங்களாவுக்குப் போயிடறேன். ஏற்பாடு செய்யுங்க!' என்றாள்.

போய் விட்டார். அவனும் பெரிதாக ஆட்சேபிக்கவில்லை. இதில் வித்தியாசமான விஷயம் என்னவென்றால் எந்தப் பெண்ணும் நீண்ட நேரம் அவன் அறையில் தங்கியதில்லை. கீழே ராமையா ஹாலில் இருப்பார். அவருக்கு ஒரே ஒரு இன்ஸ்ட்ரக்ஷன் கொடுத்திருந்தான். தான் மேலேயிருந்து பட்டனை அழுத்தினால் கீழே ஒரு சிவப்பு விளக்கு எரிகிற மாதிரி அமைத்தான். இந்த சிவப்பு விளக்கு எரிந்தால் உடனே அவர் ஃபோனில் அவனை அழைக்க வேண்டும் என்று மட்டும்தான் இன்ஸ்ட்ரக்ஷன்.

அதற்குப் பிறகு பெண்கள் வெளியே வந்து விடுவார்கள். அவனும் உடனே வெளியேறிக் காரில் சற்று நேரம் சுற்றி விட்டு வருவான்.

பாரதி வருவதற்கு முன்பு வரை இதுதான் நடந்தது.

ரவிபாரதி இதையெல்லாம் சுருக்கமாகச் சொல்லிமுடிக்க பாரதி குறுக்கிடாமல் கேட்டுக் கொண்டாள். பிறகு மெல்லிய குரலில் "புரிந்தது ரவி" என்றாள்.

"என்ன புரிந்தது ரதி?" என்று கேட்டான். அவள் சொன்னாள்.

அவன் வியப்படைந்து விட்டான்.

★★★

பேச்சில் நேரம் போனதே தெரியவில்லை.



"சற்று நேரம் நடக்கலாமா ரதி?" என்று பங்களாவின் பின்னாலேயிருந்த புல்வெளிக்குப் போனார்கள்.

ரதி வாஞ்சையாகப் அவனைப் பார்த்து புன்னகைத்தாள்.

"பேசாமல் இத்தனை நாடகம் நடத்தறதுக்கு ஒரு மனோதத்துவ டாக்டரைப் பார்த்திருக்கலாம்" என்றாள்.

அவன் ஒரு பெருமூச்சுடன் ஒத்துக் கொண்டான். "என்னோட க்ளோஸ் ஃப்ரண்டே ஒரு சைக்கியாட்ரிஸ்ட்தான். ஆனா..." என்று நிறுத்தினான். பிறகு பேச்சை மாற்றியவன் போல 'கௌரவப் பிரச்சினைன்னு வச்சுக்கோயேன்..' என்றான்.

அவளும் சற்றே முகம் சிவக்கக் கீழே பார்த்துக் கொண்டு "அந்த தீபாவுக்குப் பிறகு நீங்கள்.... நீங்கள் யாரிடமும் நெருங்கவே இல்லையா?" என்றாள்.

அவனும் வேறு பக்கம் பார்த்தான். "இங்கே வந்த பெண்கள் எல்லாம் என்னைப் பயமுறுத்தி விட்டார்கள். ரதி ..யப்பா..! பத்து நிமிஷம் பேசினாலே போதும் தலையை பிச்சக்கலாம் போல கோபம் வரும். பணம்.. நகை புடவை..சொத்து...சே! என்றான் கடுப்பாக.

"அது சரி.. அப்படிப் பெண்கள்தானே இப்படியெல்லாம் வருவார்கள்" என்று அவள் முணுமுணுக்க

"என்ன ரதி...?" என்றான்.

அவள் அவன் முகம் பார்த்து புன்னகைத்தாள். "அந்தமாதிரிப் பெண்களிடம் வேறென்ன எதிர் பார்க்க முடியும்?" என்றாள்.

'உண்மைதான்'' என்று ஒத்துக் கொண்டான். அவனே தொடர்ந்தான்.

"ரதி! என்னைத் தப்பா நினைக்காதே. நீ ஒரு நம்பிக்கைக்குரிய 'ப்ரண்டா நெனச்சுத்தான் இதையெல்லாம்

பேசறேன்..!" என்றாள்.

"நிச்சயம் நம்பலாம்..ரவி சொல்லுங்க! என்றாள்.

"ஒன்றிரண்டு பெண்களிடம் மட்டும் நெருங்கினேன். கொஞ்சம் சகித்துக் கொள்கிற மாதிரி இருந்தாங்க. பரிசோதனை முயற்சியாகத்தான். ஆனால் மீண்டும் அதே அனுபவம்தான்..! என் பிரச்சினை..என் பிரச்சினை! அப்படியேதான் இருக்கிறது" என்றான்.

முகம் சிவந்து போனது.

"இ..கேன் அண்டர்ஸ்டாண்ட்..." என்றாள்.

"ரவி.." என்று மீண்டும் ஆரம்பிக்கவும் திடீரென்று அவன் முகம் மாறியது.

"வேண்டாம் ரதி. இதுக்கு மேலே இதைப்பத்தி பேச வேண்டாம்" என்றான். அவளை அப்படியே விட்டு விட்டு விருவிருவென்று போய் விட்டான்.

அவள் திகைத்துப் போய் நின்றாள்.

★★★

காரை எடுத்துக் கொண்டு வெளியே போய் விட்டான்.

இரவு உணவுக்குக் கூட வரவில்லை. 'போன் மட்டும் வந்தது. அதுவும் ராஜமயாவிடம் "யாரும் எனக்காகக் காத்திருக்க வேண்டாம்.." என்று மட்டும் சொன்னான்.

எப்போதும் இதுமாதிரி செய்தி அனுப்பும் போது அவளிடம் இரண்டு வார்த்தை பேசுவான். ஆனால் இன்றைக்குப் பேசவில்லை.

ரதியின் முகம் வாடிப்போனது.

விஜயலட்சுமிக்குப் பாவமாகிப் போனது.

"இப்படித்தாம்மா படுத்துவான். என்னடா ரெண்டு நாளாரொம்ப இழைஞ்சுகிட்டிருந்தானேன்னு யோசிச்சேன்.



இப்ப வருக்க ஆரம்பிச்சிட்டான். நாந்தான் முத... சொன்னேனேம்மா.. இவனைச் சமாளிக்கறது கஷ்டம்னு" என்றார்.

ரதி ஒன்றும் பேசவில்லை. தலைகுனிந்தபடி மௌனமாக சாப்பிட்டாள்.

"ரெண்டு நாள் ஃப்ரீயாய் இருப்பான். அப்புறம் ரொம்ப இடம் குடுத்துட்டோம்னு நெனைக்கறவான் போல. அப்புறம் கடிமகாராஜாதான்" என்று சிரித்துச் சமாளித்தார்.

ரதியும் புன்னகைத்தாள். சற்றே தேறிக் கொண்டாள்.

"பரவாயில்லைங்கத்தை. இந்த வயசுல இத்தனை பிஸினஸ் டென்ஷன்களை சமாளிக்க இப்படி ஜெயிக்கறதே பெரிய விஷயம். அவரோட கோப தாபங்களை நம்மகிட்டே காட்டாம வேற யாரு கிட்டே காட்டுவார். நம்மகிட்டே கூட நடிச்சுகிட்டே இருக்கணுமா என்ன?" என்றாள்.

அத்தை அசந்தே போனார். அதற்குப் பிறகு ரதி வழக்கம் போல் கலகலப்பாகி விட்டாள்.

சற்று நேரம் கழித்து அறைக்குப் போகிறேன் என்று கிளம்பிய போது "ரதி! இங்கே வா!" என்று அழைத்து நெற்றியில் முத்தம் வைத்தபோது நெகிழ்ந்து போனாள்.

ரவிபாரதியின் அலட்சியத்தை மறந்தவளாய் குதூகலமாய் மாடிக்குப் போய்விட்டாள்.

★★★

## 11

வெகுநேரம் கழித்து வந்த ரவிபாரதி லேசாகி சற்றே மனம் தெளிந்தவனாக வந்தான். ஆனால், ரதியின் அறையைப்

எட்டிப் பார்க்க அவள் நிம்மதியாய் உறங்குவதைப் பார்த்து மீண்டும் கடுப்பானான்.

மறுநாள் காலை

எப்போதும் எட்டுமணிக்கு மேல் ரவிபாரதியின் அறைக்குள் பொருட்கள் எடுக்க, வைக்க என்று ரதி போய் வந்து கொண்டுதான் இருப்பாள்.

அதே போல் அன்றைக்கும் 'ரவி' என்று இயல்பாய் அழைத்துக் கொண்டு நுழைந்தாள்.

ஆனால், பனியன் கூட இல்லாமல் படுக்கையில் சுறுசுறுப்பில்லாமல் அவன் அமர்ந்து கொண்டு இருப்பான் என்பது அவள் எதிர்பாராதது.

சட்டென்று எரிச்சலுடன் அவசர அவசரமாக ஒரு துண்டை எடுத்த மேலே போர்த்திக் கொண்டு

"உன்னை யார் இப்ப இங்கே வரச் சொன்னது?" என்று கேட்கவும் ரதி திகைத்து நின்று விட்டாள்

. அறை வாங்கினாற் போல் உணர்ந்தாள். அந்தக் கணம் வெளியேறி விட்டாள்.

ரவிபாரதிக்கே ஒரு மாதிரியாகிப்போனது. அதற்குப் பிறகு அவன் சுறுசுறுப்பாகிக் குளித்து விட்டு வந்தபோது உடைகள், தயாராய் இருந்தன.

ஷூ பாலிஷ் போட்டுத் தயாராய் இருந்தது. முதல்நாள் ஃபோன் செய்து அவன் கேட்டிருந்த விவரங்கள் பிரிண்ட் கேசக்கருகில் தயாராக இருந்தன.

அவள் மட்டும் கண்ணில் படவேயில்லை. எத்தனை கோபம் காட்டினாலும் வந்து பரிமாறுவாள். இன்றைக்கு அதையும் செய்யவில்லை.

'எங்கே?' என்பது போல் ராமையாவைப் பார்க்க

'என்னவோ மூட்அவுட்...பின்னாடி கார்டனில்.'



என்றார்.

அவன் நேரமாகி விட்ட பரபரப்பில் போய்விட்டான். கார் கிளம்புகிற சத்தம் கேட்டுக் கூட அவள் வரவில்லை.

ஏனோ அவனும் ஏமாற்றமாக உணர்ந்தான்.

வழக்கமாகக் காலையில் பட்டாசுபோல் வெடித்துக் கொண்டிருப்பான்தான். ஆனால் எத்தனை வேலைகள் இருந்தாலும் பதினோரு மணிக்கு ஃபோனில் அழைப்பான்.

ரதி சாப்பிட்டாளா, அம்மா சாப்பிட்டாச்சா, ராமையா சாப்பிட்டாச்சா என்றெல்லாம் விசாரிப்பான்.

சற்று நேரம் கலகலப்பாகப் பேசி அவளை உற்சாகப்படுத்தி விடுவான்.

விஜயலட்சுமி கூட 'என்னம்மா? இன்னைக்கு லெவன் ஓ கிளாக் கால் இன்னும் வர்லையா? வந்துருச்சா? அதான் முகத்திலே சிரிப்பு 'என்று கலாட்டா செய்வார்.

இன்றைக்கு எதிர்பார்க்கிற மனநிலையில் அவளும் இருக்கவில்லை. முதல் நாளிரவு அவன் சடாரென்று பேச்சை முறித்துக் கொண்டு போனபோது அவளுக்கு மிகவும் கஷ்டமாக இருந்தது. ஆனால், அறைக்கு வந்ததற்குப் பிறகு அவளுக்கு ஏதோ புரிகிறாற் போல் இருந்தது.

இதுவரையிலும் அவன் பூட்டி வைத்திருந்த ஒரு கதவை அவளால் திறக்க நேர்ந்து விட்டது என்ற விஷயத்தை அவனால் ஜீரணிக்கமுடியவில்லை என்று அவளுக்குப் புரிந்தது. ஆனால் அது அவள் தவறல்லவே என்று புன்னகைத்துக் கொண்டாள்.

குழப்பத்துடன் அந்த வாரப் பத்திரிக்கையை திறந்தாள். குருஜி ஸ்ரீ ஸ்ரீ ரவிசங்கர் கட்டுரை ஒன்று வெளியாகி இருந்தது. கோபம் கூட அன்பின் வெளிப்பாடுதான் என்று எழுதி இருந்தார். அறையே வெளிச்சமானாற் போல்

மனம் லேசாகி விட்டது. அதற்குப் பிறகுதான் நிம்மதியாக உறங்கினாள்.

இப்போது ஒரு குழந்தையைப் போல் முரண்டு பிடிக்கிற அவன் நடவடிக்கைகளை அவளால் உணர்ந்து கொள்ள முடிந்தது. விட்டுப் பிடிக்க நினைத்துத்தான் அவள் ஒதுங்கியிருந்தாள். ஆனால் ஒரு சின்ன சமரச முயற்சி செய்திருந்தாள். அது ஏன் இன்னும் வேலை செய்யவில்லை என்று யோசித்துக் கொண்டிருந்தாள்.

★★★

சரியாக அதே நேரம்!

ரவிபாரதி பி.ஃப் கேஸைத் திறந்தான். அதில் அந்த வாரப் பத்திரிக்கை அவனைப் பார்த்துச் சிரித்தது.

ஸ்ரீ ஸ்ரீயின் கட்டுரை வெளியாகியிருந்த அந்தப் பக்கத்தில் ஒரு ஃபிளாப் வைத்திருந்தாள். 'கோபம் கூட அன்பின் வெளிப்பாடுதான்' என்று தொடங்கிய பத்தியை அடிக்கோடிட்டிருந்தாள். அதைப் படித்து முடித்தவுடன் அவன் முகம் மலர்ந்தது. கனிவான ஒரு புன்னகை கூட மலர்ந்தது. உடனே ஃபோன் செய்ய வேண்டும் என்று நினைத்தான். அதற்குள் அவன் பி.ஏ. அவசரமாக ஏதோ ஒரு பிரச்சினையைத் தூக்கி கொண்டு வர எல்லாவற்றையும் ஒதுக்கி வைத்து விட்டு அதில் ஆழ்ந்தான்.

அந்த விஷயம் முடிந்த பிறகு மணியைப் பார்த்தான். மணி பன்னிரெண்டு.

''அடடா! வழக்கமாகக் கூப்பிடும் நேரம் தாண்டி விட்டதே?'' என்று யோசிக்கையிலேயே செல்'போன் சிணுங்கியது.

எடுத்தான். அந்தப்புறம் பாகீரதி!

★★★



'ரவி' என்று அவள் அழைத்த கணத்தில் மீண்டும் மனதில் குழப்பம் மேலிட்டது.

சமாதானப் படுத்த வேண்டும் என்று எண்ணியதெல்லாம் மறந்து போய் விட்டது. தனது அந்தரங்க விஷயம் ஒன்றை அவள் தெரிந்து கொள்ள நேரிட்டதே என்ற வெட்கம்தான் மேலிட்டது.

'ம்...' என்றான் உள்ளடங்கிய குரலில்.

'ரவி! உங்களுக்கு என்மேல கோபம் இல்லே ரவி? ஒரு வேளை உங்க மேலேயே கோபமோ? ரெண்டுக்குமே அவசியமே இல்லை ரவி. ஒவ்வொருத்தருக்கும் ஆத்மார்த்தமான ஒரு சிநேகம் வேணும் ரவி. எழுத்து, கவிதை, நட்பு இதுலயெல்லாம் ஆண், பெண் வித்தியாசம் பார்க்கத் தேவையில்லை ரவி.!'

அவன் சற்று மலைத்துப் போய்க் கேட்டுக் கொண்டிருந்தான். அவன் பதிலை எதிர்பார்க்காமல் அவள் தொடர்ந்தாள்.

'இந்த விஷயத்தை நீங்க என்கிட்ட ஷேர் பண்ணிக்கிட்டப்ப நான் ரொம்ப சந்தோஷமா உணர்ந்தேன். இப்படி ஒரு விஷயத்தைச் சொல்ற அளவுக்கு என் மேல நம்பிக்கை வந்துதேன்னு. ஆனா, இப்ப உங்களுக்கு சொன்னது சரியான்னு சந்தேகம் வந்துருக்க. இல்லே ரவி ஒரு பிரண்டோட அந்தரங்க விஷயத்தை வெளியே சொல்லமாட்டேன். அது என் நெஞ்சுக் கூட்டுக்குள்ளேயேதான் வேகும். கவலைப்படாதிங்க..' என்ற போது அவன் குறுக்கிட்டு...

''ரதி..'' என்று ஏதோ சொல்ல வந்தான்.

''இருங்க நான் பேசிடறேன்!'' என்றாள்.

''ஒன்னு சொல்லட்டுமா? உங்களைப் பத்தி ரொம்பப் பெருமையா உணர்ந்தேன் 'இவ்வளவு பெரிய பிரச்சினையை

மனைக்குள்ள வச்சுகிட்டு அம்மாவை வார்த்தையால கூட காயப்படுத்திடாம, இந்த வயசுல ஒரு பெரிய பிஸினஸ் சாம்ராஜ்யத்தைக் கட்டிக் காத்து.. யு ஆர் சிம்ப்ளி கிரேட். ரவி யு கேன் ஃபீல் பிரவுட் ஆஃப் யுவர்செல்ஃப்' என்று வைத்து விட்டாள்.

அவனும் ஆஃப் செய்து விட்டு வெகுநேரம் அமைதியாக இருந்தான். பிறகு முகமெல்லாம் பிரகாசமானது. 'எவ்வளவு அற்புதமானவள் இந்த பெண்' என்று எண்ணிக் கொண்டான்.

மிக மகிழ்ச்சியான நேரங்களில் ஐஸ்கிரீம் வரவழைத்து சாப்பிடுவான் அதேபோல் இன்றைக்கும் வரவழைத்துத் தனது ஒய்வறையில் அமர்ந்து வெகுநேரம் ரசித்துச் சாப்பிட்டு விட்டு வெளியே வந்தான்.

அவனது பி.ஏ. ரிசப்ஷனிஸ்டிடம் 'அம்மா, சார் இன்னைக்கு நல்ல மூட்ல இருக்காரு. இன்கிரிமெண்ட் கேக்கணும்னியே கேளு..கிடைக்கும்' என்று முணுமுணுப்பது காதில் விழுந்த போது கூட சிரித்துக் கொண்டே நகர்ந்து விட்டான்.

பிற்பகல் மூன்று மணிக்கு வீட்டுக்குப் போகலாம் என்று ஃபோன் செய்தான்.

ராமையா லைனில் வந்தார்.

'ராமையா! ரதியை கூப்பிடுங்க..' என்கையில் அவர்

'தம்பி.. சின்னம்மா எங்கேயோ வெளியே போனாங்க. ரெண்டு மணிக்கே கிளம்பிட்டாங்க' என்றார்.

'ஓ..!' என்று வைத்து விட்டான். பிறகு வேலையில் ஆழ்ந்தான். திடீரென்று ஏதோ அவசியத்திற்காக 'பல்ராமைக் கூப்பிடுங்க' என்று சொல்ல பி.ஏ.

'சார், பல்ராம் இன்னைக்கு அரைநாள் லீவ்



எடுத்துட்டுப் போயிருக்காரு' என்றார்.

ரவிபாரதி காற்றுப்போன பலூன் போல உணர்ந்தான். ஒரு வேளை ...ஒருவேளை ரதி பல்ராமைச் சந்திக்கப் போயிருப்பாளோ.?

அதுகுறித்துத் தனக்கு ஏன் இவ்வளவு கோபம் வருகிறது என்று புரியவில்லை. குழப்பமாக உணர்ந்தான்.

இதுவரை தன் வாழ்நாளில் செய்யாத ஒரு காரியத்தை செய்தான்.

பல்ராமின் செல்ஃபோனுக்கு லைன் போட்டான். 'பல்ராம் எங்கே இருக்கே?' என்றான். அவன் பதில் சொல்வதைக் கவனியாதவனாய் இறுக்கமான குரலில்

'ரதி உன்னோடவா இருக்கா?' என்று கேட்டான்.

★★★

பிஞ்சு பிஞ்சாய்க் குழந்தைகள் ...

கறுப்பும்... வெளுப்பும்... மாநிறமுமாய்.. பல்வித நிறங்களில் பலவித உடைகளில்...

ஆடிக் கொண்டும் ஓடிக் கொண்டும் கூச்சலிட்டுக் கொண்டும் இருந்தார்கள்.

அவர்களுக்கு நடுவே பாகீரதியும் நின்று கொண்டிருந்தாள். அவர்களைச் சுற்றும் ராட்டினத்தில் அமரச் செய்து சுற்ற வைத்துக் கொண்டிருந்தாள்.

பிறகு குழந்தைகளைச் சுற்றிலும் அமர வைத்துக் கதைகள் சொல்லிக் கொண்டிருந்தாள். அதில் எப்போதும் போல் அந்த அந்த தனுஷா என்கிற குழந்தை அவள் மடியை விட்டு நகராமல் அமர்ந்து கொண்டு கதை கேட்டுக் கொண்டிருந்தாள்.

கோவையில் புறநகர்ப் பகுதியொன்றில் இருந்த

அதிகம் பிரபலமாகாத அனாதை விடுதி அது.

ஒரு பெண்மணி திருமதி. ராஜேஸ்வரி என்று பெயர். அதை நடத்திக் கொண்டிருந்தார். மாதம் ஒரு முறையாவது ரதி அங்கே போய் விடுவாள்.

இன்றும் பிற்பகல் ஏதோ தோன்றியது.

வந்து விட்டாள். சற்று நேரம் உலகம் மறந்து இருந்தாள்.

குழந்தைகளோடு ஒன்றாய்க் கை தட்டிக் கொண்டு அவள் திரும்புகையில்...

ரவிபாரதி நிற்பதைப் பார்த்தாள். ஆச்சரியமானாலும் ஆனால் உடனே புன்னகையுடன் கையசைத்தாள்.

அவனும் அதைப் பார்த்து முகம் மலர்ந்தவனாய் அருகில் வந்தான்.

'வாங்க ரவி !இந்தக் குழந்தைங்களோட கொஞ்ச நேரம் பேசுங்க.. உலகமே மறந்துடும்' என்று பேசச் செய்தாள்.

உண்மைதான்...குழந்தைகளின் கள்ளங்கபடமற்ற இதயத்தொடுகின்ற அந்தப் பேச்சில் அவனும் ஆழ்ந்து போனான்.

கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் செலவழித்த பின் கிளம்பினார்கள்.

கிளம்பும் போது 'எப்படி ரவி நான் இங்கே இருக்கேன்னு தெரியும்?' என்று கேட்டாள்.

பல்ராம் சொன்னான் என்றான் அவன்.

ராஜேஸ்வரியம்மாவிடம் விடைபெற்றுக் கொள்ளப் போயிருக்கையில் அவள் அவனை அறிமுகம் செய்து வைத்தாள்.

'பாகீரதியம்மா புண்ணியத்துல நீங்க இங்க வந்தீங்க...' என்று மகிழ்ந்தார். பிறகு அவனிடம் 'பாகீரதிம்மா.. இந்த



ஆறுமாசமாக நீங்க குடுக்கிற ஏழாயிரம் ரூபாய் ரொம்ப உதவிகரமாக இருக்கு. அதில்லாம பொருள்கள் வேற வாங்கிக் குடுக்கிறீங்க' என்று வெகுவாக நன்றி சொன்னார்.

காரில் திரும்பும் போது ரவிபாரதி மீண்டும் மௌனமாகி விட்டான். மாதம் ஏழாயிரம் ரூபாய் அவள் செலவுக்கு என்று கொடுப்பான். அதை அப்படியே இங்கே கொடுத்து வந்திருக்கிறாள். லேசாக மனத்தில் ஒரு வலி தோன்றியது.

''ஏன்..ரதி நான் குடுக்கற பணத்தையா இங்கே குடுத்துட்டு வந்தே?'' என்றான்.

அவள் எங்கோ பார்த்துக் கொண்டு 'ஆமாம்'என்றாள்.

''ஏன் ரதி? என் பணத்தை பயன்படுத்திக்கக் கூடாதுன்னு முடிவா?'' என்றான். சற்றே வேதனை கலந்த குரலில்.

'இல்ல ரவி?' என்றாள் பதட்டமாக.

''அப்படியில்ல..ரவி உங்க பணத்தை வாங்கிக்கலைன்னா உங்களுக்கு வருத்தம். அப்பா அம்மா போனதிலிருந்து கிடைக்காத ஒரு மனநிம்மதி உங்க நிழலிலே எனக்குக் கிடைக்குது. ஒரு நட்புக்காகத்தான் நான் பல்ராம்கிட்டே இந்தத் திட்டத்துக்கு ஒத்துக்கிட்டேன். பணம் வாங்கிட்டா இந்த சர்வீஸ்க்கு நான் ஒரு பணம் வாங்கின மாதிரி ஆயிடாதா? எனக்கு அது பிடிக்கலே!'' என்றாள்.

அவன் மனம் நெகிழ்ந்து போனான்.

''ரதி.. எனக்கு என்ன சொல்றதுன்னே தெரியலே?''என்றான் உள்ளடங்கிய குரலில்.

''ஒண்ணும் சொல்ல வேண்டாம். உங்களாலே முடிஞ்சா இந்த இல்லத்துக்கு ஏதாவது செய்ங்க..' என்றாள் கலகலச் சிரிப்புடன்.

"செய்யலாம் ரதி. கண்டிப்பா.. ஏதாவது செய்யலாம்.." என்றான். அதற்குப் பிறகு இல்லம் பற்றிச் சற்றுப் பேசினார்கள்.

பேச்சுக்கு நடுவில் அவன் முகம் பார்த்து 'ரவி.. நான் இந்த இல்லத்துக்கு வர்றது ஏன் தெரியுமா? ஏதோ இருபது வயசு வரைக்குமாவது அம்மா...அப்பாவோட இருக்கற குடும்பமா எனக்கு கிடைச்சதேன்னு நினைச்சு என்னை புண்ணியப் பண்ணிக்கத்தான்' என்ற போது அவன் மனம் உருகிப் போனான்.

அவன் சட்டென்று காரை ஓரமாக நிறுத்தினான். அவளை அணைத்து தேற்ற வேண்டுமென்று தன் மனத்தில் தோன்றக் கண்டு திடுக்கிட்டுப் போனான். அந்த மாதிரி அனுதாபங்கள் அவளுக்குப் பிடிக்காது என்பதும் அவனுக்குத் தெரிந்திருந்தது. தனது குரலில் அன்பைத் தேக்கியவனாய் தன் வலக்கரம் நீட்டினான்.

அவள் தயக்கத்துடன் பார்க்க..."யுவர் பெஸ்ட் பிரண்ட் அட் யுவர் சர்வீஸ் மேடம். இனிமே யாருமே இல்லேங்கற நினைப்பே வரக்கூடாது. எப்பவும் எந்த உதவி வேண்டுமானாலும் கேக்கலாம். சாஞ்சுக்க ஒரு தோள் இருக்கு ஓகே?" என்றான்.

அவளும் உணர்ச்சியுடன் தன் வலக்கரம் நீட்டிப் பற்றிக் கொண்டாள்.

"தாங்க்ஸ் ரவி. தாங்க்யூ வெரி மச்..." என்றாள் ஆழ்ந்த குரலில் இரு கண்களிலும் கண்ணீர் நிறைந்தது.

சற்று தூரத்தில் ஸ்வப்னாவின் கார் நிற்பதையும் இந்தக் காட்சியைப் பார்த்த பின் அவள் காரை எடுப்பதையும் இருவருமே கவனிக்கவில்லை.

★★★



## 12

ஒரு வாரம் சென்றிருக்கும்

அன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை. ரவிபாரதி வீட்டில் இருந்தான்.

அவனுக்காக ஞாயிற்றுக்கிழமைகளில் அவள் ஒரு பெரிய விருந்தே தயாரிப்பாள். மும்முரமாகவும் பரபரப்பாகவும் வேலைகளில் இருப்பாள்.

ரவிபாரதி காலையில் தலைகுளித்து விட்டுக் காலை உணவருந்தி விட்டு மாடிக்குப் போனால் சற்று நேரம் வருகிற வாரத்திற்கான வேலைகளில் பற்றி திட்டமிட்டுக் கொள்வான். பிறகு பத்து மணியில் இருந்து ஒரு மணி வரை ஒரு தூக்கம் போடுவான்.

ஒன்றரை மணி வாக்கில் கீழே வந்து பகல் சாப்பாட்டை முடித்துக் கொண்டு சற்று நேரம் ஹாலில் இருப்பான். அம்மா உறங்கப் போனபின் ராமையாவிடம் சற்றுப் பேசிக் கொண்டிருப்பான். வீட்டு நிலவரங்களை விசாரித்துக் கொள்வான். அதற்கு பிறகு மேலே வந்தால் பாகீரதியுடன் சற்று நேரம் செஸ் விளையாடுவான். பாகீரதி அவனளவுக்கு இல்லையென்றாலும் அவனுக்கு ஈடுகொடுத்துப் போராடுவது அவனுக்குப் பிடிக்கும்.

"நல்லா 'பைட்' பண்றே ரதி" என்று பாராட்டுவான்.

மாலையில் வெளியே கிளம்பினால் நண்பர்களைப் பார்த்துவிட்டு வருவான். பிறகு மீண்டும் மாடிக்கு வருவார்கள் பாட்டும், சிரிப்பும், பேச்சுமாய் பொழுதைக் கழித்து விட்டு விரைவில் படுக்கைக்குப் போய்விடுவான்.

முன்பெல்லாம் ஞாயிற்றுக்கிழமைகளில் வாய்ப்பு

இருந்தால் ஸ்வப்னாவைப் போய்ப் பார்ப்பான். இப்போது "ஞாயிற்றுக்கிழமை கூட வெளியே போனால் அம்மா சந்தேகப்படுவாங்க ஸ்வப்னா'' என்று தட்டிக் கழித்து விடுகிறான். தன் போக்கு குறித்து அவனுக்கே ஆச்சரியமாக இருக்கது.

தான் பழகிய பெண்களில் ரதியின் நட்பை அவன் பெரிதும் மதித்தான். ரதியிடம் பழகிய பிறகு ஸ்வப்னாவின் குறைகள் சற்று அதிகமாகவே தெரிய ஆரம்பித்தன. வாழ்நாள் முழுவதும் அவளோடு ஓட்ட முடியுமா என்ற சந்தேகம் கூட எழுந்தது. சுபீட காலமாக சுய அலசலில் ஆழ்ந்திருந்தான்.

இதற்கிடையில் சென்ற மாதத்தில் டெல்லிக்குப் போய் வந்ததற்குப் பிறகு ஒரு விஷயம் நடந்தது. ஒரு நாள் மாலை மகிழ்ச்சியாக வந்தான்.

'ரதி இங்க பார் ஒரு சந்தோஷமான விஷயம்'' என்று ஒரு செக் காட்டினான். இரண்டு லட்ச ருபாய்க்கு மல்ஹோத்ரா அனுப்பியிருந்தான்.

மல்ஹோத்ராவின் நண்பன் ஒருவனின் தொழிலில் பெரிய சரிவு ஏற்பட்டிருந்ததாம். இவன் ஏதோ ஐடியா கொடுத்து விட்டு வர அது பெரிய வெற்றியாகி தொழிலைத் தூக்கி நிறுத்தி விட்டதாம்.

ஒரு கோடி ருபாய் இலாபமாம். அதற்காக கன்ஸல்டன்ஸி ஃபீஸ் என்று அனுப்பியிருந்தான். ரதியும் அவனுடைய சந்தோஷத்தை உற்சாகத்துடன் பங்கிட்டுக் கொண்டாள்.

கோவிலுக்கும் , ஹோட்டலுக்கும் அழைத்துப் போனான். அழகான ஒரு சிறிய மூன்று பவுன் செயினில் ஒரு டாலர் தொங்கின மாதிரி ஒரு பரிசு வாங்கிக் கொடுத்தான்.

"என் பரிசு! எந்தக் காரணமும் சொல்லாமல் வாங்கிக்க!



'' என்றான். வாங்கிக் கொண்டாள். அவன் மகிழ்ச்சிக்காக அதை உடனே அணிந்து கொள்ளவும் செய்தாள். அவனிடம்

''ரவி. பேசாம நீங்க இந்த மாதிரி ஒரு கன்ஸல்டன்ஸி கூட ஆரம்பிக்கலாம். உங்க அப்பாவுடைய சொத்தை நம்பியிருக்காமல் உங்கள் மூளையை மட்டுமே சார்ந்து ஒரு வருமானம் கிடைக்கும். உங்கள் தன்னம்பிக்கைக்கும் ஒரு பூஸ்ட் கிடைக்கும்'' என்றாள்.

''தட்ஸ் அன் ஐடியா''என்று முகம் மலர்ந்தான். செயல்படுத்தவும் செய்தான். அதில் தனியாக ஒரு வருமானம் வர ஆரம்பித்திருந்தது. இப்போது அவன் மனதில் ஒரு எண்ணம் ஓட ஆரம்பித்தது.

இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை அதைப் பற்றி பேச முடிவு செய்திருந்தான்.

உணவு முடிந்தவுடன் அம்மாவின் அறைக்கு வந்தான். வழக்கமில்லாத வழக்கமாகத் தன் அறைக்கு வந்த மகனைப் பார்த்து அம்மா மனம் குளிர்ந்து போனார்.

''அம்மா.. உங்ககிட்டே பேசணும்'' என்றான்.

''சொல்லுப்பா'' என்றார்.

பின்னால் திரும்பி 'ரதி நீயும் வா' என்று அழைத்தான். வந்தாள்.

'அம்மா உங்க மருமகளுக்கு ஒரு ஆசை! என்று இல்லத்துக்குப் போய் வந்ததையும், ராஜேஸ்வரியம்மாவிடம் உதவி செய்வதாக உறுதி சொல்லி விட்டு வந்ததையும் சொன்னான். விஜயலட்சுமி மிகவும் மகிழ்ச்சியடைந்தார்.

'நல்ல காரியமாச்சேப்பா.. செய்ப்பா' என்றார்.

'அம்மா.. அதுல நமக்கும் லாபமிருக்கும். வரி விலக்கு வாங்கிக்கலாம்'' என்றான் மீண்டும்.

''இல்லாட்டாக்கூட செய்யலாம்ப்பா...'' என்றார்.

ரதியைத் திரும்பிப் பார்த்துப் புன்னகைத்தான்.

"என்ன மேடம் ஓ.கே.வா?" என்றான்.

தன் கோரிக்கைக்கு இவ்வளவு பெரிய அங்கீ மதிப்புக் கிடைக்கும் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. நன்றிப் பார்வையுடன் நெகிழ்ந்து நின்றாள். மறுபடியும் அவன்

"ரதி. நம்ம ரூமில ஒரு பார்சல் வைத்திருக்கேன் எடுத்துட்டு வா" என்றான்.

அவள் சிறுபெண்ணைப் போல் ஓடிப் போய் எடுத்து வந்தாள்.

அவன் அதைப் பிரித்து அம்மாவுக்கு ஒரு புடவைப் பார்சலை நீட்டினான்.

"அம்மா. இது என்னோட தனிப்பட்ட வருமானத்திலே வாங்கியது" என்றான்.

அதென்ன தனிப்பட்ட வருமானம் என்று அம்மா வியப்பாய்ப் பார்க்க அவன் மல்ஹோத்ரா அனுப்பிய செக் பற்றிச் சொன்னான். அம்மா பெரிதும் மகிழ்ச்சி அடைந்தார். பார்சலை கையில் வைத்துக் கொண்டு கனவில் இருப்பவரைப் போல் அமர்ந்திருந்தார்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அறைக்குப் போனார்கள். வழக்கம் போல் வேலைகளில் ஆழ்ந்தார்கள்.

இரவு பத்து மணியிருக்கும் ரதிக்கு சர்க்கரை டப்பாவை அலமாரிக்குள் வைக்கவில்லை என்பது நினைவுக்கு வர இறங்கிப் போய் எடுத்து உள்ளே வைத்து விட்டு வந்தாள். படியேறுவதற்கு முன் யதேச்சையாக அம்மா அறையில் எட்டிப்பார்த்தாள்.

அவர் கட்டிலில் அமர்ந்தபடி அந்தப் புடவைப் பார்சலை மார்போடு அணைத்த வண்ணம் கண்ணீர் மல்க அமர்ந்திருந்தார். அவளைக் கவனிக்கவில்லை. உடனே



தலையை இழுத்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையுடன் அறைக்குப் போனாள்.

ரவிபாரதியின் அறைக்கதவைத் தட்டினாள். அவன் உறக்கக் கலக்கத்துடன் கதவைத் திறக்க 'உங்க அம்மா...அம்மா' என்று குழறினாள்.

"அம்மா...அம்மாவுக்கு என்ன?" என்று அவன் கலவரமாக

"இல்லல்லே.. ஒண்ணும் பயப்படறதுக்கில்லே!" என்றுதான் கண்ட காட்சியைச் சொன்னாள். அவன் திகைப்பாய்க் கேட்டுக் கொண்டான் 'சரி.ரதி நீ போய் தூங்கு'என்று அனுப்பிவிட்டுச் சிந்தனையிலாழ்ந்தான்.

பதினோரு மணிவாக்கில் இறங்கி வந்து அம்மாவின் அறையை எட்டிப் பார்த்தான். அம்மா ஒரு குழந்தையை அணைப்பதைப் போல அந்தப் பார்சலை அணைத்துக் கொண்டு உறங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தான். அவன் உள்ளம் நெகிழ்ந்து போனது.

பேச்சற்றுப் போனவனாய் சற்று நேரம் அங்கேயே நின்றான்.

★★★

மறுநாள் காலை!

எட்டு மணிக்கு அவன் அறைக்கு வந்த ரதி ஒரு யோசனை சொல்ல அவன் ஒத்துக் கொண்டான்.

காலை டிஃபன் முடிந்தவுடன் மகன் கிளம்பாமல் சோஃபாவில் அமர்ந்திருப்பதைப் பார்த்த விஜயலட்சுமி அவனைக் கேள்விக்குறியுடன் பார்க்க

"அத்தை உங்க மகன் ஆஃபீசுக்கு லீவ். நாம எல்லாரும் இன்னைக்கு மருதமலை போறோம்" என்றாள்.

ராமையா காரை டிரைவ் செய்ய நான்கு பேரும்

போனார்கள்.

"அத்தை நீங்க அந்தப்புதுப்புடவையைத்தான் கட்டணும்" என்று அவள் வற்புறுத்த அவரும் உடுத்திக் கொண்டார்.

அரைநாள் அங்கேயே செலவழித்து விட்டு பிற்பகல் வெளியே சாப்பிட்டு விட்டு அன்றைக்கு வீட்டிலேயே தங்கினாள் ரதி. அம்மாவின் அறையில் கொஞ்ச நேரம் செலவழித்தாள். எதற்கோ அந்தப்புறம் போனாள்.

அம்மா மகிழ்ச்சியின் எல்லையில் இருந்தார்.

'ரதி. உனக்கு ஏதாவது பிடிச்சதா கேளு வாங்கித் தரேன்' என்றார்.

'அத்தை.. உங்க ஆசீர்வாதம் மட்டும் இருந்தாப் போதும்' என்றாள் அவள். ஒரு நிமிடம் குறுகுறுவென்று பார்த்து விட்டு 'அத்தை சந்தோஷமாயிருக்கும் போது நீங்க ரொம்ப அழகா இருக்கீங்க' என்று முத்தம் வைத்தாள்.

அந்த நேரம் அங்கே வந்த ரவிபாரதி சிரித்துக் கொண்டே 'ஹலோ! இப்ப இங்கே என்ன நடக்குது?' என்று கலாட்டா செய்ய அவள் முகம் சிவக்க அவனைப் பார்த்து கலகலவென்று சிரித்து விட்டு அறைக்கு ஓடி விட்டாள்.

அவள் போவதைப் பார்த்து விட்டு

''நல்ல ஆளும்மா..உங்க மருமக!'' என்று முணுமுணுக்க விஜயலட்சுமி

"நிஜமாவே நல்ல ஆள்தாம்ப்பா. பொக்கிஷம் மாதிரி நீ இவளை ஆயுசு பூரா வச்சுத் தாங்கணும்'' என்று ஆத்மார்த்தமாய் சொல்ல அவன் என்ன பேசுவது என்று தெரியாமல் சற்று நேரம் நின்று விட்டான்.

★★★

அன்று இரவு!



அத்தை போர்ட்டிகோவில் விச்ராந்தியாக அமர்ந்திருந்தார்.

அதைப் பார்த்த பாகீரதி மெதுவாக அவரை நெருங்கினாள். சற்று நேரம் பாரதியார் பாடல்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தாள்.

"ஏங்கத்தை இன்றைக்கு நீங்க ரொம்ப சந்தோஷமா இருக்கீங்க இல்லே'' என்றாள்.

தயக்கமாய்த் தன் முகத்தை மருமகள் மீண்டும் மீண்டும் பார்ப்பதைப் பார்த்த விஜயலட்சுமி "என்னம்மா விஷயம்?" என்றார்.

அவள் மெதுவாகத் தன் மனதில் உள்ள அந்தப் பெரிய கேள்வியை எடுத்து வெளியே விட்டாள்.

பயந்து பயந்துதான் கேட்டாள்.

அப்படி என்னதான் கேட்டுவிட்டாள்.'' ஏங்கத்தை உங்க மகனுக்கும் உங்களுக்கும் நடுவே ஏதோ ஒரு பிரச்சினை இருக்கு. அது என்னன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?'' என்றாள்.

அவர் வெகுநேரமாக ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவள் நகர்ந்து விடவில்லை. ஒரு மௌனப்பிடிவாதத்துடன் அமர்ந்திருந்தாள். அதைப் பார்த்த அவர் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டார். பிறகு

"நீ இந்த வீட்டில் காலத்துக்கும் அவனோடு வாழப் போறவ. உனக்கும் தெரியத்தான் வேணும்'' என்றார். தனக்குத்தானே பேசிக் கொள்வது போல. பிறகு

''என்னவா இருக்கும்னு நெனக்கறே?'' என்றார்

அவள் ஒரு நிமிடத் தயக்கத்துக்கு பிறகு

''ஏதோ ஒரு விதத்துல உங்களைக் குற்றவாளியா நினைக்கறாரு'' என்றாள்.

அம்மா கசப்பாகப் புன்னகைத்தாள்.

சாதாரணக் குற்றவாளியா இல்லம்மா.. கொலை
குற்றவாளின்னு நெனைக்கிறான்'' என்றார்.

பாரதி இதை முற்றிலும் எதிர்பார்க்கவில்லை. அதிர்ச்சியடைந்து நின்றாள்.

★★★

## 13

''ஏன், ரதி, அதென்ன நீயும் அம்மாவுமே பாரதியைக் குத்தகைக்கு எடுத்திருக்கீங்களா என்ன? மத்தவங்களுக்கும் கொஞ்சம் விட்டு வைங்கப்பா'' என்று பகபகவென்று சிரித்துக் கொண்டிருந்தாள் ரவிபாரதி.

பாரதி புன்னகைத்துக் கொண்டாள்.

''அப்படி அருமையாய்ப் பாடுவாரா என்ன? உங்க பாரதி?'' என்றான்.

''ம்... அதுக்கெல்லாம் ரசிகத் தன்மை வேணும் சார்...'' என்று அவளும் திருப்பித் தாக்கினாள்.

ஹலோ...ரதி இங்க பார் கவிதை எழுதறதுக்கு வேணா திறமை வேணும். ரசிக்கறது யார் வேண்டுமானாலும் ரசிக்கலாம் தெரியுமா?'

'ம்...அப்படியா? நான் ஒண்ணு கேக்கறேன் சொல்லுங்க. எப்பப் பாரு பிஸினஸ், டார்கெட், இலாபம்ன்னே யோசிக்கறீங்களே? எப்பவாவது நிலாவைக் கொஞ்ச நேரம் நின்னு பாத்திருக்கீங்களா? ரோஜா மொட்டு கொஞ்சம் கொஞ்சமா பெரிசாகி ஒரு நாள் மலர்றதைக் கவனிச்சிருக்கீங்களா? வேண்டாம், நம்ம தோட்டத்துல பூத்திருக்கிற ரோஜாப் பூக்களோட இயற்கையான நிறத்தை



ரசிச்சகிட்டே, அந்தப்புல்வெளியில் நடக்கற சுகத்தை அனுபவிச்சிருக்கீங்களா?அமைதியாய் இருந்து இசையை ரசிச்சிருக்கீங்களா? இதையெல்லாம் ரசிக்கறவங்களுக்குத்தான் பாரதி கவிதை புரியும். ஏன் கவிதையே புரியும்...''

''....''

அவன் இடையில் பேசுவானென்று அவளும் எதிர்பார்க்கவில்லை. கனவில் பேசுவது போல் தொடர்ந்தாள்.

'காணி நிலம் வேண்டும்னு' ஒரு பாட்டு அதிலே ஒரு மாளிகை வேணுமாம்.

'பத்துப் பனிரெண்டு தென்னை மரம்
பக்கத்திலே வேணும் ! நல்ல
முத்துச்சுடர் போலே ! நிலாவெளி
முன்பு வர வேணும் ! அங்குக்
கத்துங் குயிலோசை ! சற்றே வந்து
காதிற் பட வேணும் ! என்றன்
சித்த மகிழ்ந்திடவே ! நன்றாயிளந்
தென்றல் வர வேணும் என்று நிறுத்தினாள்.

'ம்...' என்று ஆழ்ந்து ரசித்துக் கொண்டான் ரவிபாரதி. 'அப்புறம்...அடுத்தா பக்கத்திலே ஒரு பொண்ணு வேணும்னு நினைக்கலையாக்கும்...?' என்றான் கலகலச் சிரிப்புடன்

'ம்..' நினைச்சிருக்கான்.

'பாட்டுக் கலந்திடவே ! அங்கேயொரு பத்தினிப் பெண் வேணும்' என்று தயக்கத்துடன் நிறுத்தி விட்டாள்.

'யப்பா.. பயங்கரமான ரசிகன்தான்.. உங்க பாரதி' என்று மீண்டும் சிரித்தான். பிறகு சொன்னான்.

'ரதி கற்பனைகள் ரசிக்கறதுக்கு நல்லா இருக்கும். ஆனா வாழ்க்கை வேற. அதன் போராட்டங்கள் வேற. அதுக்குத் தைரியம் வேணும். பாஸிடிவ் திங்கிங் வேணும்

என்றான்.

'ரவி அதுவும் பாரதி சொல்லியிருக்காரு'

'எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்'
அப்புறம் பாருங்க...
'தோளை வலியுடையதாக்கி உடற்
சோர்வும் பிணியலவும் போக்கி அரி
வாளைக் கொண்டு பிளந்தாலும்
கட்டு மாறா உடலுறுதி தந்து ! சுடர்
நாளைக் கண்டதோர் மலர் போல்
ஒளி நண்ணித் திகழு முகந் தந்து-மத
வேளை வெல்லு முறை கூறித்
தவ மேன்மை கொடுத்தருள வேண்டும்'

அவன் முகத்தில் அவள் சொல்லுவதை உள் வாங்கிக் கொள்கிற மனோபாவம் பிரதிபலித்தது.

'ம்..ரியலி.. குட் ஸ்டஃப்' என்றான்.

'சரி..ரதி இனிமே உனக்கும்.. எனக்கும் ஒரு ஒப்பந்தம்..' என்றான்.

'ம்..சொல்லுங்க'

'தினம் நீ என்ன படிக்கறேங்கறதை பிரீஃபா சாயங்காலம் எனக்கு சொல்லணும் என்ன?'

'வித் ப்ளஷர் பாஸ்' என்றாள்.

'ஐலோஜ ம் தாட் யுவர் பாஸ்'

'ஐ ம் யுவர் பிரண்ட்!' என்றான்.

'ஓ..கே ஓ..கே..' என்று சிரித்தாள்.

பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அறைக்குப் போனாள். பிறகு ஏதோ நினைத்துக் கொண்டவள் போல் இறங்கிப் போனாள்.



ரவிபாரதி சிலாக்கிட்டாக ஹாலில் சோபாவில் கைகளை அணையாகக் கொடுத்துக் கொண்டு சாய்ந்தான்.

அவள் கேட்ட கேள்விகளும், சொன்ன கவிதைகளும் மீண்டும் மீண்டும் ஓடிக்க கொண்டிருந்தது. ஒரு மணி நேரத்துக் மேலே சிலாக்கிட்டாக படுத்துக் கொண்டிருந்தவன் பிறகு மெதுவாக எழுந்து அறைக்கு போனான். தனது அறை பால்கனியிலிருந்து பார்த்தான். பௌர்ணமி நிலா காய்ந்து கொண்டிருந்தது.

பாகீரதி 'எப்பவாவது நிலாவை நின்னு பாத்திருக்கீங்களா?' என்று கேட்டது நினைவுக்கு வந்தது. கீழே புல்வெளியில் பாகீரதி சிறு நடைநடந்து கொண்டிருந்தாள். பார்த்துப் புன்னகைத்துக் கொண்டான்.

'உண்மைதான் நிலா அழகாகத்தான் இருக்கிறது. நிலவொளி இதமாய்த்தான் இருக்கிறது' என்று எண்ணிக் கொண்டான்.

★★★

'ரதி. அந்த சாம்பார் பொடி விளம்பரத்துக்கு பயங்கர வரவேற்பு இப்ப ஒரு டூத் பேஸ்ட் விளம்பரம் வந்திருக்கு! அதே கம்பெனியிலிருந்து பேசாம நீயே ஐடியா குடு ஏன்னா...அந்தக் கம்பெனி ஓனருக்கு உன்னை மாதிரி கவிதையிலே ஆர்வம்தான்' என்றான்.

'யோசிக்கறேன்..ரவி...!' என்றாள். அவன் டிஃபன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். காலையில் அவன் நிதானமாகப் பேசுவதைப் பார்த்து ராமையாவுக்கு ஆச்சரியம்.

இப்போதெல்லாம் காலை நேரத்துக் கோபம் குறைந்திருந்தது. கேட்பதற்கு முன்பே எல்லாம் தயாராய் இருந்தது ஒரு பக்கம். அவர்கள் இரண்டு பேருக்கும் பேசிக் கொள்வதற்கு நிறைய விஷயங்கள் வேறு இருந்தது.



அம்மா கூட அவரிடம் 'பரவாயில்லை ராமையா..நம்ம மருமக இவனைத் தட்டிக் கொட்டிக் சரி பண்ணிடுவா போல இருக்கு' என்று பாராட்டிக் கொண்டாள்.

அன்றைக்கு விரைவிலேயே சாப்பிட வந்து விட்ட ரவி சாப்பிட்டு முடித்ததற்குப் பிறகு ஆளைக் காணவில்லை.

'ராமையா! அவர் எங்கே?' என்று கேட்டுக் கொண்டே வந்த ரதி ராமையா கை காட்டிய திசையைப் பார்த்து ஆச்சரியமானாள்.

ரவிபாரதி புல்வெளிக்கருகில் இருந்த ரோஜாச் செடிகளுக்கருகில் நின்று கொண்டிருந்தான். ஆள் வருகிற அசைவுச் சத்தம் கேட்டுத் திரும்பினான்.

'ரவி..' என்று ஆச்சரியமாக நிற்கிற அவளைப் பார்த்துச் சற்றே வெட்கத்துடன் புன்னகைத்தான்.

'நிஜம்தான் ரதி.பூக்களெல்லாம்.. ரொம்ப அழகா பிரெஷ்ஷா சாஃப்டாத்தான் இருக்கு. ரியலி பியூட்டிபுல்..' என்றான்.

இரண்டு பேரும் சற்று நேரம் மௌனமாக நின்று ரசித்துக் கொண்டிருந்தார்கள். பிறகு மௌனமாகவே அவன் நகர்ந்த போதும் அவளும் நடந்தாள்.

'ரவி..குழந்தைகளோட விளையாடறது..பூக்களை, நிலவை, பட்டாம்பூச்சியை ரசிக்கறது இதுல எல்லாம் டென்ஷன் ரிலீஸ் ஆகும். ஏன்னா..இந்த எல்லா அழகும் இயற்கையானது..இதுல எதிலும் பொய்மையில்லை' என்றாள்.

''தட்ஸ் ட்ரு'' என்று ஏற்றுக் கொண்டான். கார் புறப்படும்போது கையசைத்து விட்டுச் சென்றான்.

நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிந்தனையோட்டே காரோட்டினான் ரவிபாரதி. சற்று தூரம் சென்றபின் ரவிபாரதிக்கு அந்த விசித்திரமான எண்ணம்



தோன்றியது.

★★★

முகமெல்லாம் சிரிப்புடன் வருகிற பாகீரதியை அம்மா ஆச்சரியமாய்ப் பார்த்தார்.

'என்னம்மா?' என்றார்.

பாகீரதி தான் முதல்நாள் ரசிப்பதற்கு நிறைய விஷயங்கள் இருப்பதைப் பற்றி ரவிபாரதியிடம் பேசியதையும், அவன் இன்றைக்கு நின்று பூக்களை ரசித்து விட்டு செல்வதைப் பற்றியும் வெகு ஆர்வமாகச் சொன்னாள்.

அம்மா சிரித்துக் கொண்டே 'அப்படியே அவன்கிட்டே பேசி இந்த அம்மாவுக்கும் அவன் மனசிலே கொஞ்சம் இடம் வாங்கிக் குடேன்' என்றார்.

அந்தக் கேள்வியில் தொக்கி நின்ற வேதனை அவள் இதயத்தில் லேசான வலியை ஏற்படுத்தியது.

'அத்தை நீங்க கிண்டல் பண்றீங்க' என்று சிரித்துச் சமாளித்து விட்டு அறைக்கு வந்தாள்.

விஜயலட்சுமியை நினைத்தால் அவள் மனதில் பாரம் ஏறிக் கொண்டது.

''பாவம்! எத்தனை பெரிய சுமையை மனதில் வைத்துக் கொண்டிருக்கிறார்'' என்று எண்ணிக் கொண்டாள்.

இந்த வீட்டை விட்டுப் போவதற்குள் எப்படியாவது அவர்களுக்கிடையே சமரசம் ஏற்படுத்த வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அதே நேரத்தில் தன் மனதில் தோன்றிய விசித்திரமான கேள்வியை பல்ராமை நோக்கி கேட்டுக் கொண்டிருந்தான் ரவிபாரதி.

★★★

மாடியில் ஹாலில் இருந்த அந்த புத்தக ஷெல்ஃபில் மேல் தட்டிலிருந்த ஒரு புத்தகத்தை எடுப்பதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தாள் பாரதி.

எட்டவில்லை. புடவையை வரிந்து கட்டிக் கொண்டு குதித்துப் பார்த்தாள். எட்டவில்லை.

'சே!' என்று நொந்து போய் நின்று கொண்டிருந்தாள். அவள் குதிக்கிற சத்தம் கேட்டு ரவிபாரதி வந்தான்.

'ஹேய்ரதி.. என்னத்துக்கு இந்தக் குதி குதிக்கிறே?' என்று கேட்டான்.

'புத்தகம் எட்டலே' என்று கை காட்டினாள்.

'கூப்பிட்டிருந்தா நான் வந்திருப்பேனே?' என்று எட்டி எடுத்தான். எடுத்துக் கொண்டு திரும்ப, நேர் பின்னால் நின்று கொண்டிருந்த பாரதியின் மேல் மோதிக் கொள்ள... அவள் சோஃபாவின் மேல் சாய்வதைத் தவிர்ப்பதற்காக விலகிய வேகத்தில் மீண்டும் அவன் மேல் மோதி அவள் கால் இடற ஏதோ சினிமாக் காட்சி போல் அவள் கீழே விழுந்தாள்.

அவளை ஒரு கையால் தாங்கிக் கொண்டே அவனும் விழுந்தான். ஆனால், முற்றிலும் அவள் மேல் படிவதற்குள் சுதாரித்துக் கொண்டு அவன் வலது முழங்கையைக் கீழே ஊன்றிக் கொண்டான்.

இருந்தாலும் அவள் கீழே அவன் மேலே என்று இருந்த அந்த கணத்திலே பாரதி ஒன்று சொன்னாள்.

'ரவி...பார்க்கிற எல்லாமே உண்மையில்லை. இப்ப இந்த நிலைமையிலே நம்மளைப் பார்க்கிற யாரும் என்ன நினைப்பாங்க..ஆனா நமக்குள்ளே.. என்ன நிலைமைன்னு நமக்குத்தானே தெரியும்?'

'வாட்?' என்று நிமிர்கிற அதே நேரத்தில் 'சூப்பர் சீன் ரவி' என்று குரல் கேட்கத் திரும்பினார்கள்.



ஸ்வப்னா நின்று கொண்டிருந்தாள்.

★★★

## 14

'ஹேய்...ஸ்வப்னா!' என்று ரவிபாரதியின் முகம் மலர்வதை ஆழமான பார்வையுடன் பார்த்துக் கொண்டிருந்தாள் பாரதி.

எழுந்தான் 'ஹேய்.. என்ன அதிசயம்? வீட்டுக்கே வந்திருக்கே?' என்றான்.

'வேவு பார்க்க வந்திருக்கேன்' என்று பாதி கிண்டலும், பாதி உண்மையும் ஆகச் சொன்னாள் ஸ்வப்னா.

அவன் கண்டு கொள்ளவில்லை. 'வா...வா...உட்கார்! ' என்று வரவேற்றான். திரும்பி பாரதியைப் பார்த்தான். அவள் உடனே கீழே இறங்கிப் போய் சிற்றுண்டி எடுத்து வந்தாள்.

அந்த நேரம் ரவிபாரதி அறையை நோக்கிப் போவதையும், அவள் பின்தொடர்வதையும் நின்று பார்த்தாள். தானும் பின் தொடர்வதா வேண்டாமா என்று குழப்பத்துடன் நின்றாள். பின் சிற்றுண்டித் தட்டுக்களை ஹாலில் மூடி வைத்து விட்டு லைப்ரரிக்குள் நுழைந்து கொண்டாள்.

ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டாள். அதில் ஆழ்ந்து போனாள்.

ஐந்து நிமிடம் கூட ஆகியிருக்காது. 'ரதி..ரதி'என்று குரல் கேட்கவும் எழுந்து போனாள்.

'இங்கே வா. உட்காரு!' என்று சோஃபாவைக் காட்டினாள்.



'இல்லே பரவாயில்லே' என்று புன்னகைத்துக் கொண்டே வேகத் திரும்பியவள் ஸ்வப்னாவின் கண்களில் தெரிந்த குரோதத்தைக் கண்டு திடுக்கிட்டுப் போனாள். அந்த விஷம் நிறைந்த பார்வையைக் கண நேரத்தில் அவள் மாற்றிக் கொண்ட விதம் பார்த்து இன்னும் அச்சப்பட்டுப் போனாள்.

படபடப்பானாள். ரவியைத் திரும்பிப் பார்த்து 'இல்லை ரவி. நான் கீழே போலாம்னு பார்த்தேன். அத்தை ஏதாவது நினைக்கட்டாங்கன்னா? ' என்று தயங்கினாள்.

'அதெல்லாம் விடு. நீ உட்கார். கொஞ்ச நேரம் பேசலாம்' என்று புன்னகைத்தான்.

'ப்ளீஸ்!நீங்க பேசிகிட்டிருங்களேன். நான் காஃபி கொண்டு வரேன்' என்று நகர்ந்தாள்.

'ரதி ரொம்ப டிப்ளமாடிக் இல்லே?' என்றான். ரவி சொல்வது அவள் காதில் விழுந்தது. வேண்டுமென்றே நேரம் கடத்தி மேலே வந்தாள். அப்போதும் அவர்கள் சோஃபாவில் எதிர் எதிரே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அவளுக்கு சற்றே ஆச்சரியமாய் இருந்தது.

சீரியஸாக ஏதோ பிஸினஸ் விஷயம் பேசினார்கள். அவள் அமைதியாகக் கலந்து கொள்ளாமல் அமர்ந்திருந்தாள்.

பேச்சுக்கு இடையே செல்போன் ஒலித்தது. ரவி பேசிக் கொண்டே அந்தப்புறம் போனான்.

'வெளியதான் வர மாட்டேங்கறாரு. இங்கயாவது கொஞ்ச நேரம் தனியா விடலாமில்லே?' என்றாள் ஸ்வப்னா கோபமாக.

அவளது கோபம் பாரதியைக் கொஞ்சம் புண்படுத்தியது.

'என்னை என்ன செய்யச் சொல்றீங்க? ரவி கூப்பிட்டுக் கூப்பிட்டு உட்கார வைக்கிறாரே. நான் வேண்ணா என்



ரூமுக்குப் போறேன். நீங்க பேசுங்க' என்று எழுந்தாள். வேகமாகப் போய் அறைக்குள் கட்டிலில் படுத்துக் கொண்டாள்.

ரவி திரும்ப வந்து 'ரதி எங்கே?' என்று கேட்பதும் 'அவங்களுக்கு என்னவோ தலையை வலிக்குதாம்?' என்று ஸ்வப்னா பதில் சொல்வதும் காதில் விழுந்தது.

எழுந்து அறைக்கதவை சாத்திக் கொண்டாள். 'ஐயோ ஸ்வப்னா! இந்த ரதியைப் பாரேன்' என்று அவன் சிரித்தான்.

ஸ்வப்னா மெதுவான குரலில் 'ரவி! இப்பல்லெல்லாம் நீங்க என்னை அவாய்ட் பண்றீங்கன்னு தோணுது' என்று குற்றச்சாட்டு வைத்தாள்.

அவன் ஒரு பெருமூச்சு விட்டான். 'அவாய்ட் பண்ணனும்னு நெனைக்கலே. ஆனா, சூழ்நிலை அப்படி அமையுது. ..வர வர எனக்கு நாம போட்ட பிளான் தப்போன்னு தோணுது. அம்மா இந்தக் கல்யாணத்துக்கு அப்புறம் வீட்டில வந்து செட்டிலாவாங்கன்னு நெனைக்கலே. ஆனா இப்பல்லாம் ரொம்ப சந்தோஷமா இருக்காங்க. எப்படி இந்த அரேன்ஜ்மென்டை உடைக்கறதுன்னு புரியலே. அதுவுமில்லாம ரதிக்கும் பெரிய சிக்கலை ஏற்படுத்திடுமேன்னு தோணுது' என்றான்.

ஸ்வப்னாவின் வயிற்றில் பந்து போல் பீதி கிளம்பியது. மௌனமாக அமர்ந்திருந்தாள்.

'சரி. ஸ்வப்னா ரொம்ப நேரம் இருக்காதே! கிளம்பு. பொய்யோ நிஜமோ இந்த மேரேஜை நான் சட்டப்படி ஹானர் பண்ணித்தான் ஆகணும் தனிப்பட்ட முறையிலும் கூட.. அதனால நீ கொஞ்சம் பொறுத்துக்கத்தான் வேணும்...... என்றான்

அதற்கும் ஸ்வப்னா ஒன்றும் பேசவில்லை

முன்பெல்லாம் அவளைப் பார்த்து விட்டு போகும்போது புறங்கையில் முத்தம் வைப்பான் குறும்பாக ஏதாவது பேசுவான் சிரிப்பான்.ஆனால் இப்போது அப்படியெல்லாம் பேசவில்லை.சொல்லப் போனால் ஏழெட்டு மாதங்களுக்குப் பிறகு இன்றுதான் பர்ஸனலாகப் பேசினான் என்பது தோன்றவும் ஸ்வப்னாவின் உள்ளத்தில் கோபம் எழுந்தது.அத்தனை கோபமும் குரோதமாகி பாரதி மேல் திரும்பியது.

அதற்குள்ளாக மீண்டும் ஃபோன் வரவும் பேசிக் கொண்டே எழுந்து அந்தப் புறம் போனான் அவளும் ரதியிடம் விடை பெற்றுக் கொள்பவள் போல்.அவள் அறைக்கதவைத் தட்டினாள்

ரதி கதவைத் திறந்தாள்

'சொல்லுங்க' என்றாள்

ஸ்வப்னா திரும்பி எட்டிப் பார்த்தாள்

ரவிபாரதி சற்று தொலைவில் நின்று கொண்டிருந்தான். உடனே பாரதியிடம் திரும்பி

'நீ இவ்வளவு கெட்டிக்காரியா இருப்பேன்னு நா நினைக்கவே இல்லே' என்றாள்

பாரதி அவளை வெறித்துப் பார்த்தாள்

என்ன சொல்றீங்க புரியலே! என்றாள்

சும்மா நடிக்காதே !நல்லது செய்றவ மாதிரியே நடிச்சு காரூனிக்கப் பாக்கறே இல்லே? என்றாள்

ரதி பல்லைக் கடித்துக் கொண்டு தன் கோபத்தை அடக்கிக் கொண்டு நின்றாள் அதே நேரம் ரவி ரதியின் அறைக்கு அந்தப் புறம் வந்து நின்றதை இருவருமே கவனிக்கவில்லை.

'என்ன புரியாத மாதிரி நடிக்கறே? ரவி எப்பப் பாரு



ரதி .. ரதிங்கறாரு ' பேச்சுக்குப் பேச்சு ரதிதான் இப்ப அம்மா வேற இந்தக் கல்யாணத்துல ரொம்ப ஸ்ட்ராங்கா இருக்காங்க அப்படிங்கறாரு......! என்றாள் காட்டமாக

பாரதியின் பொறுமை உடைந்தது '.அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்றீங்க?'என்றாள்

ஸ்வப்னா இதை எதிர்பார்க்கவில்லை. திகைத்து நின்று விட்டாள்

பாரதியே தொடர்ந்தாள். பாருங்க...மிஸ் ஸ்வப்னா உங்களுக்கும் எனக்கும் எந்தப் பேச்சும் கிடையாது. இந்த அரேன்ஜ்மெனட்டாகட்டும். இங்கு இருக்கிற உறவுகளாகட்டும் என்னைக் கேள்வி கேட்க உங்களுக்கென்ன அதிகாரம் ?எனக்கும் ரவிக்கும்தான் பேச்சு.அதேபோல உங்களுக்கு ஏதாவது கேட்க வேண்டியிருந்தா ரவிகிட்டே கேளுங்க....ஆனா..உங்களைப் பார்த்தா ...பாவமா இருக்கு....என்றாள்

என்ன உளர்றே?

நான் உளறலே. ஸ்வப்னா நா .உங்க இடத்துல இருந்திருந்தா .இந்த மாதிரி ஒரு சிறுபிள்ளைத் தனமான ஏற்பாட்டுக்கே ஒத்துகிட்டிருக்க மாட்டேன். சொத்து என்ன ரவி பிரமாதம்? நம்மாலே சம்பாதிக்க முடியும். இருக்கறதை வச்சு அதுக்கேத்ப வாழலாம்னு சொல்லியிருப்பேன் என்றாள்

ஸ்வப்னா கொஞ்சம் அடங்கியவளாய் அதுக்கு அவர் ஒத்துக்கலையே.? என்றாள்

நீங்க கன்வின்ஸ் பண்ணியிருக்கணும். ரவி எவ்வளவு பெரிய பொக்கிஷம் தெரியுமா?

அவரோட நிர்வாகத் திறமைக்கு எந்தப் பெரிய கம்பெனியிலே 'வேணா நுழைந்திருக்கலாம்

அது மட்டுமில்லே. ஒரே ஒரு ஐடியா. குடுத்ததுக்கே



மஹிந்திரா ரெண்டு லட்ச ரூபாய்க்கு செக் அனுப்பினாரு. நானிருந்தா அவரோட திறமைகளை அவருக்குப் புரிய வச்சு அவங்க மதர்கிட்டே பேசி சரி செஞ்சிருப்பேன் உங்களாலே அது முடியலே .!

ஏன் தெரியுமா? உங்களுக்குத் தேவையாய் இருந்தது வெறும் ரவி மட்டுமில்லே. ரவி பிளஸ் சொத்து அதனால்தான் இப்ப எல்லாம் கையை விட்டுப் போய் விடுமோன்னு வேடி பாத்துகிட்டுத திரியறீங்க" என்றாள்.

ஸ்வப்னா ஸ்தம்பித்துப் போய் நின்றாள்.

பயப்படாதீங்க'. நான் உங்களுக்கு இடைஞ்சலா இருக்க மாட்டேன். இன்னொண்ணும் சொல்றேன் நா பணத்துக்காக இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கலை நட்புக்காக.. நட்புக்காக என் லைஃபையே ரிஸ்க் பண்ணியிருக்கேன். அதனால இனிமே என்னை மிரட்டற வேலையெல்லாம் விட்டுருங்க" என்றாள்

அறையின் அந்தப்புறம் நின்ற ரவிபாரதி சோகப் புன்னகைத்துக் கொண்டான

' நாறு அறை ஒன்றாக வாங்கினாற்போல நின்ற ஸ்வப்னா மெதுவாக நகர்ந்தாள்.

ரவிபாரதியும் அப்போதுதான் ' வருகிறவனைப் போல என்ன ஸ்வப்னா நான் டிராப் பண்ணட்டுமா? என்று கேட்டான்.

இல்லே என் கார் இருக்கு. நானே போய்க்கிறேன்.

என்று முணுமுணுத்து விட்டு நகர்ந்தாள்.

அவளைப் பார்க்கப் பாவமாக இருந்தது திரும்பினான். பாரதியின் அறை சாத்தியிருந்தது

இரு தோள்களையும் ஒரு குலுக்குக் குலுக்கி விட்டு



அறைக்குப் போனான்.

ஸ்வப்னாவின் பேச்சும் பாரதியின் வார்த்தைகளும் அவனுக்குள் பெரிய குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தது பிஸினஸில் எல்லாவற்றிலும் வெற்றிகரமாகத் திட்டம் போட்டு ஜெயிக்கிற அவன் தனிப்பட்ட வாழ்க்கையில் தான் செய்தது எந்த அளவுக்குச் சரி என்று யோசிக்க ஆரம்பித்தான்.

அதுமட்டுமல்ல ... எத்தனை பிரச்சினைகள் இருந்தாலும் விலக்கித் தூர வைத்து விட்டு உறங்கிப் போகிற அவன் அன்றைக்கு வெகுநேரம் உறங்கவில்லை .இருட்டில் தவிக்கிற குழந்தையாய் மனது அலைபாய புரண்டு புரண்டு படுத்துக்கொண்டிருந்தான்.

★★★

அதே நேரம் .

பல்ராம் அங்கே புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருந்தான். அம்மா வேறு தங்கைக்கு நிச்சயம் செய்திருக்கிற மாப்பிள்ளையின் ஒன்று விட்ட தங்கையை திருமணம் செய்து கொள்ள நச்சரித்துக் கொண்டிருந்தார். திருப்பூருக்கு அன்றைக்கு வந்துவிட்டுப் போன மறுநாளே ரவிபாரதி.அவளை அழைத்துத் தங்கையின் திருமணச் செலவு பூராவும் தன்னுடையது என்று கூறியிருந்தான்.

அதனால் பணப்பிரச்சினை பற்றிக் கவலை இல்லை. .இப்போது வேறு பிரச்சினைகள் முளைத்திருந்தன. ஆழ்ந்த கவலை அவன் மனதில் தோன்றியிருந்தது.

ரவிபாரதி ரதியைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அவன் முகம் மலர்ந்து போகிறது. அதிலும்

அவன் அம்மா வேறு ரதியை ரொம்பவும் தேடிக்கிறார்

என்று சொல்கிறாள்.

இனி எப்படி டைவர்ஸ் செய்து...? அதைத் தன் அம்மா... ஏற்றுக் கொண்டு.... மூன்று தங்கைகளின் குடும்பத்தார்கள் வேறு ஏற்றுக் கொள்ள வேண்டும். ரவிபாரதி பேசுகிறேன். என்கிறாள். என்னவென்று பேசுவாள்?கல்யாண நாடகம்... நடத்தினோம். என்றால் யார் ஏற்றுக் கொள்வார்கள்?

எல்லாவற்றையும் காட்டிலும் இன்னொரு உண்மை அவனை வெகுவாக தாக்கியது. ரதியைத் தான் நேசிக்கிற அந்தக் கோணத்தில் அவள் நேசிக்கவில்லை என்றும் நண்பனாக மதிக்கிறாள் என்பதுமான அந்த உண்மைதான் அது. அதிலும் ரவிபாரதி நேற்றுக் கேட்ட கேள்வியின் ஆழம் வேறு அவனை வெகுவாக யோசிக்கச் செய்தது.

எப்போதாவது ரவிபாரதியும் பல்ராமும் மட்டும் தனியாக ஹோட்டல் சென்று சற்று நேரம் செலவழிப்பார்கள். பல விஷயங்களை மனம் விட்டுப் பேசுவார்கள்.அந்தமாதிரி நேரங்களில் ரவியை வா போ என்று ஒருமையில் கூட அழைத்துப் பேசுவாள்

நேற்று ரவிபாரதி திடீரென்று டேய் ... பல்ராம்... நான் சொல்றேன்னு கோபிச்சுக்காதே.... ரதியை உன்னால் சந்தோஷமா வச்சுக்க முடியுமான்னு நல்லா யோசிச்சுக்க என்றாள்.

ஏன் அப்படி சொல்றே? என்றான்.

இல்லே... எனக்கென்னமோ. நீ சராசரி ஆள். ஆனா எல்லாத்திலயும் ரதி உன் லெவலுக்கு மேலே இருப்பா... போல இருக்கே.. என்றாள்

பல்ராம் அமைதியாக ஒரிரு நிமிடங்கள் அமர்ந்திருந்தான். பிறகு மெதுவான குரலில் 'எனக்கே..



அந்த மாதிரி ஒரு சந்தேகம் உண்டு. ஆனா பாசிமேல நான் ரொம்ப பிரியம் வச்சிருக்கேன்.. என்றான்.

'பிரியம் வேற... வாழ்க்கையை பங்கு போட்டுக்கறது வேற..' என்றாள் ரவிபாரதி

'தட்ஸ் ட்ரூ!' என்றான் பல்ராம். தொடர்ந்து எனக்கென்னமோ. பாசிக்கு ஈடு கொடுக்க உன்னை மாதிரி ஒரு ஆள்தான் கரெக்ட்டுன்னு தோணுது' என்றான்.

ரவிபாரதி இதை எதிர் பார்க்கவில்லை. பல்ராமும் கூட தான் இப்படிச் சொல்வோம் என்றே நினைக்கவில்லை. உளறாதடா... என்ற ரவிபாரதியின் கோபம் கண்டு திகைத்தான். பிறகு பேச்சை மாற்றி ஒருவாறு சமாளித்து விட்டாள். ஆனால் பாகீரதி தன்னைக் காட்டிலும் எல்லாவற்றிலும் திறமைசாலி என்பதை அவனால் மறுக்க முடியாதுதான்.

இந்தக் குடும்பத்தின் கேலிப் பார்வைகளை குத்தல் பேச்சுக்களைத் தாங்கிக் கொண்டு தன்னோடு அவள் குடும்பம் நடத்துகிற அளவுக்குத் தனக்கு என்ன தகுதி.. என்றெல்லாம் குழப்பம் மேலிட அமர்ந்து விட்டான்.

ரவிபாரதியின் நாடகத்துக்குத் தான் ஒத்துக் கொண்டது பெரிய முட்டாள்தனம் என்று முதன் முதலாகச் சலிப்பு ஏற்படப் பைத்தியம் பிடித்தவன் போல மேலும் மேலும் நடந்து கொண்டிருந்தான்.

★★★

நள்ளிரவு!

பனிரெண்டு மணியளவில் ரவிபாரதிக்கு அந்தக் கேள்வி தோன்றியது



தான் அவன் மேல் விழுந்த அந்தக் கணத்தில் ரதி ஏதோ சொன்னாளே? என்ன அது..? ..

எழுந்தான்

பாகீரதியின் அறைக் கதவைத் தட்டினான்.பாகீரதி தூக்கக் கலக்கத்துடன் எழுந்தாள்

கதவைத் திறந்தாள்

இரவு விளக்கின் ஒளியில் லேசான தூக்கக் கலக்கத்திலும் கூட ஒரு அழகு தோன்ற நின்ற அவள் முகம் பார்த்து ஒரு கணம் திகைத்தான் ரவிபாரதி. பிறகு 'ரதி ! அப்பவே புத்தகம் எடுக்கறப்ப விழுந்தோமே.அப்ப நீ என்னவோ சொன்னயே? அதுக்கு என்ன அர்த்தம்? என்றான்.

ரதிக்கு இப்படி நள்ளிரவில் வந்து இந்தக் கேள்வியைக் கேட்கிறாரே என்றிருந்தது. காலையில பேசலாமா ரவி? என்றாள்.

இல்லே ...இப்ப எனக்குத் தெரியணும் நீ வா... என்றான்.

பிடிவாதக்கார குழந்தையாக அவன் நிற்கிற கோலம் பார்த்து அவளுக்குள் சற்றே பரிவான புன்னகை மலர்ந்தது. கேட்கிற மூடில் இருக்கிற போதே சொல்லிவிடலாம் என்ற முடிவு செய்து கொண்டாள்.

சரிங்க... ரவி. வெயிட் பண்ணுங்க இப்ப முகம் கழுவிட்டு வந்தர்றேன். என்றாள்.

அவன் வந்து பேசுகிற அந்த விஷயத்தில் தன்

வாழ்க்கையே மாறப் போகிறது என்பதை அறியாமல் அவன் காத்துக் கொண்டிருந்தான்.

★ ★ ★



# 15

''என்ன செய்யணும்? தோப்புக் கரணம் போடணுமா?'' என்று கேட்டுக் கொண்டிருந்தான் ரவிபாரதி. ரதி சிரித்தாள்.

'சிரிக்காதே! கோவிலுக்கு வந்தே வருஷக் கணக்காச்சு' என்று உண்மையாகவே விளக்கம் சொன்னான் அவன்.

'தோப்புக் கரணம் போடறதும் போடாததும் உங்க இஷ்டம். ஆனா ரெண்டு கையும் கூப்பி கண்ணை மூடி மனசார ஏதாவது வேண்டிக்கலாம்' என்றாள்.

அவன் அப்படியே நின்று பிரார்த்தனை செய்கையில் அவள் கோவிலைச் சுற்றி வந்தாள். ஆர்.எஸ். புரத்தில் உள்ள இரத்தின விநாயகர் கோவிலுக்கு வந்திருந்தார்கள்.

எப்போதும் எதுவும் அவனை வற்புறுத்திக் கேட்காத பாகீரதி வற்புறுத்திக் கேட்டதனால் அவனும் வந்தான்.

ஏதோ மனதில் வைத்துக் கொண்டுதான் அழைத்து வந்திருக்கிறாள் என்பது புரிந்தது. ஆனால், அவளாகச் சொல்லட்டுமே என்று கூடவே மௌனமாக வந்தான்.

காரில் ஏறியவுடன் 'நாம இங்கே முக்கியமான ஒருத்தரைப் பார்க்கப் போறோம்' என்றாள். அவன் கேள்விக் குறியாய்ப் பார்க்க 'வாங்களேன் சொல்றேன்' என்று வழி காட்டினாள்.

ஒரு வீட்டின் முன் காரை நிறுத்தச் சொன்னாள். நிறுத்தி இறங்கினார்கள் அந்த சைட்டில் முன்புறம் வரிசையாக வீடுகள். பிற்பகுதியில் ஒரு சின்ன பங்களா. அழைத்துப் போனாள்.

'அடடே... வாம்மா!' என்று ஒரு பெண்மணி

வரவேற்றார். அம்மாவை விட ஒன்றிரண்டு வயது குறைவாக இருக்கும் . விதவை போலும். நெற்றியில் சந்தனப் பொட்டு வைத்திருந்தார்.

உட்காரச் சொன்னார். ரவிபாரதியின் முகத்தைப் பாசமும்,பரிவுமாகப் பார்த்து விட்டுச் சொன்னார்.

'பாகீரதி! அப்படியே அவரை உரிச்ச வச்ச மாதிரி இருக்கான்'. என்று.

ரதியை அவன் கேள்விக்குறியாய்ப் பார்க்க அவர் யாரென்று அறிமுகப் படுத்தினாள் பாகீரதி.

ரவிபாரதி மலைத்துப் போய் அமர்ந்து விட்டான்.

* * *

அம்மா அன்றைக்குத் தன் பங்குக் கதையைச் சொன்னார்.

ரவிபாரதியின் அப்பா கருணாகரன். பெயரில்தான் கருணை வைத்திருந்தார். மற்றபடி பணம் ஒன்றே அவரது குறிக்கோளாக இருந்தது.

நிறைபத் தொடர்புகள் நிறைய பலவீனங்கள். ஆனால், விஜயலட்சுமியின் மாமனார் கார்மேகம் நேர்மாறானவர். கடினமான உழைப்பாளி. இருந்த கொஞ்ச சொத்துக்களை மடங்காகப் பெருக்கியவர்.

மகனின் நல்வாழ்க்கைக்கேற்ற பெண்ணாகத் தேடி விஜயலட்சுமியைத் திருமணம் செய்து வைத்தார். விஜயலட்சுமியின் அழகும், அவரது பின்புலமும் கருணாகரனைக் கட்டுக்குள் கொஞ்ச நாள் வைத்திருந்தது.

ரவிபாரதி பிறந்து எட்டு வருடங்கள் வரை எல்லாம் இயல்பாகவே ஓடியது. ஆனால், கார்மேகம் இறந்த பிறகு நிலைமை தலைகீழாக மாறியது. அதிலும் அவர் எல்லாச் சொத்துக்களையும் விஜயலட்சுமியின் பெயரிலேயே



எழுதி வைத்து விட்டுப் போகவும் நிலைமை மிகவும் மோசமாகியது.

தந்தையின் மேல் ஏற்பட்ட கோபமும் விஜயலட்சுமியின் பேரில் ஏற்பட்ட கோபமும் மீண்டும் அவரைத் தகாத பாதைக்கே இட்டுச் சென்றது.

அதில் ஏற்பட்ட ஒரு தொடர்புதான் இந்த சந்தியாபாய். அம்மா இயல்பாலே நல்லவர் சந்தியா. ஆனால், அவரது சகோதரன் எல்லா விதமான கெட்ட பழக்கங்களுக்கும் அடிமையாகி இருந்தான். கருணாகரனையும், சந்தியாவையும் போட்டோக்கள் எடுத்து வைத்துக் கொண்டு அடிக்கடி பணம் பிடுங்குவான்.

ஒரு கட்டத்தில் கருணாகரனுக்கே பொறுக்க முடியாத கோபம் வந்தது. வீட்டுக்கே வந்து மிரட்டிக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் அவர் துப்பாக்கியைத் துடைத்துக் கொண்டிருக்கையில் அவன் வந்து பணம் கேட்க, அவர் துப்பாக்கியைத் தூக்க, அவன் குடிபோதையில் தடுக்க துப்பாக்கி வெடித்து விட்டது. அதில் காயமடைந்து கருணாகரன் விழ, சத்தம் கேட்டு ஓடி வந்த விஜயலட்சுமி துப்பாக்கியை வைத்துக் கொண்டு திகைத்து நின்று கொண்டிருந்தார்.

அந்தக் காட்சியைத்தான் நடவையில் வந்து கொண்டிருந்த ரவிபாரதி பார்த்தான். அவன் கண்களில் பட்டதும், மனதில் பதிந்ததும் துப்பாக்கியுடன் நிற்கிற அம்மாவும், சாய்கிற அப்பாவும்தான்.

அதற்குள் ஜன்னலில் குதித்தோடி விட்டான் சந்தியாபாயின் அண்ணன்.

ராமையாவின் உதவியோடு வெளிப்படையான



விசாரணை இல்லாமல் போலீஸ் துறையில் வழக்கை இரகசியமாகவே நடத்தி குற்றவாளிக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தார் விஜயலட்சுமி.

சந்தியாவும் கூட கோர்ட்டில் வந்து தன் அண்ணன் கருணாகரனிடம் அடிக்கடி பணம் பிடுங்கிய விவரங்களை கோர்ட்டில் கூற அது வழக்குத் தீர்ப்புக்கு வலுவாகப் பயன்பட்டது.

தவறோ, சரியோ அவருக்கும் நியாயம் கிடைக்க வேண்டும் என்று விஜயலட்சுமிதான் ஆர். எஸ். புரத்தில் ஒரு இடம் சந்தியா பெயரில் வாங்கி வாடகைக்கு விடுகிற மாதிரி ஏழு வீடுகள் கட்டிக் கடைசியில் குடியிருக்க ஒரு சின்ன பங்களாவும் கட்டிக் கொடுத்திருந்தார்.

வழக்கு ஆரம்பித்தவுடனேயே மகனை ஊட்டியில் ஹாஸ்டலில் சேர்த்துவிட்டார். மகன் மனதுக்குள் இப்படி ஒரு ஊமைக் காயம் இருப்பதை ஒரு நாள் ராமையா கண்டறிந்து வந்து சொன்ன போது அப்படியே நினைத்துக் கொள்ளட்டும் விட்டு விடுங்கள் ராமையா. காலம் வரும்போது பார்த்துக் கொள்ளலாம். இப்போ போய்ப் பேசினால் நான் நல்லவள் வேண்டுமானால் ஆகலாம் ஆனால், அத்தனை வெறுப்பும் அப்பா மேல் திரும்பும் இப்படியே இருக்கட்டும். என்று சொல்லி விட்டார்.

* * *

அன்றைக்கு இரவு .........!

நள்ளிரவு போய்க் கேட்ட போது தன் அம்மா சொன்னதாக இத்தனை விவரங்களையும் பாகீரதி சொன்ன போதும் அவன் மலைத்துத்தான் போனான்.

ஆனால் , முழுமையான நம்பிக்கை வரவில்லை. பல நாட்களாக மனதில் பதிந்திருந்த ஒரு கருத்து பொய்யென்று



மனது ஏற்கக் கொள்ள மறுத்தது. இதை முழுமையாக விசாரிக்க வேண்டும் என்று எண்ணம் வைத்திருந்தான் இன்றைக்கு அந்தச் சந்தியாவையே நேரில் சந்திக்க நேரும் என்று அவன் நினைக்கவில்லை.

சந்தியா அன்பும், பரிவுமாக அவனிடம் பேசினார்.

" தம்பி " என்று வாஞ்சையாக அழைத்தார்.

"உங்க அம்மா தெய்வம் மாதிரிப்பா. ராமையாகிட்டே சந்தியா அவரையே நம்பி வந்தவங்க சொத்துக்கு இல்லாம நிக்க கூடாது. யாருகிட்டேயும் கையேந்தக் கூடாது. அதுக்கு ஏற்பாடு பண்ணுங்க என்று இந்த வீடெல்லாம் கட்டிக் குடுத்திருக்காங்க. நானும் எல்லாத்தையும் உன் பேருக்குத்தான் எழுதி வச்சிருக்கேன் "என்றார்.

ரவிபாரதி திகைத்துப் போய்க் கேட்டுக் கொண்டான். சற்று நேரம் கழித்து விட்டுக் கிளம்பினார்கள், வழியில் மௌனமாகவே காரோட்டினான் ரவிபாரதி.

"ரவி! இந்த நாட்டுப் பெண்கள் ரொம்ப விசேஷமானவங்க. குழந்தைகளோட எதிர்காலத்தை உத்தேசித்து எத்தனை பெண்கள் எத்தனை விஷயங்களைச் சகிச்சுக்கிறாங்க தெரியுமா? பல நேரங்கள்ல அதற்கான பலன் கிடைக்காமல் கூடப் போகுது " என்று வேதனையுடன் சொன்ன பாகீரதி அவன் மௌனம் பார்த்து அவனைச் சிந்திக்க விட்டு விட்டு அமைதியாக வந்தாள்.

அன்றைக்கு வீட்டுக்கு வந்தவுடன் எல்லாவற்றையும் விஜயலட்சுமி அம்மாவிடம் சொல்ல வேண்டும் என்று தேடினாள் பாகீரதி. ராமையா அவர் கோயிலுக்குப் போயிருப்பதாகச் சொன்னார்.

ரவிபாரதி மௌனமாகவே சாப்பிட்டான்.

எப்போதும் சாப்பிட்டவுடன் அறைக்குப் போய் விடுவான்.

இன்று ஹால் சோஃபாவில் அமர்ந்து சட்டை பட்டனைத் திருகிக் கொண்டு காத்துக் கொண்டு இருந்தான்.

காரில் இருந்து இறங்கி வந்த அம்மா அதைப் பார்த்து ஆச்சரியமானார். சிறுவனாக இருந்த போது அம்மா வெளியே போயிருந்தால் காத்துக் கொண்டிருப்பானே. அதுபோல் அன்றைக்கு அமர்ந்திருந்தான் என்று எண்ணிக் கொண்டார்.

'என்னப்பா.. சாப்பிட்டச்சா?' என்றார்

'சாப்பிட்டுட்டோம்மா. நீங்க சாப்பிட்டயா?' என்றான்

சாப்பிடறேம்ப்பா... என்று சாப்பிட அமர்ந்தார். அவள் அருகில் அமர்ந்து கொண்டான் உட்கார்ந்தபடியே பரிமாறினான்.

இராமையா ஆச்சரியமாக பாகீரதியைப் பார்க்க அவள் கண்ணமர்த்திப் புன்னகைத்தாள். அம்மா.. சாப்பிட்டு விட்டு அறைக்குப் போக அவள் பின்னாலேயே போனான். திரும்பி பாகீரதியை வருமாறு சைகை செய்தான் .போனான்.

'அம்மா.....!' என்று தயங்கியபடியே கட்டிலில் அமர்ந்தான்.

'என்னப்பா' என்றார் குரலில் அன்பு பொங்க.

'அம்மா அவங்களை.. அவங்களை...... பார்த்தேன்.. பேசினேன்' என்றான்.

'எவங்களை?' என்றார் அம்மா கேள்விக் குறியாக.

ரதி கூட்டிட்டுப் போனா.. சந்தியா ஆன்ட்டியைப் பார்த்தேன் என்றான்.

அம்மா முற்றிலும் இதை எதிர்பார்க்கவில்லை

'என்ன சொன்னாங்க?' என்றாள் குரலே எழும்பாமல்.

'எல்லாத்தையும்.. சொன்னாங்க.. ஏம்மா. .



இந்தனையும்... நீங்களே நெஞ்சுக்குள்ள வச்சுப் புழுங்கிகிட்டு இருந்திருக்கீங்க... உண்மையைச் சொல்லியிருக்கக் கூடாதா?' என்றான்.

அம்மாவின் கண்களில் கண்ணீர் நிறைந்தது. நீ பிறந்து எட்டு வருஷம் வரைக்கும் அவரோட நல்லாத்தான் வாழ்ந்தேன். அவரை.. அவரை...எப்படி உன் முன்னால குற்றவாளியாக் காட்ட? என்று தேம்பினார்.

'ப்ளீஸ்மா... அழாதீங்க ....!' என்று தன் தோளில் சாய்த்துக் கொண்டான் அந்தக் கணம் விஜயலட்சுமி வெடித்து அழுதார்.

இன்னனைக்குத்தான்.....இந்த அம்மா மேல் இரக்கம் வந்துச்சாப்பா... என்று பொங்கி அழுதார். அவனும் குலுங்கி அழுது விட்டான்.

பாகீரதி அரவமில்லாமல் வெளியே வந்தாள். அறைக்கு வெளியே இராமையா கண்ணைத் துடைத்தபடி நின்று கொண்டிருந்தார்.

அவள் இரு கண்களிலும் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

வழக்கம் போல் தோட்டத்துக்குப் போனாள். அந்தப் புல்வெளிக்கு நடுவே இருந்த சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டாள்.

ஒரு மணி நேரத்துக்கு மேல் சென்றிருக்கும். மனம் நிறைவாக இருந்தது. மெதுவாக எழுந்து வந்தாள். பத்து மணிக்கு மேலாகி இருந்தது. அம்மாவின் அறையில் எட்டிப் பார்த்தாள். ரவிபாரதி அம்மாவின் மடியில் தலை வைத்துப் படுத்திருந்தான்.

அம்மா மெதுவாக அவன் தலையைக் கோதிக் கொடுத்தபடி ஏதோ மெல்லிய குரலில் சொல்லிக்



கொண்டிருந்தார்.

அவள் புன்னகைத்தபடி அறைக்குப் போய் விட்டாள்.

அம்மா உறங்கிய பிறகு அறைக்கு வந்த ரவிபாரதி பாகீரதியின் அறையில் எட்டிப் பார்த்தான.

அவள் உறங்கிக் கொண்டிருந்தாள் உறக்கத்திலும் அவள் அழகு பலமடங்காகத் தெரிந்தது.

சற்று நேரம் நின்று கவனித்துப் பார்த்தான். எப்படிப்பட்ட பெண் இவள்! அந்த பல்ராம்தான் எவ்வளவு அதிர்ஷ்டசாலி என்று எண்ணிக் கொண்டபடியே நகர்ந்தான்.

* * *

## 16

பல்ராமின் தங்கை சஜாவின் திருமணம் வெகு சிறப்பாக நடந்து கொண்டிருந்தது.

ரவிபாரதி , அம்மா. பாகீரதி. ராமையா என்று எல்லாரும் போயிருந்தார்கள். அவர்களை முக்கிய விருந்தினர்களாகக் கவனித்தார்கள்.,

மருமகளுக்கென்று அம்மா எடுத்து வைத்திருக்கிற பட்டுப் புடவைகளை அவள் தொடாமல் வைத்திருக்கிறாள என்பதை மனதில் வைத்துக் கொண்டு தன் பரிசாக அவளுக்கென்று ஒரு பட்டுப் புடவை இந்தத் திருமணத்துக்காகவே எடுத்துக் கொடுத்திருந்தான் ரவிபாரதி.

அந்தப் புடவையில் அழகாக இருந்தாள். சஜாவுக்கு அலங்காரம் செய்தாள். எல்லா வேலைகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்தாள்.

ரவிபாரதியும் முழுக்கை பட்டு சட்டையில் வெகு



பாந்தமாக நடமாடிக் கொண்டிருந்தான். பல்ராம் தான் ஏதோ விருந்தாளி போல் மேற்பார்வை செய்து கொண்டிருந்தான்.

சஜா பாகீரதியை சைகை காட்டி அழைத்தாள்.

"என்ன சஜா?" என்ற கேட்டாள்.

"பாகி அண்ணி அங்க பாருங்க அந்தப் பொண்ணை...!" என்று காட்டினாள்.

பாகீரதி பார்த்தாள்.. அழகாகவும் யதார்த்தமாகவும் இருந்தாள். பெயர் லதாவாம் அந்தப் பெண்ணைத்தான் பல்ராமிற்கு சஜாவின் மாப்பிள்ளை சஜ்ஜஸ்ட் செய்தாராம். ஆனா பல்ராம்தான் 'அப்புறம்,சொல்றேன்' என்று சொல்லி விட்டானாம்

அந்தப் பெண் லதாவின் பார்வை பல்ராமையே தொடர்ந்து கொண்டிருந்ததைப் பார்த்த பாகீரதி சிந்தனையில் ஆழ்ந்தாள்.

ரவிபாரதியிடம் கூட சொன்னாள் ரவிபாரதி எரிச்சலாக ' நீ எதுவும் சஜ்ஜஸ்ட் பண்ணாதே. ஒரு வருஷம் முடியட்டும் .அப்புறம் பார்க்கலாம்', என்றான்.

பாகீரதி சற்றுத் திகைத்துப் போனாள். ஒருவேளை, பல்ராமிற்குத் திருமணம் ஆகிவிட்டால், தங்கள் திட்டம் தடைப்படுமோ, லவ்பண்ணவைக் கல்யாணம் செய்ய முடியாமல் போகும், என்று நினைக்கிறாரோ! என்று தோன்றவும் அடங்கிக் கொண்டாள்.

சஜாவின் மாப்பிள்ளை சதாகர் வெகு கலாட்டா பேர்வழியாக இருந்தான் ரவிபாரதியைப் பெரிய பணக்காரன் என்ற கோணத்திலேயே அவன் பார்க்கவில்லை. உறவுக்காரன் என்ற முறையிலே இயல்பாகவே பேசினான்.

திருமணம் முடிந்தவுடன் பந்தியில் மணமக்கள் அருகிலே ரவிபாரதியையும், பாகீரதியையும் அமரச்

செய்தார்கள்.

"நான் என்னன்னு உங்களைக் கூப்பிடணும், மச்சான்.. ஆமா... மச்சான்னு கூப்பிடணுமா'' என்று ரவி இடிஇடியென்று சிரித்தான்.

"மச்சான்!.. கல்யாண சமயத்துல கெட்டிமேளம் வாசிக்கறாங்களே... அப்ப நல்லாக் கவனிச்சுப் பாருங்க. மேளச் சத்தம் எப்படிக் கேட்கும் தெரியுமா'' ,

'எப்படி' ? என்றான் ரவிபாரதி.

' மாட்டிக்கிட்டான்! மாட்டிகிட்டான்னே கேட்கும்' என்றான்.

ரவிபாரதி வெடிச்சிரிப்புச் சிரித்து விட்டான். "ரதி உங்கண்ணனைப் பார்! பெரிய ஆளா இருப்பார் போல இருக்கு ''என்று அவனும் கிண்டல் செய்தான் ரதி ரவிபாரதியின் காதில் ஏதோ முணுமுணுத்தாள்.

சுதாகர்'' அங்கே என்ன ரகசியம் ?'' என்றான்.

'இல்லே! மாட்டிகிட்டதைப் போய் இவ்வளவு சந்தோஷமா சொல்லிச் சிரிக்கறாரே ? அப்ப மாட்டிகிட்டது யாரு? இவரா. சுஜாவா? என்று கேட்கறா?'' என்றான் ரவிபாரதி .

அதுதான் சாக்கென்று 'சொல்லு. சுஜா! மச்சான் என்னமோ கேட்கறாங்க..' என்று லேசாக சுஜாவை இடித்தான் சுதாகர்.

'சார்... சார்... நாங்கல்லாம் பக்கத்துலதான் இருக்கோம்.. 'என்று ரவிபாரதி கலாய்க்க.

'ஏன் மச்சான் கண்டுக்கறீங்க.. உங்க கல்யாணத்துலயும் இதெல்லாம் நடந்துதானே இருக்கும்?' என்று அவன் அதற்கு மேல இழுத்தான்.

சுஜா, ரவிபாரதி, பாகீரதி மூவரின் முகமுமே



சிவந்து போனது.

அடடா! மச்சான் கூட வெட்கப்படறார். என்று கலாட்டா செய்ய எல்லாரும் சிரித்தார்கள்.

பல்ராமையும் விட்டு வைக்கவில்லை. சுதாகர் இப்ப சொல்லுங்க மச்சான்.. பொண்ணு ரெடி என்று வம்பிழுத்தான்.

புன்னகைத்துக் கொண்டே பலராம்நகர்ந்து விட்டான். ஆனால், திருமணத்திற்கு வந்தவர்களில் நெருங்கிய உறவுக்காரர்களெல்லாம் ரவிபாரதியும், பாகீரதியும் பொருத்தமான ஜோடி என்றும், அந்நியோந்நியமாக இருக்கிறார்கள் என்று பாராட்டுவதைக் கேட்கக் கேட்க சிந்தனை வயப்பட்டவனானான்.

சென்ற முறை வீட்டுக்கு வந்த போது ரவிபாரதியின் வீட்டுக்குப் போனதற்குப் பிறகுதான் வெகுநாட்களுக்குப் பின்னர் தன் மனதில் அமைதி உணர்வு கூட வந்திருக்கிறது என்று பாகீரதி சொன்னது நினைவுக்கு வந்தது. ஆனால், ரவிபாரதிக்கு ஸ்வப்னாவின் மேல்தானே ஈடுபாடு அதிகமாக இருக்கிறது என்று குழம்பிக் கொண்டான்.

விஜயலட்சுமி அம்மா பாகீரதியை வெகு பிரியமாக பாந்தமாக நடத்துவதைக் கண்டும் அவளும் அத்தை, அத்தை! என்றும் நட்புக் கொள்வதைப் பார்த்ததும் அவன் மனதில் கூட வேறு விதமான எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்தன.

தனக்கு பாகீரதி கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை அவள் வாழ்க்கை மகிழ்ச்சியாக அமைய வேண்டும் என்று கூட யோசிக்க ஆரம்பித்தான்.

அன்றொரு நாள்

தனகரும் ஸ்வப்னாவுக்கும் நடந்த வாக்கு



வாதத்தை பாகீரதி அவனிடம் சொல்லியிருந்தாள். அப்போதிருந்து அந்த ஸ்வப்னா ரவிபாரதிக்குத் தகுதியானவள் அல்ல என்ற எண்ணம் வேறு பல்ராமிற்குத் தோன்ற ஆரம்பித்திருந்தது.

அதை எப்படி ரவிபாரதிக்குப் புரிய வைப்பது? அப்படிப் புரிய வைத்து ஒருவேளை இந்தத் திருமணம் நிலைத்து விட்டால் இழப்பு தனக்குத்தானே!. ஒருவேளை பாகீரதிக்கு ரவியின் மேல் ஈடுபாடு என்று தெரிய வந்தாலாவது நான் பாகீரதியை இழக்கத் தயாராகலாம்.

இதற்கெல்லாம் எப்படி விடை காண்பது? என்ற எண்ணங்கள் மனதில் ஓடிக்கொண்டிருக்க எதையும் காட்டிக் கொள்ளாமல் மகிழ்ச்சியாய் இருப்பது போல் நடமாடிக் கொண்டிருந்தான்.

பாகீரதிக்கோ வேறுவிதமாகச் சிந்தனை ஓடிக்கொண்டிருந்தது. லதா அவனை விழுந்து விழுந்து கவனித்துக் கொண்டாள்.

தாயில்லாத பெண்ணாம் அப்பா வசதியானவர்தான். ஆனால், அண்ணன் காதல் திருமணம் செய்து கொண்டு தனிக்குடித்தனம் போய் விட்டானாம். ஆனால், பலராம் பொறுப்பாகத் தன் சகோதரிகளுக்குத் திருமணம் செய்து வைப்பதைப் பார்த்து அவளை மிகவும் பிடித்து விட்டதாம்.

' கல்யாணங்கறது எப்படியோ இருக்கட்டும் ஆனா அஸ் எ பர்ஸன் எனக்கு பல்ராம் அத்தானை ரொம்பவும் பிடிக்கிறது 'என்று சுஜாவிடம் சொன்னாளாம்.

பேசும் கண்களுடன், எல்லாரிடமும் பாசமுமாய்ப்பழகுகிற அந்தப் பெண்ணை பாகீரதிக்கே மிகவும் பிடித்துப் போனது.

முதலில் இப்படி மேலே விழுந்து பிடுங்குகிறாளே



என்று கடுப்பாகிப் போன பல்ராமிடம் அவளது பண்புகளை பாகீரதியே எடுத்துச் சொல்ல அவனும் இந்த இரண்டு நாட்களுக்குள் அவளிடம் இயல்பாகப் பேச ஆரம்பித்திருந்தான்.

அதற்குக் கூட அந்த லதா' பாகீ.. மேடம்! ஸ்ட்ராங்கா ரெகமண்ட் செஞ்சுட்டீங்க போல'

'பல்ராம் அத்தான் என்கிட்டே கோபமில்லாம பேசறாங்க'.... என்று யதார்த்தமாக சொல்ல பாகீரதியின் மனம் நெகிழ்ந்து போனது.

ஒரு வழியாகத் திருமண நிகழ்வுகள் முடிந்து புறப்படும் போது தங்கள் வீட்டுக்கு வருமாறு அழைத்து விட்டு வந்தார்கள்.

* * *

இரண்டு நாட்கள் போயிருக்கும்....!

சுஜாவும் சுதாகரும் விருந்துக்கு வருவதாகத் தகவல் வந்தது.

சுதாகருக்குச் சென்னையில் ஒரு பெரிய கம்பெனியில் வேலை. ஒரே வாரம்தான் விடுமுறையாம். அதனால் உடனடியாக வந்து செல்வதாகச் சொன்னார்கள்.

விஜயலட்சுமி' வருவதுதான் வருகிறீர்கள்! குடும்பத்தோட எல்லாருமே வாங்க' என்று அழைக்க அன்றைக்கு ஒரு பெரிய விருந்தே நடந்தது. வீடு கலகலப்பாக இருந்தது.

ரதி.. ரதி.. என்று ரவிபாரதி நொடிக்கொரு தரம் அழைப்பதையும், ராமையா. சின்னம்மா! சின்னம்மா! என்று எல்லாவற்றுக்கும் பாகீரதியைக் கலந்தாலோசிப்பதையும் ஒரு ஆழ்ந்த மௌனத்துடன் கவனித்துக் கொண்டிருந்தான் பல்ராம்.

இயல்பாக "என்ன, ரதி மௌனு?'' என்று ரவிபாரதி

சமையலறைக்குள் போக பாரதி கையில் கரண்டியை வைத்துக் கொண்டு ஏதோ சொல்லிச் சிரிப்பதையும் அவன் தலையை பின்னால் சாய்த்துக் கொண்டு சிரிப்பதையும் கனிவோடு பார்த்துக் கொண்டிருந்த விஜயலட்சுமி வேறு பல்ராமை அழைத்துக் காட்டினார்.

'பல்ராம்! உனக்குத்தான் நன்றி சொல்லணும் உன்னாலதான் இந்த பாரதி அறிமுகம் கிடைச்சது தம்பி' சொன்னாள். இந்தப் பொண்ணு இந்த வீட்டுக்கு வந்ததிலே இருந்து வீடே நிறைவா இருக்கு. மனசே லேசா இருக்கு. இந்தச் சந்தோஷமாவது எனக்கு நிலைக்கணும்னு நா வேண்டாத தெய்வம் இல்லே ...' என்று சொல்ல அவன் எதுவும் சொல்லத் தோன்றாதவனாக நின்றான்.

அதே நேரம் சமையலறையிலிருந்து வெளியே வந்த ரவிபாரதி

" டேய் .. பல்ராம்! அல்வா பண்றாங்கடா. ரொம்ப வாய் பேசறமாம். அதனால அல்வா குடுத்து வாயை அடைச்சடறதுன்னு முடிவாம்" என்று சிரிக்க தனது மணப்பிரச்சினைகளைத் தூக்கி ஒருபுறம் வைத்து விட்டு சிரிக்கத் தொடங்கினான்.

உணவு முடிந்தவுடன் சற்று நேரம் கலகலப்பாக ஹாலில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்போது விஜயலட்சுமி பாரதியிடம்

" ஏம்மா.. உங்க ரிசப்ஷன் போட்டோ ஆல்பம் கொண்டு வந்து காட்டேன்" என்றார்.

பாரதியும் போய் எடுத்து வந்தாள். ஹாலில் பெண்கள் எல்லாரும் ஒரு ஆல்பத்தைப் பார்க்க இன்னொரு ஆல்பம் ஆண்களுக்கிடையில் உட்கார்ந்து இருந்தது.

சுதாகர் வழக்கம் போல் கலாட்டாவாகப் பேசிக்



கொண்டிருந்தான்.

"ஏன் சார்! நீங்க பொண்ணு கழுத்தில தாலி கட்டறதுக்கு முன்னால ஃபோட்டோ கிராபர் எதுக்கும் கடைசியா ஒரு தடவை சிரிக்கச் சொல்லலையா" ? என்று கேட்க.

"நீ வேற சுதாகர் உங்க அக்கா வந்ததுக்கு அப்புறந்தான் இந்த வீட்டுல எல்லாரும் சிரிக்கவே பழகியிருக்கோம்" என்றான் ரவிபாரதி ஆத்மார்த்தமாக.

பல்ராம் சட்டென்று திரும்பி பாரதியைப் பார்க்க அவள் லேசான நாணப் புன்னகையுடன் நின்று கொண்டிருந்தாள்.

ஆல்பத்தில் உள்ள உறவினர்கள் படங்களை ஒவ்வொருவராகப் பார்த்துக் கொண்டே வந்தார்கள். ஸ்வப்னா திடீர்ன ஃபோட்டோ பார்த்ததும் சுதாகர்

"அட! ஸ்வப்னா!" என்றான்.

'இவங்களை உங்களுக்குத் தெரியுமா?' என்று பாரதி ஆர்வமாகக் கேட்டபடி சுதாகரின் முகம் பார்க்க அவன் முகத்தில் ஒரு இகழ்ச்சிப் புன்னகை ஒடி மறைவதைப் பார்த்தாள்.

சட்டென்று சூழ்நிலையைக் கையிலெடுத்துக் கொண்டான்.

"ஏன் கேட்கறேன்னா.. இவங்க ரவிக்கு ரொம்ப வேண்டியவங்க. லயசன் ஆஃபீஸர் மாதிரி" என்றான்.

அவன் குரலில் தெரிந்த எச்சரிக்கை உணர்வை சுதாகர் மனதில் வாங்கிக் கொண்டான்.

" ஆமா.. தெரியும் என் காலேஜ்ல எனக்கு ஜூனியர் என்று அடுத்த பக்கத்துக்குத் தாவிவிட்டான்.

ஆனால், புறப்படுகிற நேரத்தில் உள்ளே அறையில்



வெற்றிலை பாக்கு எடுத்து வைத்துக் கொண்டிருந்த பாரதியிடம் வந்தான் சுதாகர்.

"பாரதி! உன்னைப் போல ஒரு சிஸ்டர் இல்லையேன்னு இருக்கு யு ஆர் வெரி ஸ்வீட்!" என்றான்.

'தாங்க்ஸ்' என்று வாஞ்சையாய்ப் புன்னகைத்தாள் பாரதி.

'பாரதி அந்த ஆல்பம் பார்த்துகிட்டிருந்தப்போ அந்த ஸ்வப்னா ரவிக்கு ரொம்ப க்ளோஸ்ன்னு சொன்னீங்களே.. எந்த அளவுக்கு...?' என்றான்.

'எந்த அளவுக்குன்னா ? எங்க கல்யாணத்துக்கு முன்னாடியே அவங்க ஃப்ரெண்ட்ஸ் இப்பவும்தான்' என்றாள்.

'ஜாக்கிரதை.. பாரதி ஷி இஸ் வெரி ஸ்மார்ட் அண்ட் இன்டெலிஜெண்ட் ஆனா, நாட் ரிலயபிள் அவ்வளவு.. ஒருத்தனுக்குத் தெரியாம இன்னொருத்தன்னு... நிறைய பணக்காரப் பசங்ககிட்டே பழகிகிட்டிருக்கிறா' என்றான்.

பாரதியின் முகத்தில் கலவரம் தோன்றியது 'தாங்ஸ் பார தி இன்ஃபர்மேஷன்.. அண்ணா ரவிகிட்டே எதுவும் பேசாதீங்க ஓ! மே நாட் லைக்.. இட்' என்றாள். அவசரமாக.

'புரிந்தது! புரிந்தது! அதனாலதானே உன்கிட்ட சொல்றேன்' முடிஞ்சாப் புரிய வை. என்றவன்,

'அப்புறம் இன்னொரு விஷயம் இந்த பல்ராம் கிட்டே சொல்லு. நாம நேசிக்கறவங்களைக் காட்டிலும் நம்மை நேசிக்கறவங்களோட வாழ்க்கையை அமைக்கறதுதான் நல்லதுன்னு. ரதா ரொம்ப நல்ல பொண்ணு' என்றான் புன்னகைத்து விட்டு நகர்ந்தான்.

வெளித் தோற்றத்திற்கு எப்போதும் சிரிக்கிறாற் போல் இருந்தாலும் இந்த சுதாகர் கூர்மையான புத்திக்காரன் என்பது அவளுக்குப் புரிந்தது.



தான் அறையை விட்டு வெளியே வருகிறபோது சற்று தூரத்தில் ரவிபாரதி நடந்து போவதைக் கண்டு புன்னகைத்துக் கொண்டான் சுதாகர்.

* * *

## 17

அலுவலகத்திற்குப் போவதற்காகக் காரை எடுத்தான் ரவிபாரதி. ஆனால், பாரதி ஏதோ கேட்கப் பிரியப்படுபவள் போன்ற முகபாவத்துடன் நிற்க

"என்ன ரதிம்மா?" என்றான்.

'இல்லே.. பல்ராம்.. அத்தான்கிட்டே பேசணும்' என்றாள்.

'ஓ.....!' என்றான் உள்ளடங்கிய குரலில். 'சரி.. நான் ஆஃபீஸ் போய் போன் செய்றேன்' என்று புறப்பட்டு விட்டான்.

சுஜாவின் திருமணம் முடிந்து இரண்டு மாதங்கள் ஓடியிருந்தது. இன்னமும் தங்கள் ஒப்பந்த காலம் முடிய ஒரு மாதம்தான் இருந்தது. சுஜாவின் திருமணத்திற்குப் பிறகு பாரதி தனக்கும் பல்ராமுக்குமான உறவைக் குறித்து வெகுவாக யோசித்திருந்தாள்.

முடிவாக அவனிடம் நேரில் பேசி விட முடிவு செய்தாள்.

ரவிபாரதி காலார நடந்து கொண்டே சிந்தனையில் ஆழ்ந்திருந்தான். சுஜாவின் திருமணம் முடிந்த சமயத்தில் விருந்துக்கு வந்திருந்த சுதாகர் ஸ்வப்னாவைக் குறித்துச் சொன்ன கருத்துக்கள் தன் மனதில் தாக்கத்தை ஏற்படுத்தும்

என்று நினைத்ததற்கு நேர்மாறாக ஒரு மாதிரி விடுதலை உணர்வைத் தோற்றுவித்தது ரவிபாரதிக்கு ஆச்சரியமாக இருந்தது என்றால் பாரதி பல்ராமிடம் பேச வேண்டும் என்று சொன்னவுடன் ஏன் தன் மனதில் இவ்வளவு பெரிய பாரம் ஏறிக் கொள்கிறது என்பது புரியாமல் தவித்தான்.

லதாவுடனான தனது உறவு பற்றிப் பின்னர் முடிவு செய்து கொள்ளலாம். அவளாவது பல்ராமைத் திருமணம் செய்து கொண்டு சந்தோஷமாக இருக்கட்டும். இன்னும் ஒரே மாதந்தான். ஒருவேளை திருமணம் ஏற்பாடுகள் பற்றிப் பேசவார்களோ! பேசட்டும் பேசட்டும் என்று எண்ணிக் கொண்டவனாக அலுவலகத்திற்கு வந்தான்.

வழக்கம் போல் பதினோரு மணிக்குப் பேசினான் அப்போது.

'ரதி.. நானே பல்ராமை லஞ்சுக்குக் கூட்டிட்டு வரேன் நம்ம வீட்டு லான்லயே பேசலாம் வெளிய எங்கயும் சந்திக்க வேண்டாம். என்ன?' என்றாள்.

'சரிங்க!' . என்றாள் ரவிபாரதி சொன்ன மாதிரியே அழைத்து வந்தான்.

உணவுக்கு பின் அம்மா ஒய்வெடுக்கச் சென்ற பின் இயல்பாக நிகழ்வது போல்

'டேய்! பல்ராம்.. நீ இங்கே ரதிகிட்டப் பேசிகிட்டிரு ஒரு சின்ன வேலையிருக்கு முடிச்சுட்டு வந்து ஒன் அவர்ல கூட்டிட்டுப் போறேன்.' என்று போனான்.

★ ★ ★

வெகுவாகத் தயங்கியபடி அமர்ந்திருந்தாள் ரதி.

'என்ன.. பாகி. சொல்லு!' என்றான பல்ராம்.

'இல்லே.. பல்ராம் எல்லாம் கல்யாண விஷயம்தான்'.



'நம்மோட கல்யாணமா?'

அவள் சற்று மௌனம் காத்தாள். 'பிறகு உன்னோட கல்யாண விஷயமா' என்றாள்.

அவனுக்குச் சட்டென்று புரிந்து போனது. தன் உள்மனது எதிர்பார்த்துக் கொண்டிருந்த அந்தக் கணம் வந்தே விட்டது என்று ஒரு விசித்திரமான புன்னகையுடன்.

'சொல்லு .. பாகீ' என்றான்.

'பல்ராம் யு மஸ்ட் நாட்.. மிஸ் அண்டர்ஸ்டேண்ட் நீ .. ஆனா சொல்லித்தான் ஆகணும் வேற வழியில்லே..'

'..........!'

'நீ.. நீ.. அந்த லதாவையே கல்யாணம் செஞ்சுக்க ..!' என்றாள்.

'ஏன் இந்தத் திடீர் முடிவு?'

'திடீர் முடிவு இல்லே! ரொம்ப நாளா யோசிச்சதுதான். டைவர்ஸான பொண்ணுன்னு உங்க வீட்டுல ஏத்துக்க மாட்டாங்க. எனக்கும் எப்பவாவது யாராவது ஏதாவது குத்தலா சொன்னால் தாங்காது அதுவும். . இல்லாம.. அந்த லதா ரொம்ப அருமையான பொண்ணு?' என்றாள்.

'ரொம்ப ஸ்ட்ராங்கா ரெகமண்ட் பண்றே?'

'ஆமா! பல்ராம். சுதாகர் அண்ணா சொன்னது சரிதான். நாம நேசிக்கறவங்களைக் காட்டிலும் நம்மை நேசிக்கறவங்களைக் கல்யாணம் செய்துக்கறதுதான் சரி... ' என்றாள்.

'ஏன் .. அந்த லாஜிக் உனக்கு ஒத்துக்காதோ?' என்று அவன் கேட்கவும் அவள் திகைத்தாள், பிறகு பல்ராம் 'ப்ளீஸ் அண்டர்ஸ்டான்ட் பண்ணிக்க. நம்ம கல்யாணத்துனால எல்லாப் பக்கமும் அதிருப்திதான். உன்மேல எனக்கு ரொம்ப பிரியம் இருக்கு. ஆனா அது வேற மாதிரி ..'



'நெருங்கின உறவுல கல்யாணம் செஞ்சுக்கறது நல்லதில்லே பல்ராம்..' என்றாள்.

சற்று நேரம் பலமான மௌனம் நிலவியது. பிறகு அவள் நீண்ட பெருமூச்சுவிட்டாள்.

'பல்ராம்... லதா.. ரொம்ப நல்ல பொண்ணு..!' என்றாள் பாகீரதி மீண்டும் கெஞ்சுதலாக.

'லதாவை பற்றி எனக்கு ஒண்ணும் குறையில்லே' என்று அவன் சொல்லவும் நிம்மதியானாள் பாகீரதி.

மறுபடியும் சற்று நேரம் அமைதி .பிறகு மீண்டும் ஒரு பெருமூச்சுடன் பல்ராம் சொன்னான்.

'நா ஒரு மாதிரி இதை எதிர்பார்த்தேன் பாகீ ....' என்று

பாகீரதி குற்றம் செய்தவளைப் போல் தவித்தாள்.

'என் மேல கோபமா?' பல்ராம் என்றாள்.

'இல்லல்லே .. உன் வரையில நீ செஞ்சது சரிதான். என்றான். பிறகு சற்றுக் கழித்து நீ இனி என்ன செய்யறதா உத்தேசம்..?' என்றான்.

அவள் புன்னகைத்தாள். 'ரவி கேக்கறப்ப டைவர்ஸ் குடுத்துட்டு.. பழையபடி வீட்டுக்குப் போக வேண்டியதுதான்..!'

'உனக்குப் பிடிச்சவனா யாராவது வரமாட்டானா?'

அவள் ஒரு விதமாகச் சிரித்தாள் 'மெய்யோ, பொய்யோ.. இந்த ஒரு வருஷ வாழ்க்கை எனக்கு நிறைவாகவே இருந்தது பலராம். இனி எந்த வீட்ல போய் வாழ்ந்தாலும் கம்பேர் செய்து பாக்கச் சொல்லும் . வேணாம். பல்ராம்.... நான் இப்படியே நிம்மதியா இருந்துட்டுப் போறேன்.' என்றாள.

'பாகீ உன்னோட வாழ்க்கையில் புயலை இறக்கி



விட்டுட்டேன் ஆனா நான் கல்யாணம் செஞ்சுக்கணும்னு நீ சொல்றே' என்றான் ஆழ்ந்த வருத்தத்துடன்.

'ப்ளீஸ் பல்ராம் புரிஞ்சுக்கோ நீயாவது செட்டிலாகு. அந்த உறுத்தலாவது இல்லாம நிம்மதியா இருப்பேன்' என்றாள்.

பல்ராம் பாகீரதியைக் கூர்ந்து பார்த்தான்.

ஒ'கு வேளை.. ஒருவேளை .. நீ ரவியை'என்றான்.

அவள் திடுக்கிட்டுப் போய் அவனைப் பார்த்தாள்.

'ஐயோ... நான் அந்த மாதிரியெல்லாம் யோசிச்சுக் கூடப் பாக்கலை' என்றாள்.

பல்ராம் ஒன்றும் சொல்லவில்லை ஆனால் தங்களின் இந்த முடிவை இப்போதைக்கு ரவிபாரதியிடம் சொல்ல வேண்டாம் என்று வாக்குறுதி மட்டும் வாங்கிக் கொண்டான்.

★ ★ ★

அலுவலக வேலையில் மூழ்கி விட்டான் ரவிபாரதி காரில் வருகிற போது என்ன பேசினீர்கள்? என்று கேட்கலாம் என்று நினைத்தான். ஆனால் கேட்கவில்லை .

பல்ராம் அதுபற்றி ஆழுத்தமான மௌனம் சாதிக்கையில் தான் மட்டும் எப்படிக் கேட்பது என்று எண்ணிக் கொண்டான். ஆனால். ஒன்று மட்டும் சொன்னான்.

'பல்ராம்! நான் செஞ்ச ஆஃபர் அப்படியேதான் இருக்கு. உங்க அம்மாவிடம் பேசணும்னா பேசறேன் . என்னால ஏற்பட்ட பிரச்சினைகளை நானே தீர்த்து வைக்கிறேன்.' என்றான்,

'தாங்ஸ் ரவி வேணும்னா கேக்கறேன், முதல்ல உங்க பிரச்சினை முடியட்டும்' என்றான்.

'எங்க பிரச்சினையா?' என்றான் புரியாதவன் போல்.

'என்னப்பா ? நீயும் ஸ்வப்னாவும் லெட்டிகளா வேண்டாமா?' என்றான் பல்ராம் .

'ஓ! அதைச் சொல்றியா?' என்றான் ரவிபாரதி அசுவாரசியமாக.

பல்ராம் புதிராகப் பார்த்தான். ரவிபாரதி அதைக் கண்டு கொள்ளாதவன் போல் இருக்கவும் பல்ராம் மேலே தொடரவில்லை

இரண்டு பேருக்குள்ளும் நிறைய கேள்விகள். கேட்டு விட்டால் வரப்போகிற பதிலைத் தாங்கிக் கொள்ள முடியுமா என்ற அச்சத்திலேயே வெகு ஜாக்கிரதையாகப் பேசிக் கொண்டார்கள்,

தங்கள் கண்ணாமூச்சி விளையாட்டு அவர்களுக்குப் புரிந்திருந்தது. ஆனால் அதைப் போட்டு உடைக்க பயமாகவும் இருந்தது.

அலுவலகத்திற்கு வந்தவுடன் எதையும் நினைக்க நேரமில்லாமல் வேலை சரியாக இருந்தது. எதையும் நினைக்காமல் வேலையில் ஆழ்ந்தார்கள்,

மாலை வீட்டுக்கு வந்து உணவு முடித்தவுடன் ரவிபாரதிக்கு பொறுமை எல்லை மீறி விட்டது. மாடிக்குப் போய் அவனே பாகீரதியை அழைத்து அமரச் செய்தான்.

'ரதி. நீயும் பல்ராமும் என்ன பேசிகிட்டீங்கன்னு கேக்கறது நாகரீகமில்லே. ஆனா, வேற வழியில்லே. ஒரு வேளை நீங்க கல்யாணம் செஞ்சுக்கற முடிவு தொடர்ந்தா.. தாராளமா எங்கிட்டே எந்த உதவியும் கேட்கலாம், பல்ராமோட அம்மாகிட்டே நான் பேசறேன், புரிய வைக்கிறேன். ஒரு வருஷம் முடிஞ்சதும் உயில் படிச்சதும் எது நடந்தாலும் நடக்காட்டாலும் உன்னை இந்தக் கட்டிலிருந்து இல்லல்லே இக்கட்டிலிருந்து நான் விடுவிக்கிறேன்,. சொன்ன



மாதிரியே இருபது லட்ச ரூபாய் பணமும், பீகோவும் உண்டு' என்றான்.

பாகீரதி வெறுமையான பார்வையால் அவனைப் பார்த்தாள்,

'ரவி! நா இப்பவும் சொல்றேன், பணத்துக்காக இல்லே. பல்ராமுக்காகத்தான் ஒத்துகிட்டேன்...' என்றாள்.

'ஓ... கே! ஓ.. கே நான் அதைப் பற்றி அவன்கிட்டே பேசிக்கறேன்.' என்றவன் சற்று நேரம் சிந்தனையிலாழ்ந்தான் பிறகு

'ரதி உண்மையிலேயே உன் பல்ராம் ரொம்ப அதிர்ஷ்டசாலி ....' என்றான்.

பாகீரதி அவசரமாக வேலையிருப்பவள் போல எழுந்தாள், அதே நேரம் ரவிபாரதியின் செல்ஃபோன் ஒலித்தது.

'ரதி டேபிள் மேலே செல்லை வச்சிருக்கேன் எடுத்துப் பேசேன்' என்றான்.

எடுத்தாள், அந்தப் பக்கம் ஸ்வப்னா,

'ஹலோ! நான் ஸ்வப்னா பேசறேன்' என்ற குரல் கேட்டதும்,

'இருங்க! ரவிகிட்டே தரேன்' என்று வேகமாகக் கொண்டு வந்து நீட்டினாள்.

'ஸ்வப்னா' என்று திகைத்தான். முகத்தில் எந்த உணர்வும் காட்டாமல் வாங்கிக் கொண்டு எழுந்து அந்தப் பக்கம் போனான்.

ஒரிரு நிமிடங்கள் பேசி விட்டு வந்தான். 'ரதி! ஸ்வப்னா வந்திருக்கா. நான் பாத்துட்டு வந்துடறேன். நீ வெயிட் பண்ணிட்டுருக்காதே. இன்னைக்கு ஒரு முக்கிய விஷயம் பேச வேண்டியிருக்கு' என்றான்.



பாகீரதி அவன் முகம் பார்க்காமல் தலையைக் குனிந்தபடி தலையாட்டிக் கொண்டாள், ரவிபாரதியின் முகத்தில் அவள் முகபாவம் பார்த்து விசித்திரமான புன்னகை ஒன்று தவழ்ந்தது.

பிறகும்........!

அவன் தன் அறையில் சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்ட போது அறை வாசலில் நிழலாடத் திரும்பிப் பார்த்தான். பாகீரதி ஏதோ சொல்ல வருபவள் போல நின்றாள், பிறகு போய்விட்டாள்.

புறப்படுவதற்கு முன் அவனே அவள் அறைக்கு முன்பு வந்து ரதி! என்று அழைத்தான்.

ஒருவிதமான தவிப்புடன் அவள் நிற்பதைப் பார்த்து

'என்ன ரதி ? என்னவோ சொல்லணும்னு நினைக்கறே . சொல்லு ..நீ எது சொன்னாலும் என் நல்லதுக்குத்தான் இருக்கும்னு எனக்குத் தெரியும்...' சொல்லு .. !' என்றான்.

தயங்கியபடி 'இல்லே.. சுதாகரண்ணா ஸ்வப்னாவைப் பத்தி ஏதேதோ.. சொல்றார். எதுக்கும் உங்க தகுதிக்கு ஸ்வப்னா சரிவருமான்னு..' என்று லேசான பயத்துடன் நிறுத்தினாள்.

அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவளை ஒரு நிமிடம் ஆழ்ந்து பார்த்தான் .பிறகு போய்விட்டான்.

பாகீரதிக்கு அழுகையே வ்ந்து விட்டது. பேசாமல் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருந்திருக்கலாம் என்று தோன்றியது.

'உன் வேலையைப் பார்! என்று ரெண்டு திட்டாவது திட்டியிருக்கலாம். பல்ராமை வேறு இன்று



காயப்படுத்தி விட்டோம் என்று கட்டுப்படுத்தி வைத்திருந்த எல்லா உணர்வுகளும் அழுத்த வெகு நாட்களுக்குப் பிறகு கண்ணீர் விட்டபடி படுக்கையில் படுத்திருந்தாள் பாகீரதி.

* * *

## 18

வழக்கமில்லாத வழக்கமில்லாத நாள் தங்கியிருந்த ஹோட்டல் அறைக்கே அழைத்தாள் ஸ்வப்னா. ரவிபாரதியும் தயக்கமில்லாமல் ஒத்துக் கொண்டது அவளுக்கே சற்று ஆச்சரியம்தான்.

'ஹல்லோ! ரவி... உங்ககிட்டே பேசி.... ஃப்ரீயாப் பேசி எத்தனை நாளாச்சு!' என்று இழைத்தாள்.

அவன் தடுக்கவில்லை ஆனால், கண்டு கொள்ளவில்லை. படு சாவதானமாக சோஃபாவில் அமர்ந்தான்.

'என்ன ஸ்வப்னா ரொம்ப அவசரமாப் பேசணும்னு சொன்னியே?' என்றான்.

'என்ன ரவி? புரியாத மாதிரிக் கேக்கறீங்க' எப்படா ஒரு மாசம் முடியும்னு இருக்கு என்றாள் கொஞ்சலாக.

அவன் எந்த உணர்வும் காட்டாமல் அவளைப் பார்த்தான். என்றைக்கு சுதாகர் சொன்ன வார்த்தைகள் அவன் காதில் விழுந்ததோ அதற்குப் பிறகு ரவிபாரதி சும்மாயிருக்கவில்லை. மெதுவாக விசாரிக்க ஆரம்பித்தான்.

சென்னையின் முக்கிய தொழலதிபர்கள் சிலர், அவனுக்கு நண்பர்களாக இருந்தார்கள், எல்லாத் துறையிலும் அவனுக்கு வேண்டியவர்கள் இருந்தார்கள். விசாரிக்க

ஆரம்பித்த பின்தான் நிறைய விஷயங்கள் அவனுக்குத் தெரிய வந்தது.

அவனுடைய புத்திசாலித்தனத்தால் மட்டுமே ஈர்க்கப்பட்டவளாய் மற்ற எதையுமே கவனிக்காமல் இருந்திருக்கிறோம். ஒருவேளை தன்னிடமாவது அவள் உண்மையானவளாக இருக்கக் கூடும் என்ற நம்பிக்கை ஒரு ஓரத்தில் இருந்தது.

அவள் போகிற தூரம் போகட்டும் பார்க்கலாம் என்பது போல் இருந்தான்.

'ரவி .. என்ன சொல்றாங்க . உங்க பாகீரதி... பாவம் இந்த மாதிரி பங்களா வாழ்க்கை இனிமே எங்க கிடைக்கும் ?' என்றாள் கிண்டலாக.

'ஸ்வப்னா.. நம்மளைப் பற்றி ஏதாவது இருந்தா.. பேசு.. இப்ப எதுக்கு ரதியோட பேச்சு..' என்றான்.

'ஏன் .. ஏன் .. உங்களுக்கு அவளைச் சொன்னா கோபம் வருது...?'

'ஏன்னா! அவளும் வசதியானவள்தான். அவள் பணத்துக்காக இந்த ஏற்பாட்டுக்கு ஒத்துக்கலே.. புரியுதா?' என்றான் அவன் குரலில் தெரிந்த கடுமையைப் பார்த்தவுடன் அவள் சட்டென்று தன் போக்கை மாற்றிக் கொண்டாள்.

'சரிப்பா.. சரி.. நம்மளைப் பற்றியே பேசுவோம். என்ன ஏற்பாடுகள் ? எப்பக் கல்யாணம் ?' என்றாள்.

அவன் முகம் மாறியது தீவிரமான முகபாவத்துடன் அவளைப் பார்த்தான்.

'ஸ்வப்னா ..உனக்கு எப்படிச் சொல்றதுன்னு தெரியலே.. ஆனா.. இந்த மேரேஜ் ஏற்பாட்டை அவ்வளவு சீக்கிரம் உடைக்க முடியாது போலிருக்கே....!' என்று கேள்வியைப் போட்டு விட்டு அவள் முகத்தில் தோன்றுகிற



உணர்வுகளை ஆராய்ந்தான்.

'ஓ....!' என்று அவள் காற்றுப் போன பலூன் போல ஆகி விட்டாள். பிறகு திடீரென்று

' உங்க அம்மாவுக்கு என்ன வயசு ?' என்றாள்.

' ஐம்பத்தஞ்சு.. ஏன் கேக்கறே ? என்றான்

''இல்லே ..!'' என்று ஏதோ சொல்ல வந்தவள் நிறுத்தி விட்டாள்.

'' ஏன் இப்போதைக்கு சாகற வயசு இல்லேன்னு யோசிக்கிறியா ?'' என்றான்.

'ஐயய்யோ.. அப்படியெல்லாம்.. இல்லே.'. என்றாள் கலவரமான முகபாவத்துடன் ஆனால், அவள் என்ன ஓட்டம் அப்படித்தான் ஓடி இருந்தது என்பது அவனுக்குப் புரிந்தது.

அந்தக் கணத்தில் ஸ்வப்னாவின் வெளித் தோற்றத்தில் உள்ள அழகெல்லாம் வடிந்து போய் அவள் உள் தோற்றத்தின் விகாரம் அவனுக்கு முழுமையாகப் புரிந்தது.

இவளிடம் போய் தனக்கு எப்படிப் பிரியம் ஏற்பட்டது என்றே புரியவில்லை. என்று நொந்து கொண்டான்.

''ஏன் ஸ்வப்னா உனக்கு என்மேல இருக்கற பிரியம் உண்மையன்னா.. நான் சொல்ற எந்த ஏற்பாட்டுக்கும்... ஒத்துக்குவியா...?'' என்றான்.

அவள் மயக்கப் பார்வை பார்த்தாள.' சொல்லுங்க ரவி' என்றாள்

'அந்தக் கல்யாண ஏற்பாடு வேண்ணா அப்படியே இருக்கட்டும். நாம நமக்கு ஒரு அரேஞ்ஜ்மெண்ட்.. செஞ்சுக்கலாம்.. ரதி ஒண்ணும் கண்டுக்க மாட்டா.. என்றான்.

அவள் வெகுவாக யோசிப்பவள் போல நடித்தாள். ' அது எப்படி ரவி ? ' என்றாள்.



'அட இங்கே வேண்டாம்.. சென்னையிலே ஒரு பங்களா வாங்கித் தந்தர்றேன். உன் பேருக்கு.... மாசம் ரெண்டு தடவையாவது வந்தர்றேன்.' என்றான்.

அவள் அவனை மனத்தாங்கலுடன் பார்ப்பது போல் பார்த்தாள்.

'என்ன.. ரவி.. என்னை.. இவ்வளவு மீப்பமா நினைச்சட்டீங்க ....?' என்றாள்.

அப்போதுதான் அவன் சற்றும் எதிர்பாராத அந்தப் பெரிய வெடிகுண்டை எடுத்து வீசினான்.

'என்ன... கஷ்டம் .. ஸ்வப்னா? இதே மாதிரி ஏற்பாட்டுக்குத்தானே.. அந்த சினிமா ப்ரொட்யூசர் ரகுபதிகிட்டேயும் கம்யூட்டர் கம்பெனி மேனேஜர் மகேஷ்கிட்டேயும் ஒத்துகிட்டிருக்கியாம் ..... ரெண்டு பயலுகளும் எனக்கு ஃப்ரெண்ட்ஸ்தான். கவலைப் படாதே.. உன்னை ரெண்டு பேருகிட்டயும் காட்டிக் குடுக்கலே...' என்று ஒரு விதமாகச் சிரித்தான்.

ஸ்வப்னா அவனை வெறித்துப் பார்த்தாள். 'ரவி..!' என்றாள்.

அவள் முகம் கோபத்தில் சிவந்தது. 'ஸ்வப்னா நான் யார்ன்னு உனக்குத் தெரியலே! உன்னை முழுசா நம்பினேன் உனக்காக அம்மாவை ஏமாத்தற லெவலுக்குப் போனேன். ஆனா.. நீ .. என்னையே ஏமாத்தற அளவுக்குத் துணிஞ்சிட்டே....' என்றான்.

'இல்ல... ரவி.. அவங்கல்லாம்.. எனக்கு ஃப்ரெண்ட்ஸ். அவ்வளவுதான் அவங்கதான் ஏதேதோ உளறிகிட்டிருக்காங்க..' என்றாள்.

'வேண்டாம் ஸ்வப்னா.. போன மாசம்தான் ரகுபதி உனக்கு பங்களா ரெஜிஸ்ட்ரேஷன் பண்ணிக்



குடுத்திருக்கான் வேண்டாம். என்கிட்டே உன் ட்ரிக்ஸ் எதுவும் வேண்டாம் ....' என்றான்.

ஸ்வப்னா திகைத்துப் போய் அமர்ந்து விட்டாள். 'இப்பவும்.. நான் ஒரு ஃபோன் கால்ல இதை முடிச்சிருப்பேன். ஆனா.. ஒரு காலத்துல உன்னை .. ஒரு ரொம்ப முக்கியமான ஃப்ரெண்டா நினைச்சேன். உன்னை காதலிச்சேன்னு சொல்ல மாட்டேன் ஆனா.. உன் மேல எனக்கு ஒரு ஈர்ப்பு இருந்தது. அதையெல்லாம் மனசுல வச்சுகிட்டுத்தான். இங்க வந்தேன் என்றான்.

அவள் அமைதியாய் சுற்சிலை போல அமர்ந்திருந்தாள்.

'இப்பவும் என்னால உனக்கு எந்த நஷ்டமும் வரவேண்டாம் ரெண்டு லட்ச ரூபாய்க்கு ஒரு செக் போட்டிருக்கேன் யூஸ் பண்ணிக்க' என்றான். எழுந்தான்.

கதவுக்குப் பக்கம் போகையில் ஸ்வப்னா கையிலிருந்த எதையோ கோபமாகக் கீழே வீசுகிற சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தான். கிண்டலாகச் சிரித்துவிட்டு நகர்ந்து விட்டான்.

வீட்டுக்கு வந்து தன் அறைக்குப் போகிற போது மெதுவாக பாகீரதியின் அறையில் எட்டிப் பார்த்தான்.

அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். கண்களில் கண்ணீர் கோடாக ஓடியிருந்தது.

சற்று நேரம் நின்று பார்த்து விட்டு நெகிழ்ந்த மனத்தினனாய் அறைக்குப் போனான் அவளது வாழ்க்கையாவது பல்ராமுடன் நன்றாக அமைகிற மாதிரி ஏற்பாடு செய்ய வேண்டும் என்று எண்ணிக் கொண்டான்.

பாரம் இறங்கினாற் போல் உணர்ந்தான். ஆனால் அவனுக்கு ஸ்வப்னா போன்றவர்கள் தங்கள்

தோல்வியை நாசூக்காக ஏற்றுக் கொள்வதில்லை என்பது அப்போது புரிந்திருக்கவில்லை.

* * *

ரெண்டு இலட்ச ரூபாய் செக்கைக் கையில் வைத்துக் கொண்டு வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான் ஸ்வப்னா.

கேவலம், இந்தப் ரெண்டு இலட்ச ரூபாய்க்காகவா ரவிபாரதியிடம் நெருங்கிப் பழகினான்? அவனுடைய சொத்துக்களோடு ஒப்பிடும்போது இது எந்த மூலைக்கு ? அவனுடைய நிறுவனத்தில் தானும் ஒரு எம்டியாக தொழிலதிபர்கள் உலகில் வளைய வர வேண்டும், தனது புத்திசாலித் தனத்தைப் பயன்படுத்தி முக்கியப் பிரமுகராகத் திகழ வேண்டும் என்றெல்லாம் கனவு கண்டு கொண்டிருந்தாள். அத்தனையும் உடைபட்டுப் போனது.

கடந்த ஒன்றிரண்டு மாதங்களாகவே ரவிபாரதி தன்னிடம் ஆர்வம் காட்டுவது குறைந்து கொண்டு வருவது கண்டுதான் எதற்கும் இருக்கட்டும் என்று சென்னையில் தொடர்புகளை வளர்த்துக் கொண்டாள். ரவிபாரதியும் ஆண்களுடன் பழகுவதைத் தவறாக நினைக்கிற அளவுக்குக் கட்டுப் பெட்டி அல்லவே. எங்கேயோ அவனுக்கு ஒரு பொறி கிடைத்திருக்கிறது. அதை வைத்துக் கொண்டு ஆராய்ந்து கண்டு பிடித்திருக்கிறான்.

ஏன் இப்படி நிகழ்ந்தது என்று அவளால் புரிந்து கொள்ள முடியவில்லை. நேர்மையில்லாத புத்திசாலித் தனம் நீண்ட காலத்தில் நல்ல விளைவுகளை ஏற்படுத்துவதில்லை என்பதை அவள் கொஞ்சம் புரிந்து கொண்டிருந்தால் இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்காது அதுவுமில்லாமல், வெகு புத்திசாலித்தனமாக ஒன்றுக்கு இன்னொன்று மாற்று என்று



நண்பர்களைத் தயாராய் வைத்திருந்தது ரவிபாரதியைக் காயப்படுத்தி விட்டது என்பதும் அவளுக்குப் புரியவில்லை.

மாறாக அவளுக்கு பாகீரதியின் மேல் கோபம் வந்தது. அவள் முதல் முதலில் பாகீரதியைப் பார்த்த போது அவளது எளிமையான நடை உடை பாவனைகளைப் பார்த்து வெகு சாதாரணமாயத்தான் எடை போட்டாள். ஆனால், அவளது பண்பாடு, பொது அறிவு ஆழமான சிந்தனைகள் பற்றியெல்லாம் ரவிபாரதி பாராட்டிப் பேசிய போதே அவளுக்குள் எச்சரிக்கை மணி ஒலித்தது. இன்றைக்கு சரியாகப் போய்விட்டது.

முதலில் வெகுநேரம் கோபமாக இருந்தாள். பிறகு மெது மெதுவாகக் கோபம் தணிந்தது. இப்போது நிதானமாக யோசித்தாள்.

முதலில் இந்த ஏற்பாட்டுக்குத் தான் சம்மதம் கொடுத்ததே மிகப் பெரிய தவறு என்பதை மிகத் தாமதமாகப் புரிந்து கொண்டாள்.

இனியென்ன செய்வது எனப் புரியவில்லை. கை நழுவிப் போன மிகப் பெரிய வாய்ப்பை நினைத்து ஆற்றாமையும், இயலாமையும் பொங்கியது. அத்தனை கோபமும் முதலில் பாகீரதியின் மேல் திரும்பியது. அவளுக்கு எந்த விதத்திலாவது வேட்டு வைக்க வேண்டும் எண்ணம் தோன்றியது. அவள்தான் தன் அத்தான் பல்ராமைக் கல்யாணம் செய்வது என்றிருக்கிறாளே?. அவளைக் குற்றம் சொல்ல என்ன இருக்கிறது! என்னும் எண்ண ஓட்டமும் தோன்றியது.

பிறகு கோபமெல்லாம் ரவிபாரதியின் மேல் திரும்பியது. தன் பார்வைக்கும், சிரிப்புக்கும் ரசிகனாக இருந்தவன் எப்படி மாறிப் போனான் ?



அம்மாவிடம் இருந்து சொத்துக் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தானே இத்தனை நாடகத்தையும் நடத்தினான். அந்த அடிப்படையையே உடைத்து விட்டான்?

அவள் முகத்தில் வஞ்சகமான புன்னகை ஒன்று தவழ்ந்தது.

இந்த முறை ஏமாறக் கூடாது. சரியாகத் திட்டமிட வேண்டும்.

தவறேயில்லாமல் செயல்படுத்த வேண்டும்.

ரவிபாரதிக்கு வாழ்நாளில் நிமிர முடியாத அளவிற்கு அடி விழ வேண்டும் .

பெண் நினைத்தால் என்ன செய்ய முடியும் என்பதை அவனுக்குக் காட்ட வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

நீக்கமான சிந்தனைக்குப் பிறகு ஒரு குரூர சிரிப்புடன் படுக்கைக்குப் போனாள்.

* * *

## 19

'ஏன் ராமையா இந்தப் பொண்ணு வந்ததுக்கப்புறம் வீடே களையா இருக்கில்லே!' என்றார் விஜயலட்சுமி ...அன்றைக்கு மறுநாள் ஆடி வெள்ளிக்கிழமையாம். பங்களாவுக்கு முன்பு அழகாக ஒரு பெரிய கோலம் போட்டிருந்தாள். அதில் வீட்டுத் தோட்டத்தில் கிடைக்கிற பூக்களை நிறைத்து வைத்து அலங்காரம் செய்திருந்தாள். இரவு பத்து அணி வரை அவள் யோசித்து யோசித்துச் செய்த அலங்காரத்தை விஜயலட்சுமியும்,



ராமையாவும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

ஒரு வழியாகத் திருப்தியானதும் அறைக்குப் போனாள் பாகீரதி. அவள் போன வழியைச் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்து விட்டுத்தான்இதைச் சொன்னார் விஜயலட்சுமி. அன்றைக்கு ஏனோ ரவிபாரதி வந்து சேரவில்லை அதற்கும் சேர்த்துத்தான் உறங்காமல் காத்துக் கொண்டிருந்தாள்.

பத்தரை மணியிருக்கும், கையில் பரிசுப் பெட்டிகளுடனும், கண்களில் மின்னல் சிரிப்புமாக வந்து சேர்ந்தான் ரவிபாரதி. வந்தவுடன் 'அம்மா ரதி தூங்க போயாச்சா?' என்றான்.

'ஆமாப்பா.. இப்தான் ரூமுக்குப் போனா, நாளைக்கு ஆடி வெள்ளிக்கிழமையாம் .கோலம் பாரு அசத்தியிருக்கா உன் பெண்டாட்டி' என்றார்.

அவன் அதைக் கவனியாமல் 'அம்மா இன்னொரு விசேஷமும் இருக்கு. நாளைக்கு ரதிக்குப் பிறந்த நாள்..' என்றான்.

'அப்படியா! அவ சொல்லவே இல்லை?' என்றார்.

'சொல்ல மாட்டாம்மா அதுதானே அவ குண விசேஷமே.! என்றான் பிறகு பரிசுப் பொருட்களைக் கொடுத்து உன்னோட ரூமிலயே இருக்கட்டும். அவ சஸ்பென்ஸா வச்ச மாதிரி.. நாமளும் வைப்போம். என்ன?' என்றான்.

பிறகு சாதாரணமாகச் செல்பவனைப் போல் அறைக்குப் போனான். லேசாகத் தலையை நீட்டி பாகீரதியின் அறையைப் பார்த்தான். அறை சாத்தியிருந்தது குறுகுறுவென்று அறைக்கதவைப் பார்த்து விட்டுத் தன் அறைக்குப் போய் விட்டான்.

* * *

பனிரெண்டு மணியிருக்கும்!

யாரோ அறைக்கதவைத் தட்டும் ஓசை கேட்டு பாரதி கதவைத் திறந்தாள்.

ஹாப்பி பர்த் டே என்ற ஒரு அட்டையைப் பிடித்துக் கொண்டு அதற்குப் பின்னால் தன் முகம் மறைத்துக் கொண்டு நின்றிருந்தான் ரவிபாரதி.

பாரதி திகைத்துப் போனாள். கண்களை அவசரமாகத் துடைத்துக் கொண்டு மீண்டும் பார்த்தாள்.

அட்டைக்குப் பின்னால் இருந்து ரவிபாரதி எட்டிப் பார்த்தான்... வாயெல்லாம் சிரிப்பாக!

'ஹாப்பி பர்த் டே மேடம்' என்றான். அவள் கை பற்றிக் குலுக்கினான். பிறகு சின்னதாக ஒரு பெட்டியை நீட்டினான். திறந்து பார்க்கச் சொன்னான். 'அழகான புஷ்பராகக் கல் பதித்த ஒரு மோதிரம். அவள் அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்தாள்.

'ரவி.. இதெல்லாம்..' என்று தொடங்கு முன்னே அவன் 'உஷ்' என்கிற மாதிரி சைகை செய்தான்.

சற்று நேரம் பேசிக் கொண்டிருந்து விட்டு அறைக்குப் போனான். காலை ஐந்து மணிக்கு மீண்டும் அறைக் கதவைத் தட்டினான்.

இரவு வெகுநேரம் தூக்கம் வராமல் மலர்ந்த புன்னகையுடன் படுத்துக் கொண்டிருந்தவள் ஒரு மணிக்குத்தான் உறங்கினாள். இப்பொழுது அறைக் கதவைத் தட்டும் சத்தம் கேட்டு வாரிச் சுருட்டிக் கொண்டு எழுந்தாள்.

மீண்டும் ரவிபாரதி ஒரு பார்சலை நீட்டினான்.

'ரவி...?' என்று ஆச்சரியமானாள்.

'பிடிக்குதா.. பார்... என் செலக்ஷன்?' என்றான்



சிரித்துக் கொண்டே நகர்ந்து விட்டான். பாரதி எடுத்துப் பார்த்தாள் அழுத்தமான ஆலிவ் கிரீன் நிறத்தில் அழகாக இருந்தது சுடிதார் செட்.

விஜயலட்சுமி வேறு 'இன்றைக்கு என் சமையல். நீ மெதுவாகக் கீழே வந்தால் போதும் என்று செய்தி அனுப்பினார் ரவிபாரதி வேறு விரைவாகக் கீழே போய் அம்மாவுக்கு உதவி செய்து கொண்டிருந்தான்.

அவர்கள் செய்கிற அமர்க்களம் பார்த்து கன்னக் கதுப்புக்கள் லேசாகச் சிவந்திருக்க அவள் இறங்கி வந்த போது ரவிபாரதி மலைத்துப் போய்ப் பார்த்துக் கொண்டு நின்றான்.

அம்மாவும், ராமையாவும் ஒருவரை ஒருவர் பார்த்துக் சிரித்துக் கொண்டார்கள். ரவிபாரதியையும், பாரதியையும் ஒன்றாக அமர வைத்து அம்மாவே பரிமாற பாரதி வெகு சங்கடமாக நெளிந்தாள்.

'என்னம்மா.. இது இத்தனை நாள் எங்களுக்குச் செய்யலையா.. உட்காரு. அன் ஈசியா ஃபீல் பண்ணாதே' என்று சகஜ நிலைக்குக் கொண்டு வந்தார். பிறகு ஒரே கலகலப்பாகியது.

'சரி.. ரதி.. நான் ஆஃபீசுக்குப் போயிட்டு லஞ்சுக்கு வந்திடறேன். லஞ்ச் உங்களோட! ஆஃப்டர் நூன் எங்காவது வெளியே போலாம். ஈவ்னிங் என்னோட ட்ரீட்..' என்றான்.

பாரதி நெகிழ்ந்த பாவத்துடன் தலையை ஆட்டி விடை கொடுத்தாள்.

வண்டியை எடுத்தவன் ஒரு நிமிடம் அருகில் அழைத்து 'ரதி... ரொம்ப அழகா இருக்கே..!' என்றான்.

'தாங்ஸ்' என்றாள் நாணப் புன்னகையுடன்.



அவன் விசிலடித்தான்.

'ஹலோ.. பஃராமைக் கூட்டிட்டு வரட்டுமா?' என்றான்.

'வேண்டாம்...!' என்றாள் அவசரமாக.

'ரதி...' என்று அவன் கேள்விக் குறியாகப் பார்க்க...

'இல்லே.. இந்த வருஷம் .... நான் உங்களோட செலிபிரேட்... செஞ்சுக்கறேன்..' என்றாள்.

'பஃராம்தான் நேற்று எனக்கு விஷயத்தையே சொன்னான்..' என்றான். புறப்பட்டான்.

பிற்பகல் ஓய்வுக்குப் பின் கோனியம்மன் கோவிலுக்கும் தண்டு மாரியம்மன் கோவிலுக்கும் அழைத்துப் போனான். அதற்குப் பின் பீப்பிள்ஸ் பார்க் ஹோட்டலில் இரவு விருந்து கொடுத்தான்.

இரண்டு பேரும் ஒருவரை ஒருவர் கேலி செய்து கொண்டும் சிரித்துக் கொண்டும் நேரம் செலவழித்ததை அம்மா நிறைவோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

மிக மகிழ்ச்சியாக வீடு வந்து சேர்ந்தார்கள்.

இரண்டு பேரும் மகிழ்ச்சியாகச் சிரித்தபடி அறைக்குப் போவதை அம்மா ஹால் சோஃபாவில் அமர்ந்தபடி மன நிறைவோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

* * *

இரவு சற்றுநேரம் கழிந்த பின்பு..

பாரதியின் அறையில் சத்தமே இல்லை. விளக்கும் எரியவில்லையே என்று எட்டிப் பார்த்தான் ரவிபாரதி.

அவளைக் காணவில்லை திடீரென்று மனதில் அந்த எண்ணம் தோன்ற தனது அறை பால்கனியில் இருந்து



எட்டிப் பார்த்தான்.

கீழே தோட்டத்தில் நிலவின் ஒளியில் சிலைபோல சிமெண்ட் பெஞ்சில் அமர்ந்து கொண்டிருந்தாள். முகத்தில் புன்னகை உறைய இறங்கி அவளைத் தேடிப் போனான்.

'என்ன... ரதி! இயற்கையோடு நட்பா? தூக்கமில்லீட்டா நீ ?' என்று சிரித்தவன் அவள் முக பாவம் பார்த்து சற்றே திகைத்துப் போனான்.

அவள் சற்றும் எதிர்பாராத விதமாக அவள் குலுங்கி அழுது விட்டாள்.

'தாங்ஸ்... ரவி .. நீங்க இப்படி என் பிறந்த நாளைக் கொண்டாடுவீங்கன்னு .. நான் எதிர் பார்க்கலை' என்று குழறினாள்.

'ஹேய்! நான்தான் அன்னைக்கே சொன்னேனே. ஃப்ரெண்டுன்னு..' என்றபடி லேசாக இடக்கையால் அணைத்துத் தோளில் சாய்த்துக் கொண்டான்.

'ரதி..! உன்னோட கழிஞ்ச ஒரு வருஷம் உண்மையாலே ரொம்ப வேகமா ஓடிப் போச்சு. நீ ரொம்ப நல்ல பெண் ரதி. ஸ்மார்ட் லேடி. உன்னை எனக்கு ரொம்பப் பிடிச்சுப் போச்சு. இப்ப இல்லே நாளைக்கு என்ன நடந்தாலும். ஒவ்வொரு வருஷமும் உன் பிறந்த நாளுக்கு வந்துடுவேன்.. என்ன...?' என்றான்.

அவள் கண்களைத் துடைத்துக் கொண்டே தலையாட்டினாள்.

'எனக்கும்தான் ரவி.. அம்மா.. அப்பா போனதுக்கு அப்புறம் இந்த ஒரு வருஷம்தான் நான் லோன்லியா ஃபீல் பண்ணாம இருந்தேன். இந்தப் பிறந்த நாளை நா எப்பவும் மறக்க மாட்டேன். தாங்ஸ் ரவி! என்று

அவன் தோளில் முகம் புதைத்துக் கொண்டாள்.

'ஹேய்.. தர்ஸபிப் பாப்பாவா நீ ? ஃபைவ் ஸ்டார் சாக்லேட் வாங்கித் தரட்டுமா?' என்று அவன் கிண்டல் செய்து சிரிக்க,

'என்னைச் சொன்னீங்க ? நீங்க ரொம்ப ஹாப்பி மூட்ல இருக்கறப்ப... ஐஸ்கிரீம் வாங்கி ரசிச்சு சாப்பிடுவீங்களாம். அப்ப என்ன வேணா சாங்ஷன் வாங்கிடலாம்னு உங்க ஆஃபீஸ்ல ஒரு ரகசிய ஜோக் இருக்கு தெரியுமா?'

'அடப்பாவிங்களா... இதையெல்லாம் உங்கிட்ட சொல்லிட்டாளுங்களா?' என்று அவன் ரசித்துச் சிரித்தான்.

'பல்ராம்தான்...' என்று அவள் முணுமுணுக்க சட்டென்று

'ரதி .. உனக்கும் .. பல்ராமுக்கும் ஏதாவது பிரச்சினையா?' என்றான் தீவிரமான முகபாவத்துடன்.

'இல்லை ... ரவி.. நம்ம ஒப்பந்த காலம் முடிய கொஞ்சகாலம் தானே இருக்கு. நான் பல்ராம்கிட்ட ஒரு விஷயம் சொன்னேன்.' என்றாள்.

'என்ன விஷயம்? என்றான் விசித்திரமான பார்வையுடன்.

'என்னால என்னைப் பாத்துக்க முடியும் என்னதான் உறவுக்காரப் பொண்ணுன்னாலும் டைவர்ஸான பொண்ணை ஏத்துக்கிறதுல அவரோட குடும்பத்தில சிக்கல்கள் வரும். பல்ராம் அத்தானோட குடும்பம் முழுக்க அவனைத்தான் சார்ந்திருக்கு. அதனால... தீர்க்கமா யோசிக்கச் சொன்னேன் .. அதோட....'

'அதோட ....'

'எனக்கு பல்ராம் அத்தான்.. மேல என்ன



முடிச்சி செய்யும் அந்த மாதிரி ஈடுபாடு வரலே... ஆனா.. நன்றியுணர்ச்சிதான் அதிகம்னு தோணுது' என்றாள்.

'ஓ...!' என்றான் அடங்கிய குரலில்.

'அந்த லதாதான்....அத்தானுக்கு ரொம்ப ஏத்த பொண்ணுன்னு .. எனக்குத் தோணுது..' என்றாள்.

'ம்...!' என்று இருந்து அவன் விஷயத்தை உள்வாங்கிக் கொண்டான், பிறகு

'ரதி .... பல்ராம் ரொம்ப வருத்தப்படுவான்' என்றான்.

'ஆமா.. ரவி.... அந்த வருத்தம் கொஞ்ச நாள்ல சரியாயிடும் ஆனா.. பொருந்தாமக் கல்யாணம் ஆனா. வாழ் நாள் முழுக்க இல்ல.. வருத்தப்படணும்'. என்றாள்.

'அதுவும் கரெக்ட்தான் ..' என்று ஒத்துக் கொண்டான்.

'கிட்டத்தட்ட.... நானும் . அப்படித்தான் ஸ்வப்னா.. கிட்டே சொல்லிட்டேன்...' என்றான் .

'வ்வாட்.....?' என்றாள்.

'ஆமா.. ரதி ஷி இஸ் எ ஸ்லீமர் என்னைப் பொறுத்த வரை எங்கிட்டே நேர்மையாச் சண்டை போடலாம். லைக் பண்ணுவேன் ஆனா.... ஏமாத்தினா பிடிக்காது. இவளுக்காக அம்மாவை ஏமாத்தர லெவலுக்குப் போனேன். ஆனால், ஷி இஸ் நாட் எ டிசர்விங் கேஸ்!' என்றான்.

'மறந்துருங்க.. ரவி.. ஃபீல் ஃப்ரீ.. ஈஸியா.. இருங்க. உங்க மனசுக்கேத்த ஒரு நல்ல பெண் கண்டிப்பா வருவா ....' என்றாள்.

'உனக்கும் அப்படித்தான்.. இல்லே?' என்றான்

இரண்டு பேரும் சிரித்துக் கொண்டார்கள்.



'நிஜம்மாலே.. ரதி இந்தப் பிறந்த நாள் மறக்க முடியாது இல்லே. தாங்க்ஸ் .. பார் ஆல் தட் யு ஹேவ் டன் ' என்று மறுபடியும் தோளில் சாய்த்துக் கொண்டாள்.

அவளும் அதை நட்பின் ஒரு வெளிப்பாடாக எடுத்துக் கொண்டு அவன் முகத்தை நிமிர்ந்து பார்த்துச் சிரித்தாள்.

அந்த நிலவொளியில் அவள் முகம் பார்க்க அழகாக இருந்தது.

யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ? என்று எண்ணிக் கொண்டான் ரவிபாரதி.

வாஞ்சையாய்ப் புன்னகைத்தான்.

விஜயலட்சுமி அந்தக் காட்சியை ஜன்னல் வழியாக மனநிறைவோடு பார்த்து விட்டு அறைக்குள் திரும்பினார்.

அறையில் ஃபோன் ஒலித்தது எடுத்தார். '

'ஹலோ .. விஜயலட்சுமி.. அம்மாவா.. நான் ஸ்வப்னா.. பேசறேன். ரவிபாரதியின் ஃப்ரெண்ட் ஆனா ரவிபாரதி என்னைப் பத்தி உங்ககிட்டே சொல்லி இருக்க மாட்டார்.'

என்று ஆரம்பித்த ஸ்வப்னா நான்கைந்து நிமிடங்களுக்கு மேல் பேசியிருப்பாள்.

ஃபோனை வைத்து விட்டு அம்மா இருண்டு போன முகத்தோடு கட்டிலில் அமர்ந்தார்.

* * *



## 20

ரவிபாரதி அலுவலகத்தில் வெகு பிஸியாக இருந்தான். பன்னிரெண்டு மணி வாக்கில் அம்மாவிடம் இருந்து ஃபோன் வரவும் சற்றே கலவரமானான். மிகவும் அவசரமாக இருந்தாலொழிய அம்மா அலுவலகத்திற்கு அழைப்பதில்லை.

'என்ன பிராப்ளம் ?' என்றான்.

'பிராப்ளம் எல்லாம் ஒன்னும் இல்லே. உங்க மாமா தண்டபாணி டெல்லியில் இருந்து மைசூருக்கு ஏதோ ஒரு கான் ஃப்ரன்ஸுக்காக வந்திருக்கான். அது முடிச்சுட்டு இன்னைக்கு ராத்திரி நம்ம ஊட்டிகெஸ்ட் ஹவுஸுக்கு வர்றான். நீயும் ரதியும் இன்னைக்கே கிளம்பர மாதிரி ப்ளான் பண்ணிக்குங்க. நாலு நாள் கண்டிப்பா அவனோட இருக்கணுமாம்' என்றார்.

ரவிபாரதி இதை எதிர்பார்க்கவில்லை. தண்டபாணி அம்மாவின் சொந்தத் தம்பி அம்மாவுக்கும் அவருக்கும் இடையே மிகவும் ஒட்டுதல். சென்ற ஆண்டு கல்யாணத்தின் போது வந்து விட்டுப் போனார். மீண்டும் இப்போது வருகிறார். ஆனால் எப்போதும் வருவதாயிருந்தால் முன் கூட்டியே தெரிவிப்பார். ஆனால் இப்போது என்ன திடீரென்று வருகை. அவனுக்கே புரியவில்லை. ஆனால் அம்மாவிடம் அதையெல்லாம் கேட்க முடியாது. 'அம்மா நிறைய வேலையிருக்கு..' என்றான் முணுமுணுப்பாக.

'என்னை என்ன பண்ணச் சொல்றே?' தம்பி பிடிவாதம்தான் தெரிஞ்சதாச்சே. உன்னோடவும் மருமகளோடவும் இருக்கணுமாம். எப்பவுமே என்ன பணம்,

பிளினைஸ்னுகிட்டு கொஞ்ச நேரம் சொந்த பந்தத்து கூடயும் இருக்காரும்கறான் என்றார்

'சரிம்மா.. ரதி கிட்டே..?' என்று இழுத்தான்.

'அதெல்லாம் சொல்லியாச்சு உனக்கும் சேர்த்து பேசி பண்ணிகிட்டிருக்கா..' என்றார் விஜயலட்சுமி.

அவன் சட்டென்று நகைக்கவைக்குத் தாயினான். 'அது சரி.. ரெண்டு பெரிய இடங்களும் பேசி முடிவு செஞ்சதுக்கப்புறம்.. நான் என்னத்தைச் சொல்ல?' என்றான்.

'அப்படியே .. சொன்னாலும் எடுபடாது மகனே..' என்று அவரும் சிரித்தார்.

★ ★ ★

ரவி வேகமாகக் காரை ஓட்டிக் கொண்டிருந்தான்.

'ரவி என்ன இப்படி வேகம்? மலைப்பகுதியின்னா ரசிச்சு நிதானமா ஓட்டனும் ..' என்றாள் பாரதி.

'உத்தரவு.. மேடம் ..' என்று சிரித்து விட்டு ஸ்லோ செய்தான்.

ரதி.. 'ஹனிமூன் டிரிப்னு வந்தமே.. ஞாபகம் இருக்கா?'

'ஆமா! செம ஜாலியா இருந்தது.'

'ஆமா.. இப்பவும் ஜாலி ஆக்கிக்க வேண்டியதுதான். இப்படி சேர்ந்தாப்ல ஹாலிடே நாலு நாள் கிடைக்கனுமே.. வி வில் மேக் மோஸ்ட் ஆஃப் த ட்ரிப்' என்றான்.

பாரதி திடீரென்று தலையைச் சாய்த்து அவனைப் பார்த்து 'ஏன்.. ரவி.. உண்மையான ஹஸ்பெண்ட் அண்ட் வைஃபா இருந்தா என்ன பேசிப்பாங்க ?' என்றாள்.

'என்ன பேசிப்பாங்க?'

'ரவி.. உங்க பேர்லயே என் பேர் வருது



தெரியுமா?' 'ரவிபாரதியோட.. ஃபர்ஸ்ட் லெட்டர்... லாஸ்ட் லெட்டரையும் சேருங்க ரதின்னு வரும்.. என்று சொல்லிக்குவமோ..' என்றாள்.

'அட.. ஆமா.. என்று அவன் சிரித்தான் பிறகு என் பங்குக்கு நானும் ஒன்னு சொல்லட்டுமா?' என்றான்

ரவி. 'சொல்லுங்களேன்' என்றாள ரதி 'ம்..' என்று சற்று யோசித்தான் பிறகு சொன்னான்.

'ம்.. ரெண்டு பேரு பேர்லயும் பாரதி வருது' என்றான்.

'ஹைய்யோ! இது ரொம்ப நல்லாருக்கு' என்று கலகலவென்னச் சிரித்தாள் ரதி .ரவிபாரதி அதை ரசித்துப் பார்த்தான்.

'ஆல் ஏ... பிரண்டு.. ஒன்னு சொல்லலாமா ரதி'

'ம்..'

'யு ஆர் எ.. வெரி ஸ்வீட் லேடி ரதி அண்ட் பியூட்டிஃபுல் ஆல்சோ அதிலயும் சிரிக்கும் போது ரொம்ப அழகு தெரியுமா?'

'ஓ... தாங்க்ஸ் ரவி!' என்றாள் சற்றே வெட்கத்துடன்.

பிறகு அவளும் தயக்கமான குரலில் 'ரவி! நீங்களும் ரொம்ப ஹேண்ட்ஸம்தான் அதிலயும் உங்க மனப்பிரச்சினைகளெல்லாம் ஒரு பக்கம் வச்சுட்டு.. பிளினைஸ இந்த அளவுக்குக் கொண்டு வந்துருக்கீங்கன்னா யு ஆர் ரியலி ஸ்மார்ட்' என்றாள்.

'தாங்க்யூ... மேடம் என்று அவனும் சற்றே முகம் சிவந்தான். அதை மறைத்துக் கொள்வதற்காக ஓ.. கே.. ஓ.கே.. பழைய பாயிண்டுக்குகே வர்லாமா? ரதி.. அம்மா



எனக்குப் பேர் வச்சப்ப.. பாரதிங்கற பேரு வரனும்கறதுக்காகவே ரவி பாரதின்னு வச்சாங்களாம்' என்றான்.

'ரவி அத்தை பாரதியார் கவிதைகளை ரொம்ப ரசிக்கறாங்க.தன்னோட கஷ்டங்களையெல்லாம் தாங்கிக்க பாரதியின் கவிதைகள் ரொம்ப ஹெல்ப் ஃபுல்லா இருந்துக்கங்கறாங்க' என்றாள்.

'உனக்கும் அப்படித்தானா?'

'ஆமா .. ரவி.. ஆனா நான் கொஞ்சம் ஃபிலாஸபி படிப்பேன். அப்புறம் இப்பல்லாம்.. செல்ஃப் இம்ப்ருவ்மெண்ட் புக்ஸ் ரொம்பப் பாப்புலரா இருக்கு நா அப்பவே படிப்பேன்..' என்றாள்.

'எப்பவோ?'

அவன் சிரித்தான். பிறகு 'ஏழெட்டு வருஷங்களாகவே..!' என்றாள்.

'ரதி' என்றான் சிந்தனையுடன்

'ம்..?'

'ரதி உனக்கு பல்ராம் சரிவராதுதான் ஆனா.. நீ வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கறப்ப ரொம்ப கவனமா இருக்கனும் அட்லீஸ்ட் .. உன் ரசனைகளைப் புரிஞ்சுக்கறவனாவது இருக்கனும்' என்றான்.

'சரி அப்படி செலக்ட் செய்யும்போது நீங்களே பேசி எனக்கு சரிவருமான்னு சொல்லுங்க..' என்றாள்.

'கண்டிப்பா..!' என்றான்.

சற்று நேரம் அமைதியாகக் கழிந்தது .பிறகு அவள் மறுபடியும் சிரித்தாள்.

'என்ன ரதி?'

'இல்லே.. நம்ம பேரை வச்சுகிட்டு அனைவல்



செஞ்சமே ..? அதில் நீ பாதி பாதின்னு கூட நாம வசனம் பேசலாம்.'

அவன் புரியாமல் பார்க்க அவள் தொடர்ந்தாள். 'இல்லே.. உங்க பேர்லயும் பாதிங்கறது வருது என் பேர்லயும் வருதே.. என்றாள்' இருவரும் சிரித்தார்கள்.

அதற்குள் அவன் கவனம் எதிரே தெரிந்த மலையின் அழகில் திரும்பியது.

'ரவி .. இந்த உயரமான மரங்கள் தவழ்ந்து போற மேகம்.. நடுங்க வைக்கிற குளிர்.. எல்லாம் ரொம்ப சுகமா.. இல்லே..? ரியலி வெரி நைஸ்' என்று சால்வைக்குள் தன்னை ஒடுக்கிக் கொண்டு அவனைப் பார்த்து முகம் மலரச் சிரித்தாள் ரவிபாரதி.

உதகமண்டலம் நகரைத் தொட்டது கார்.

'ரதி மாமா.. ரொம்ப கெட்டிக்காரர் எங்கயாவது ஓட்டல் இருந்தா ஈஸியா கண்டு பிடிப்பார். அதனால் கொஞ்சம் சில சமயங்களிலே ஓவர் ஆக்ட் பண்ண வேண்டியிருக்கும்!' என்றான்.

'நோ.. பிராப்ளம்.. ரவி!' என்றாள் ஆனால் பிரச்சினையே அதில்தான் ஆரம்பிக்கப் போகிறது' என்பது அவளுக்குப் புரியவில்லை.

★ ★ ★

'வாடா! பயலே!' என்று ரவிபாரதியின் முதுகில் ஒன்று வைத்தார் தண்டபாணி. அவன் பதிலுக்கு செல்லமாக அவரது தொந்தியில் ஒரு குத்துக் குத்தினான்.

'என்னடா.. பயலே! ஆசையா வளர்க்கறேன் இப்படிப் பண்றே!' என்று அவர் ஆதூரத்துடன் தொந்தியைத்

தடவிக் கொள்ள ரதி கலகலவென்று சிரித்தாள்.

'என்னம்மா! இந்தச் சிரிப்பிலயா இந்தப் பய மயங்கிப் போனான் ?' என்று அவர் கேட்க அவள்

'அவரைத்தான் கேட்கணும்!' என்றாள்.

'சிலதெல்லாம் கேட்கக் கூடாது மாமா!' என்றான் ரவிபாரதி.

'அதே அழுத்தம் அப்படியே இருக்கு அழுத்தக்காரப் பய..' என்று வாஞ்சையாகச் சிரித்தார்.

இரட்டை நாடி உடம்பும், கலகலப்பான சுபாவமுமாகக் கவர்ந்தார் தண்டபாணி.

அவருக்கும் ரவிபாரதிக்கும் இடையே ஒரு விதமான ஒட்டுதல் இருந்ததைப் புரிந்து கொண்டாள். பாரதி அவருக்கும் அவரைப் பிடித்து விட்டது அவளும் அவருக்கு இணையாக அரட்டை அடிப்பதை சுவாரசியமாகக் கவனித்தான். ஒரு கட்டத்துக்குப் பிறகு அவனும் கலந்து கொள்ள ஆரம்பித்தான். ஒரு நாள் முழுக்கக் கலகலப்பாக ஓடியது.

இரவு எட்டு மணிக்கு சாப்பிட அமர்ந்தபோது ரவிபாரதி ,

'மாமா.. எனக்கும்.. ரதிக்கும் என்ன வாங்கிட்டு வந்தீங்க.. ?' என்றான்.

'ஒண்ணும் வாங்கிட்டு வர்லடா..' என்றார் குற்றம் செய்த சிறுவனைப் போல.

'அம்மா கரெக்டாத்தான்.. உங்களை .. தண்டம் தண்டம்னு கூப்பிடறாங்க..' என்றான். சிரித்தபடி

சூடான பூரியை எடுத்து வாயில் அழுத்தியபடி

'அது.. அக்கா.. உடனேமுறைப்பட்டு வான்னு 'போன் செய்தாளா ஃப்ளைட் பிடிச்சு வந்தேனா ? அதுதான்..?'



என்றார்.

ரவிபாரதியின் பார்வை கூர்மையாகியது .'எங்கே .. இருந்து..?' என்றான்.

அவர் சட்டென்று சுதாரித்துக் கொண்ட மாதிரி இருந்தது.

'தான்ஃப்ரான்ஸ் முடிஞ்சதாண்டா!' என்றார் அலட்சியமாகச் சொல்வது போல். ஆனால், அதற்குப் பிறகு பேச்சைத் திசை மாற்றி விட்டார்.

தங்கள் அறைக்கு வந்தவுடன் 'ரதி.. கொஞ்சம் நடந்துட்டு வரலாம்!' என்றான்.

'இந்தக் குளிர்லயா ?'

'ஆமா .. பேசணும்! மிட்டாய் வேண்டும் என்று அடம்பிடிக்கிற குழந்தை போல்' அவன் நிற்பதைக் கண்டு அவளுக்குச் சற்றே சிரிப்பு வந்தது. போனார்கள் கொஞ்ச தூரம் போனதும் ரதி! அம்மா 'போன் பண்ணி மாமாவை வரவழைச்சிருப்பாங்க.. போலருக்கு! என்றான்.

ஏன் ?

தெரியலே! எதுக்கும் ஜாக்கிரதையாய் இருக்கணும்! என்றான்.

'அவரு முன்னால நான் கொஞ்சம்... தொட்டுக் கிட்டுப் பேசுவேன் பொறுத்துக்கணும்.. ஜஸ்ட் ஒரு ஃப்ரெண்டா சகிச்சுக்கோ.. சிரிச்சுகிட்டிருக்கணும்' என்றான்.

'அது சரி! சும்மா பொய்யா எப்படி சிரிக்கிறது?'

'சரி.. நிஜமாவே சிரி எத்தனை ஜோக் வேணும்..' கேள்.. சொல்றேன். என்று அவன் அள்ளி விட அவள் நிஜமாகவே சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாகிப் போனாள். சற்று நேரத்தில் அவளும் தனக்குத் தெரிந்த ஜோக்குகளை எல்லாம் சொல்லத் திரும்ப வரும்போது அவள் தோளில்



தனது இடது கையைப் போட்டுக் கொண்டு வாய் மலரச் சிரித்துக் கொண்டு அவர்கள் வந்து சேர்ந்த போது மாமா ஜன்னல் வழியாகப் பார்த்துக் கொண்டு நின்றார்.

அறைக்கு வந்தவுடன் 'சரி.. ரதி.. நீ தூங்கு..' என்று கட்டிலின் அந்தப் பக்கம் படுக்கச் சொன்னான்.

மாமா தானாகப் புறப்பட்டு வந்தமாதிரி அம்மா சொன்னார்கள். ஆனா அம்மா ஃபோன் செய்து வந்ததாக மாமா சொன்னார்கள் என்று அவன் யோசித்துக் கொண்டிருக்கையில் மாமா வந்தார் அவன் எழுந்து போனான்.ஹாலில் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்

'என்னடா.. பயலே.. அந்தச் சிரிப்பு சிரிக்கீங்க!' என்றார்

'மாமா..! என்ன நீங்க! இதெல்லாம் கேக்கறீங்க..' என்று நடித்தான் ரவிபாரதி.

'அப்புறம்.. ஏண்டா.. அக்கா கவலைப்பட்டா ? ' என்று தன்னையும் மீறி உளறி விட்டார் தண்டபாணி.

'எதுக்காக?' என்றான் ரவிபாரதி உணர்வுகள் எதையும் காட்டாமல்.

'சரி.. அதை.. விடு.. அது யாருடா.. ஸ்வப்னா ?' என்று மாமா தீவிரமாகக் கேட்கவும்..உடுறானான் ரவிபாரதி.

'அவளா.. அவள்..!' என்று அவன் சொன்ன பதிலைக் கேட்டு அவர் சமாதானமாகி விட்டார். ஆனால் அவன்தான் சமாதானம் ஆகவில்லை.

★ ★ ★



## 21

முகம் இறுக அறைக்குள் வந்த ரவிபாரதியைப் பார்க்க அச்சமாகக் கூட இருந்தது பாரதிக்கு.

'என்ன ரவி ?' என்றாள்.. அவன் பதிலே பேசவில்லை. அவள் இருப்பை உணர்ந்தவனாகவே தெரியவில்லை. ஆனால், அவள் கேள்விக்கு பதில் விரைவாகவே தெரிந்தது.

அவன் ஸ்வப்னாவை செல் ஃபோனில் அழைத்தான். அவள் அந்தப் பக்கம் சிரித்தாள்.

'நீங்க கூப்பிடுவீங்கன்னு தெரியும் ரவி' என்றாள்.

'அம்மா கிட்டே பேசினியா?' என்றான். அவள் ஏதோ மழுப்பலாகச் சொல்ல..

'பேசியிருக்கே.. மழுப்பாதே.. பேசியிருக்கே. நான் கூப்பிடுவேன்னு தெரிஞ்சதில்ல.. இன்னொண்ணும் தெரிஞ்சுக்க.. நா ரொம்ப கௌரவமா ஒதுங்கிக்க விரும்பறேன்.. உனக்கு.. அது புரியலேன்னா.. நீ வேற ரவிபாரதியைப் பார்ப்பே. உன்னால தாங்க முடியாது.. ஸ்வப்னா.. மானம்.. மரியாதை போயிரும்' என்றான் இரும்புக் குரலில் அந்தக் குரல் கேட்ட பாரதிக்கே ஒரு கணம் முதுகுத் தண்டு சில்லிட்டது.

'வேண்டாம் .நீ நடுத்தரக் குடும்பத்துப் பொண்ணு! என்ன இருந்தாலும் பெண்கள் வல்லறிஞர்தான்...எங்க அடிச்சா.. எங்க வலிக்கும்னு எனக்கும் தெரியும் பேசாம இருந்தே.. வீ பார்ட் அஸ் ஃப்ரெண்ட்ஸ்.

ஏதாவது ட்ரிக் செஞ்சே.. யு வில் ஃபேஸ்.. எ சொல்யூ... எனிமி..' என்றான்.

அந்தப் புறம் அவள் நடுங்கிப் போனாள். உடனே சமாளித்துக் கொண்டாள்.

'ஓ.கே.. ரவி.! வி பார்ட் அஸ் ப்ரெண்ட்ஸ். ஆனா.. உங்க ரெண்டு பேரையும். நிலைச்சா எனக்கு ரொம்ப பாவமா இருக்கு உங்களை நீங்களே.. ஏமாத்திக்கறீங்க..' என்றாள்.

'தட்ஸ் நன் ஆஃப் யுவர் பிஸினெஸ்' என்றான். ஆஃப் செய்தான்.

மிகக் கோபமாக வாய்க்குள் அவளைத் திட்டிய படி திரும்பிய ரவிபாரதியின் முகபாவம் தன்னை அச்சத்துடன் வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கிற பாகீரதியைப் பார்த்தவுடன் மாறியது.

சிநேக பாவம் தோன்றச் சிரித்தான். 'என்ன.. ரதி.. பார்க்கறே? அவளுக்கெல்லாம் இப்படிப் பேசினாத்தான்.. புரியும்..' என்று சற்றே வேகமாகத் திரும்பினான்.

சோஃபாவின் பின்புறமாக நீட்டிக் கொண்டிருந்த இரும்புக் கம்பியொன்று பாண்ட்டையும் கிழித்துக் கொண்டு காலில் காயம் செய்து விட

'ஹேய்!' என்று அலறி விட்டான். ரதி பதைபதைத்து எழுந்து அவன் காலைப் பிடித்தாள். இரத்தம் குபுகுபுவென்று பொங்கியது.

* * *

டாக்டர் காலைப் பிடித்துக் காயத்தை ஆராய்ந்து கொண்டிருந்தார். அந்த ஸ்டீல் சாதனத்தால் தனியாகத் தொங்கிக் கொண்டிருந்த தோலை எடுத்துப் பார்த்தான்.



நிலாப்பிறை போல் ஒரு அங்குல ஆழத்துக்குக் காயம். மரத்துப் போவதற்கு ஊசி போடாமல் கையாண்டதால் ரவிபாரதிக்கு வலி உயிர் போனது.

பல்லைக் கடித்துக் கொண்டு கண்கள் கலங்க அருகில் நின்ற பாகீரதியின் தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டான். பாகீரதி சட்டென்று அவன் தலையை இடக்கரத்தால் தாங்கிக் கொண்டாள்.

அவள் கண்களிலிருந்து கண்ணீர் கொட்டியது.

'டாக்டர்! அவருக்கு ரொம்ப வலிக்குது!' என்று தவித்தாள்.

'ஐயோ! நீங்க என்னம்மா.. அவருக்கு மேலே பயப்படறீங்க .. கொஞ்சம் பொறுங்க இப்ப தையல் போட்றலாம்..' என்று மரத்துப் போக ஊசியைப் போட்டார்.

'நீங்க வெளியே இருங்க!' என்று அனுப்பி விட்டார்.

வெளியே கண்களில் கண்ணீர் வழிய கலங்கிப் போனாள் பாகீரதி.

'அங்கிள்! அவரு இப்படித் துடிக்க நான் பார்த்ததே.. இல்லை.. வலியில துடிக்கறாரு. என்று அழுதாள்

அடடா! என்னம்மா.. நீ பயப்படாதே! கொஞ்சம் ஆழமான காயம்.. இப்பத் தையல் போட்டுடுவாங்க..' என்று ஆறுதல் படுத்தினார்.

தையல் போட்டார்கள் ரெண்டு நாட்களுக்குக் காலை சற்றும் அசைக்காமல் வைத்துக் கொள்ள வேண்டும் என்றார்கள்.

கெஸ்ட் ஹவுஸுக்கு வந்தவுடன் களைத்துப் போன அவன் முகம் பார்த்து மறுகிப் போனாள் பாகீரதி.

'ரவி.. காலை அசைக்காம வச்சுக்குங்க' என்று



காலுக்கு அணைவாகத் தலையணைகளை வைத்தாள். ஆடை மாற்றிக் கொடுத்தாள். சற்றுக் கழித்து ஆப்பிள் துண்டுகளை போட்டு சாப்பிடச் செய்தாள்.

'எவ்வளவு ரத்தம்.. போயிருக்க.. ரவி' என்று அங்கலாய்த்தாள். களைத்துப் போய் படுக்கையில் சாய்ந்து கொண்டவனுக்கு மாத்திரைகள் கொடுத்தாள்.

தூக்க மாத்திரையும் குடுத்திருக்காரு என்று சொன்னாள்.

அவன் உறக்கத்தில் ஆழ்ந்து போகும் வரை அருகில் அமர்ந்திருந்தாள். சீரான மூச்சு விட்டபடி உறங்குகிற அவனது நிர்மலமான முகத்தைப் பார்த்த அந்தக் கணத்தில் அந்த உண்மை அவளுக்குப் புரிந்து போனது. தான் அவனை முழுமையாக நேசிக்கிறோம் என்பது.

திடுக்கிட்டு எழுந்தாள். தான் ஏன் பல்ராமை மறுத்தோம். ஏன் திருமணமே வேண்டாம் என்ற முடிவு செய்தோம். அவனுடைய நட்பையும்.. அருகாமையையும் ஏன் தேடினோம்?.. என்பதெல்லாம் புரிந்தது. திகைத்து போனாள். நடக்கிற காரியமா இது? என்ற எண்ணம் தோன்ற ஊமையாய் அமர்ந்திருந்தாள். அவள் கண்களில் கண்ணீர் நிறைந்து வழிந்தோடியது.

தன்னையும் மறந்தவளாய் அவன் நெற்றியில் முத்தமிட்டு நிமிர்ந்தாள். அருகில் தண்டபாணி.

சட்டென்று அவர் தோளில் சாய்ந்து கொண்டு கதறி விட்டாள்.

'ரிலாக்ஸ்.. ரதி.. ரிலாக்ஸ்..' என்று ஆசுவாசப்படுத்தி ஆறுதல் சொல்லி சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார். 'நீயும் படும்மா!' என்று அவர் நகர்ந்ததும் பிறகுதான்.. அவள் அந்த முடிவைச் செய்தாள்.



இனி இருக்கிற.. இந்த மாதத்திலாவது அவன் அருகாமையை.. நட்பை முழுமையாக அனுபவிப்பது. அந்த நினைவை வைத்துக் கொண்டு.. இனி வருங்காலத்தை ஓட்டிக் கொள்ள வேண்டியது.. என்று.

அந்தப் பெரிய படுக்கையிலேயே சற்று ஓரமாக ஆனால் கவனமாக படுத்துக் கொண்டாள். அவன் முகத்தில் பார்வையைப் பதித்து.. அவன் தோற்றத்தை முழுமையாக மனதில் நிறைத்து கொண்டே வெகுநேரம் படுத்திருந்தாள்.

'ஹலோ.. குட்மார்னிங்' என்று சுறுசுறுப்பாக எழுப்பியவளைப் பார்த்து களைப்பாகப் புன்னகைத்தான் ரவிபாரதி.

நகைச்சுவை பேசிக் கொண்டே அவனுக்குப் பணிவிடை செய்தாள்.

'ரதி.. ப்ளீஸ்!' என்று அவன் சங்கடத்துடன் தடுத்த போது

'நோ.. மிஸ்டர்.. ரவி! நான் இப்ப ஒரு நர்ஸ்.. ஐ ம் ஜஸ்ட் ஹெல்பிங் யூ..!' என்று குளிக்க. உடை உடுத்திக் கொள்ள.. என்று உதவிகள் செய்தாள்.

'சாரி! ரதி.. மாமா சந்தேகப்படுவார்.. ஷே வழியில்லே. வி வில் ஹேவ் டு ஷேர் த பெட்' என்றபோது.

'அபயம் அளித்தோம்...!' என்று சிரித்தாள்.

மாமா வேறு அவள் பட்ட பாட்டையெல்லாம் அவனிடம் சொல்ல நெகிழ்ந்து போனான்.

'ரொம்ப.. பயந்துட்டியா. ரதி!' என்றான்

'ஆமா.. ரவி! உங்களை நான் இப்படிப் பார்த்ததேயில்லை. யு வேர் வெரி டயர்ட்.. என்றாள்.

தாங்க்ஸ்.. ரதி. ஃபார் ஆல் தட் யு ஆர் -விங்' என்றான்.

'சார்.. பிரண்ட்ஸுக்குள்ள என்ன? நோ

'ஃபர்மாலிட்டீஸ்' என்றாள்.

சற்றும் நலுங்காமல், குலுங்காமல் அவள் காலைத் தன் மடியின் மேல் வைத்துக் கொண்டு உள் வந்து சேர்ந்த போதும், கீழேயே விருந்தினர் அறையில் அவளை இருக்கச் செய்து முழுக்க முழுக்க கவனித்துக் கொண்ட போதும் ரதி உள்ளுர மகிழ்ந்தாள். அவன் அருகாமையில் ஒவ்வொரு கணத்தையும் அனுபவித்தாள்.

நான்கைந்து நாட்களுக்குப் பிறகுதான் அலுவலகம் போனான். மாலை ஐந்து மணிக்கே அவளை வரச் சொல்லிவிட்டு வாசலிலேயே தவிப்புடன் நின்று கொண்டிருந்தாள்.

காரிலிருந்து இறங்கி சற்றே மெதுவான நடையில் வந்த ரவிபாரதி, 'ஐயோ! ரதி.. ஏன் இப்படி அலட்டிக்கறே' என்று சிரித்தான்.

'உங்களுக்கென்ன தெரியும், நான் இங்கே தவிச்ச தவிப்பு' என்று முணங்கினாள்.

அம்மா இதையெல்லாம் கண்டும் காணாதது போல் கவனித்துக் கொண்டதை இருவருமே கவனித்துக் கொள்ள வில்லை.

* * *

'ரதி! இந்தச் சின்னக் காயத்துக்கொல்லாம் அலட்டிகிட்டிருந்தா.. வேலையாகாதும்மா..' என்று தையல் பிரித்த அன்றைக்கே அவன் மாடியறைக்கு வந்து விட்டான்.

ஊட்டியிலிருந்து வந்ததற்குப் பிறகு புத்தகங்களைத் தேடிக் கூடப் போகவில்லை ரதி. ரவி வீட்டில் இருந்தால் அவனுடனேயே நேரம் கழித்தாள்.

தையல் பிரித்தபோது கூட சுரீரென்று வலிக்க அவனுக்கு மேல் அவள் முகம் கனித்தாள்.



'ஐயோ! ரதி.. இப்படித் தாங்கித் தாங்கி என்னைக் குழந்தையாப் பண்ணிடாதே' என்று அவன் தடுக்கத் தடுக்க அறைக்கே சாப்பாடு..மற்ற வசதிகள்.. என்று எல்லாவற்றையும் செய்து கொடுத்தாள். ஆனால், முன்னைப் போல் அவனுக்கும் சமமாக வாயடிக்கவில்லை. அவன் ஏதாவது கேலியாகச் சொல்லும்போது வெட்கத்துடன் லேசாகப் புன்னகைத்துக் கொண்டாள்.

அவன் பார்க்காதபோது அவன் முகத்தைப் பார்ப்பதும் அவன் பார்வையைத் தவிர்ப்பதும் ஆக இயல்பில் சற்றே மாறியிருந்ததைப் பார்த்து அவனும் கூட யோசனையிலாழ்ந்தான்.

மாமா அவள் தவித்த தவிப்பையெல்லாம் வேறு சொல்லியிருந்தார்.

'என்ன ரதி! ஊட்டிக்குப் போய் வந்ததில் இருந்தே ஒரு மாதிரியிருக்கே?' என்று கேட்டான் ரவி.

'இல்லே! உங்களுக்குக் காயமானது எனக்கு ஷாக் ஆயிடுச்சு!' என்றாள் முணுமுணுப்பாக.

'ஃபர் கெட் இட் மேடம்' என்று தேறுதல் சொன்னான். 'இந்த ஒரு வாரமா நீதான் டென்ஷன்ல தூங்காம இருக்கே. நீ போய்த் தூங்கு' என்றான்.

இப்போது நடு அறையில் இருந்த கட்டிலிலேயே படுத்துக் கொண்டான் பாகீரதி ரவிக்கு ஏதாவது தேவையென்றால் உடனே எடுத்துக் கொடுக்க வேண்டுமாம்.

ரவிபாரதிக்கு சிரிப்பு வந்தது. ஆனால் அவள் அன்பை அலட்சியப்படுத்த விரும்பாமல் அவள் பணிவிடைகளை அனுமதித்தான்.

அன்றைக்கு......

அவள் உறங்கியதற்குப் பின் மெதுவாக இறங்கி



அம்மாவிடம் வந்தான்.

'அம்மா.. இந்த ரதியோட தொல்லை.. தாங்கவே போங்க. நடக்கவே விடமாட்டேங்கறா. அவளைத் தூங்க வச்சுட்டு நான் கீழே வந்துட்டேன்' என்று அம்மாவின் அருகில் அமர்ந்து கொண்டான்.

'ஐயோ! அதையேன் கேக்கறே... அந்த ஊட்டி ஹவுஸ் கீப்பரைப் புடிச்சு.. வாங்கு வாங்குன்னு வாங்கறா. ராமையாவைக் கூப்பிட்டுக் கேளு' என்றார் அம்மா.

ராமையாவும் அப்படியே அவளைப் போலவே பேசிக் காட்டினார்.

'ஆமா.. தம்பி! சின்னையாவோட மாமா.. அந்த பெட்ருமில தங்கியிருக்காருன்னா சின்னவர்.. இந்த ரூம்லதானே தங்குவாருன்னு தெரியுமில்லே, எல்லாப் பொருளும் சரியா இருக்கான்னு பாக்க வேண்டாமா? அதென்ன, ஷோஃபாக் கம்பி அப்படி நீட்டிகிட்டிருக்கு.. கவனிக்க வேண்டாம்...? இன்னும் கொஞ்சம் காயம் ஆழமாப் போயிருந்தா.. எலும்பில ஃப்ராக்சர் ஆகியிருக்கும்? எத்தனை ரத்தம் போயிடுச்சு தெரியுமா! என்ன பண்ணிகிட்டிருக்கீங்க.. நீங்க அங்கே?' ன்னு ஒரே அர்ச்சனைதான்.'

'பாவம் மனுஷன்.. அரண்டுட்டார்.'

'ஓ...!' என்று ஆச்சரியப்பட்டுப் போனான். ரதி இப்படியெல்லாம் பேசினாளா என்ன? என்று நம்பவேயில்லை.

'இல்லப்பா.. உனக்குக் காயம்னவுடனே ரொம்ப பயந்துட்டா.. ரொம்ப தவிச்சுப் போயிட்டாளாம்., தண்டபாணி சொன்னான். ராத்திரி தூங்கவே இல்லையாம். ' என்று அம்மா சொல்ல அவன் உண்மையில் நெகிழ்ந்து விட்டான்.

அம்மாவிடம் பேசிவிட்டு மேலே வந்தபோது



அவள் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். அவள் கைபட்டு மேஜை மேல் இருந்த டைரி கீழே விழ அவள் திடுக்கிட்டு எழுந்து 'ரவி.. என்ன வேணும் ரவி!' என்று படபடத்தாள்.

'ஒண்ணும் இல்லை! தூங்கு' என்று தட்டிக் கொடுத்து உறங்கச் செய்தான்.

அந்த நேரத்தில் அவளை மீண்டும் எழுப்பி ஒரு விஷயம் பேச வேண்டும் என்று அவனுக்குத் தோன்றியது அந்த நேரம் திரும்பிப் படுத்த அவள் உறக்கத்திலேயே 'என்ன.. ரவி?' என்று முணுமுணுத்தாள்.

'ஒண்ணும் இல்லம்மா அப்புறம் பேசலாம்' என்றான் தான் நினைத்ததை மட்டும் அன்றைக்குச் சொல்லியிருந்தால் பின்னால் வந்த எத்தனையோ பிரச்சினைகளைத் தவிர்த்திருக்கலாம் என்று ரவிபாரதிக்கு அன்றைக்கும் புரியவில்லை.

* * *

## 22

ஒரு வாரம் சென்றிருக்கும்!

விஜயலட்சுமி காரில் ரவிபாரதி புறப்படும் நேரம்.

'ஏம்ப்பா! வர்ற வெள்ளிக்கிழமை நீ ஃப்ரீயாப்பா?' என்று கேட்டார்.

'ஏம்மா....?'

'இல்லே! நம்ம வக்கீல் செந்தில்நாதனை வரச் சொல்லியிருக்கேன். முக்கியமான சில விஷயங்கள் பேசணும்' என்றார்.

உள்ளே சமையலறையில் பாரதியின் முகம் கண்டிப் போனது. இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். ரவிபாரதிக்கும் முகம் ஒரு மாதிரி ஆகிப் போனது.

'ஃபீ பண்ணிக்கிறேன்மா!' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

வழக்கம் போல் பாரதி வழியனுப்ப வந்தாலும் ஒன்றும் பேசவில்லை. அவளும் மௌனமாகவே தலையாட்டி விட்டுக் கிளம்பிவிட்டாள்.

வழியில் தீவிர சிந்தனையிலாழ்ந்தான். வரப்போகிற வெள்ளிக்கிழமை அம்மா உயில் படிக்கப் போகிறார் என்பது புரிந்து விட்டது. ஓராண்டுக்கு முன்னதாகவே செந்தில்நாதன் இப்படி ஒரு விஷயத்தைச் சொன்னதால்தான் இத்தனை ஏற்பாடுகளும் செய்தான். ஆனால், இப்போது எல்லாம் வெறுமையாய்த் தோன்றியது.

அவ்வளவு உற்சாகமாய் இருக்கவில்லை. அதிலும் இப்போது சென்றவாரத்தில் தான் பாரதியிடம் சொல்ல நினைத்ததைச் சொல்லியிருக்க வேண்டும் என்று இப்போது தோன்றியது.

பாரதியின் அறைக் கதவு வரை போனவன் ரதி... உயில் எப்படியானால் என்ன? நீயும் பல்ராமைக் கல்யாணம் செய்வதில்லை என்கிறாய். எனக்கும் ஸ்வப்னாவோடு ஒத்துவரவில்லை. நமக்கு ஒருவரை ஒருவர்பிடித்துத்தான் இருக்கிறது. எத்தனை அரேன்ஜ்ட் மேரேஜ்கள் இப்படித்தானே நடக்கிறது? நாமும் அப்படியே தொடரலாமே? என்று கேட்கலாம் என்று போனான். ஆனால் அவள் எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று தோன்றவே திரும்பிவிட்டான்.



அவளுடைய ஒப்புதல் இல்லாமல் அவளைப் பற்றிய தன்னுடைய உணர்வுகளை அலசிப் பார்ப்பதற்கும் கூட அவன் அச்சம் கொண்டான். ஒரு வேளை உள்ளோட ஒப்பந்தத்துக்கு ஒத்துக்கிட்டதனால தானே, என்னைப் பார்த்து இப்படிக் கேட்டுட்டே என்கிற மாதிரி அவள் திருப்பிக் கேட்டால் எவ்வளவு கேவலமாகி விடும்? சே.. சே.. அவ்வளவு கீழே போய் விடக் கூடாது. என்று எண்ணிக் கொண்டான்.

ஒரு நீண்ட பெருமூச்சு விட்டான். எப்படியும் காலம் தனது திட்டங்களுக்கெல்லாம் கட்டுப்படப் போவதில்லை. நடப்பது நடக்கட்டும், என்று எண்ணிக் கொண்டான்.

* * *

விஜயலட்சுமி.. வேறு வித யோசனையில் இருந்தார்.

ஸ்வப்னாவின் ஃபோன் வந்ததும் முதலில் ஆடிப் போய்விட்டார். ஆனால், அவர் பேசி முடித்த இரண்டு நாட்களுக்குள் மகளையும், மருமகனையும் ஊட்டி அனுப்பி வைத்து விட்டு நீண்ட யோசனையில் ஆழ்ந்தார்.

ஸ்வப்னாவின் நோக்கம் நல்லது இல்லை என்று மட்டும் நன்றாகப் புரிந்தது. ரவிபாரதியும் பாரதியும் ஊரில் இருந்து வந்ததற்குப் பிறகு அவர்கள் இருவரையும் நன்கு கண்காணித்தார். அவர்களுக்கே புரியாத சில விஷயங்களை அவர் உள்ளுணர்வு அவருக்குச் சொன்னது.

தானே அமர்ந்து உயிலின் ஒரு டிராஃப்ட் தயாரித்தார். பிறகு அதைப் பலமுறை படித்துப் பார்த்தபின் ஒரு முடிவுக்கு வந்தார். வரும் வெள்ளிக்கிழமையை அதைப் படிக்கும் நாளாகத் தேர்ந்தெடுத்தார்.



விளைவுகளைப் பார்க்கக் காத்திருந்தார்.

* * *

இன்னும் இரண்டே நாட்கள்!

பாரதிக்கு அதை நினைக்கவே முடியவில்லை. உயில் படித்து முடிந்ததும் சொத்துக்கள் ரவிபாரதியின் கைக்கு வந்ததும் இருவரும் பிரிவதற்காக ஏதேனும் நாடகம் நடத்த வேண்டும்.

ஸ்வப்னாதான் இல்லையென்று ஆயிற்றே. நம் திருமணத்தையே தொடரலாமே என்று அவன் ஒருவேளை கேட்கக் கூடுமோ என்று உள்ளத்தின் ஓரத்தில் ஒரு நப்பாசை இருந்தது. ஆனால், அவனோடு இணையாக நினைப்பதற்குத் தனக்கு என்ன தகுதி இருக்கிறது. நட்பு ரீதியிலே அவன் பழகுவதே பெரிய விஷயம். அந்த மதிப்பைக் காப்பாற்றிக் கொண்டு கௌரவமாக வெளியேறுவதுதான் நல்லது என்று எண்ணிக் கொண்டாள்.

தங்களுக்கிடையில் ஏதோ திரை விழுந்தாற் போல உணர்ந்தாள். அவன் பார்க்காத போது அவன் நிற்பதை, நடப்பதையெல்லாம் பார்த்து உள்வாங்கிக் கொண்டாள். ஆனால் அவன் எதையும் காட்டிக் கொள்ளாமல் இயல்பாக இருப்பதைப் பார்த்து அவளுக்கு ஒன்றும் பேச வழியில்லாமல் போனது.

வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டாள். உள்ளே பிரிவின் வேதனை உருக்கிக் கொண்டிருந்த போதும் எதையும் காட்டாமல் நடமாடிக் கொண்டிருந்தாள். வரவே கூடாது என்று எண்ணிக் கொண்டிருந்த அந்த நாளும் வந்தே விட்டது.

* * *

விஜயலட்சுமி அம்மாவும் லாயரும் சற்று நேரம்



சுமுகமாகப் பொது விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்க ரவிபாரதியும், பாரதியும் இறங்கி வந்தார்கள்.

'முதல்ல டிராஃப்டைப் படிக்கக் காட்டிருங்க செந்தில். அப்புறம்.. மீதலா என்ன செய்யணுமோ செஞ்சுக்கலாம்,' என்றார் அம்மா.

ரவிபாரதி வழக்கம்போல் கம்பீரமாகவும், சாதாரணமாகவும் நடந்து கொண்டான். பாரதிக்குத் தான் நெஞ்சில் பெரிய பாறாங்கல்லை வைத்தாற் போல் இருந்தது.

வக்கீல் உயிலைப் படித்தார். அம்மா அலட்டிக் கொள்ளாமல் அமர்ந்து கொள்ள ராமையா ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தார். உயிலின் முக்கியமான அம்சம் பின் வருமாறு அமைந்தது.

சொத்துக்கள் முழுவதையும் இருபங்காகப் பிரித்து எனது மகன் ரவிபாரதி பெயரிலும் மருமகள் பாரதி பெயரிலும் எழுத விரும்புகிறேன். ஆனால் அப்படி எழுதப்படுவது ரவிபாரதிக்குக் குழந்தை பிறந்து முதல் குழந்தையின் இரண்டாமாண்டு பிறந்த நாளன்று செய்ய விரும்புகிறேன். என்று சொல்லி விட்டுத் தற்போதைக்கு இன்னின்ன சொத்துக்கள் யாராருக்கு என்பது போல் வகை பிரித்தார். ஆனால் குழந்தையின் ஐந்தாண்டு நிறைவு வரை அந்தச் சொத்துக்களை விற்கவோ, பெயர் மாற்றவோ இவர்களுக்கு உரிமையில்லை. அந்தச் சொத்துக்களினால் வரும் வருமானத்தை மட்டுமே ஆண்டு அனுபவித்துக் கொள்ள வேண்டியது.. என்று எழுதியிருந்தார்.

பாரதி திகைத்துப் போய் அமர்ந்துவிட்டாள். ரவிபாரதி பல சிக்கலான சூழ்நிலைகளைக் கையாண்டு பழகியவன் என்பதால் எதையும் காட்டிக் கொள்ளவில்லை. வக்கீலை உபசரித்துக் கைகுலுக்கிஅனுப்பி விட்டு

அமைதியாகத் தன் அறைக்குப் போய் விட்டான். பார்த்தி ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டிருந்தாள். தோட்டத்திலேயே வெகுநேரம் இருந்தாள். ஏழு மணிவாக்கில் அம்மாவின் அறைக்குப் போனாள்.

'அத்தை.. நீங்க எனக்கு நியாயம் செய்யறதா நினைச்சுட்டு உங்க மகனுக்கு அநியாயம் செஞ்சுட்டீங்க..' என்றாள்.

அம்மா அலட்டிக் கொள்ளாமல் பார்த்தார். 'என்னம்மா அநியாயம் செஞ்சேன்?. நீங்க லைஃப் லாங்கா ஒன்னா இருக்கப் போறீங்கங்கறப்ப சொத்தைப் பத்தி என்னம்மா.. கவலை? சொத்து யார் பேர்ல இருந்தா என்ன?' என்றார்.

பார்த்தி பேச்சற்றவளாய் திகைத்துப் போய்ப் பார்த்தாள்.

உயிரே அற்றவள் போல் மெதுவாக மாடியேறிப் போனாள்.

தன்னறையில் போய் சோஃபாவில் சாய்ந்து அமர்ந்து கொண்டாள். இரண்டு கண்களிலும் கண்ணீர் வழிந்தது. கேவலம், சொத்துக்களும் உயிலுமா தன் வாழ்க்கையை நிர்ணயிப்பது . உணர்வுகளுக்கு இங்கே இடமே இல்லையா? என்று உள்ளம் கொந்தளித்துக் கேள்வி மேல் கேள்வி கேட்டது.

பின்னால் அசைவு சத்தம் கேட்டது அவள் திரும்பவில்லை.

'ரதி...!' என்று ரவிபாரதி ஏதோ சொல்ல ஆரம்பிக்க அவள் வலது கை நிறுத்துங்க! என்பது போல உயர்ந்தது.

'என்ன ரவி ? இனி உயிலுக்காக ஒரு



குழந்தைக்கு ஏற்பாடு செய்யலாம்னு சொல்லப் போறீங்களா? ரவி.. ஒரு பொண்ணு எதில வேணுன்னா நாடகம் நடிக்கலாம் ஆனா தன்னைக் கொடுக்கறதுல நாடகம் நடிக்க முடியாது. நடிக்கக் கூடாது. அப்படி மட்டும் கேட்டுடாதீங்க.. ரவி.. என்னால தாங்க முடியாது.. நான் அந்த மாதிரிப் பொண்ணு இல்லே.. நெங்க நிறைய நேரம் வக்கிட்டு.. நடக்க வேண்டிய விடுபத்தை.. நடிப்புக்காக.. செய்ய முடியாது.. ரவி.. ப்ளீஸ்..' என்று கேவிக் கேவி அழுதாள்.

அவன் அளவு கடந்த வேதனையுடன் அவளைப் பார்த்தான்.

'ரதி... ப்ளீஸ்.. அழாதே.. நாம் உட்கார்ந்து பேசலாம்..' என்றான்.

அவள் கோபமானாள்.

'என்னத்தைப் பேசறது? உங்களுக்கு என்னைப் புரியாது.. ரவி.. நீங்க பணக்காரங்க.. உங்களுக்கு பிஸினஸ்.. சாம்ராஜ்யங்கள்தான் முக்கியம். நேசம் இல்லே வாழ்க்கை.. இல்லே.. ஐயோ.. என்னால முடியாது. ரவி.. ப்ளீஸ்.. போயிடுங்க!' என்று கதறினாள்.

ரவிபாரதி.. பேச்சற்றுப் போனவனாகத் தளர்ந்த நடையுடன் அறைக்குப் போனான்.

சற்று நேரத்தில் அழுது ஓய்ந்த பார்த்தி தனது துணிமணிகளை ஒரு பெட்டியில் அடுக்கியவள் அத்தையின் அறைக்கு வந்து

'அத்தை.. இந்த உயிலை அவர் எப்படி எடுத்துக்கறாரோ தெரியலை.. நான் எங்க வீட்டுக்குப் போய். யோசனை செஞ்சுட்டு அப்புறம் காண்டாக்ட் செய்றேன்..' என்று கிளம்பி விட்டாள்.

மீண்டும் பேசிப் பார்க்கலாம் என்று வெளியே



வந்த ரவிபாரதி கீழே தேடிக் கொண்டு வந்து அவள் கிளம்பிப் போனதை அறிந்து திகைத்துப் போய் விட்டான்.

'அம்மா உங்கிட்டே என்ன சொன்னா?' என்றான்.

'எனக்கு நியாயம் செய்யறதா நினைச்சு.. அவருக்கு அநியாயம் செஞ்சுட்டீங்கன்னு சண்டை போட்டா' என்றார்.

'ஓ...!' என்றான் அடங்கிப் போன குரலில். அறைக்குப் போய் விட்டான்.

ரவிபாரதி வெகுவாக வருத்தப்பட்டுப் போனான். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருந்த பெண்ணை இதிலே சிக்க வைத்து இன்றைக்கு நெஞ்சு வெடிக்க அழுகிறாளே என்று நொந்து போனான்.

தனியாகப் போயிருக்கிறாள். ஏதையாவது செய்து கொள்வாளோ? சேச்சே! அப்படிப் பெண்ணில்லை.. தைரியசாலிதான்.. என்று தேற்றிக் கொண்டான்.

குழம்பிப் போனவனாய் வெகுநேரம் குறுக்கும் மறுக்குமாய் நடந்து கொண்டிருந்தான். இரவு பனிரெண்டு மணியிருக்கும், பல்ராமை செல் போனில் அழைத்தான்.

'டேய்.. பல்ராம்! எங்கேயோ ஏதோ தப்பாப் போயிடுச்சுடா.. நான் போட்ட கணக்கெல்லாம்.. பொய்த்துப் போச்சுடா....' என்ற தவிப்புடன் பேச அந்தப் பக்கம்.. பல்ராம் இரண்டு நிமிடங்கள் பேசினான்.

ஃபோனை பாக்கெட்டில் வைக்கிற போது ஏதோ பொம்மையைப் போல் வைத்தான் ரவிபாரதி. ரவி ரெண்டு பேருமே ஒருத்தரை ஒருத்தர் ஏமாத்திக்கிறீங்க... என்ற ஸ்வப்னாவின் குரல் ஓங்கி ஒலித்தது.

ஏதோ மெல்லப் புரிகிறாற்போலவும் இருந்தது.. புரியாத மாதிரியும் இருந்தது ஆணியடித்தாற் போல்



சோஃபாவில் உறைந்து போய் அமர்ந்தான்.

* * *

## 23

பார்த்தி உணர்ச்சி மயமாய்க் கிளம்பிப் போவதைப் பார்த்த ராமையா விஜயலட்சுமியிடம்

'அம்மா.. எல்லாம் சரியாத்தானே எழுதியிருக்கீங்க.. அப்புறம் ஏன்.. சின்னம்மா..?' எனப் பார்க்க,

'ராமையா.. உயில் எல்லாம் சரியாத்தான் இருக்கு.. அப்புறம்.. விவரம் சொல்றேன்..' என்று புன்னகைத்து விட்டு அறைக்குப் போய்விட்டார்.

பத்து மணி வரை ரவிபாரதி சாப்பிட வரவில்லையே என்று மறுபடியும் அம்மாவிடம் கேட்க,

'அவன் சாப்பிடறப்போ வந்து சாப்பிடட்டும் அவனைத் தொந்தரவு செய்ய வேண்டாம். ஹாட் பாக்ஸிலே எடுத்து வச்சிருங்க..' என்று அறைக்குப் போய் விட்டார். அதோடு நிம்மதியாக உறங்கினார்.

* * *

ஒன்பது மணி வாக்கில்.

தங்கள் வீட்டு வசலில் நிற்கிற பார்த்தியைப் பார்த்து பார்வதி அத்தை ஆச்சரியமானார்.

'வாம்மா!' என்று வரவேற்றார்.

'அத்தை! கண்கள் கலங்க..', குழறிக் கொண்டு நிற்கிற அவளைப் பார்த்துத் திகைத்துப் போனார்

'என்னம்மா!' என்று பரபரப்பாகக் கேட்டபடி

ஆசுவாசப் படுத்தி அமரச் செய்தாள். கேவிக் கேவி அழுத பாரதி அத்தையின் மடியில் முகம் புதைத்துக் கொண்டாள்.

சற்றுத் தேறிய பின் மெது மெதுவாக நடந்த விஷயங்களைச் சொன்னாள்.

அத்தை சிந்தனையிலாழ்ந்தார். 'வாழ்க்கையென்ன என்னம்மா.. நினைச்சங்க..? விளையாட்டுப் புள்ளைங்க மாதிரி ஏதோ திட்டம்கரீங்க! ஒப்பந்தங்கரீங்க.... டைவர்ஸ்ங்கரீங்க..ஏதாவது ஏடாகூடமாய் ஆயிருந்தா...' என்று முணுமுணுத்துக் கொண்டார்.

பிறகும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தார். பேசும்போது அவர் கண்கள் அவள் முகத்தை ஆராய்ந்தன. பிறகு மெதுவான குரலில்..

'ரதி... நீ அந்தப் பையனை லைக் பண்றியோ?' என்று கேட்டார்.

ரதி ஒன்றும் பேச முடியாதவளாய் தலை குனிந்தாள்.

அவர் முகத்தில் ஆழ்ந்த கவலை தோன்றியது. 'ரதி பணக்காரப் பசங்களை பத்து பேர் வேண்ணாலும் லைக் பண்ணலாம் ஆனா.. அவங்க யாரை லைக் பண்றாங்களோ அதுதானே நடக்கும். ஆனா அந்தப் பையன் ரொம்ப நல்ல பையனாத்தான் தெரியறான். உன்னை ரொம்ப மதிக்கறான்தான் ஆனா.. அதுக்காக அவனுக்கு உனை அந்த மாதிரிப் பிடிக்கணுமே?' என்று நாசுக்காக , ஆனால் நிலைமையின் குழப்பத்தைத் தெளிவாக உணர்ந்து பேசினார்.

'அதனால்தான் நான் கிளம்பி வந்துட்டேன்.. அத்தை..' என்றாள்.

'ஆமா.. இந்த நேரத்துக்கு ஒதுங்கி இருக்கிறது தான் நல்லது.. ஆனா... இப்ப நாம எவ்வளவுதான்



பேசினாலும்.. முடிவு..' அவள் கையில்தான்.

'எல்லாபாரத்தையும் கோவிலம்மன் மேலே போடு நடந்தது.. எல்லாமும் அவள் இஷ்டப்படிதான். நடக்கப் போறதும்... அவ விருப்பப்படிதான்..' என்று ஆறுதல் படுத்தினார்.

தங்கள் வீட்டிலேயே தங்கச் சொன்னார்.

'இல்லைங்கத்தே.. எனக்கு இப்ப தனிமை வேணும்' என்று சொல்லி விடை பெற்றுக் கொண்டு போனாள்.

வீட்டிற்கு வந்த பாரதிக்கு உறக்கம் சற்றும் பிடிக்கவில்லை.

தன்னைத் தோழியாய் மதித்து அவன் பேசிய அந்தரங்க விஷயங்கள்.. அவன் சிரிப்பு.. நடை.. காலை நேரங்களில் பரபரப்பாகக் கோபம் காட்டினாலும் பிறகு அதை ஈடுகட்டுகிற விதமாக.. அன்பு காட்டுவது.. என்று கழித்த நாட்கள் எல்லாம் அவள் மனதில் வந்து வந்து போயின.

கடந்த வாரத்தில் இரண்டு மூன்று முறை ஏதோ சொல்வதற்காக வந்து விட்டு சொல்லாமலே போனாரே என்னவாக இருக்கும் என்று யோசித்துப் பார்த்தாள். ஒரு வேளை.. உயிலுக்காக தொடர்ந்து வாழ்க்கை நடத்தலாம்... என்று கேட்டால்... கேட்டால்தான். என்ன? தனக்கு அவனைப் பிடிக்கிறது.. பிடிப்பதா.. உயிரே அவர்தான் என்கிற மாதிரி ஆகிப் போனது. இப்படியாவது அவரோடு வாழ்கிற வாய்ப்புக் கிட்டினால்.. எல்லாரும் என்ன பிரியப்பட்டா கல்யாணம் செய்து கொள்கிறார்கள்? ஆனால்.. உள்ளூர அவளைக் கேவலமாக நினைத்து விடுவாரே.. ஐயோ.. வேண்டாம் என்று எண்ணிக் கொண்டாள்.

வழக்கமில்லாத வழக்கமாக தங்கள் வீட்டில் குடியிருக்கிறவரிடம் சொல்லி ஒரு தூக்க மாத்திரை வாங்கிக்



போட்டுக் கொண்டு படுத்தாள்.

சற்றுப் போராட்டத்திற்குப் பிறகுதான் உறக்கம் பிடித்தது.

அதிகாலையிலேயே விழிப்பு வந்து விட்டது. எழுந்து குளித்து விட்டு பூஜையறையில் விளக்கேற்றி விட்டு தேனீர் தயாரித்தாள்.

தேனீர் தயாரிக்கும்போதே ஒரு முடிவு செய்து கொண்டாள்.

எதைப் பற்றியும் யோசிக்க வேண்டாம் வாழ்க்கையை அதன் போக்கில் எதிர் கொள்வது... என்று அதற்குப் பிறகுதான மனம் தெளிவாகியது.

தேனீரை டம்ளரில் ஊற்றிக் கொண்டு ஹால் சோஃபாவில் அமர்ந்து பருக எண்ணி ஹாலுக்குள் வந்தவள் திகைத்துப் போய் நின்று விட்டாள்.

லேசாகக் கலைந்த தலையுடனும் உறக்கமின்மையால் சிவந்து போன கண்களுமாக உன் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கிக் கொள்ளலாமா ரதி? என்று கேட்ட வண்ணம் ரவிபாரதி நின்றிருந்தான்.

* * *

பாரதி படபடத்துப் போனாள்.

'ஐயோ! என்ன ரவி இப்படிக் கேட்கறீங்க? வாங்க... வாங்க...' என்று அடித்து பிடித்துக் கொண்டு வரவேற்றாள்.

தலையைக் கோதியபடி உள்ளே வந்து சோஃபாவில் அமர்ந்து கொண்டான்.

தனக்காகப் போட்ட டீயை அவனுக்கு கொடுத்தாள் முந்தைய நாள் நடப்புக்கள் எதையும் பேசாமல் சாதாரணமாக முகபாவத்தை வைத்துக் கொண்டு.



குளிக்கணும் ரதி.. என்றான்.

'இதோ.. இப்ப வெந்நீர் போடறேன்' என்று ஹீட்டரை ஆன் செய்தாள். குளிப்பதற்குத் தண்ணீர் எடுத்து வைத்து விட்டு டவல் எடுத்துக் கொடுத்து விட்டு பரபரவென்று டிஃபன் தயாரித்தாள்.

அவன் மௌனமாக வந்து டிவி முன்னில் ஆழ்ந்து விட்டான். பிறகு பொதுப்படையாக செய்திகளைப் பற்றிப் பேசி கொண்டே டிஃபன் சாப்பிட்டான்.

பக்கத்து வீட்டுக் குழந்தை அருண்குமார் ஓடி வரத் தூக்கிக் கொண்டான். பேசி விளையாடினான். பத்து மணி வாக்கில் தூங்கணும்.. ரதி.. என்றான்.

அவள் தனது படுக்கையறையில் இருந்த படுக்கை விரிப்பைச் சரி செய்து கொடுத்தாள். படுத்தவன் நிம்மதியாக மூன்று மணி வரை உறங்கினான்.

பாரதிக்கு ஒன்றுமே புரியவில்லை. ஆனால் அவனுக்காக அவனுக்குப் பிடித்த உணவு வகைகளைத் தயாரித்தாள். அதற்காகக் கடைக்குப் போய்க் காய்கறி வாங்கி வந்து.... சமையல் .... என்று வேலைகள் சரியாக இருந்தன.

மூன்று மணிக்கு அவன் விழிக்கும் வரை அவளும் ஏதோ புத்தகத்தைப் படித்துக் கொண்டு ஹால் சோஃபாவில் படுத்துக் கொண்டாள்.

அவன் விழிக்கவும் மீண்டும் உணவு.. மீண்டும் புத்தகத்தை படிப்பது என்று சற்று நேரத்தை ஓட்டினான்.

ஐந்து மணி வாக்கில் ரதியை அழைத்து 'ரதி.. உன்கிட்ட பேசணும்' என்றான்.

ரதி ஏதோ ஒரு பெரிய விஷயம் வரப் போகிறது என்று உணர்ந்தவளாய் அதைத் தாங்குகிற சக்தியை கடவுள் தனக்குக் கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு

சோபாவில் அமர்ந்து கொண்டாள்.

அவன் பேச ஆரம்பித்தான்.

'ரதி..! நீ பாட்டுக்கு சொல்லாம கொள்ளாம வந்துட்டே?' என்றான்.

அவள் அவன் முகத்தை நேராகப் பார்க்காமல் 'இல்லே.. எனக்கும் கொஞ்சம் யோசிக்க வேண்டி இருந்தது..' என்றாள்.

'ஆமா எனக்கும்தான்.... ராத்திரி பூரா யோசனைதான் ஒரு பொட்டுத் தூக்கம் கூட இல்லே..!' என்றான்.

'ஓ...!'

'அப்புறம் தான்.. எனக்கே என்னைப் புரிந்தது காலைல அம்மாகிட்டே சொல்லீட்டேன். அம்மா.. சொத்தின் அடிப்படையிலே என்னோட வாழ்க்கையைத் தீர்மானிக்கறது இல்லைன்னு நான் முடிவு பண்ணீட்டேன். இ கேர் எ டேய் ஃபார் யுவர் பிராப்பர்ட்டீஸ்.. எனக்கு என்ன தேவைன்னு புரிஞ்சு போச்சு.. பாகீரதியை விட்டுட்டு இனி ஒரு நிமிஷம் கூட என்னால இருக்க முடியாது.. ராத்திரி பூராவும் அவளோட நினைப்புத்தான்.. ஒவ்வொரு தடவையும் இப்படி ஒரு பொண்ணு கிடைக்க பல்ராம் குடுத்து வச்சருக்கணும்னு நெனச்சுப்பேன்.'

'ஓ.. இப்படிச் சொன்னா.. உனக்கு ஷாக்கா இருக்குமில்லே என்று சொல்லிவிட்டு அம்மாவிடம் தங்கள் ஒப்பந்தம், லவ்பண்ணா, பல்ராம் என்று எல்லா விஷயங்களையும் சொன்னதைச் சொன்னான். ரதி.. வந்தது.. என்னமோ.. ஒரு காண்ட்ராக்ட்.. மாதிரித்தான்.. ஆனா.. இப்படிப் பட்ட பெண்களைப் பார்த்திராத.. பழகிராத .. தனக்கு ஏன் அம்மா

இப்படியொரு பெண் வேணும்னு [illegible] என்று புரிந்தது..' என்றான்.

அதற்குப் பிறகு மேலும் தொடர்ந்து.. 'அம்மா.. இப்ப இந்த வீட்டை விட்டு நான் போறேன்.. ஆனா.. என்ன? நான் போய் ரதிகிட்ட சொல்லப் போற நேரம்தான் ராங் டைமாப் போச்சு.. இப்ப நான் என்ன சொன்னாலும் சொத்துக்காக ஸ்கீம் பண்றேன்னு ரதி நினைக்கலாம். அதனால விடுதலைப் பத்திரம் எழுதியிருக்கிறேன். அம்மா உன்னை விட்டுப் போறேன்னு.. தப்பா நினைக்காதே.. எனக்கு.. இப்ப வரப்போற வாழ்நாளைக்கு எல்லாம்.. ரதி வேணும் அவளுக்கு என் நேசத்தின் மேலே நம்பிக்கை வரணும்னா.. இதை விட்டா வேறு வழியில்லே' என்று சொல்லி விட்டு வந்ததைச் சொன்னான்.

'எனக்கு ரதி வேணும்!' என்று அவன் சொன்ன கணம் வரை கண்களை அகல விரித்துக் கொண்டு அவனைப் பார்த்து கொண்டிருந்த ரதி முகம் சிவக்கத் தலை குனிந்தாள். உடம்பு முழுக்க ஒரு சிலிர்ப்பு ஓடி மறைவதை உணர்ந்தாள்.

அவன் எதையும் கவனிக்கிற மனநிலையில் இல்லை. அவள் முகத்தையும் கூடப் பார்க்கவில்லை.

'நான் சொல்ல வந்ததைச் சொல்லி விடுகிறேன். நீ என்ன செய்தாலும் சரி..!' என்பது போல் டி.வி ஸ்டாண்டை வெறித்துப் பார்த்துக் கொண்டு பேசினான்.

அவள் வசியம் செய்யப்பட்டாற் போல் அவன் முகம் பார்த்துக் கொண்டு அமர்ந்து விட்டாள்.

'ரதி விருப்பப்பட்டா.. அவளையும் கூட்டிக் கொண்டு டெல்லி போயிடப் போறேன் அங்கேயே கன்சல்டன்சி ஏன் பண்ணீட்டு.. நிம்மதியா.. அவளோட வாழ்ந்தா.. போதும். ரதியைப் பத்தி பிரச்சினை இல்லே..



வந்த வருமானத்துக்குள்ளே வாழ்க்கை நடத்திடுவோ. வேற ஒரு திட்டம் கூட இருக்கு.'

'ஆனா.. ஒரே ஒரு விஷயம்தான்.. தெரிய வேண்டியிருக்கு.. அவளுக்கும்.. என்னைப் பிடிக்கிறதா.. இல்லையாங்கறதுதான்.. அது..!' என்றான்.

அவள் பேசுவதற்கு முயன்றாள். வார்த்தைகள் வரவில்லை.

'பரவாயில்லை ரதி.. அவசரமில்லை.. டேக் யுவர் ஓன் டைம். நீ எப்படி முடிவெடுத்தாலும்.. சரி.. என்ன?' என்றான்.

ரதி மௌனமாகத் தலையாட்டினாள்.. 'ஓ.கே. நான் இப்ப டி.வி. பாக்க உட்காரேன். நல்ல படம் ஒண்ணு போயிட்டிருக்கு.. டி.வி. யில் படம் பார்த்து ரொம்ப நாளாச்சு.' என்று ரிமோட்டை ஆன் செய்ய.. அவள் எழுந்து அந்தப் பக்கம் போனாள்.

மனம் டி.வி. யில் ஆழ்ந்து விட மறுத்தது முதல் நாள் நிகழ்வுகள் அவள் மனதில் ஓடின.

* * *

## 24

அம்மாவின் உயிலைப் படித்த பின்பு சிந்தனையோடுதான் அறைக்கு வந்தான் ரவிபாரதி.

மேற்கொண்டு என்ன செய்வது என்று ஆலோசிக்கலாம் என்றுதான் ரதியின் அறைக்குப் போனான்.

அங்கே அவள் வெடித்த வெடிப்பைப் பார்த்த பின் நிலைமையின் தீவிரம் புரிந்து கொண்டான்.



மறுபடியும் பேசலாம் என்று போனபோது அவள் தன் வீட்டுக்குப் போய் விட்டாள் என்று கேட்டு பெரிதும் அதிர்ச்சியாகி விட்டான். ஆனால்.. அதற்குப் பிறகு தூக்கமும் வராமல் இருப்புக் கொள்ளாமல் அவன் தவித்த.. தவிப்புத்தான் அவனுக்கே அவளைப் புரியச் செய்தது.

பார்க்கிற பக்கம், திரும்புகிற பக்கம்.. எல்லாம் ரதி நிற்கிற மாதிரி இருந்தது. ஊட்டியில் தன் காயம் பார்த்து அவள் தவித்த தவிப்பு.. வீட்டில் தன்னைக் கவனித்துக் கொள்வது பாராட்டினால்.. முகம் சிவந்து போவது என்று அவளுடைய நினைவுகளே அவனை ஆக்கிரமித்தன.

சாப்பிடத் தோன்றவில்லை. உறக்கம் பிடிக்கவில்லை. ஒவ்வொரு முறையும் பல்ராம் அதிர்டசாலி என்றும், அவளோடு திருமணம் இல்லை என்ற பிறகு யாருக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ என்று தான் எண்ணிக் கொண்டதற்குமான காரணம் புரிந்தது.

உணர்வு மயமாகியிருந்தான். அன்றைக்கே இந்தக் கல்யாண வாழ்க்கையைத் தொடரலாம் என்று தான் நினைத்த போதே அவளிடம் சொல்லியிருக்க வேண்டும்.

இப்போது சொன்னால் சொத்துக்காக மீண்டும் நாடக மாடுகிறோம் என்று எண்ணிக் கொள்வாள். வேண்டாம். இந்தச் சொத்தே வேண்டாம் என்று முடிவெடுத்தான்.

பாகீரதி மாதிரி ஒரு பெண் கிடைத்தால் வாழ்க்கையே ஒரு சொத்து மாதிரித்தான்.

வந்த நாள் முதலில் இருந்தே அவளிடம் தனக்கு ஏற்பட்ட தோழமை உணர்வு, எல்லாவற்றையும் அவளிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ன எண்ணியது எல்லாவற்றிற்கும் காரணம் இப்போது புரிந்தது.

கடிகார முள் ஏனோ நகராமல் நிற்கிற மாதிரியே

இருந்தது.

இந்த மனிவரை ஒரு வினாடி கூடத் தூங்கவில்லை. லேசாகக் காலை வெளிச்சம் படர்கிற அந்தப் பொழுதில் இறங்கி அம்மாவின் அறை வாசலில் நின்றான்.

'என்னப்பா?' என்றார் அம்மா.

தானும் பாகீரதியும் செய்து கொண்ட ஒப்பந்தக் கல்யாணம். நடத்திய வாழ்க்கை எல்லாவற்றையும் விவரமாகச் சொன்னவன்

'அம்மா! இப்ப போய் நான் உன்னை ரொம்ப நேசிக்கரேன். பாகீரதின்னு சொன்னா அது சந்தோஷத்துக்கிடமாத்தான் இருக்கும். வேற வழியில்லம்மா.. இந்தச் சோத்தையெல்லாம் புறக்கணிக்கிறதைத் தவிர வேற வழியில்லை. ஐ.ம். சாரி. என்றான். மேலும் சற்று நேரம் பேசினான்.

அம்மா ஒன்றும் ரியாக்ஷன் காட்டவில்லை.

'உன் இஷ்டம்ப்பா..' என்றார் ஒரே ஒரு ஏர் பேக். கொஞ்சம் உடைகள் என்று எடுத்துக் கொ ண்டு தன் சொந்தப் பணத்தில் வாங்கிய மாருதியை ஓட்டிக் கொண்டு போகிற மகனை அம்மா எந்த உணர்வும் இல்லாமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

* * *

டி.வி.யில் ஆழ்ந்து போயிருந்த ரவிபாரதி அசைவு சத்தத்தைக் கேட்டுத் திரும்ப

'நீங்க... டி.வி.. பாத்துகிட்டுருங்க. நா கொஞ்ச நேரம் அத்தை வீட்டுக்கு போயிட்டு வரேன்...' என்றாள்.

'சரி ரதி' என்று அவன் மறுபடியும் டி.வி.யில் ஆழ்ந்தான்.



பாரமிறக்கியவனைப் போல இருந்தான் ரவிபாரதி. சொல்லியாகி விட்டது. இனி.. என்ன ஆகிறது. பார்க்கலாம்.. அவனும் கொஞ்சம் டைம் எடுத்துக் கொண்டு முடிவு செய்யட்டும் என்று எண்ணிக் கொண்டான்.

நேற்றிரவு பரராம் சொன்னது நினைவுக்கு வந்தது உள்ளுக்குள் சிரித்துக் கொண்டாள்.

வழக்கம் போல்

இரவு எட்டு மணிக்கு டிஃபன் சாப்பிட்டார்கள். அவனுக்குப் பிடித்த கிச்சடி, சப்பாத்தி என்று செய்திருந்தாள் பாகீரதி.

ஒன்பது மணிவாக்கில் ... அவன் டி.வி.யை ஆஃப் செய்தான்.

'என்ன...ரதி... நான்.. இங்கே சோஃபாவில் படுத்துக்கரேன். நீ உள் பெட்ட.. படுத்துக்கோ.. சரியா? ' என்றபடி சோஃபாவை விரித்துப் போடக் குனிந்தான்.

ஏதோ புத்தகம் படித்துக் கொண்டிருந்த ரதி எழுந்தாள்.

'இல்ல.. ரவி.. நீங்க உள்ளேயே படுங்க..'என்றாள்.

'அப்ப.. நீ.. சோஃபாவிலயா? சேச்சே.. வேண்டாம்.. நான் இங்கயே படுத்துக்கிறேன். ஃபிளைட்ல போகும்போது... உட்கார்ந்தே தூங்கற ஆளு.. நான்..' என்றபடி திரும்ப அவள் நகராமல் நின்றாள்.

பார்வை நிலத்தில் பதிந்திருந்தது. 'இங்கே.. நீங்க.. பெட்ரூம்லயே?' என்று தயங்கி நின்றாள்.

'நீ....?'

'நான் ... நானும்.. அங்கயே..' என்று சொல்வதற்குள் விதிர் விதிர்த்து விட்டான்.

'ரத்தீ..!' என்று அவன் முகம் மலர்ந்தது. அவன்



கையில் இருந்த போர்வை கீழே விழுந்தது.

'ம்.. அப்படியா ?' என்று பார்வையிலேயே அவன் கேட்க ஓரக்கண் பார்வையில் ஆமோதித்த அவள் வேகமாக சமையலறைக்குள் போய் விட்டாள்.

பூக்களைக் கூடை கூடையாக கொட்டியது போல் உணர்ந்து கிறங்கிப் போய் நின்ற ரவிபாரதி அவள் பின்னாலேயே போனான்.

அவள் சமையலறையின் வலது ஓரத்தில் இருந்த அந்த சின்னப் பூஜையறையில் நின்றிருந்தாள். கைகளில் குங்குமச் சிமிழ் அவன் கைகள் நடுங்க அவள் நெற்றியில் பொட்டு வைத்தான்.

சட்டென விலகிப் போகிற அவளை அருகில் இழுத்தான். கைகளில் சிறைப் பிடித்தான்.

'நிஜம்மா.. நிஜம்தானா? என்னால நம்பவே முடியலை..?' என்று முணுமுணுத்தபடி முகத்தில் முத்திரைகள் பதித்து கழுத்தில் முகம் பதித்துக் கொண்டான்.

அவள்.....! இதுவரை அவனை அப்படிப் பார்த்திராத அவள் திகைத்துப் போய் நின்றாள். கிறக்கமும், தாபமுமாய் அவன் லேசாகச் சிரிக்க..

'விடுங்க.ரவி..' என்று விலகினாள். அவன் ஏமாற்றத்துடன் அவளைப் பார்க்க

'அத்தை வர்றேன்னாங்க..?' என்றாள்.

'வ் வாட்?' என்று அதிர்ந்தான்.

'இல்லே.. கல்யாணம் தான் உண்மைக் கல்யாணமா இல்லாம பொம்மைக் கல்யாணமாக்கிட்டீங்க ஆனாலும் தாலி கட்டினார்தானே? இதுவாவது.. நல்ல நேரத்தில் நடக்கணுமாம் ..' என்று மென்று விழுங்கியவள் அவன் ஆழப் பார்வை பார்த்து 'அப்படிப் பாக்காதீங்க...



ரவி' என்று அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டாள்.

அவன் மயங்கி நின்றவனாய் தன் மனைவியின் தலையைக் கோதிக் கொடுத்தான்.

அழைப்பு மணி ஒலிக்க கதவைத் திறந்தார்கள். அத்தை பழக்கூடை ..பூக்கள் நிறைந்த இரண்டு மூன்று தட்டுக்கள் என்று நின்றார்.

அவனை முழுக்கை வேட்டி சட்டையில் வரச் சொல்லி இருவரையும் அமர வைத்து நலுங்கு வைக்கச் செய்தார்.

அவருடைய மகனும் மருமகளும் பின்னாலேயே வந்தார்கள்.

'சரிதான்... பாகி... மச்சான் கவிழ்ந்தாச்சாக்கும்...' என்று கலாட்டா செய்தான் கண்ணன்.

அவனுடைய கேலி கிண்டலுக்கெல்லாம் ரவிபாரதி ஒரு புன்னகையை மட்டுமே பதிலாகத் தந்தான்.

கல்யாணதான் பாகீரதியை வெகுவாகக் கிண்டல் செய்தாள். அவளிடம் தனியாக 'நேத்து என்னமோ அப்படி அழுதியே. இப்ப பாரு... நாங்க எப்படா வெளியே போவோம்னு... அண்ணன் குறுகுறுன்னு பாக்கறாங்க..' என்று கிசுகிசுத்தாள்..

பாகீரதியின் முகம் சிவந்து போக..' அண்ணா! உங்க ரதி பாருங்க... இப்ப தேவதை மாதிரி... ' என்று அவளையும் அழைத்துக் காட்டினாள்.

'தம்பி! நேத்து பாகீ வந்து அழுதப்போ இவ்வளவு நல்ல குழந்தையை சோதிக்கிற இந்தக் கடவுளுக்கும் கண்ணில்லையான்னு ரொம்ப வருத்தப்பட்டேன். இப்ப உங்களைப் பாத்ததுக்கப்புறம்தான் மனசு நிறைவாச்சு..' என்றார்.

'மறுசரடு மாதத்திடலாம் தம்பி..' என்று மங்கல நாண் புதிதாக மாற்றினார்கள். அப்போது ரவிபாரதி தன் சட்டைப் பையிலிருந்து மங்கலியக் கொடி ஒன்றை எடுத்தான்.

'அம்மா... இது எங்க அம்மாவுக்கு அவங்க மாமியார்... போட்டது'. என்று அணிவித்தான்.

'சங்கிலி.. மாட்டிட்டாரு... இப்ப... அவரே மாட்டிக்கப் போறாரு....' என்று கல்பனாவும் கண்ணனும் சற்று நேரம் கலாட்டா செய்ய இருவரும் மறைவாகப் பார்வைகளைப் பரிமாறிக் கொண்டார்கள். அவள் கண்களைத் தாழ்த்திக் கொண்டாள்,

'கொஞ்ச நேரம் பேசிகிட்டிருங்க..'என்று அவர்களை அமர வைத்து விட்டு உள்ளே அறையை அலங்காரம் செய்து கலாட்டாவாக விடை பெற்று போனார்கள்.

அவள் தாழ்ப்பாளை அழுத்தத் தாழிட்டாள் . பிறகு

'ஹேய்... இனியும் ஏதாவது சடங்கு...கிடங்குன்னு மனுஷனை சோதிக்காதே...' என்று திரும்ப அவளைக் காணவில்லை.

அறைக்குப் போனால் அங்கே அலங்காரத்தைப் பார்த்துச் சிரிப்பு வந்தது. அவள் கட்டில் ஓரமாக அவனுக்கு முதுகு காட்டி நின்றிருந்தாள்.

'ஒரு வருஷம்... ஒரு வருஷம்... இப்படி ஒரு பொக்கிஷத்தைப் பக்கத்தில் .... வச்சுகிட்டு... பைத்தியக்காரன்.. நான்..' என்று கிறக்கமாக உளறியபடி அணைக்க... அவள் 'களுக்' கென்று சிரித்தாள்.

'என்ன?' என்று அவன் ஒரு விதமாகப் பார்க்க..

'இது வேண்ணா சரி' என்றாள் கொஞ்சலாக..



'எது ?..'

' பைத்தியக்காரன்னு... சொன்னீங்களே? அது' என்று அவள் அவன் மார்பில் முகம் பதித்துக் கொண்டாள்.

'அப்ப.. முழுசாத் தெரிச்சுக்க.. டிரை பண்ணு? ' என்றான்.

'எதை ?' என்று கேள்வியாகப் பார்க்க.

எந்தெந்த விஷயத்துல பைத்தியம்னுதான் என்று வெடிச்சிரிப்புச் சிரித்தான்.

அவள் ஏதோ சொல்லத் துவங்க..

போதும்.. வாழ்க்கை முழுக்கப் பேசலாம். பேச.. நிறைய விஷயம்.. இருக்கு.. ஆனா.. இப்ப இல்லே.. என்றான்.

காதலும் குறும்பும் போட்டி போட அவன் தன்னை முழுமையாக வெளிப்படுத்திக் கொண்ட அந்த இரவில் அவளுக்கும் இன்னொரு உலகம் புரிந்தது.

வேதனையும், விந்தைகளும், வியப்பும் நிறைந்த அந்த உலகத்தில் அவன் கிறக்கச் சிரிப்பும், குறும்பு பேச்சும், அவள் உள்ளத்தைக் கொள்ளை கொள்ள அவன் கைகளில் தன்னை ஒட்டிக் கொடுத்தாள்.

இரண்டே நாட்களில் நிலைமை தலைகீழாகும் என்பது அப்போது இருவருக்குமே தெரிந்திருக்கவில்லை.

* * *

## 25

பால் பொங்கிக் கொண்டிருந்தது.

பாகீரதியின் முகத்தில் வெட்கமும் புன்னகையும் குமிழியிட்டன. அறைக்குள் அப்போது தான் எழுந்த ரவிபாரதி



சோம்பல் முறித்துக் கொண்டு மனைவியைத் தேடினான்.

சமையலறையில் அவள் தேநீர் தயாரிப்பதை உணர்ந்து அங்கு மெதுவாக வந்தவன் அவள் முகபாவத்தை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

'ஹேய்! என்ன சிரிப்பு?' என்று அருகில் வந்தபோது அவள் சட்டென்று விலகிக் கொண்டு

'மிஸ்டர் ரவிபாரதி காலையில ரகளை செய்யக்கூடாது. போய்க் குளிச்சுட்டு வாங்க. கோயிலுக்குப் போகணும்' என்றாள்.

'போச்சுரா.. இப்ப என்ன கோயிலுக்கு?' என்று முனகிக் கொண்டே குளிக்கப் போனான்.

கோயிலுக்குப் புறப்படுகிற போது அத்தை ஃபோனில் அழைத்து

'மருமகளே! ரெண்டு மூணு நாளைக்கு சமையல் செய்ய வேண்டாம். நேரத்துக்கு எல்லாம் அனுப்பி வைக்கிறேன். இன்னைக்கு மட்டும் மத்தியானம் எங்க வீட்ல விருந்து என்ன?' என்று சிரித்து விட்டு வைத்தார்.

பாகீரதி முகம் சிவக்க ரவிபாரதியிடம் அதைச் சொல்ல..

'பரவாயில்லை..உங்க அத்தை.. ரொம்ப ரொம்ப.. ஹெல்ப் ஃபுல் என்று சொல்லி விட்டுக் கலகல வென்று சிரித்தான். ஹெல்ப் ஃபுல் என்ற வார்த்தைக்கு ஒருவிதமாக அழுத்தம் வேறு கொடுத்தான்.

அவள் அவன் முகம் பார்க்காமல் நழுவியபடி வெளியே போய் விட்டாள்.

கோனியம்மன் கோயில் போனார்கள்.

'ரவி! எனக்கு மனசு சந்தோஷம்னாலும், சங்கடம்னாலும் கோனியம்மன் கோயிலுக்கு வந்து கொஞ்ச



நேரம் செலவழிப்பேன்..' என்றாள்.

அவன் மனம் நெகிழ்ந்தது. அப்பா.. அம்மா.. ஞாபகம் அடிக்கடி வருமா?'

'ம்.. நேத்தைக்குக் காலையில ரொம்ப நினைப்பா இருந்தது இப்பவும் தான்..' என்றாள்.

'ஓ..!'

'அம்மா அப்பா இருந்தா ரொம்பச் சந்தோஷப்படுவாங்க.. '

அவன் வலக்கையால் ஸ்டியரிங்கைப் பிடித்துக் கொண்டு இடக்கையால் அவளது வலக்கரத்தை அழுத்திக் கொடுத்தான்.

'ரதி! இனிமே உனக்கு அம்மா, அப்பா.. நான்தான். யு கேன் ஃபீல் ஃப்ரீ? ஓ கே?' என்றான்.

அவள் முகம் நிறைந்த உணர்வுகளோடு தலையாட்டிக் கொண்டாள்.

கோயிலில் இரு கைகளையும் கூப்பிக் கொண்டு கும்பிடுகிற மனைவியை அன்பாகப் பார்த்தான்.

அவர்களுக்குக் கிடைத்த உபசரிப்பு அவனைக் கூச்சப்படுத்த, தயங்கி நிற்கிற அவனிடம் அவள் நெருங்கி இழைந்தபடி நின்றாள்.

'பரவாயில்லை சார் மேடம்.. உங்களைக் கோயிலுக்குக் கூட்டிட்டு வந்துட்டாங்க. அம்மாதான் வாராவாரம் வந்து உங்க ரெண்டு பேர் பேருக்கும் அர்ச்சனை செய்வாங்க. இந்த வாரம் வெள்ளிக்கிழமை வரலை.. ஆனா, சனிக்கிழமை காலமே வந்து ரெண்டு பேர் பேருக்கும் அர்ச்சனை செஞ்சுட்டுப் போனாங்க' என்று உபசரணையாகப் பேசிய அய்யரிடம் பேசி விட்டுச் சுற்றி வந்தார்கள்.

அந்தக் காலை நேரத்தில் கூட்டம் இருக்கவில்லை.

வெகு அமைதியாக இருந்தது. அந்த அமைதியை அனுபவித்துச் சற்று நேரம் இருந்து விட்டுத் திரும்ப வந்தார்கள்.

வீட்டுக்கு வந்து டிஃபன் சாப்பிட்டதும்

'ரதி வா வெளியே போயிட்டு வரலாம்.' என்று அழைத்துக் கொண்டு போய்க் கொஞ்சம் துணிமணிகள், நகைகள், புத்தகங்கள் என்று அவள் தடுக்கத் தடுக்க வாங்கிக் குவித்தான். அத்தை வீட்டுக்கும் கொஞ்சம் பரிசுகள் வாங்கினான்.

அத்தை வீட்டு விருந்து நேரம் கலாட்டாவாகக் கழிந்தது. கல்பனாவின் கிண்டலில் அவனே சிரித்து விட்டான்.

கல்பனாவிடம் இருந்து பாரதியின் இன்னொரு கோணத்தையும் தெரிந்து கொண்டான்.

'ரவி அண்ணா! பாரதி பெரிய சோஷியல் வொர்க்கர் தெரியுமா? நாங்கள்ளாம் சினிமா, எக்ஸிபிஷன் பார்க் என்று போனா, இவ அனாதை விடுதி, முதியோர் இல்லம், மெடிக்கல் காம்ப்ன்னு போயிட்டிருப்பா' என்றாள்.

அப்படியா? என்று மேலும் விவரம் கேட்டுக் கொண்டான்.

சற்று தூரத்தில் அத்தையிடம் பேசிக் கொண்டு நின்றிருந்த அவள் மேல் அவன் பார்வை படிந்து மீண்டது.

'அண்ணா! பாரதியை ரொம்ப நேசிக்கிறீங்க.. இல்லே?' என்றாள் கல்பனா.

அவன் பேசவில்லை. 'பிறகு உண்மையைச் சொன்னா.. இப்படி ஒரு பெண் எனக்குக் கிடைக்கக் கூடும்னு நான் நெனைக்கலே.. இல்லை.. கல்பனா ஷி இஸ் வெரி லவ்லி ..' லேடி என்றான்.

'ஆமாண்ணா! நான் யாரோட வாழ்க்கையில நுழைந்தாலும் யாரோட பழகினாலும் அவர்களுக்கு என்னால



நல்லது நடக்கும்னு.. அடிக்கடி சொல்லுவா.. அதனாலதான்.. பல்ராம்.. அண்ணா மேல அந்த மாதிரி இன்ட்ரஸ்ட்.. வச்சேன்னாலும்.. அவள் மனசு நோகக் கூடாதேன்னு சம்மதிச்சா...?' என்றாள்.

'கல்பனா! இந்த விஷயத்தில ரதியோட முடிவு கரெக்ட்தான் இப்பத் தேறிட்டாள். இன்ஃபாக்ட்.. எங்க ரெண்டு பேர் மனசையும் என்னங்கறதை எனக்கே அவள்தான் புரிய வச்சாள்..' என்றான்.

அதற்குள் பாரதியும் வர விடைபெற்றுக் கொண்டு புறப்பட்டார்கள்.

வாசலுக்கருகில் வந்தவுடன் கல்பனா கிசுகிசுப்பாக பாதி.. போய் நல்லா ரெஸ்ட் எடுத்துக்கங்க.. என்று அறிவுரை வேறு தந்தாள்.

'அனுபவசாலியாச்சே! நீ சொன்னா ஃபாலோ பண்ண வேண்டியதுதான்' என்று பாரதியும் பதில் கொடுத்து விட்டு நகர்ந்தாள்.

தங்கள் வீட்டுக்கு வந்தவுடன் உண்மையாகவே ஓய்வெடுத்துக் கொண்டார்கள். காலையில் சற்று நேரம் வெளியே போய்விட்டு வந்தார்கள்.

இரவு கவிந்ததும் தன் பின்னாலேயே சுற்றுகிற அவனிடம்

'சும்மாயிருங்க.. ரவி.. யாரும் வரக்கூடும்!' என்று அவள் விலக,

'சரி.. கொஞ்ச நேரம் பக்கத்துலயாவது உட்காரு...' என்று அருகில் அமர வைத்துக் கொண்டு டி.வி. பார்த்தான்.

அவள் திடீரென்று 'களுக்' என்று சிரித்தாள்.

'என்ன ரதி?' என்று அவன் பார்க்க 'இல்லே... நேத்து இந்நேரம்தானே அத்தைகிட்டே ரதியை விட்டுட்டு என்னால



இருக்க முடியாதுன்னு சொன்னேன்னு சொன்னீங்க!' என்றாள்.

'ஆமா...?'

'அதை.. நீங்க எப்படிச் சொன்னீங்க தெரியுமா ? என்னமோ பேரில் வறட்சி.. அல்லாமில் வெள்ளம்னு.. செய்தி வாசிக்கிற மாதிரி முகத்திலே எந்த உணர்ச்சியும் இல்லாம சொன்னீங்க ?' என்று சிரித்தாள்.

அவன் பார்வை இளகியது முகத்தில் கிறக்கம் ஏறியது.

'ஹேய்.. கிண்டலா?' என்று கையை அவளை நோக்கி நீட்ட.. அவள் விலகி எழுந்து அந்தப் பக்கம் அறை நோக்கிப் போக அவன் பின்னாலேயே எழுந்து எட்டிப் பிடித்தான். கைகளால் வளைத்து கழுத்தில் முகம் பதித்து..

'ஆமா.. முதல் நாள் தேவியார் வெடிச்ச வெடிப்பைப் பார்த்து அரண்டு போயிருந்தேன். அதான்.. அம்மிணியோட ரியாக்ஷன் தெரிஞ்சதற்குப் பின்னாலதானே..' என்று அவன் கொஞ்சலாகப் பேச.. அவள் மயங்கி நிற்க.

'துயோ! ரொம்பப் பயந்தவராதான்!' என்று அவன் முணுமுணுக்க உருகிக் கரைந்தார்கள்.

இரண்டு நாட்கள்..

உலகம் மறந்து கழித்தார்கள்.

'என்னமோ லேடீஸ்கிட்டே நெருங்கினாலே பிரச்சினைன்னு சொன்னீங்க..' என்று அவள் கேலி செய்ய..

' நீ பெண்ணே இல்லையே?' என்றான் அவன்.

அவள் அதிர்ந்து போனாள்.

'தேவதையாச்சே!' என்று அவன் தலை நிமிராமல் தொடரவும்தான் அச்சம் நீங்கினாள்.

செவ்வாய்க்கிழமை மாலை...!

'ரதி ஆஃபீஸ் போகலையா?' என்றாள்.



'எல்லாம் செல்ஃபோனலயே நிர்வாகம்தான். அதைப் பற்றி உனக் கென்ன? நீ நம்மளைக் கவனி...!' என்று சிரித்தான்.

'ரவி உங்களுக்கும், அம்மாவுக்கும் பிரச்சினைன்னு கொஞ்சம் மீக்கானா கூட.. எல்லாம் பாதிக்கும் எவ்வளவு கஷ்டப்பட்டு நீங்க உருவாக்கின பிஸினஸ் சாம்ராஜ்யம்.. கூட்டுக் கட்டு மாதிரி.. உதிர விடலாமா?' என்றாள்.

'என்ன செய்யச் சொல்றே?'

'ஆஃபீஸ் போங்க.. பர்ஸனல் பிராம்ப்ளம்ஸ் பிஸினஸ 'வேறே வேறே..' என்று பேசி புதன்கிழமை அலுவலகம் அனுப்பி வைத்தாள்.

'தூக்கறே?' என்று அவன் சிணுங்க.. 'அதில்லை.. ரவி.. எப்படா பாக்கலாம்னு.. நான் முழுக்கக் காத்திருந்து அதுக்கப்புறம்.. பார்த்தா.. அது ஒரு திரில்தானே..' என்றாள்.

சாப்பாட்டுக்கு வந்தர்றேன் என்றான் அவசரமாக.

அவள் கலகலவென்று சிரித்து.. 'வேண்டாம்.. டிரைவரை அனுப்புங்க.. சாப்பாடு அனுப்பறேன்..' என்றாள்.

'ஹேய்! லொள்ளு பண்ணாதே .. வேணா ஒண்ணு செய்யறேன்.. மத்தியானம் லைட்டா.. ஏதாவது சாப்பிட்டுட்டு ரெண்டு மூணு மணிக்கு வந்தர்றேன்..' என்றான்.

அவள் சிரித்துக் கொண்டு தலையாட்ட சற்று நேரம் கொஞ்சி விட்டுத்தான் கிளம்பினான்.

★ ★ ★

ஐந்து மணிக்குத்தான் வரமுடிந்தது. களைப்பாக வந்த அவனுக்கு டிஃபன் கொடுத்து சற்று நேரம் அலுவலக விஷயங்கள் பேச நேரம் வேகமாக ஓடியது.

ஒன்பது மணி வாக்கில் 'ஹேய்! போதும்! ரொம்ப சோதிக்காதே' என்று அவன் கெஞ்ச.

'ஐயோ! என்ன ரவி நீங்க' என்று அணைப்பில் அடங்க.

சட்டுரென்று முன்னறைக் கதவு திறந்தது பாகீரதியும், ரவிபாரதியும் சட்டென்று விலகினார்கள்.

விஜயலட்சுமி நின்றிருந்தார்.

'பரவாயில்லையே! என் மகனை என்னோட சேர்த்து வச்சயேன்னு சந்தோஷப்பட்டேன். எல்லாம் இப்படி ஒரேயடியா பிரிக்கறதுக்குதானா?' என்றார்.

ரவிபாரதியும் பாகீரதியும் திகைத்துப் பேச்சற்று நின்று விட்டார்கள்.

* * *

## 26

இன்றோடு ரவிபாரதி போய் ஐந்து நாட்கள் ஆகியிருந்தது.

போன் செய்வான் என்று எதிர்பார்த்தாள். பேசவில்லை.

'ரதி. ஒரு தவிர்க்க முடியாத வேலை. நீதான் பொறுப்புக்களிலிருந்து விலகக் கூடாதுங்கறியே. செட் ரைட் செஞ்சிட்டு வந்தர்றேன்' என்று சொல்லிவிட்டு அம்மா வந்த மறுநாள் காலை போனவன்தான்.

முதல் இரண்டு நாட்கள் அவன் பிரிவில் தவித்துப் போன பாகீரதி இப்போது சற்றே தெளிவாகி இருந்தாள்.

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது. என்று மனதைத் தெளிவு படுத்திக் கொண்டாள். எல்லாம் பத்து மணி



வரைதான் பத்து மணிக்கு செல்ஃபோன் இசைத்தது அந்தப் பக்கம் லவப்ளா.

'பரவாயில்லை. நீ தொடர்ந்து ஏமாந்துன்னு முடிவு செஞ்சுட்டேன்னா யார்தான் என்ன செய்ய முடியும். ? அம்மாவோட உயிலுக்கேத்த மாதிரி அடுத்த நாடகத்தை ஆரம்பிச்சுட்டாரா உங்க மிஸ்டர் ரவிபாரதி? காத்துக்கிட்டேயிரு. என்னைக் கழட்டி விட்ட மாதிரி உன்னையும் கழட்டி விடத்தான் போறான் இப்ப ஆள் எங்கே தெரியுமா?' சென்னையில் என்று படபடவென்று பேசிவிட்டு ஆஃப் செய்துவிட்டாள்.

பாகீரதியின் மனத்தில் லேசான பயமும் அதிர்வு அலைகளும் பரவியது.

ஒருவேளை.. ஒரு வேளை.. அவள் சொல்வது நிஜமாக இருக்குமோ..? என்று ஒரு கணம் தோன்றியது மறு கணம் இருக்கட்டுமே... அதனால் என்ன? எப்படியும் சட்டபூர்வமான மனைவி தான்தான் அவனுக்கு வாரிசு பெற்றுக் கொடுப்பதிலே நமக்கென்ன இழப்பு. சொத்து வேண்டுமென்றால்.. அது அவருடைய இஷ்டந்தானே? என்று எண்ணிக் கொண்டாள்.

அதற்கிடையிலே விஜயலட்சுமி கேட்ட கேள்வி வேறு அவளை அரித்துக் கொண்டிருந்தது ரவிபாரதி எல்லாவற்றையும் உதறி விட்டு வந்தது என்னமோ பெருமையாகத்தான் இருந்தது ஆனால். அதனால் ஆகப் போவது என்ன? அவனுடைய பொறுப்புக்களிலேயிருந்து அவரை விலகச் செய்த தவறு தன்மீதல்லவா ஏறிவிடும்?

பல்ராமிடம் பேசினாள். அப்போதுதான் பல்ராம் அந்தச் செய்தியைச் சொன்னான்.

* * *



அன்றைக்கு அவள் வீட்டை விட்டு வெளியேறிய அன்று நள்ளிரவு பன்னிரெண்டு மணிக்கு பேசினான் ரவிபாரதி.

அப்போது பல்ராம் ரவி.. 'நான் ஒண்ணு சொல்லட்டா? நீங்க ரெண்டு பேரும் ஒருத்தரை ஒருத்தர் ரொம்ப நேசிக்கறீங்க.. என்றான்.

இந்தப்பக்கம் அந்த உண்மையைச் சந்திக்கப் பயந்தவன் போல் இதுவரை இருந்த ரவிபாரதி

'ஓ.....!' என்று அமைதியாகிவிட்டான்.

'ஆமா.. ரவி.. பாகீரதி.. உன்னை ரொம்ப நேசிக்கறா.. அவளுக்கே அது தெரியல. உனக்கும்தான். நான் என் சிஸ்டர் மேரேஜப்பவே அதைப் புரிஞ்சுகிட்டேன். யு ஃபீல் கம்ஃபர்ட்டபிள் வித் ஈச் அதர்ஸ் கம்பெனி யோசிச்சுப் பாருங்க.. புரியும்.. என்றான்.

ரவிபாரதிக்குத் தன் காதுகளையே நம்ப முடியவில்லை.

'யு.. மீன்.. ரதி.. லைக்ஸ் மீ?'

'லைக்ஸ் இல்லை. மேன்.. லவ்ஸ் யூ.. ஆனா.. அதைப் பத்தி யோசிக்கவோ.. ஒத்துக்கவோ அவளுக்கும் தெரியலை.. ஒருவேளை ஒத்துக்க தைரியம் இல்லையோ என்னமோ?' என்றான்.

சற்று நேரம் மௌனத்தில் கழித்த பின்பு ரவி கேட்டான்.

'அப்ப.. நான்.. இப்ப என்ன செய்யட்டும்.'

அந்த பக்கம் பல்ராம் சிரித்தான்.

'ஹலோ.. அதெல்லாம் நான் சொல்ல முடியாது. இப்பவே காரெடுத்துட்டுப் போவியோ.. காலைல.. போவியோ.. உன் இஷ்டம் என்று கேலி பேசினான்.

'டேய்! நீ என்னைக் கிண்டல் செய்யறே' என்றான்



ரவிபாரதி சிணுங்கலாக.

'ஐயய்யோ.. இல்லப்பா?' என்றான். சற்று மௌனத்திற்குப் பிறகு தயங்கியபடி ரவிபாரதி கேட்டான்.

'பல்ராம்.. உனக்கு..?'

'ஒண்ணும் வருத்தமேயில்லை. சந்தோஷம்தான். பாகீரதிக்கு ஏத்த ஆள் நீதான்ப்பா. ஆனா.. அவ ரொம்ப.. ரொம்ப.. நல்லவப்பா.. நல்லா வச்சுக்க..' என்றான் குரல் தழுதழுக்க.

'உனக்கு அந்தக் கவலையே வேண்டாம்.. பாகீரதியைப் புண்படுத்தற சக்தி எனக்குக் கிடையாது. இந்த நிமிஷம்.. இந்த சொத்துச் சனியனை எல்லாம் உதறிட்டு ஓடிடலாம்னு நினைக்கிறேன்.'

'உங்க வாழ்க்கை.. உங்க இஷ்டம்.. மிஸ்டர் ரவி' என்று சிரித்துவிட்டு ஆஃப் செய்தான் பல்ராம்.

* * *

இங்கே தங்கியிருந்த நாட்களில் பல்ராம் சொன்னதை சொல்லிச் சொல்லிச் சிரித்து கொண்டிருந்தான ரவிபாரதி.

அப்போதுதான் பாகீரதி சொன்னாள். 'ரவி.. இது சினிமா அல்ல இங்கிருந்து கையைக் கோர்த்துகிட்டு நாம நடந்து போயிடறதுக்கு. வாழ்க்கை! நீங்க எல்லாத்தையும் உதறிட்டு வந்துட்டேன்றீ.. நினைப்ப எனக்கு ரொம்ப கர்வமாத்தான் இருந்துச்சு. பெருமைதான். ஆனா.. இன்னொரு கோணத்துல யோசிச்சுப் பாருங்க.. உங்க பொறுப்புக்கள்ல இருந்து தப்பிச்சு ஓடிட முடியுமா? அதை நான் ஏத்துக்கிக்கலாமா? என்று அவள் பேசிக் கொண்டிருக்க இருக்க..' அவன் குபீரென்று சிரித்தான்.

'ஆனாலும்.. ரொம்ப ஃபிலாஸஃபி பேசறடி..'

நீ என்றான்.

'ரவி ....' என்று திகைப்பாய்ப் பார்க்க... அவன் அவளைத் தன்கைகளால் சிறைப்பிடித்துக் சிரித்தான்.

'ஆமா.. உங்க பாரதி.. மட்டும் வசிக்கு வரி.. டா.' போடறான் அதை ரசிக்கறீங்க... என்றான்.

'நீங்களும்.. தான்.. பேசலாம் உங்களுக்குதான் எல்லா.. உரிமையும் இருக்கு...' என்று அவன் முணுமுணுக்க.

'பப்பா.. அம்மா ஜில்லு வானத்தில பறக்கற மாதிரி இருக்கு..' என்று மீண்டும் சிரித்தான்.

'பின்னே? நீங்க எல்லாத்தையும் உதறிட்டு.. நான் மட்டுமே போதும்னு வந்தவராச்சே.. உங்களுக்கு எதையாவது மறுக்க முடியுமா,' என்றாள் மெல்லிய குரலில்.

'நானும் இந்த ஸ்டேட்மென்ட்டை ஞாபகம் வச்சுக்கறேன்.. நீயும் ஞாபகம் வச்சுக்கோ தேவையானப்ப யூஸ் பண்ணிக்கறேன்' என்றான்.

'ரவி...!' என்றாள் அவன் சட்டை பட்டனைத் திருகிக் கொண்டு.

'ம்...?'

'நீங்க.. இப்படியெல்லாம் குறும்பு பேசுவீங்கன்னு.. நா நெனக்கவே.. இல்லை..' என்றாள்.

அவன் சிந்தனையுடன் பார்த்தான்.. 'ஆமா.. ரதி.. எனக்கே அது ஆச்சரியம்தான் உன்கிட்டே... நான் ரொம்ப ஃப்ரீயா ஃபீல் பண்றேன் உங்கிட்டேதான் இப்படியெல்லாம் பேசத் தோணுது அதுல உனக்கு ஒண்ணும் கஷ்டம் இல்லையே?' என்று கவலையாய்ப் பார்க்க.

அவள் வேகமாகத் தலையிலடித்துக் கொண்டாள்.

'ஐயோ.. ரவி...!' என்றாள். பிறகு அவன் முகம் பார்க்காமல் மார்பில் முகம் புதைத்தபடி எல்லாம் பிடிச்சுத்தான் இருக்கு



என்றாள்.

'அப்படிப் போடு' என்று அவன் ரசித்துச் சிரித்தான்.

'ஆனா... ஒண்ணு மட்டும் பிடிக்கலே!' என்றான்.

'எது ...? '

'இப்படி எல்லாத்தையும் உதறிட்டு வந்தது.. ரவி.. நல்லா யோசிச்சுப் பாருங்க.. நாம போறப்ப எதையும் கொண்டு போகப் போறது இல்லே.. அப்படியிருக்கறப்ப .. சொத்து... மேல அதீத வெறி வேண்டாம்.. ஆனா... கடமையிலிருந்து விலக வேண்டாம்.' என்று அவன் முகம் பார்த்தாள்.

'ம்.. சொல்லு...' என்றான்.

'எப்பவும் போல எல்லாத்தையும் நிர்வாகம் செய்ங்க.. இப்ப... நீங்க... ஒரு சம்பளம்தானே எடுத்துக்கறீங்க.. அதுக்குள்ளே... நம்ம செலவுகளை வச்சுக்குவோம்...' என்றாள்.

அவன் வெகுநேரம் ஒன்றும் பேசவில்லை.. பிறகு 'இப்ப... நான் வேற ஒரு ஏற்பாடு கூட செஞ்சுகிட்டிருக்கேன். பார்ப்போம்' என்றான்.

அவள் மறுபடியும் ஏதோ சொல்ல ஆரம்பிக்க.

'போதும் தங்கம்ல இப்பவே மணி பத்தாயிருக்க எல்லாம் விவரமா... நிதானமா.. நாளைக்குப் பேசலாமே...?' என்றான்.

அடுத்த நாள்தான அம்மா வந்து அழைத்துப் போனது.

ஒரு வேளை எதிலிருந்தும் விலக வேண்டாம் எனத் தான் சொன்னதை வைத்துத் தனக்கு சொத்துக்களின் மேல் ஆசை இருப்பதாக எண்ணிக் கொண்டாரோ என்றும் கூட சந்தேகம் எழுந்தது..

ஒன்றும் புரியாமல் ஏதோ இயந்திரம் போல்



அன்றைக்கெல்லாம் நடமாடிக் கொண்டிருந்தாள்.

★ ★ ★

கடுமையாக நாள் முழுதும் வேலைகளை இழுத்துப் போட்டுக் கொண்டாள். சிந்திக்கவே கூடாது என்று எண்ணிக் கொண்டாள் ஆனால், மனக் குதிரை பந்தயக் குதிரையாய்ப் பிய்த்துக் கொண்டு ஓடியது.

நிரந்தரமாய்ப் பிரிப்பதற்காகத்தானா? என்று விஜயலட்சுமியின் கேள்வி விசுவரூபம் எடுத்துக் கொண்டே வந்தது.

குழம்பிப் போனாள்.

அவர் கேட்டது போல் பிரிந்திருந்த அவர்களை எதற்காக ஒன்று சேர்த்தோம்? இதற்காகத்தானா?

ஒருவேளை... ஒருவேளை... எல்லாச் சொத்துக்களின் நிர்வாகத்திலிருந்தும் தன்னை விடுவித்துக் கொள்வதற்கான ஏற்பாடுகளில் இருக்கிறாரோ? தன்னிடம் சொன்னால் நான் ஒத்துக் கொள்ள மாட்டேன் என்பதற்காகச் சொல்லாமல் இருக்கிறாரோ?

காதலும், நேசமும் இந்த வயதுக்கேயான இயற்கைதான் ஆனால், அதற்காக இதுவரை இருந்த உறவுகளையும் கடமைகளையும் விட்டு விலகி விட வேண்டுமா என்ன? நான் நானாக இருக்கிறேன் நீ நீயாக இரு. இருவருமாய் அன்பு செய்து வாழ்வோம் என்று வாழ முடியாதா என்ன?

ரவிபாரதியின் பங்களாவுக்கு ஃபோன் செய்தாள். விஜயலட்சுமி அந்த ஃபோனை எடுக்காமல் இருக்க வேண்டுமே என்று வேண்டாத தெய்வத்தை எல்லாம் வேண்டிக் கொண்டாள்.

நல்லவேளை.



ராமையாதான் எடுத்தார். மகிழ்ச்சியான குரலில் 'சின்னம்மா... நல்லா இருக்கீங்களா?' என்றார். 'நல்லா இருக்கேன்.. ஐயா... என்றாள்.

'என்னம்மா... நடக்குது? நீங்க திடீர்னு அங்க போய் உட்கார்ந்துகிட்டீங்க...' என்றார்.

'ஒண்ணுமில்லை ராமையா சில விஷயங்கள்... பற்றி... யோசித்து நிரந்தரமா ஒரு முடிவு எடுக்க வேண்டியிருக்கு' என்றாள்.

'என்னம்மா.. இது ஆச்சரியம்? ' என்றார் ராமையா.

' என்ன... ஆச்சரியம்? ' என்றாள் வியப்புடன்.

'இல்லே... தம்பியும் இப்படியே சொல்லிட்டு சென்னை போயிருக்கு போன ஆள்தான ஒண்ணும் சத்தத்தையே காணோம் இங்க அம்மாவோ எதைப் பத்தியும் கண்டுக்க மாட்டேங்கறாங்க..' என்றார்.

'ஓ..... சென்னையிலிருந்து... இன்னும் வரலையோ?' என்றாள்.

'ஒண்ணும் தகவலே தெரியல...' என்றார்.

'சரி... ராமையா ! நான் அப்புறம் காண்டாக்ட் செய்யறேன்' என்று போனை வைத்தாள்.

ரவியும் நிரந்தரமாக முடிவு எடுக்க வேண்டும் என்று சொன்னாராமே.

நான் எல்லாப் பொறுப்பையும் அம்மாகிட்டே கொடுத்துட்டேன். நாம சென்னை போலாம்... வா..என்று வந்து நின்றால் என்ன... செய்வது என்று யோசித்தாள்.

கூடவே.. கூடாது! என்று எண்ணிக் கொண்டாள்.

படபடவென்று பெட்டியில் கொஞ்சம்

துணிமணிகள் பேக் செய்தாள். பிறகு ஒரு கடிதம் எழுதி டேபிளில் வைத்தாள்.

அன்புள்ள ரவிக்கு,

மூன்று நாட்களாக வெகு ஆவலுடன் காத்திருந்தேன். ஆனால், இன்றைக்கு ராமையா நீங்கள் ஏதோ திரந்தர முடிவு எடுக்க வேண்டும் என்று சொல்லி சென்னைக்குச் சென்றதாகச் சொன்னார்.

என் மேல் வைத்த அன்பு உங்கள் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தினால் அது எல்லோருக்கும் நல்லதாக இருக்க வேண்டுமே அன்றி யாரையும் நோகடிப்பதாக இருக்கக் கூடாது.

உங்கள் பிரிவு என்னை உலுக்கியெடுக்கும் என்றாலும் நான் ஒருத்தி வேதனைப்பட்டாலும் உங்களின் கீழ் பணிபுரியும் தொழிலாளர்கள், நிறுவனங்கள், அத்தை என்று எல்லோரும் மகிழ்வாக இருப்பார்கள் அதுவே நல்லது.

எல்லாருடைய வாழ்விலும் தனிப்பட்ட கடமை, குடும்பக்கடமை, சமுதாயக் கடமை என்றெல்லாம் இருக்கிறது நூற்றுக் கணக்கான பேர் வாழ்க்கையில் எந்தப் பிரச்சினையும் வராமல் இருப்பதற்காகவே நான் உங்களைப் பிரிகிற இந்த முடிவை எடுக்கிறேன்.

அன்புடன்
பாரதி

என்று அமைந்திருந்தது கடிதம்.

வீட்டில் எல்லாவற்றையும் ஒழுக்குபடுத்தி விட்டுக் கதவைப் பூட்டிக் கொண்டு இருக்கையில் பின்புறமாக அசைவு சத்தம் கேட்டுத் திரும்பினாள்.

'ராத்திரியோட ராத்திரியாக எங்கே தப்பிச்சுட்டு ஓடிப்போறதா உத்தேசம் அம்மணி?' என்று கேட்டுக் கொண்டு



நின்றிருந்தான் ரவிபாரதி.

* * *

## 27

ரேடியோவை ஆன் செய்தான் ரவிபாரதி.

என்னை விட்டு ஓடிப் போக முடியுமா? இனி முடியுமா? என்ற திரைப்பாடலைக் கேட்டுக் குறும்பாகச் சிரித்தபடி திரும்பி மனைவியைப் பார்த்தான் மிக சீரியஸான முகத்துடன் நின்று கொண்டிருந்தாள்.

அப்போதுதான் டேபிளில் இருந்த கடிதத்தைப் பார்த்தான். நெற்றி லேசாகச் சுருங்க எடுத்துப் படித்தான். பிறகு ஸோஃபாவில் அமர்ந்து கொண்டான்.

அவள் மௌனமாக உள்ளே சென்று அவனுக்காகத் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தாள். அவன் மறுக்காமல் வாங்கிக் கொண்டான்.

'ஹேய்! ரதி! உட்கார் பேசணும்..' என்று அருகில் அமர்த்திக் கொண்டான். அவளும் அமர்ந்து கொண்டாள்.

'எங்கே போறதா உத்தேசம்?' என்றான்.

'திருச்சி.. திருச்சியில் என் ஃப்ரெண்டு ஒருத்தி இருக்கா... அங்க போய்க் கொஞ்ச நாள் இருந்துட்டு...' என்று சொன்னவள் அவன் குறுஞ்சிரிப்புடன் பார்ப்பதைப் பார்த்துப் பேச்சை நிறுத்தினாள்.

'ஹேய்! சொல்லாம போயிட்டா? கண்டு பிடிக்க முடியாதுன்னு நெனச்சியா? நீ போய் டிரெயின்ல உட்கார்ந்துக்குவே.. நான் சட்டையை கிழிச்சுகிட்டு... குறுக்கும்



மறுக்குமா ஓடி வந்து அப்புறம் டிரெயின் கூடவே ஓடி வருவேன்னு.... நெனச்சியா?' என்று ஒரு நிமிடம் நிறுத்தினான்.

அவள் கண்கள் அரல அவன் முகம் பார்த்துக் கொண்டு ஒன்றும் பேசத் தோன்றாமல் அமர்ந்து கொண்டிருந்தாள்.

'தமிழ் நாடாயிருந்தா... மேக்ஸிமம் நாலுநாள். வெளி மாநிலமா இருந்தா.. மேக்ஸிமம் டென் டேஸ் கண்டுபிடிச்சிடுவேன்.. தெரியுமா?' என்றான்.

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். விலகிப் போறாளாம்.. விட்டுடுவேனா. மக்கு... மக்கு.. என்று இடக்கையால் அருகில் இழுத்துக் கொண்டான்.

அந்த நிமிடம் அவள் உடைந்தாள். அவன் மார்பில் முகம் புதைத்து அழுதாள்.

'ஹேய்... ரதி...?' என்னடா.. இது என்று அவன் தேற்றினான்.

'பின்னே.. போய் மூணு நாளாக்க ஒரு விவரமும் தெரியலே அத்தை.. வேற நிரந்தரமாய் பிரிக்கப் பாக்கிறியான்னு கேட்டுட்டுப் போறாங்க..' என்று தேம்பினாள்.

அவன் கண்களில் கனிவு கூடியது. புன்னகையுடன் அவள் முகம் நோக்கிக் குனிந்தான். கொஞ்ச நேரம் அவளைப் பேச விடாமல் கொஞ்சி மகிழ்ந்தான் பிறகு நிமிர்ந்தான்.

'அசட்டுப் பெண்ணே! ஃப்ளைட்ல வந்தேன் அம்மா வீட்டுக்குக் கூடச் செல்லலே. டாக்ஸி பிடிச்சு அம்மினியைப் பாக்கலாம்னு.. ஓடி வந்தா.. நீ இப்படிக் கலங்கடிக்கறே...' என்றவன்.

'சரி! நீ சொன்னதே சரின்னு வச்சுக்க.. நான்



பொறுப்பிலே இருந்து தப்பிக்கக் கூடாது. நீ தப்பிக்கலாமா?' என்றான்.

அவள் மலங்க.. மலங்க விழிப்பதைப் பார்த்து பின்னே? 'அட.. நான்தான் புருஷன்காரன்.. மடையன்.. நீ பக்கத்திலிருந்து சொல்லித் திருத்த வேண்டாமா? பெட்டியைத் தூக்கிட்டு ஓடப் பாக்கறே?' என்றான். கண்களில் குறும்பு கூத்தாடியது.

'நீங்க.. என்னைக் கிண்டல் செய்றீங்க?' என்று அவள் கீழே பார்த்தபடி முணுமுணுக்க. அவன் பெரிதாகச் சிரித்தான் அவள் முறைத்தாள்.

'சரி.. சரி... போதும் சிரிப்பு.. இந்த மூணு நாளா.. எங்கே.. போனீங்க? என்னதான் நடக்குது?' என்றாள்.

'ம்..... இது நியாயம்! இப்பக் கேட்டியே கேள்வி இது நியாயமானது' என்று வாஞ்சையாய்ப் புன்னகைத்தான். இயல்பாய் அவள் மடியில் தலை வைத்துக் கொண்டு அவள் முகம் பார்த்துப் படுத்தான்.

'சென்னை.. போனேன். எதுக்குத் தெரியுமா? முதல்ல இருந்து சொன்னாத்தானே புரியும்? நீங்கதான அன்னைக்கு ஸ்வப்னாகிட்டே சொன்னீங்களே? ரவி எப்பேர்ப்பட்ட பொக்கிஷம் தெரியுமா? நானாயிருந்தா அவரோட சொந்தக் கால்ல நிக்கற திறமையை டெவலப் பண்ணிவிட்டிருப்பேன்கற... மாதிரி... அது நம்மளோட... ஈகோவை.. ரொம்ப உசுப்பி விட்டுடுச்சு.. அட நமக்கு ஏன் இது தோணல்லேன்னு ...யோசிச்சேன்.. என்ன கேக்கறியா?' என்றான. அவள் கனவில் ஆழ்ந்தவள் போல் அமர்ந்திருப்பதைப் பார்த்து.

'ம்....' என்றாள்.

இரண்டு கோடி ரூபாய்ல ஒரு ப்ராஜக்ட் ப்ளான்

செய்தேன். அம்மா காரண்டி போடறதா பேச்சு.. ஆனா நம்ம தோழி ஸ்வப்னாம்மா.. இருக்காங்களே அவங்க நாலு நாளைக்கு முன்னாலே பாங்க் ஹெட் ஆஃபீஸ்ல.. ஒரு அதிர்வேட்டு போட்டிருக்காங்க!'

'ஓ...!'

'அம்மாவுக்கும் எனக்கும் டாம்ஸ் செசியில்வேண்ணு அப்புறம் பார்த்தேன். இந்த ஒன்பது வருஷமா.. நான் எனக்குன்னு எடுத்துகிட்ட சம்பளத்தையெல்லாம்.. விவரமா இன்வெஸ்ட் செஞ்சு வச்சிருக்கேன்.. அதனால.. என்னோட பர்ஸனல் பிராப்பர்டியை அவங்க கேட்கற அமௌண்ட் வேல்யுவுக்கு மேல வந்துடுச்சு. அதை ஃபைனலைஸ் பண்ண வேண்டியிருந்தது.. மாத்தி.. மாத்தி.. ஆட்களைப் பார்க்க வேண்டியிருந்தது. பேச வேண்டியிருந்தது.. தாங்கம்...' என்றாள்.

'எதுக்காக..? இவ்வளவு ஸ்ட்ரெயின் செய்யணும்? நமக்கு இருக்கறது போதாதா?,' என்றான்.

அவள் ஒரு நிமிடம் ஒன்றும் பேசவில்லை. பிறகு ஆழ்ந்த ஒரு பெருமூச்சுவிட்டாள்.

'நீதானே ஒரு நாள் சொன்னே? நமக்கு எவ்வளவு முடியுமோ அதுக்குக் குறைவா செய்யறதும் தப்புன்னு...' என்றாள்.

அவன் மறுக்கவில்லை. பிறகு மெதுவான குரலில்.

'ஸ்வப்னா கூட ஃபோன் செஞ்சாங்க..'என்றாள்.

'அவ கிடக்கறா... பர்ஃபெக்ட் கேஸ்.. மூணு நாளைக்குப் பிறகு தேவியார் தரிசனம் கிடைக்கிருக்கு இப்ப எதுக்கு அவளைப்பத்திப் பேசிகிட்டு... இனிமே எந்த லோன்னும் செய்யமாட்டா... அதுக்கும் ஏற்பாடு...



செஞ்சிருக்கேன்..' என்றான்.

'ஹேய்... கொஞ்சம் கவனிக்கறது...' என்றான்.

'ஐயோ... இந்த நேரத்துலயா?' என்றாள். கலக்கமான குரலில்.

'அடடா! புரிஞ்சுக்கவே மாட்டாடா இவ! என்று எழுந்து அமர்ந்தபடி..' அவன் புலம்பவும் அவளுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

புன்னகைத்தபடியே அவள் முகம் பார்த்தான். பிறகு மீண்டும் தலை குனிந்து கொண்டாள். பிறகு மீண்டும் நிமிர்ந்து கேள்விக் குறியாய்ப் பார்க்க.

'சரி.. சரி... அப்படிய பார்க்காதே! எனை முடிவு பண்ணியிருக்கடா.. பயலே... ங்கறே இல்லே...? எல்லாம் தேவியார் கட்டளைப்படிதான். பொறுப்புக்கள்ல இருந்து விலகறது இல்ல. அம்மாவோட சொத்துக்களைப் பொறுத்தவரை... நான் டிரஸ்டி. காப்பாத்தி வளர்த்து விட வேண்டியது. ஆனா.. தனிப்பட்ட முறையில நாம ஆரம்பிக்கறமே இந்த யூனிட்டுக்கு... நாமதான் முதலாளிகள். இதுல வர்ற வருமானம்... நம்மோடது.. அதுல வர்றது சம்பளம்... ஓ..கே. வா?' என்றான்.

பாகீரதியின் முகம் வெகுவாக மலர்ந்தது. 'தாங்க்ஸ்... ரவி... தாங்க்ஸ்...' என்று அவன் கழுத்தை வளைத்து முத்திரை பதிக்க.. அவள் கிறங்கிப் போனாள்.

'மயக்கமே வருது! என்று அவன் நடிக்க. ஐயே! போதுமே!' என்று சிணுங்கினாள்.

'சும்மா... வாயாலே.. வெறும் தாங்க்ஸ்.. சொல்லக் கூடாது பெண்ணே' என்றான்.

அவள் அவன் மார்பில் சாய்ந்து கொண்டாள். 'என்ன வேணுமாம்?' என்றாள்.

என்றான்.

'தப்பு சார்... ரொம்பத் தப்பு... நம்ம எகானமிக்கு ஒத்து வராது. ஏற்கனவே.. ரொம்பப் பாப்புலேஷன்.. நாம் இருவர்.. நமக்கு இருவர்.. ' என்றான்.

'நீதான்.. தப்பாச் சொல்றே! நாம் இருவர் அல்ல. ஒருவர்... ஆனா.. நமக்கு இருவர்.. 'என்றாள். அவனே மீண்டும்

'ஆனா.. இப்ப இல்லே?' என்றான் 'ஏன்?'

'ஏன்னா முழுமையா ரெண்டு வருஷம் நாம் மட்டும்தான். நீதான்.. எகானமியைப் பத்தி ரொம்பக் கவலைப்படறியே? ஹேய்.. எகானமி பத்திப் பேசினதும்.. ஞாபகம் வருது.. உனக்கும் ஒரு பொறுப்புக் கொடுக்கப்போறேன். நம்மோட அட்வர்டைசிங் சம்பந்தமான யூனிட்டை நீதான் பாத்துக்கப் போறே...' என்றான்.

'நிஜம்மாவா..?' என்று சந்தோஷமானாள்.

'ஆமா... இந்தத் தலைக்குள்ளே நிறைய சிந்தனை இருக்கு. அது எல்லாருக்கும் பயன்படட்டுமே.. நீதானே சொல்றே. சமுதாயக் கடமையும் இருக்குன்னு.. ஆனா.. ஒரே ஒரு சலுகை.. ஃப்ளெக்ஸி டைம்.. அலுவலக நேரம் மட்டும்.. உங்க வசதிக்கு.. 'என்றாள்.

'தாங்க்ஸ்.. ரவி.. என்றாள். நாம இப்ப ஆரம்பிக்கிற யூனிட் பனியன் கம்பெனிகளோட நிறையத் தொடர்புள்ளது. அதனாலே... அவிநாசிக்கும் பக்கத்திலே இடம் வாங்கறேன். அப்புறம்.. பல்ராமை... அங்கே.. ஜி. எம்மாப் போடறேன்.'

'ரவி....?'

'உனக்காக இல்லே! உண்மையான அவலுடைய திறமைக்காக.. அவனோட சின்சியாரிட்டிக்காக' என்று

சொல்லவும்.

'அதுதானே.. பார்த்தேன்' என்று அவள் திருப்தியானாள்.

'ஹேய்..!' என்றபடி நெருங்கவும் அவள் விலகிக் கொண்டு.

'அம்மாவுக்கு ஃபோன் போட்டு விவரம் சொல்லுங்க.. உங்க டின்னர் டைமாச்சு.எழுந்திருங்க.. தோசை வார்க்கறேன் டிஃபன் சாப்பிடுவீங்களாம்...' என்று நகர்ந்தாள்.

அன்றிரவு

அவன் கைப்பிடியில் அணைக்கிற நேரம்.

பாகீரதி சிரித்தாள்.

'என்ன சிரிப்பு' என்றான் ரவிபாரதி.

'பயங்கரமான... ஆள் நீங்க..' என்றாள்.

அவன் மௌனமாகப் பார்க்க.

'ரொம்ப கெட்டிக்காரர்..' என்றாள் மீண்டும் சிரித்தாள்.

'அவள் கிறக்கப் பார்வை பார்க்க பின்னே ? சொத்துக்கள் வேண்டாம்னு.. சொன்ன ஸ்டாண்ட்லயும் நின்னுட்டீங்க.. ஆனா.. பொறுப்புக்கள்ள இருந்தும் விலகவும் இல்லே.. தட்ஸ் பிரில்லியண்ட்' என்றாள்.

அவன் உணர்ச்சிமயமான குரலில் 'இத்தனையும் ஏன் செஞ்சேன்னு.. சொல்லு...' என்றான்.

'ஏனாம்...'

'நீ மட்டும் பக்கத்திலே இருந்தால் போதும்.. எத்தனையோ சொத்துக்களை உருவாக்கிடலாம்.. என்னுடைய ரொம்ப உயர்வான சொத்தே.. நீதான்னு என் மனசிலே தோணிப் போச்சு.. அதனாலதான்' என்றான்.

அவள் குரலே எழும்பாமல் 'ரொம்பத் தாங்ஸ்..

ரவி.' என்றாள்.

'வானமழை நீ யெனக்கு!' என்று அவன் சொன்ன போது அவள் ஆச்சரியமானாள்.

'அன்னைக்குப் பாடினியே.. அன்னைக்கே அந்த வரி எனக்குப் பிடிச்சிருச்சு. அது மட்டுமில்லே. ரதி... நீங்க ரெண்டு பேரும் உங்களையே ஏமாத்திக்கறீங்கன்னு லவ்வனா சொன்னா.. அடிக்கடி... உன்னைப் பாத்து யாருக்குக் குடுத்து வச்சிருக்கோன்னு நினைக்கக்குவேன். என் உள்மனசு ஏக்கம்தான் அதுன்னு இப்பப் புரியுது.'

'ஆமா.. ரவி.. உங்க கால்ல காயம்பட்ட அன்னைக்குத்தான் என் மனசே எனக்குப் புரிஞ்சது. அப்புறம்... நாம... மட்டும்... உண்மையான கணவன் மனைவியாயிருந்தா... இப்படிப் பேசிப்போம்.... அப்படிப் பேசிப்போம்னெல்லாம்... பேசிக்குவமே.. அதுவும்.... என்று வெட்கத்துடன் நிறுத்தி விட்டாள்.

'இனிமே.... வெறும் பேச்சுக் கிடையாது மகாராணி. போதும் போதும்னு நினைக்கிறது கீழை நாட்டுத் தத்துவம். வேணும் வேணும்னு நினைக்கிற மேலை நாட்டுத் தத்துவம்... இந்த விஷயத்தில மேலை நாட்டுத் தத்துவம்தான்' என்று அவன் கலகலவென்று சிரித்தான்.

'ரவி! என்ன ஆச்சு..?' தத்துவம் எல்லாம் பேசறீங்க.. என்று அவளும் சிரித்தாள்.

'எல்லாம் பழக்க தோஷம்தான்..' என்றவன் சீரியஸான குரலில்,

'ரதி நாளைக்கே... அந்த வீட்டுக்குப் போயிடலாம். அம்மாவும் தவிக்கப் போயிட்டாங்களாம்' என்றான்.

'ஆமா.... எல்லாத்தையும் தவிக்கவிடறதே வேலையாப் போச்சு..' என்று அவள் புகார் சொல்ல... அவன்



ரசித்துச் சிரித்தான். பிறகு

'ரதி.. இந்த மூணு நாள் வேலை பாட்டுக்கு வேலை நடந்தது ஆனா... நினைப்பு பூரா உன் மேலதான்... அப்படிக் கட்டிப் போட்டுட்டே' என்றான்.

'இனி... வாழ் நாள் முழுக்க விடுவிக்கறதா... உத்தேசமில்லை... மிஸ்டர் ரவிபாரதி..' என்றாள்.

பூரண சம்மதம் விடுபடறதாவும் உத்தேசமில்லை மிஸஸ் ரவிபாரதி.. என்று அவன் சொல்ல..

கலகலவென்று இணைந்து சிரித்தார்கள்.

* * *

210 வானமழை நீ எனக்கு

ரவி.' என்றாள்.

'வானமழை நீ யெனக்கு!' என்று அவன் சொன்ன போது அவள் ஆச்சரியமானாள்.

'அன்னைக்குப் பாடினியே.. அன்னைக்கே அந்த வரி எனக்குப் பிடிச்சிருச்சு. அது மட்டுமில்லே. ரதி... நீங்க ரெண்டு பேரும் உங்களையே ஏமாத்திக்கறீங்கன்னு லவ்வனா சொன்னா.. அடிக்கடி... உன்னைப் பாத்து யாருக்குக் குடுத்து வச்சிருக்கோன்னு நினைக்கக்குவேன். என் உள்மனசு ஏக்கம்தான் அதுன்னு இப்பப் புரியுது.'

'ஆமா.. ரவி.. உங்க கால்ல காயம்பட்ட அன்னைக்குத்தான் என் மனசே எனக்குப் புரிஞ்சது. அப்புறம்... நாம... மட்டும்... உண்மையான கணவன் மனைவியாயிருந்தா... இப்படிப் பேசிப்போம்.... அப்படிப் பேசிப்போம்னெல்லாம்... பேசிக்குவமே.. அதுவும்.... என்று வெட்கத்துடன் நிறுத்தி விட்டாள்.

'இனிமே.... வெறும் பேச்சுக் கிடையாது மகாராணி. போதும் போதும்னு நினைக்கிறது கீழை நாட்டுத் தத்துவம். வேணும் வேணும்னு நினைக்கிற மேலை நாட்டுத் தத்துவம்... இந்த விஷயத்தில மேலை நாட்டுத் தத்துவம்தான்' என்று அவன் கலகலவென்று சிரித்தான்.

'ரவி! என்ன ஆச்சு..?' தத்துவம் எல்லாம் பேசறீங்க.. என்று அவளும் சிரித்தாள்.

'எல்லாம் பழக்க தோஷம்தான்..' என்றவன் சீரியஸான குரலில்,

'ரதி நாளைக்கே... அந்த வீட்டுக்குப் போயிடலாம். அம்மாவும் தவிக்கப் போயிட்டாங்களாம்' என்றான்.

'ஆமா.... எல்லாத்தையும் தவிக்கவிடறதே வேலையாப் போச்சு..' என்று அவள் புகார் சொல்ல... அவன்

ஜெயசக்தி 211

ரசித்துச் சிரித்தான். பிறகு

'ரதி.. இந்த மூணு நாள் வேலை பாட்டுக்கு வேலை நடந்தது ஆனா... நினைப்பு பூரா உன் மேலதான்... அப்படிக் கட்டிப் போட்டுட்டே' என்றான்.

'இனி... வாழ் நாள் முழுக்க விடுவிக்கறதா... உத்தேசமில்லை... மிஸ்டர் ரவிபாரதி..' என்றாள்.

பூரண சம்மதம் விடுபடறதாவும் உத்தேசமில்லை மிஸஸ் ரவிபாரதி.. என்று அவன் சொல்ல..

கலகலவென்று இணைந்து சிரித்தார்கள்.

* * *